University of Madras

B. A. Degree Examination

1949

Part II — Tamil

Selections in Poetry



Printed at:
HADDON & CO., MADRAS


77164

பொருளடக்கம்

		பக்கம்
1.	குறுந்தொகை	1
	குறிப்புரை	81
2.	புறநானூறு	5
	குறிப்புரை	86
3.	பொருநராற்றுப்படை	10
	குறிப்புரை	90
4.	திருக்குறள்	18
	குறிப்புரை	103
5.	சிலப்பதிகாரம்	24
	குறிப்புரை	119
6	சீவக சிந்தாமணி	32
	குறிப்புரை	130
7,	பெரிய புராணம்	48
	குறிப்புரை	141
8.	கம்பராமாயணம்	60
	குறிப்புரை	145
9.	அழகர் கலம்பகம்	73
	குறிப்புரை	152
10.	சீறுப் புராணம்	76
	குறிப்புரை	155

குறுந்தொகை

குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. தொகை யாவது பொருளாலும், பாட்டாலும், அளவாலும் தொகுக்கப் பெறுவது. இந் நூல் அகப்பொருளாலும் அளவாலும் தொகுக்கப் பெற்றது. அகமாவது தலைவனுந் தலைவியும் உள்ளத்துணர்வாலேயே நுகரும் இன்பம் பற்றிய ஒழுக்கம்.

குறுந்தொகை பெரும்பாலும் நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையுமுடைய நானூறு அகவற் பாக்களைக் கொண்டது. 'இத் தொகை முடித்தான் பூரிக்கோ. இத்தொகை பாடிய கவிகள் இருநூற்றை வர்: இந்நூலின் முந்நூற்றெண்பது செய்யுட்களுக்குப் பேராசிரியர் உரை யெழுதின ரென்றும், எஞ்சிய இருபது செய்யுட்களுக்கு நச்சினார்க்கினியர் உரையெழுதின ரென்றும் தெரிவிக்கும் பழைய குறிப்புக்கள் உண்டு. அவ் வுரைகள் இப்போது கிடைக்கவில்லை.

குறுந்தொகை

1

கபிலர்

திணை : நெய்தலிற் குறிஞ்சி ; துறை : சிறைப்புறம்

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
களிற்றுச் செவியன்ன பாசடை மயக்கிப்
பனிக்கழி துழவும் பானுள் தனித்தோர்
தேர்வந்து பெயர்ந்த தென்ப, அதற்கொண்
டோரும் அலைக்கும் அன்னை, பிறரும்
பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளிர்
இளையரும் மடவரும் உளரே.
அலையாத் தாயாரொடு நற்பா லோரே

2

இடைக்காடன்

திணை : முல்லை ; துறை : பிரிவிடைத் தோழி

" பருவமன்று ; பட்டது வம்பு " என்று வற்புறுத்தியது

மடவ வாழி மஞ்ஞை மாயினம்
கால மாரி பெய்தென அதனெதிர்
ஆலலும் ஆயின. பிடவும் பூத்தன.
காரன் றிகுளே; தீர்கநின் படரே.
கழிந்த மாரிக் கொழிந்த பழநீர்
புதுநீர் கொளீஇய வுகுத்தரும்
தொதுமல் வானத்து முழங்குகுரல் கேட்டே.

3

பரணர்

திணை ; குறிஞ்சி ; துறை : காப்பு மிகுதிக்கண்

ஆற்றுளாகிய தோழி, அறத்தோடு நின்று, அவனே பரிகரிப்பன் என்று கருதியதனைத் தலைமகளும் நயப்பாளாகக் கூறியது

மழைசேர்ந் தெழுதரு மாரிக் குன்றத்
தருவி ஆர்ந்த தண்ணறுங் காந்தள்
முகையவிழ்ந் தானு நாறு நறுதுதல்
பல்லிதழ் மழைக்கண் மாஅ யோயே !

3

ஒல்வை யாயினும் கொல்வை யாயினும்
யேளக் தறிவைநின் புரைமை. வாய்போற்
பொய்ம்மொழி கூறலஃ தெவனே ?
நெஞ்சம் நன்றே நின்வயி னானே.

4

கல்லாடனர்

திணை : நெய்தலிற் குறிஞ்சி ; துறை : தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது

சேயாறு சென்று துனைபரி அசாவா
துசாவுநர்ப் பெறினே நன்றுமன் றில்ல.
வயச்சுரு எறிந்த புண்தணிந் தெந்தையும்
நீல்நிறப் பெருங்கடல் புக்கனன் ; யாயும்
உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்புவினை கழனிச் சென்றனள். அதனல்
பனியிருும் பரப்பின் சேர்ப்பற்
கினிவரின் எளியள் என்னும் தூதே.

5

உறையூர்ச் சல்லியன் குமாரன்

திணை : மருதம் ; துறை : பரத்தையிற் பிரிந்து வந்த சிழவற்குத் தோழி வாயில் நேர்ந்தது

கைவினை மாக்கள்தம் செய்வினை மூடிமார்
சுரும்புண மலர்ந்த வாசம் கீழ்ப்பட
நீடின வரம்பின் வாடிய விடினும்
"கொடியரோ நிலம்பெயர்ந் துறைவேம்" என்னது
பெயர்த்தும் கடிந்த செறுவிற் பூக்கும்
நின்னூர் நெய்தல் அனையேம். பெரும !
நீயெமக் கின்ன தனபல செய்யினும்
நின்னின் றமைதல் வல்லா மாறே.

6

கயமன்

திணை : குறிஞ்சி ; துறை : மகட்போக்கிய தாய் உரைத்தது

பாலும் உண்ணுள் பந்துடன் மேவாள்
விளையா டாயமொ டயர்வோள் இனியே
எளிதென உணர்ந்தனள் கொல்லோ ? முளிசினை
ஓமை குத்திய உயர்கோட் டொருத்தல்
வேனிற் குன்றத்து வெவ்வரைக் கவாஅன்
மழைமுழங்கு கடுங்குரல் ஓர்க்கும்
சுழைதிரங் காரிடை அவனெடு செலவே.

புறநானூறு

புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று; புறப்பொருள் பற்றிய நானூறு அகவற்பாக்களைக் கொண்டது. முரஞ்சியூர் முடிநாக ராயர்முதல் கோவூர்கிழார் இறுதியாகவுள்ள புலவர் பலரும் இந் நூற் செய்யுட்களை இயற்றியவர்கள். இந்நூலைத் தொகுத்தோரும் தொகுப்பித் தோரும் இன்னர் இன்னர் என்று தெரியவில்லை. இது பொருளால் தொகுக்கப்பெற்றது. இங்கே பொருளென்றது அறத்தையும் பொருளையும்.

இந்நூலால், முடியுடை மூவேந்தர், குறுநிலமன்னர், சேனைத் தலைவர், அமைச்சர், வீரர், கடையெழுவள்ளல்கள் முதலியோர்தம் சரித் திரங்களும், தமிழ்ப் பெருமக்களின் வியத்தகு பண்பாடும் பிறவும் நன்கு விளங்கும்.

புறநானூறு

1

திணை : பொதுவியல் ; துறை : பொருள்மொழிக்காஞ்சி.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனை மாங்குடிகிழார் பாடியது

நெல்லரியும் இருந்தொழுவர்
செஞ்ஞாயிற்று வெயில்முனையின்
தெண்கடற்றிரை மிசைப்பாயுந்து
திண்திமில் வன்பரதவர்
வெப்புடைய மட்டுண்டு
தண்குரவைச் சீர்தூங்குந்து
தூவல் கலித்த தேம்பாய் புன்னை
மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்
எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து
வண்டுபட மலர்ந்த தண்ணறும் கானல்
முண்டகக் கோதை ஒண்டொடி மகளிர்
இரும்பனையின் குரும்பைநீரும்
பூங்கரும்பின் தீஞ்சாறும்
ஓங்குமணல் குவவுத்தாழைத்
தீநீரோ டுடன்விரா அய்
முந்நீர் உண்டு முந்நீர்ப் பாயும்
தாங்கா உறையுள் நல்லூர் கெழீஇய
ஓம்பா ஈகை மாவேள் எவ்வி
புனல்அம் புதவின் மிழலையொடு கழனிக்
கயலார் நாரை போர்வில் சேக்கும்
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய
நின்று நிலைஇயர்நின் நாள்மீன் நில்லாது
படாஅச் செலீயர்நின் பகைவர் மீனே.
நின்னெடு,
தொன்று மூத்த உயிரினும் உயிரொடு
நின்று மூத்த யாக்கை அன்னநின்
காடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த

வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த
இரவல் மாக்கள் ஈகை நுவல
ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய
தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி பெருமம, ஆங்கது
வல்லுநர் வாழ்ந்தோர் என்ப தொல்லிசை
மலர்தலை உலகத்துத் தோன்றிப்
பலர்செலச் செல்லாது நின்றுவிளிந் தோரே.

2

திணை : பொதுவியல் ; துறை : முதுமொழிக்காஞ்சி

சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனர் பாடியது

சேற்றுவளர் தாமரை பயந்த ஒண்கேழ்
நாற்றிதழ் அலரின் நிரைகண் டன்ன
வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை எண்ணுங் காலை
உரையும் பாட்டும் உடையோர் சிலரே.
மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே.
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப என்பதம் செய்வினை முடித்தெனக்
கேட்பல் எந்தை சேட்சென்னி நலங்கிள்ளி !
தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்
மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து
வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருள வல்லை ஆகுமதி. அருளிலர்
கொடாமை வல்லர் ஆகுக
கெடாத துப்பின்நின் பகைதிர்ந் தோரே.

3

தினை : பாடாண் ; துறை : செவியறிவுறூஉ

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை வெள்ளைக்குடி நாகனார் பாடிப் பழஞ்செய்க்கடன் வீடுகொண்டது.

நளியிரு முந்நீர் ஏணி யாக
வளியிடை வழங்கா வானஞ் சூடிய
மண்திணி கிடக்கைத் தண்தமிழ்க் கிழவர்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
அரசெனப் படுவது நினதே. பெரும!
அலங்கு கதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்
இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்துகவர் பூட்டத்
தோடுகொள் வேலின் தோற்றம் போல
ஆடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கும்
நாடெனப் படுவது நினதே. அத்தை, ஆங்க
நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே!
நினவ கூறுவல். எனவ கேண்மதி.
அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதில் பதனெளி யோரீண்
டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றேரே
ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பின் நடுவுநின் றாங்குக்
கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றே வன்றே; வருந்திய
குடிமறைப் பதுவே. கூர்வேல் வளவ!
வெளிற்றுப்பனந் துணியின் வீற்றுவீற் றுக்கிடப்பக்
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தருஉங் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே.
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்.
அதுநற் கறிந்தனை யாயின், நீயும்
கொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே.

4

திணை : வஞ்சி ; துறை—துணைவஞ்சி

சோழன் நலங்கிள்ளியுழைநின்று உறையூர் புகுந்த இளந்தத்தனென்னும் புலவனை, காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்றுவந்தா னென்று கோல்லப் புக்குழி, கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்ட-து.

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய என்னது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றே இன்றே.
திறப்பட
நண்ணூர் நாண அண்ணுந் தேகி
ஆங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணுள் செல்வம் எய்திய
நும்மோ ரன்ன செம்மலும் உடைத்தே.

———

பத்துப்பாட்டு

பொருநராற்றுப்படை

இது, கடைச்சங்கப் புலவர்களாகிய நக்கீரர் முதலிய நல்லிசைப் புலவர்களால் இயற்றப்பெற்றனவும், மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினர்க்கினியர் இயற்றிய உரை வாய்ந்தனவுமாகிய பத்துப் பாட்டுக்களுள் இரண்டாவது; 248 அடிகள் கொண்ட அகவற்பாவால் ஆகியது. இது சோழன் கரிகாற் பெருவளத்தானிடம் பெரும்பரிசில்களைப் பெற்றுவரும் பொருநனொருவன், வறிய நிலையுள்ளவனும் உபகாரிகளைத் தேடித் திரிபவனுமாகிய மற்றொரு பொருநனுக்குக் கரிகாற் பெருவளத்தானது நாட்டு வளம், வீரம், கொடை முதலியவற்றையும் அவன்பால் தான் சென்று பரிசில் பெற்ற விதத்தையும் கூறி, அவனை யடைந்து வறுமையை நீக்கிக்கொள்ளுமாறு சொல்லி, அப் பொருநனை விடுப்பதாக முடத்தாமக் கண்ணியாராற் பாடப்பெற்றது.

இதன்கண் யாழின் இயல்பு, கரிகாற் பெருவளத்தானது பொருநர்ச் சுற்றம் போற்றுந் திறன், பரிசில்மாண்பு, சோணாட்டு நிலவளம் முதலியன நன்கெடுத்துக் காட்டப்பெற்றுள்ளன.

சோழன் கரிகாற்பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடிய

பொருநராற்றுப்படை

அரும்அ யாணர் அகன்றலைப் பேரூர்க்
சாறுகழி வழிநாள் சோறுநசை உருது
வேறுபுலம் முன்னிய விரகறி பொருந !
குளப்புவழி அன்ன கவடுபடு பத்தல்
விளக்கழல் உருவின் விசியுறு பச்சை
எய்யா இளஞ்சூற் செய்யோள் அவ்வயிற்
றைதுமயிர் ஒழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு பேர்வை
அளைவாழ் அலவன் கண்கண் டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்பமை ஆணி
எண்ணுட் டிங்கள் வடிவிற் ருகி
அண்ணு இல்லா அமைவரு வறுவாய்ப்
பாம்பணந் தன்ன ஓங்கிரு மருப்பின்
மாயோள் முன்கை ஆய்தொடி கடுக்குங்
கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவவின்
ஆய்தினை அரிசி அவையல் அன்ன
வேய்வை போகிய விரல்உளர் நரம்பின்
கேள்வி போகிய நீள்விசித் தொடையல்
மணங்கமழ் மாதரை மண்ணி அன்ன
அணங்குமெய்ந் நின்ற அமைவரு காட்சி
ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை
வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும்
சீருடை நன்மொழி நீரோடு சிதறி
அறல்போல் கூந்தல் பிறைபோல் நிருநுதல்
கொலிவிற் புருவத்துக் கொழுங்கடை மழைக்கண்
இலவிதழ் புரையும் இன்மொழித் துவர்வாய்ப்
பலவுறு முத்தின் பழிதீர் வெண்பல்
மயிர்குறை கருவி மாண்கடை அன்ன
பூங்குழை ஊசல் பொறைசால் காதின்
நாண்அடச் சாய்ந்த நலங்கிளர் எருத்தின்
ஆடமைப் பணைத்தோள் அரிமயிர் முன்கை
நெடுவரை மிசைஇய காந்தள் மெல்விரல்
கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு வள்உகிர்
....
....
நீர்ப்பெயர்ச் சுழியின் நிறைந்த கொப்பூழ்

உண்டென உணரா உயவும் நடுவின்
....
இரும்பிடித் தடக்கையின் செறிந்துதிரள் குறங்கின்
பொருந்துமயிர் ஒழுகிய திருந்துதாட் கொப்ப
வருந்துநாய் நாவின் பெருந்தகு சீறடி
அரக்குருக் கன்ன செந்நிலன் ஒதுங்கலின்
பரற்பகை உழந்த நோயொடு சிவணி
மரற்பழுத் தன்ன மறுகுநீர் மொக்குள்
நன்பகல் அந்தி நடைஇடை விலங்கலின்
பெடைமயில் உருவின் பெருந்தகு பாடினி
பாடின பாணிக் கேற்ப நாள்தொறும்
களிறு வழங்கதர்க் கானத் தல்கி
இலைஇல் மராத்த எவ்வம் தாங்கி
வலைவலந் தன்ன மென்னிழல் மருங்கில்
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றைப்
பீடுகெழு திருவின் பெரும்பெயர் நோன்தாள்
மூரசுமுழங்கு தானை மூவருங் கூடி
அரசவை இருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை எழாஅற்
கோடியர் தலைவ! கொண்ட தறிக!
அறியா மையின் நெறிதிரிந் தொரா
தாற்றெதிர்ப் படுதலும் நோற்றதன் பயனே.
போற்றிக் கேண்மதி. புகழ்மேம் படுக!
ஆடுபசி உழந்தநின் இரும்பே ரொக்கலொடு
நீடுபசி ஓராஅல் வேண்டின் நீடின்
றெழுமதி. வாழி. எழின் கிழவ!
பழுமரம் உள்ளிய பறவையின் யானும்அவன்
இழும்என் சும்மை இடனுடை வரைப்பில்
நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்
இசையேன் புக்கென் இடும்பை தீர
எய்த்த மெய்யேன் எய்யேன் ஆகிப்
பைத்த பாம்பின் துத்தி ஏய்ப்பக்
கைக்கச டிருந்தஎன் கண்அகல் தடாரி
இருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர்
வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்
ஒன்றியான் பெட்டா அளவையின், ஒன்றிய
கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
கண்ணிற் காண நண்ணுவழி இரீஇப்
பருகு வன்ன அருகா நோக்கமோ
டருகு பவைபோல் என்புகுளிர் கொளீஇ

ஈரும் பேனும் இருந்திறை கூடி
வேரொடு நீனந்து வேற்றிழை துணைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்குதுழை கல்லா துண்மைய பூக்கனிந்
தரவுரி அன்ன அறுவை நல்கி
மழையென மருளும் மகிழ்செய் மாடத்
திழைஅணி வனப்பின் இன்னகை மகளிர்
போக்கில் பொலங்கலம் நிறையப் பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட
ஆர உண்டு பேரளர் போக்கிச்
செருக்கொடு நின்ற காலை, மற்றவன்
திருக்கிளர் கோயில் ஒருசிறைத் தங்கித்
தவம்செய் மாக்கள் தம்உடம் பிடாஅ
ததன்பயம் எய்திய அளவை மான
ஆறுசெல் வருத்தம் அகல நீக்கி
அனந்தர் நடுக்கம் அல்ல தியாவதும்
மனங்கவல் பின்றி மாழாந் தெழுந்து
மாலை அன்னதோர் புன்மையும் காலைக்
கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையும்
கனவென மருண்டஎன் நெஞ்சே மாப்ப
வல்லஞர் பொத்திய மனமகிழ் சிறப்பக்
கல்லா இளஞர் சொல்லிக் காட்டக்
கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉய்
அதன்முறை கழிப்பிய பின்றைப் பதனறிந்து
துராஅய் துற்றிய துருவைஅம் புழுக்கின்
பராஅரை வேவைப் பருகெனத் தண்டிக்
காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை
ஊழின் ஊழின் வாய்வெய் தொற்றி
அவைஅவை முனிகுவம் எனினே சுவைய
வேறுபல் உருவின் விரகுதக் கீஇ
மண்ணமை முழவின் பண்ணமை சிறியாழ்
ஒண்ணுதல் விறலியர் பாணி தூங்க
மகிழ்ப்பதம் பன்னுள் கழிப்பி ஒருநாள்
" அவிழ்ப்பதம் கொள்''கென் றிரப்ப, முகிழ்த்தகை
முரவை போகிய முரியா அரிசி
விரலென நிமிர்ந்த நிரல்அமை புழுக்கல்
பால்வறைக் கருணை காடியில் மிதப்ப
அயின்ற காலைப் பயின்றினி திருந்து
கொல்லை உழுகொழு ஏய்ப்பப் பல்லே
ஏஎல்லையும் இரவும் ஊன்கின்று மழுங்கி

உயிர்ப்பிடம் பெறுஅ தூண்முனிந் தொருநாள்
"செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய
செல்வ! சேறும்எம் தொல்பதிப் பெயர்ந்''தென
மெல்லெனக் கிளந்தன மாக, "வல்லே
அகறி ரோஎம் ஆயம் விட்'' டெனச்
சிறிய வன்போல் செயிர்த்த நோக்கமொடு
"தடிஅடி அன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்''எனத்
தன்அறி அளவையில் தரத்தர யானும்
என்அறி அளவையின் வேண்டுவ முகந்துகொண்
டின்மை தீர வந்தனென். வெல்வேல்
உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்
முருகற் சீற்றத் தருகெழு குருசில்
தாய்வயிற் றிருந்து தாயம் எய்தி
எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்பச்
செய்யார் தேஎம் தெருமரல் கலிப்பப்
பவ்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்குப்
பிறந்துதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநல்
நாடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப
ஆளி நன்மான் அணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
மூலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேர்எனத்
கண்டோர் மருளும் வண்டுசூழ் நீலையும்
தலைக்கோள் வேட்டம் களிறட் டாஅங்
கிரும்பனம் போந்தைத் தோடும் கருஞ்சினை
அரம்வாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஒங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்முள்
கண்ணுர் கண்ணிக் கரிகால் வளவன்
தாள்நிழல் மருங்கில் அணுகுபு குறுகித்
தொழுதுமுன் நிற்குவி ராயின், பழுதின்
றீற்ரு விருப்பின் போற்றுபு நோக்கிதும்
கையது கேளா அளவை ஒய்யெனப்
பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் கீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்
பெறல்அருங் கலத்தில் "பெட்டாங் குண்''கெனப்
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர
வைகல் வைகல் கைகவி பருகி

எரிஅகைந் தன்ன ஏடில் தாமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி
நூலின் வலவா துணங்கரில் மாலை
வால்ஒளி முத்தமொடு பாடினி அணியக்
கோட்டின் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஊட்டுஎா துயல்வர ஓரி துடங்கப்
பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்
காலின் ஏழடிப் பின்சென்று கோலின்
தாறுகளைந் தேறென் றேற்றி வீறுபெறு
பேர்யாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்
தண்பணை தழீஇய தளரா இருக்கை
நன்பல் ஊர நாட்டொடு நன்பல்
வெரூஉப்பறை நுவலும் பரூஉப் பெருந் தடக்கை
வெருவரு செலவின் வெகுளி வேழம்
தரவிடைத் தங்கலோ விலனே; வரவிடைப்
பெற்றவை பிறர்பிறர்க் கார்த்தித் தெற்றெனச்
செலவுகடைக் கூட்டுதி ராயின் பலபுலந்து
நில்லா உலகத்து நிலைமை தூக்கிச்
செல்கென விடுக்குவன் அல்லன். ஒல்லெனத்
திரைபிறழிய இரும்பௌவத்துக்
கரைசூழ்ந்த அகன்கிடக்கை
மாமாவின் வயின்வயின்நெல்
தாழ்தாழைத் தண்தண்டலைக்
கூடுகெழீ இய குடிவயினுன்
செஞ்சோற்ற பலிமாந்திய
கருங்காக்கை கவவுமுணையின்
மணைதொச்சி நிழலாங்கண்
ஈற்றியாமைதன் பார்ப்போம்பவும்
இளையோர் வண்டல் அயரவும் முதியோர்
அவைபுகு பொழுதில்தம் பகைமுரண் செலவுர்
முடக்காஞ்சிச் செம்மருதின்
மடக்கண்ண மயிலாலப்
பைம்பாகற் பழம்துணரிய
செஞ்சுளைய கனிமாந்தி
அறைக்கரும்பின் அரிநெல்லின்
இனக்களமர் இசைபெருக
வறள்அடும்பின் இவர்பகன்றைத்
தளிர்ப்புன்கின் தாழ்காவின்
நனைஞாழலொடு மரம்குழீ இய
அவண்முணையின் அகன்றுமாறி

அவிழ்தளவின் அகன்றோன்றி
நகுமுல்லை உகுதேறவிப்
பொற்கொன்றை மணிக்காயா
நற்புறவின் நடைமுனையின்
சுறவழங்கும் இரும்பௌவத்
திறவருந்திய இனநாரை
பூம்புன்னைச் சினைச்சேப்பின்
ஓங்குதிரை ஒலிவெரீஇத்
தீம்பெண்ணை மடற்சேப்பவும்
கோட்டெங்கின் குலைவாழைக்
கொழுங்காந்தள் மலர்நாகத்துத்
துடிக்குடிஞைக் குடிப்பாக்கத்து
யாழ்வண்டின் கொளைக்கேற்பக்
கலவம்விரித்த மடமஞ்ஞை
நிலவெக்கர்ப் பலபெயரத்
தேன்நெய்யொடு கிழங்குமாறியோர்
மீன்நெய்யொடு நறவுமறுகவும்
நீங்கரும்போ டவல்வகுத்தோர்
மான்குறையொடு மதுமறுகவும்
குறிஞ்சி பாதவர் பாட நெய்தல்
நறும்பூங் கண்ணி குறவர் சூடக்
கானவர் மருதம் பாட அகவர்
னீனிற முல்லைப் பஃறிணை நுவலக்
கானக்கோழி கதிர்குத்த
மனைக்கோழி தினைக்கவர
வரைமந்தி கழிமூழ்கக்
கழிநாரை வரைஇறுப்பத்
தண்வைப்பின்நல் நாடுகுழீஇ
மண்மருங்கினுன் மறுஇன்றி
ஒருகுடையான் ஒன்றுகூறப்
பெரிதாண்ட பெருங்கேண்மை
அறனெடு புணர்ந்த திறன்அறி செங்கோல்
அன்னோன் வாழி வெல்வேற் குருசில்.
மன்னர் நடுங்கத் தோன்றிப் பல்மாண்
எல்லை தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவும் கோடெரி நைப்பவும்
அருவி மாமலை நிழத்தவும் மற்றக்
கருவி வானம் கடல்கோள் மறப்பவும்
பெருவறன் ஆகிய பண்பில் காலையும்
நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும்

துறைதுறை தோறும் பொறைஉயிர்த்தொழுகி
துரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடையக்
கூனிக் குயத்தின் வாய்நெல் அரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறும்
குன்றெனக் குவைஇய குன்றுக் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடம்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடுகிழ வோனே.

திருக்குறள்

ஒப்பதும் மிக்கதும் இல்லாத **திருக்குறள்** என்னும் இவ்வரிய பெரிய நூல் குறள்வெண்பாவினால் தெய்வப்புலமைத் திருவள்ளுவரால் இயற்றப் பெற்றது. இவர் அவதரித்த குலம் வள்ளுவக் குடி. இந்நூல் அறம் பொருள் இன்பம் வீடு எனப்படும் புருடார்த்தம் நான்கினுள் மூன்னிய மூன்றையும் வெளிப்படையாகக் கூறுவது. அதனால் இது முப்பால் எனவும் பெயர் பெறும்.

கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இத் திருக்குறளிற் கூறப்பெற்றுள்ள செய்திகள் பல தேயத்தாரும் பல சமயத்தாரும் போற்றிக்கொள்ளற்குரியனவாயிருத்தலின், இந் நூல் அந்நிய மொழிகளிலும் பெயர்த்தெழுதப் பெற்றுள்ளது: அரிய பெரிய இலக்கணங்கட்கெல்லாம் இலக்கியமாய் நிற்கும் சிறப்பினையுடையது. கூலவாணிகன் சாத்தனார், கம்பர் முதலான நூலாசிரியர்களாலும், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களாலும், திவ்யப் பிரபந்தங்கட்கு வியாக்கியானஞ் செய்தருளிய பேராசிரியர்களாலும், சைவசமயாசாரியர்களாலும் எடுத்தாளப்பெற்ற பெருமை வாய்ந்துள்ளது.

இந் நூலிற்கு வேறு பலர் உரை செய்துள்ளனரெனினும், அவ்வுரைகளெல்லாவற்றினும் பரிமேலழகர் செய்துள்ள உரையே பல்லாற்றானும் சிறப்புடையது என எல்லோராலும் போற்றிக்கொள்ளப்பெற்று வழங்கியும் வருகின்றது.

திருக்குறள்

1. படைச்செருக்கு

1 என்ஐமூன் நில்லன்மின் தெவ்விர் பலர் என்ஐ
முன்னின்று கல்நின் றவர்

2 கான முயலெய்த அம்பினில் யாணை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது

3 பேராண்மை என்ப தறுகணென் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு

4 கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்

5 விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஒட்டன்றே வன்க ணவர்க்கு

6 விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை எடுத்து

7 சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து

8 உறின்உயி ரஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்

9 இழைத்தது இகவாமைச் சாவாரை யாமே
பிழைத்தது ஒறுக்கிற் பவர்

10 புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்க துடைத்து

2. நட்பு

1 செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு

2 நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு

3 நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு

4 நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு

5 புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்

6 முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகம்நக நட்பது நட்பு

7 அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு

8 உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

9 நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை

10 இனையர் இவர்எமக் கின்னம்யாம் என்று
புனையினும் புல்லென் னும் நட்பு

3. நட்பாராய்தல்

1. நாடாது நட்டலின் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு

2. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரம் தரும்

3. குணனும் குடிமையும் குற்றமும் குன்ற
இனனும் அறிந்தியாக்க நட்பு

4. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டும் நட்பு

5. அழச் சொல்லி அல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்

6. கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்

7. ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை ஓரீஇ விடல்

8. உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு

9. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்

10. மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

4. பழமை

1. பழமை யெனப்படுவ தியாதெனின் யாதும்
கிழமையைக் கிழ்ந்திடா நட்பு

2. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன்

3. பழகிய நட்பெவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை

4. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையான்
கேளாது நட்டார் செயின்

5. பேதைமை ஒன்றே பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்

6. எல்லைக்கண் நின்றூர் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றூர் தொடர்பு

7. அழிவந்த செய்யினும் அன்புரூர் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்

8. கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின்

9. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு

10. விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்

5. தீ நட்பு

1. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது

2. உறினட் டறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்

3. உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்

4. அமரகத் காற்றறுக்கும் கல்லாமா அன்னூர்
தமரின் தனிமை தலை

5. செய்தேமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று

6. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும்

7. நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும்

8. ஒல்லுங் கருமம் உடற்றுபவர் கேண்மை
சொல்லாடார் சோர விடல்

9. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு

10. எனைத்துங் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு.

6. கூடா நட்பு

1. சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு

2. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்

3. பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்
ஆகுதல் மாணார்க் கரிது

4. முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்

5. மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினல் தேறற்பாற் றன்று

6. நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும்

7. சொல்வணக்கம் ஒன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்

8. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து

9. மிகச்செய்து கம்மென் றுவாரை நகச்செய்து,
நட்பினுள் சார்புல்லற் பாற்று

10. பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்
டகநட் பொரீஇ விடல்

7. பேதைமை

1. பேதைமை யென்பதொன் றியாதெனின் ஏதங்கொண்
டேதியம் போக விடல்

2. பேதைமை யுள்ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்

3. நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில்

4. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தான் அடங்காப்
பேதையிற் பேதையார் இல்

5. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு

6. பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்

7. ஏதிலார் ஆர்த் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை

8. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்

9. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்

10. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

சிலப்பதிகாரம்

தென்மொழியில் உள்ள பழைய காப்பியம் ஐந்தனுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம் சேரமுனியாகிய இளங்கோவடிகளால் இயற்றப்பெற்றது. உரையாசிரியர்களால் எடுத்துக் காட்டப்படும் பிரமாண நூல்களுள் ஒன்று. சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்தது. எவ்வெப் பொருளைச் சொல்லினும் அவ்வப்பொருளை நேரிற் கண்டாங்கு மனத்திற்குத் தோற்றும் வண்ணம் நன்கு புலப்படுத்தும் தெள்ளிய இனிய நன்னடையை யுடையது; கோவலன் கண்ணகி என்பாரின் சரித்திரத்தை விரித்துக் கூறுவது; தமிழ் நாட்டு மூவேந்தர் தம் தலைநகர்களான புகார், மதுரை, வஞ்சி யென்னும் மூன்றன் பெருமைகளையும் விளக்குவது. அரசர் நீதியில் வறிதே பிழைப்பினும் அறக்கடவுள் அவர் தமைக் கூற்றாய் நின்றுகொல்லு மென்பதும், கற்புடை மகளிரை மக்களையன்றித் தேவரும் முனிவரும் துதித்தல் இயல்பென்பதும், இருவினையும் செய்தோனை நாடிவந்து தம்பயனை நுகர்விக்கு மென்பதுமாகிய இம்மூன்றனையும் உலகத்தார்க் கறிவுறுத்தற் பொருட்டே இக் காப்பியம் இளங்கோவடிகளாற் செய்யப்பட்டது; மேற்கூறிய மூன்று பகுதியையும் சிலம்பு காரணமாகத் தெரிவித்தலின், இந்நூல் சிலப்பதிகாரமென்னும் பெயர் பெற்றது.

இப் பெருங் காப்பியத்திற்கு இரண்டு உரைகள் உள்ளன. அவற்றுள் முதலாவது அரும்பதவுரை. அஃது இந்நூல் முழுவதுக்கும் அமைந்துள்ளது. அவ்வுரையை எழுதிய ஆசிரியர் இன்னாரென விளங்கவில்லை. இரண்டாவது உரை மிக விரிவாக உள்ளது. ஆனால் முற்றும் இல்லை; அதனை இயற்றியவர் அடியார்க்கு நல்லார்.

இந் நூலாசிரியர் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு.

புகார்க்காண்டத்தில் ஐந்தாவது பகுதியாய இந்திரவிழவூரெடுத்த காதையில் காவிரிப்பூம்பட்டினத்துள்ள மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம், காலையங்காடி மறுகு, இந்திரவிழாத் தொடக்கம், வீரர்கள்தம்மையே பலியிடுதல், ஒரு சிறந்த மண்டபம், ஐவகை மன்றங்கள், இந்திர விழா, வீதியின் அணிகள் முதலியனவும் பிறவும் பயிற்றோர் நெஞ்சினை அள்ளும் வண்ணம் கூறப்பட்டிருக்கின்றன.

சிலப்பதிகாரம்

5. இந்திரவிழவூரெடுத்த காதை

....

....

கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை
புதைஇருட் படாஅம் போக நீக்கி
உதைய மால்வரை உச்சித் தோன்றி
உலகுவிளங் கவிரொளி மலர்கதிர் பரப்பி

மருவூர்ப்பாக்கம்

வேயா மாடமும் வியன்கல இருக்கையும்
மான்கண் கால்அதர் மாளிகை இடங்களும்
கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்
பயன்அற வறியா யவனர் இருக்கையும்
கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்
வண்ணமும் சுண்ணமும் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்விணைக் காருகர் இருக்கையும்
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்
காழியர் கூவியர் கள்ளொடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் மைந்நிண விலைஞரோ
டோசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்
கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்
மரம்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் விணைஞரும் மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்

கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்
குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்
வழுவின் றிசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்

பட்டினப்பாக்கம்

கோவியன் வீதியும் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாட மறுகும் மறையோர் இருக்கையும்
வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதரும் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை இருக்கையும்
திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொ
டணிவளை போழுநர் அகன்பெரு வீதியும்
சூதர் மாகதர் வேதா ளிகரொடு
நாழிகைக் கணக்கர் நலம்பெறு கண்ணுளர்
காவற் கணிகையர் ஆடற் கூத்தியர்
பூவிலை மடந்தையர் ஏவற் சிலதியர்
பயில்தொழிற் குயிலுவர் பன்முறைக் கருவியர்
நகைவே ழம்பரொடு வகைதெரி இருக்கையும்
கடும்பரி கடவுநர் களிற்றின் பாகர்
நெடுந்தேர் ஊருநர் கடுங்கண் மறவர்
இருந்துபுறம் சுற்றிய பெரும்பா யிருக்கையும்
பீடுகெழு சிறப்பின் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பின் பட்டினப் பாக்கமும்

நாள் அங்காடி

இருபெரு வேந்தர் மூவிடம் போல
இருபாற் பகுதியின் இடைநிலம் ஆகிய
கடைகால் யாத்த மிடைமரச் சோலைக்
கொடுப்போர் ஒதையும் கொள்வோர் ஒதையும்
நடுக்கின்றி நிலைஇய நாளங் காடியில்

இந்திரவிழாவின் தோடக்கம்

சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென
வெற்றிவேல் மன்னற் குற்றதை ஒழிக்கெனத்
தேவர் கோமான் ஏவலிற் போந்த
காவற் பூதத்துக் கடைகெழு பீடிகைப்
புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து
துணங்கையர் குரவையர் அணங்கெழுந் தாடிப்
பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
மாதர்க் கோலத்து வலவையின் உரைக்கும்
மூதிற் பெண்டிர் ஓதையிற் பெயர,

வீரர் தம்மையே பலியிடுதல்

மருவூர் மருங்கில் மறங்கொள் வீரரும்
பட்டின மருங்கில் படைகெழு மாக்களும்
முந்தச் சென்று முழுப்பலி பீடிகை
வெந்திறல் மன்னற் குற்றதை ஒழிக்கெனப்
பலிக்கொடை புரிந்தோர் வலிக்குவரம் பாகெனக்
கல்உமிழ் கவணினர் கழிப்பிணிக் கறைத்தோல்
பல்வேற் பரப்பினர் மெய்யுறத் தீண்டி
ஆர்த்துக் களங்கொண்டோர் ஆரமர் அழுவத்துச்
சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்குக் கருந்தலை
வெற்றி வேந்தன் கொற்றம் கொள்கென
நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்
குயிர்ப்பலி உண்ணும் உருமுக்குரல் முழக்கத்து
மயிர்க்கண் முரசொடு வான்பலி ஊட்டி,

கரிகாற்சோழன் செயல்

இருநில மருங்கில் பொருநரைப் பெருஅச்
செருவெங் காதலின் திருமா வளவன்
வாளும் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகஇம

மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணிய திசைமுகம் போகிய அந்நாள்
அசைவில் ஊக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலைஎன
இமையவர் உறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு,

அரும்பெறல் மண்டபம்

மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோன் இறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைபுறத் துக்கொடுத்த பட்டிமண் டபமும்
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபின் தோரண வாயிலும்
பொன்னினும் மணியினும் புனைந்தன ஆயினும்
நுண்வினைக் கம்மியர் காணா மரபின
துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோர் உதவிக்கு
மன்விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்
ஒருங்குடன் புணர்ந்தாங் குயர்ந்தோர் ஏத்தும்
அரும்பெறல் மரபின் மண்டபம் அன்றியும்,

ஐவகை மன்றம்

வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதிக்
கடைமுக வாயிலும் கருந்தாழ்க் காவலும்
உடையோர் காவலும் ஓரிய ஆகிக்
கட்போர் உளர்எனின் கடுப்பத் தலையேற்றிக்
கொட்பின் அல்லது கொடுத்தல் ஈயா
துள்ளுநர்ப் பனிக்கும் வேள்ளிடை மன்றமும்
கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழுகுமெய் யாளரும் முழுகினர் ஆடிப்
பழுதில் காட்சி நன்னிறம் பெற்று
வலம்செயாக் கழியும் இலஞ்சி மன்றமும்
வஞ்சம் உண்டு மயற்பகை உற்றோர்
நஞ்சம் உண்டு நடுங்குதுயர் உற்றோர்
அழல்வாய் நாகத் தாரெயி றழுந்தினர்
கழல்கட் கூளிக் கடுநவைப் பட்டோர்
சுழல வந்து தொழத்துயர் நீங்கும்
நிழல்கால் நெடுங்கல் நின்ற மன்றமும்

"தவம்மறைந் தொழுகுந் தன்மை யிலாளர்
அவம்மறைந் தொழுகும் அலவற் பெண்டிர்
அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங்கூற் றுளர்என்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோர்''எனக்
காதம் நான்கும் கடுங்குரல் எடுப்பிப்
பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்
அரைசுகோல் கோடினும் அறங்கூ றவையத்
துரைநூல் கோடி ஒருதிறம் பற்றினும்
நாவொடு நவிலாது நவைநீர் உகுத்துப்
பாவை நின்றழூஉம் பாவை மன்றமும்
மெய்வகை உணர்ந்த விழுமியோர் ஏத்தும்
ஐவகை மன்றத்தும் அரும்பலி உறீஇ,

இந்திர விழா

வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி
வால்வெண் களிற்றரசு வயங்கிய கோட்டத்துக்
கால்கோள் விழவின் கடைநிலை சாற்றித்
தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து
மங்கல நெடுங்கொடி வானுற எடுத்து
மரகத மணியொடு வயிரம் குயிற்றிப்
பவளத் திரள்கால் பைம்பொன் வேதிகை
நெடுநிலை மாளிகைக் கடைமுகத் தியாங்கணும்
கிம்புரிப் பகுவாய்க் கிளர்முத் தொழுக்கத்து
மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரணம் நிலைஇய தோம்அறு பசும்பொற்
பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை
பாவை விளக்குப் பசும்பொற் படாகை
தூமயிர்க் கவரி சுந்தரச் சுண்ணத்து
மேவிய கொள்கை வீதியிற் செறிந்தாங்
கைம்பெருங் குழுவும் எண்பே ராயமும்
அரச குமரரும் பரத குமரரும்
கவர்பரிப் புரவியர் களிற்றின் தொகுதியர்
இவர்பரித் தேரினர் இயைந்தொருங் கீண்டி
அரைசுமேம் படீஇய அகநிலை மருங்கில்
உரைசால் மன்னன் கொற்றம் கொள்கென
மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்
ஆயிரத் தோரெட் டரசுதலைக் கொண்ட
தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்

புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
மண்ணகம் மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டிப்
பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ
நான்மறை மரபின் தீமுறை ஒருபால்
நால்வகைத் தேவரும் மூவறு கணங்களும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்
அறவோர் பள்ளியும் அறனெனும் படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்
திறவோர் உரைக்குஞ் செயல்சிறந் தொருபால்
கொடித்தேர் வேந்தனொடு கூடா மன்னர்
அடித்தலை கேக்க அருள்சிறந் தொருபால்
கண்ணு ளாளர் கருவிக் குயிலுவர்
பண்ணியாழ்ப் புலவர் பாடற் பாணரொ
டெண்ணருஞ் சிறப்பின் இசைசிறந் தொருபால்
முழவுக்கண் துயிலாது முடுக்கரும் வீதியும்
விழவுக்களி சிறந்த வியலுள் ஆங்கண்,
காதற் கொழுநனைப் பிரிந்தலர் எய்தா
மாதர்க் கொடுங்குழை மாதவி தன்னை
டில்வளர் முல்லை மல்லிகை மயிலை
தாழிக் குவளை சூழ்செங் கழுநீர்
பயில்பூங் கோதைப் பிணையலிற் பொலிந்து
காமக் களிமகிழ் வெய்திக் காமர்
பூம்பொதி நறுவிரைப் பொழிலாட் டமர்ந்து
நாள்மகிழ் இருக்கை நாளங் காடியில்
பூமலி கானத்துப் புதுமணம் புக்குப்
புகையும் சாந்தும் புலராது சிறந்து
நகையா டாயத்து நன்மொழி தேளைத்துக்
குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திரிதரு மரபிற் கோவலன் போல
விளிவாய் வண்டினை டின்னிள வேனிலொடு
மலய மாருதம் திரிதரு மறுகில்,
கருமுகில் சுமந்து குறுமுயல் ஒழித்தாங்
கிருகருங் கயலோ டிடைக்குமிழ் எழுதி

அங்கண் வானத் தரவுப்பகை அஞ்சித்
திங்களும் ஈண்டுத் திரிதலும் உண்டுகொல் !
நீர்வாய் திங்கள் நீள்நிலத் தமுதின்
சீர்வாய் துவலைத் திருநீர் மாந்தி
மீனேற்றுக் கொடியோன் மெய்பெற வளர்த்த
வான வல்லி வருதலும் உண்டுகொல் !
இருநில மன்னற்குப் பெருவளம் காட்டத்
திருமகள் புகுந்ததிச் செழும்பதி யாம்என
எரிநிறத் திலவமும் முல்லையும் அன்றியும்
கருநெடுங் குவளையும் குமிழும் பூத்தாங்
குள்வரிக் கோலத் துறுதுணை தேடிக்
கள்ளக் கமலம் திரிதலும் உண்டுகொல் !
மன்னவன் செங்கோல் மறுத்தல் அஞ்சிப்
பல்லுயிர் பருகும் பகுவாய்க் கூற்றம்
ஆண்மையின் திரிந்துதன் அருந்தொழில் திரியாது
நாண்உடைக் கோலத்து நகைமுகம் கோட்டிப்
பண்மொழி நரம்பின் திவவியாழ் மிழற்றிப்
பெண்மையின் திரியும் பெற்றியும் உண்டென
உருவி லாளன் ஒருபெருஞ் சேனை
இகல்அமர் ஆட்டி எதிர்நின்று விலக்கியவர்
எழுதுவரி கோலம் முழுமெயும் உறீஇ
விருந்தொடு புக்க பெருந்தோட் கணவரொ
டுடன்உறைவு மரீஇ ஒழுக்கொடு புணர்ந்த
வடமீன் கற்பின் மனைஉறை மகளிர்
மாதர்வாள் முகத்து மணித்தோட்டுக் குவளைப்
போதுபுறங் கொடுத்துப் போகிய செங்கடை
விருந்தின் தீர்ந்தில தாயின் யாவது
மருந்தும் தருங்கொலிம் மாநில வரைப்பெனக்
கையற்று நடுங்கும் நல்வினை நடுநாள்
உள்ளக நறுந்தா துறைப்ப மீதழிந்து
கள்ளுக நடுங்குங் கழுநீர் போலக்
கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்துநீர் உகுத்தன
எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன
விண்ணவர் கோமான் விழவுநா ளகத்தென்.

———

சீவக சிந்தாமணி

இந் நூல் பெருங்காப்பியம் ஐந்தனுள் முதலாவது; **திருத்தக்க தேவர்** என்னுஞ் சைனமுனிவரால் இயற்றப்பெற்றது. **சீவகன்** என்னும் அரசனுடைய சரித்திரத்தை விரித்துக் கூறுவது; பதின்மூன்று இலம்பகங்களை உடையது; சொல்லழகும் பொருளழகும் உடையது; ஒன்பான் சுவைகளையும் தன்பாற்கொண்டது. இதனை **மணநூல்** எனவும் வழங்குப. இதன் செய்யுட்டொகை 3, 145. அவற்றுட் பல பழைய உரையாசிரியர்களால் மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பெற்றிருக்கின்றன. இதற்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் இயற்றிய சிறந்த உரை ஒன்றுண்டு. இந் நூல் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

பாடமாக வுள்ள காந்தர்வதத்தையார் இலம்பகத்துள், சீதத்தன் பொருளீட்டித் திரும்பும் வழியிற் கலங்கவிழ்தல், தரன் என்னும் வித்தியாதரன் அவனைத் தன் ஊருக்கு அழைத்துச் செல்லல், காந்தர்வதத்தையின் வரலாறு, நிமித்திகன்கூற்று, சீதத்தன் கலுழவேகனைக் கண்டு அளவளாவல், சீதத்தன் காந்தர்வதத்தையை உடனழைத்துக்கொண்டு இராசமாபுரம் வந்து அவளை யாழிலே வெல்வோனுக்கு மணஞ்செய்துகொடுப்பதாக முரசறைதல், சுயம்வரம், யாழ்ப்போர், அரசர் அந்தணர் முதலானோர் பாடித் தோற்றல், சீவகன் வருகை, யாழ்ப்போரில் சீவகன் வெல்லத் தத்தை சீவகனுக்கு மாலைசூட்டல், கட்டியங்காரனதியோர் போருக் கெழுதல், சீவகன்வெற்றி, தத்தையை மணந்து சீவகன் இன்புறுதல் முதலியனவும் பிறவும் சுவை ததும்ப எடுத்துக் கூறப்படுகின்றன.

3. காந்தருவதத்தையார் இலம்பகம்

1. இங்கிவர்கள் இவ்வா றிருந்தினிது வாழச்
சங்குதரு நீள்நிதியம் சாலவுடை நாய்கன்
பொங்குதிரை மீதுபொரு மால்களிறு போன்றோர்
வங்கமொடு போகிநிதி வந்துதர லுற்றான்.

2. மின்னெழுகு சாயல்மிகு பூண்பதுமை கேள்வன்
கொன்னெழுகு வேலியவ தத்தன்குளிர் தூங்குக்
தன்வழிய காஞ்சீ தத்தனவன் றன்போல்
பொன்னெழுகு குன்றில்உறை போர்ப்புலியொ டொப்பாள்

3. இம்மியன துண்பொருள்கள் ஈட்டிநிதி யாக்கிக்
கம்மியரும் ஊர்வர்களி றேடைதுதல் சூட்டி
அம்மிமிதந் தாழ்ந்துசுரை வீழ்ந்ததறம் சால்கென்
றும்மைவினை நொந்துபுலந் தூடலுணர் வன்றே.

4. உள்ளமுடை யான்முயற்சி செய்யலரு நாளே
வெள்ளநிதி வீழும்விளை யாததனின் இல்லை
தொள்ளைஉணர் வின்னவர்கள் சொல்லின்மடி கிற்பின்
எள்ளுநர்கட் கேக்கழுத்தம் போலஇனி தன்றே.

5. செய்கபொருள் யாரும்செறு வாரைச்செறு கிற்கும்
எஃகுபிறி தில்லைஇருந் தேஉயிரும் உண்ணும்
ஐயமிலை இன்பம்அற னொடைவையும் ஆக்கும்
பொய்யில்பொரு ளேபொருள்மற் றல்லபிற பொருளே.

6. தூங்குசிறை வாவல்உறை தொல்மரங்கள் என்ன
ஓங்குகுலம் நையஅத னுட்பிறந்த வீரர்
தாங்கல்கடன் ஆதும்தலை சாய்க்கவரு தீச்சொல்
நீங்கல்மட வார்கள்கடன் என்றெழுந்து நேர்ந்தான்

[சீதத்தன் பண்டங்களைக் கலத்தேற்றி, தானும் ஏற, கலம் கடலில் ஓடிற்று.]

7. திரைகள்தருஞ் சங்குகலம் தாக்கித் திரள்முத்தம்
கரைகடலுள் காலக்கணை பின்னொழிய முக்நீர்
வரைகிடந்து கீண்டதெனக் கீறிவளர் தீவின்
நிரைஇடறிப் பாய்ந்திய ஏகியது மாதோ.

8. மின்னுமிளிர் பூங்கொடியும் மென்மலரும் ஒப்பார்
அன்னமொடு தோகைநடை சாயல்அமிர் தன்னார்
துன்னிஇனி தாகஉறை துப்புரவின் மிக்க
நன்மைஉடை நன்பொன்வீளை தீவம்அடைந் தஃதே.

[அத் தீவில் ஆறு திங்கள் தங்கி, தனது பண்டம் விற்றுப் பெற்ற நிதிக்குவியலைத் தன் கலத்தில் ஏற்றி, தன் ஊருக்குத் திரும்ப எண்ணிய சீதத்தன்,]

9. அரைசனைக் கண்டு கண்ணுற்
றவர்களை விடுத்து நன்னுள்
இரேவதி வியாழ ஓரை
இருஞ்சிலை முளைப்ப ஏறிக்
கரைகடல் அழுவம் நீந்திக்
காற்றினும் கடுகி ஐஞ்ஞா
றுரையுடைக் காதம் ஒடி
யோசனை எல்லை சார்ந்தே.

10. களித்தலை மயங்கி இப்பால்
இருத்தலும் கலந்தோர் காற்றில்
துளித்தலை முகில்கள் ஈண்டித்
தூங்கிருள் மயங்கி ஆன்று
விளித்தலைப் போல மின்னி
வெடிபட முழங்கிக் கூற்றம்
ஒளித்துலைந் தொழிய வெம்பி
உரறினின் றிடிப்ப நாய்கன்.

11 "எண்டிசை வளியும் ஈண்டி
எதிர்எதிர் கலாவிப் பவ்வம்
கொண்டுமேல் எழுவ தொப்பக்
குளிறினின் றதிர்ந்து மேகம்
தண்டுளி பளிக்குக் கோல்போல்
தாரையாய்ச் சொரிந்து தெய்வம்
கொண்டதோர் செற்றம் போலும்
குலுங்கன்மின் " என்று கூறும்.

12. "இடுக்கண்வந் துற்ற காலை
எரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றுனும் இன்றி
நகுகதாம் நக்க போழ்தவ்
விடுக்கணை அரியும் எஃகாம்
இருந்தழு தியாவர் உய்ந்தார்

வடுப்படுத் தென்னை ஆண்மை
வருபவந் துறுங்கள் அன்றே.

13. "ஆடகச் செம்பொற் கிண்ணத்
தேந்திய அலங்கல் தெண்ணீர்
கூடகம் கொண்ட வாழ்நாள்
உலந்ததேல் கொல்லும் பவ்வத்
தாடகம் புக்கு முந்நீர்
அழுந்தினும் உய்வர் கல்லார்
பாடகம் போலச் சூழ்ந்த
பழவினைப் பயத்தின்" என்றான்.

14. பருமித்த களிற னனும்
பையெனக் கவிழ்ந்து நிற்பக்
குருமித்து மதலை பொங்கிக்
கூம்பிறப் பாய்ந்து வல்லே
நிருமித்த வகையின் ஒடி
நீர்நிறைந் தாழ்ந்த போழ்தில்
உருமிடித் திட்ட தொப்ப
உள்ளவர் ஒருங்கு மாய்ந்தார்.

[சீதத்தன் தப்பிக் கரையேறி ஒரு சோலையைச் சார்ந்தான்.]

15. ஆளிய மொய்ம்பன் இருந்தவப் பூம்பொழில்
தாள்வலி யான்ஓர் மகனைத் தலைப்பட்டுக்
'கேளிர் எனக்குற்ற கேண்மினம் நீர்' எனத்
தோள்வலி மிக்கான் தொடர்ந்துரைக் கின்றான்.

16. மானும் மரனும் இரங்க மதவலி
தானுற்ற துன்பம் தரனுக் குரைத்தபின்
தேனும் அமிழ்தும் தெளித்தாங் கினியன
ஊனமில் கட்டுரைக் குள்ளம் குளிர்ந்தான்.

17. "விஞ்சைகள் வல்லேன் விளிந்தகின் தோழரொ
டெஞ்சிய வான்பொருள் எல்லாம் இமைப்பினுள்
வஞ்சமொன் றின்றி மறித்தே தருகுவன்
நெஞ்சிற் குழைந்து நினையன்மின்" என்றான்.

18. உரைஅகங் கொள்ள உணர்த்தின னுகி
வரையகம் ஏற வலிமினம் என்ன

விரைசெலல் வெம்பரி மேழகம் ஏற்றிக்
குரைகழல் மைந்தனைக் கொண்டு பறந்தான்.

[தரன் வணிகனைத் தன் ஊருக்கு அழைத்துச் சென்றான்.]

19. மேகமே மிடைந்து தாழ
இருள்கொண்ட வெள்ளிக் குன்றம்
மாகத்து விளங்கித் தோன்றும்
வனப்புநாம் வகுக்க லுற்றால்
நாகந்தான் கரிய தொன்று
கீழ்நின்று நடுங்கக் கவ்விப்
பாகமே விழுங்கப் பட்ட
பால்மதி போன்ற தன்றே.

[அவ் வெள்ளிக்குன்றத்தின்மேல் நகரம் இருந்தது.]

20. நன்னகர் நோக்கி நாய்கன்
நாகங்கொல் புகுந்த தென்னப்
பொன்னகர் பொலியப் புக்குப்
பொங்குமா மழைகள் தங்கும்
மின்னவிர் செம்பொன் மாடத்
திருவரும் இழிந்து புக்குப்
பின்னவன் விருந்து பேணிப்
பேசினன் பிறங்கு தாரான்.

[தரன், அங்நகர்க் கரசன் கலுழவேகன் எனவும் அவன்தேவி தாரணி எனவும் வணிகனுக்கு அறிவித்து, மேலும் கூறுவான்:]

21. "விண்ணகம் வணங்க வெண்கோட்
டிளம்பிறை மூளைத்த தேபோல்
பண்ணகத் தினிய சொல்லாள்
பாவையைப் பயந்த ஞான்றே
எண்ணிடம் இன்றி மன்னர்
இம்மலை இறைகொண் டீண்டி
அண்ணலங் களிற்றின் உச்சி
அருங்கல வெறக்கை ஈந்தார்.

22. "மந்திரத் தரசன் 'வல்லே
நிமித்திகன் வருக' என்றூற்
கந்தரத் தோடு கோளின்
சாதகம் அவனும் செய்தான்

'இந்திர திருவில் ஏய்ப்பக்
குலவிய புருவத் தாட்கு
வந்தடை பான்மை மண்மேல்
இராசமா புரத்த' தென்றான்."

[தரன், வணிகனுக்கு இச் செய்தியைக் கூறி, அவனை அரசன்-
கோயிலுக்கு அழைத்துச் சென்றான்.]

23. 'என்வர விசைக்க' என்ன
வாயிலோன் இசைப்ப ஏகி
மன்னர்தம் முடிகள் வேய்ந்த
வயிரம்போழ்ந் தழுது சேந்த
பொன்னவிர் கழல்கொள் பாதம்
பொழிமழைத் தடக்கை கூப்ப
இன்னுரை முகமன் கூறித்
'தானத்தில் இருக்க' என்றான்.

24. முதிர்பெயல் மூரி வானம்
முழங்கிவாய் விட்ட தொப்ப
அதிர்குரல் முரசம் நாண
அமிர்துபெய் மாரி ஏய்ப்பக்
கதிர்விரி பூணி னுற்குத்
தந்தைதாய் தாரம் காதல்
மதுரமா மக்கள் சுற்றம்
வினவிமற் றிதுவும் சொன்னான்.

25. "இன்றைய தன்று கேண்மை
எமர்நுமர் எழுவர் காறும்
நின்றது கிழமை நீங்கா
வச்சிர யாப்பின் ஊழால்
அன்றியும் அறனும் ஒன்றே
அரசன்யான் வணிகன் நீயே
என்றிரண் டில்லை கண்டாய்
இதுநின தில்லம்" என்றான்.

26. மந்திர மன்னன் சொல்நீர்
மாரியால் வற்றி நின்ற
சந்தனம் தளிர்த்த தேபோல்
சீதத்தன் தளிர்த்து நோக்கி
'எந்தைக்குத் தந்தை சொன்னான்
இன்னணம்' என்று கேட்ப

முந்தைத்தான் கேட்ட வாறே
முழுதெடுத் தியம்பு கின்றான்.

27. "சங்குடைந் தனைய வெண்டா
மரைமலர்த் தடங்கள் போலும்
நங்குடித் தெய்வம் கண்டீர்
நமரங்காள் அறிமின் என்ன
கொங்குடை முல்லைப் பைம்போ
திருவடம் கிடந்த மார்ப!
இங்கடி பிழைப்ப தன்றால்
எங்குலம்" என்று சொன்னான்.

[கலுழவேகன் வணிகன்கையைப் பற்றி, அந்தப்புரத்துக்கு அழைத்துச் செல்ல, அங்கு நின்ற அரசன்மகளை வணிகன் கண்டான்.]

28. எரிமணிப் பளிக்கு மாடத்
தெழுந்ததோர் காம வல்லி
அருமணிக் கொடிகொல் மின்கொல்
அமரர்கோன் எழுதி வைத்த
ஒருமணி குயின்ற பாவை
ஒன்றுகொல் என்று நாய்கன்
திருமணிக் கொடியை ஓரான்
தெருமர மன்னன் சொன்னான்.

29. "நின்மகள் இவளை நீயே
நின்பதி கொண்டு போகி
இன்னிசை பொருது வெல்வான்
யாவனே யானு மாக
அன்னவற் குரியள்" என்ன
"அடிப்பணி செய்வல்" என்றான்
தன்னமர் தேவி கேட்டுத்
'தத்தைக்கே தக்க' தென்றாள்.

30. "நூற்படு புலவன் சொன்ன
நுண்பொருள் துணைந்தி யானும்
வேற்கடற் றானை வேந்தர்
வீழ்ந்திரந் தாலும் நேரேன்

சேற்கடை மதர்வை நோக்கிற்
சில்லரித் தடங்கண் நங்கை
பாற்படு காலம் வந்தால்
பான்மையார் விலக்கு கிற்பார்.''

[தத்தையின் பரிவை நீக்கித் தாயும் தந்தையும் கொடுத்தற் குரியன எல்லாம் கொடுத்தனர். வேந்தன் வீணுபதி என்னும் பேடியையும், தன் மகளையும் சீதத்தனிடம் ஒப்புவித்தான்.]

31. அருமணி வயிரம் வேய்ந்த
அருங்கலப் பேழை ஐஞ்ஞூ
றெரிமணி செம்பொன் ஆர்ந்த
இராயிரம் யவனப் பேழை
திருமணிப் பூணி னுற்குச்
சினந்தலை மழுங்கல் இன்றிக்
குருமணி முடியிற் றேய்த்த
தரன்தமர் கொள்க என்றான்.

32. அரக்கெறி குவளை வாட்கண்
அவ்வளைத் தோளி னாளைப்
பரப்பமை காதற் றூயர்
பற்பல்காற் புல்லிக் கொண்டு
திருப்புறக் கொடுத்த செம்பொற்
றூமரை போன்று கோயில்
புரிக்குழல் மடந்தை போகப்
புலம்பொடு மடிந்த தன்றே.

[மன்னன், வணங்கி நின்று விடைகொண்ட மகளை நோக்கிப் பிரிவாற்றாது,]

33. '' வலம்புரி ஈன்ற முத்தம்
மண்மிசை யவர்கட் கல்லால்
வலம்புரி பயத்தை எய்தா
தனையரே மகளிர் '' என்ன
நலம்புரிந் தனைய காதற்
றேவி தன் னனையை நீங்கக்
குலம்புரிந் தனைய குன்றிற்
கதிபதி கூறி னானே.

34. இன்சுவை யாழோ டின்னம்
இளங்கிளி மழலை மஞ்ஞை

பொன்புனை ஊகம் மந்தி
பொறிமயிர்ப் புறவம் பொன்னூர்
மென்புன மருளின் நோக்கின்
மானினம் ஆதி யாகத்
தன்புறம் சூழப் போகித்
தளிரியல் விமானம் சேர்ந்தாள்.

[சீதத்தன், தத்தையோடு தன் நாடடைந்து, அவளுக்குச் சுயம்வரமண்டபம் அமைத்தான்.]

35. ஓடுமுகில் கீறிஒளிர் திங்கள்சிகை வைத்தே
மாடமது வார்சடைய வள்ளலையும் ஒக்கும்
நாடிமுகம் நான்கதனின் நான்முகனை ஒக்கும்
கேடிலிமிர் தன்மையினின் நேமியையும் ஒக்கும்.

[சீதத்தன், தத்தையின் வரலாற்றைக் கூறி, அவளை மணம் செய்தற்கு உரியவர் முதன்மூன்று குலத்தில் பிறந்தவராய் அவளை வீணையில் வெல்வோரே என்று முரசறைவித்தான்.]

36. மண்ணக மடந்தை ஆகம்
மார்புற முயங்கி நின்ற
அண்ணலை ஆதி யாக
அருங்கடி நகரை வாழ்த்தி
விண்ணக முழக்கின் ஏய்ப்ப
வீதிதோ றெருக்கி எங்கும்
கண்ணெளிர் சடிப்பின் ஒச்சிக்
கடிமுர சறைந்த காலை.

[சுயம்வரத்துக்குப் பல தேச மன்னரும் வந்து கூடினர்.]

37. நீணிதி வணிகர் சூழ
நிலமிசை யவர்க ளெல்லாம்
வீணையிற் பொருது வெல்வான்
விரைவினர் துவன்றி மூதூர்க்
கோணமும் மறுகும் எல்லாம்
குச்சென நிரைத்தம் மாந்தர்
மாண்மது நசையின் மொய்த்த
மதுகர ஈட்டம் ஒத்தார்.

38. மண்டலம் நிறைந்த மாசில்
மதிப்புடை வியாழம் போன்மூர்

குண்டலம் இலங்க நின்ற
கொடியினைக் குறுகித் தோழி
விண்டலர் கோதை விம்மும்
விரைகுழல் தொழுது நீவிப்
பண்டியல் மணங்கள் எல்லாம்
பரிவறப் பணிந்து சொன்னாள்.

39. "மண்ணிடம் மலிர எங்கும்
மாந்தரும் வந்து தொக்கார்
ஒண்ணிற உரோணி ஊர்ந்த
ஒளிமதி ஒண்பொன் ஆட்சித்
தெண்ணிற விசும்பி னின்ற
தெளிமதி முகத்து நங்கை
கண்ணிய வீணை வாட்போர்க்
கலாமின்று காண்டும்" என்றே

40. பசுங்கதிர்க் கடவுள் யோகம்
பழிப்பற நுனித்து வல்லான்
விசும்பிவர் கடவுள் ஒப்பான்
விரிச்சிகன் அறிந்து கூற
அசும்புதேன் அலங்கல் ஐம்பால்
அரிவையோ டாய்ந்து நாய்கன்
விசும்புபோல் மாந்தர் ஆர
விழுநிதி சிதறி னானே.

[தோழிமார் தத்தைக்கு ஒப்பனை செய்தனர்.]

41. மண்கனை முழவம் விம்ம
வரிவனை துவைப்ப வள்வார்க்
கண்கனைத் திடியின் வெம்பிக்
கடலென முரசம் ஆர்ப்ப
விண்கனிந் துருகு நீர்மை
வெள்வளைத் தோளி போந்தாள்
பண்கனிந் துருகு நல்யாழ்ப்
படைபொரு துடைக்க லுற்றே.

42. பரந்தொளி உமிழும் பைம்பொற்
கண்ணடி பதாகை தோட்டி
விரிந்திருள் மேயுஞ் செம்பொன்
விளக்குவெண் முரசு கும்பம்
சுரந்தவெண் மதியைச் சூன்று
கதிர்கொண்டு தொகுத்த போலும்

பொருந்துபொற் கதிர்பெய் கற்றை
புணர்கயல் போந்த அன்றே.

[கண்டோர் வியக்க மண்டபத்தை அடைந்த தத்தை யாழ் வாசித்தாள்.]

43. சிலைத்தொழிற் சிறுநுதல் தெய்வப் பாவைபோல்
கலைத்தொழிற் படஎழீஇப் பாடி னுள்கனிந்
திலைப்பொழில் குரங்கின ஈன்ற தூண்தளிர்
நிலத்திடைப் பறவைமெய்ம் மறந்து வீழ்ந்தவே.

44. "கருங்கொடிப் புருவம் ஏரு
கயல்நெடுங் கண்ணும் ஆடா
அருங்கடி மிடறும் விம்மா
தணிமணி எயிறும் தோன்றூ
இருங்கடற் பவளச் செவ்வாய்
திறந்திவள் பாடி னளோ!
நரம்பொடு வீணை நாவின்
நவின்றதோ!" என்று நைந்தார்.

45. இசைத்திறத் தனங்களே அனைய நீரினர்
வசைத்திறம் இலாதவர் வான்பொன் யாழ்எழீஇ
விசைத்தவர் பாடலின் வெருவிப் புள்ளெலாம்
அசிப்பபோன் றிருவிசும் படைந்த என்பவே.

46. மாதர்யாழ் தடவர வந்த மைந்தர்கைக்
கீதத்தால் மீண்டன கேள்விக் கின்னரம்
போதரப் பாடினுள் புகுந்த போயின
தாதலர் தாரினர் தாங்கள் பாடவே.

47. திருமலர்க் கமலத் தங்கண்
தேனினம் முரல்வ தொப்ப
விரிமலர்க் கோதை பாட
எழால்வகை வீரர் தோற்றூர்
எரிமலர்ப் பவளச் செவ்வாய்
இன்னரம் புளர மைந்தர்
புரிநரம் பிசைகொள் பாடல்
உடைந்தனர் பொன்ன னட்கே.

[தத்தையை வெல்வோ மின்மையின், கட்டியங்காரன் யாழ்ப்போரை நிறுத்தலானன். அப்போழுது சீவகன், யாழ்ப்போருக்குச் செல்லத் தந்தையிடம் விடைபெற்று, தோழர் சூழ அம் மண்டபத்தை அணுகினன்.]

48. சுரும்பிறக் கொடுங்குழை சுழன்றெருத் தலைத்தர
அரும்மலர்த் தெரியலான் அழன்றுநோக்கி ஐயெனப்
பொருமனப் பொலிவெனும் மணிக்கைமத்தி கையினுல்
அருவிவந்து தோன்றினன் அனங்கனன்ன அண்ணலே.

[அண்ணல், யாழ்மண்டபத்துப் புக்கு, புதிதாக இட்ட அணையில் போலிவுற வீற்றிருந்தான்.]

49. தடங்கணுள் பணியினுல் தானவ்வீணை ஒன்றினை
நெடுங்கணுள் எழினியை நீக்கியுய்த்து நீட்டினுள்
மடங்கலன்ன மொய்ம்பினன் வருகவென்று கொண்டுதன்
கிடந்தஞானத் தெல்லையைக் கிளக்கலுற்று நோக்கினன்.

[வீணைபதி கொடுத்த யாழ்களைக் குற்றங் காட்டி நீக்கினன்.]

50. தீந்தொடை நரம்பின் தீமை
சிறிதலாப் பொழுதும் ஓதிப்
பூந்தொடை அரிவை காணப்
புரிநெகிழ்த் தூரோமம் காட்டத்
தேங்கமழ் ஓதி தோற்றுள்
செல்வனுக் கென்ன மைந்தன்
வாங்குபு நபுலன் கையுள்
வார்புரி நரம்பு கொண்டான்.

51. பணிவரும் பைம்பொற் பத்தர்
பல்வினைப் பவள ஆணி
மணிகடை மருப்பின் வாளார்
மாடக வயிரத் தீந்தேன்
அணிபெற ஒழுகி அன்ன
அமிழ்துறழ் நரம்பின் நல்யாழ்
கணிபுகழ் காவ கொண்டு
கடலகம் வலைக்க லுற்றான்.

52. குரல்குர லாகப் பண்ணிக்
கோதைதாழ் குஞ்சி யான்றன்
விரல்கவர்ந் தெடுத்த கீதம்
மிடறெனத் தெளிதல் தேற்றார்
சுரரொடு மக்கள் வீழ்ந்தார்
சோர்ந்தன புள்ளும் மாவும்
உருகின மரமும் கல்லும்
ஓர்த்தெழீ இப் பாடு கின்றான்.

53. பருந்தும் நிழலும்போல் பாட்டும் எழாலும்
திருந்துதார்ச் சீவகற்கே சேர்ந்தனஎன் றெண்ணி
விருந்தாக யாழ்பண்ணி வீணைதான் தோற்பான்
இருந்தாள் இளமயில்போல் ஏந்திலைவேற் கண்ணுள்.

54. பண்ணென்று பாட லதுவொன்று பல்வளைக்கை
மண்ணென்று மெல்விரலும் வாள்நரம்பின் மேல்நடவா
விண்ணின் றியங்கி மிடறு நடுநடுங்கி
எண்ணின்றி மாதர் இசைதோற் றிருந்தனளே.

55. 'வெள்ளிலை வேற்க ணிலைச்
சீவகன் வீணை வென்றான்
ஒள்ளியன்' என்று மாந்தர்
உவாக்கடல் மெலிய ஆர்ப்பக்
கள்ளராற் புலியை வேறு
காணிய காவல் மன்னன்
உள்ளகம் புழுங்கி மாதோ
உரைத்தனன் மன்னர்க் கெல்லாம்.

[கட்டியங்காரன்சொல்லைக் கேட்டு மற்ற மன்னர்கள் சீவகன்மேல் போருக்கெழ, அதனைக் கண்ட பதுமுகன் கூறலுற்றான்:]

56. "'இசையினில் இவட்குத் தோற்றும்
யானையால் வேறும்' என்னின்
இசைவதொன் றன்று கண்டீர்
இதனையான் இரந்து சொன்னேன்
வசையுடைத் தரசர்க் கெல்லாம்
வழிமுறை வந்த வாறே
திசைமுகம் படர்க வல்லே
தீத்தொட்டால் சுடுவ தன்றே."

[பதுமுகன்சொல்லைக் கேளாத மன்னர், தம்முடன் போர எதிர்நின்ற சீவகனை நோக்கி,]

57. "வாணிகம் ஒன்றும் தேற்றாய்
முதலொடும் கேடு வந்தால்
ஊணிகந் தீட்டப் பட்ட
ஊதிய ஒழுக்கின் நெஞ்சத்
தேணிகந் திலேசு நோக்கி
இருமுதல் கெடாமை கொள்வார்
சேணிகந் துய்யப் போகின்
செறிதொடி ஒழிய" என்றார்.

58. "தம்முடைப் பண்டந் தன்னைக்
கொடுத்தவர் உடைமை கோடல்
எம்முடை யவர்கள் வாழ்க்கை
எமக்குமஃ தொக்கும் அன்றே
அம்முடி அரசர்க் கெல்லாம்
என்கையில் அம்பு தந்து
தம்முடைத் திருவும் தேசும்
கோக்குமின் கொள்வல்" என்றான்.

59. தாழிருக் கடக்கையும் மருப்பும் தம்பியர்
தோழர்தன் தாள்களாச் சொரியும் மும்மதம்
ஆழ்கடற் சுற்றமா அழன்று சீவக
ஏழுயர் போதகம் இனத்தொ டேற்றதே.

60. தெய்வதம் வணங்குபு செம்பொன் வாயுளிட்
டெய்கணைப் படுமழை சிதறி எங்கணும்
மொய்யமர் மலைந்தனர் 'முருகு விம்முதார்ச
செய்கழற் சீவகன் வாழ்க' என்னவே.

61. நீல்நிறப் பௌவம் மேய்ந்து
சூல்முற்றி நீல மேகம்
வால்நிற விசும்பில் நின்ற
மாரியின் மறைவ லாளன்
போனிறப் புத்தி சேனன்
பொன்னணி பகழி சிந்தி
வேல்நிற மன்னர் சேனை
கூற்றிற்கு விருந்து செய்தான்.

[பகைமன்னர்படை புறங்கொடுக்க, வெற்றிகொண்ட சீவகன் தத்தையோடு மனைபுக்கான். மணவினை தொடங்கிற்று.]

62. இன்னியம் முழங்கி ஆர்ப்ப
ஈண்டெரி திகழ வேதம்
தன்னினர் பலாசிற் செய்த
தூடுப்பினெய் சொரிந்து வேட்ப
மின்னியல் கலச நன்னீர்
சொரிந்தனன் வீரன் ஏற்றான்
முன்னுபு விளங்கு வெள்ளி
மூனைத்தெழ முருக னன்னான்.

63. மந்திரத் தரசன் காதல்
மாதரம் பாவை தன்னைச்

கந்துகன் சிறுவன் வேட்ட
கடிவினை நொடியின் மற்றோர்
அந்தர விசும்பிற் றேவர்க்
கதிபதி யாய கோமான்
இந்திரன் றனக்கும் ஆகா
தென்பது நடந்த தன்றே.

[கலுழவேகன் விடுத்த ஓலைச்செய்தி]

64. 'ஆம்பொருள்கள் ஆகுமது யார்க்கும்அழிக் கொண்ணாப்
போம்பொருள்கள் போகுமவை பொறியின்வகை வண்ணம்
தேம்புனலே நீர்க்கடலும் சென்றுதரல் இன்றே
வீங்குபுனல் யாறுமழை வேண்டியறி யாதே.'

65. மன்பெரிய மாமனடி மகிழ்ந்துதிசை வணங்கி
அன்பினக லாதவினை விடுத்தலர்ந்த கோதைக்
'கின்பநிலத் தியன்றபொருள் இவையிவைதுங் கோமான்
தந்த'எனச் சொல்லினனி சாமிகொடுத் தானே.

★

பெரிய புராணம்

பெரிய புராண மென்று வழங்குந் திருத்தொண்டர் புராணம் பாடினவர் தொண்டைமண்டலத்துப் புலியூர்க்கோட்டத்துக் குன்றைவள நாட்டுக் குன்றத்தூரிலே வேளாண்குலத்திலே சேக்கிழார்மரபிலே பிறந்தவர். இவர்இயற்பெயர் அருண்மொழித்தேவர். சேக்கிழார்மரபை விளக்கிய காரணத்தால் இவர் சேக்கிழார் எனப்பட்டார்.

பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவாணர் இவர் தமிழ்அன்பும், திருமுறைநேயமும் அடியவர்பத்தியுமே இவரைப் பெரிய புராணம் பாடத் தூண்டின. இப்புராணத்தில் எல்லாச் சுவைகளும் விரவிவருமேனும், பத்திச் சுவையே அச்சாணியாய் விளங்கும்.

பெரிய புராணம்

கண்ணப்பநாயனார் புராணம்

1. சார்வரும் தவங்கள் செய்து
முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்தும்
காணுதற் கரியார் தம்மை
ஆர்வமூன் பெருக ஆரா
அன்பினிற் கண்டு கொண்டே...
நேர்பெற நோக்கி நின்றூர்
நீள்இருள் நீங்க நின்றூர்.

2. கழைசொரி தரளக் குன்றின்
கதிர்நில வொருபால் பொங்க
முழையர வுமிழ்ந்த செய்ய
மணிவெயில் ஒருபால் மொய்ப்ப
தழைகதிர்ப் பரிதி யோடும்
சந்திரன் தலைஉ வாவில்
குழையணி காதர் வெற்பைக்
கும்பிடச் சென்றூல் ஒக்கும்.

3. விரவுபன் மணிகள் கான்ற
விரிகதிர்ப் படலை பொங்க
மரகதம் ஒளிகொள் நீல
மணிகளும் இமைக்குஞ் சோதி
பொரஇரு சுடரூக் கஞ்சிப்
போயின புடைகள் தோறும்
இரவிருள் ஒதுங்கி ஞலே
போன்றுள தெங்கும் எங்கும்.

4. செந்தழல் ஒளியிற் பொங்குச்
தீபமா மரங்க ளாலும்
மந்திகள் முழையில் வைத்த
மணிவிளக் கொளிக ளாலும்
ஐந்தும்ஆ றடக்கி யுள்ளார்
அரும்பெருஞ் சோதியாலும்
எந்தையார் திருக்கா ளத்தி
மலையினில் இரவொன் றில்லை.

5. வருங்கறைப் பொழுது நீங்கி
மல்கிய யாமஞ் சென்று
சுருங்கிட அறிந்த புள்ளின்
சூழ்சிலம் போசை கேட்டுக்
கருங்கடல் என்ன நின்று
கண்துயி லாத வீரர்
அரும்பெறல் தம்பி ரானுர்க்
கமுதுகொண் டணைய வேண்டி

6. ஏறுகாற் பன்றி யோடும்
இருங்கலை புனமான் மற்றும்
வேறுவே றினங்கள் வேட்டை
வினைத்தொழில் விரகி னுலே
ஊறுசெய் காலம் சிந்தித்
தருமிகத் தெரியாப் போதின்
மாறடு சிலையுங் கொண்டு
வள்ளலைத் தொழுது போந்தார்.

7. மொய்காட்டும் இருள்வாங்கி முகங்காட்டும் தேர்இரவி
மெய்காட்டும் அன்புடைய வில்லியார் தனிவேட்டை
எய்காட்டின் மாவிலக்க இட்டகருந் திரைஎடுத்துக்
கைகாட்டு வான்போலக் கதிர்காட்டி எழும்போதில்

8. எய்தியசீர் ஆகமத்தில் இயம்பியபூ சனைக்கேற்பக்
கொய்தமல ருப்புனலும் முதலான கொண்டணைந்தார்
மைதழையுங் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவரும் தவமுடைய முனிவர்சிவ கோசரியார்.

9. வந்திரு மலையின்கண் வானவர்நா யகர்மருங்கு
சிந்தைநிய மத்தோடும் செல்கின்றூர் திருமுன்பு
வெந்தஇறைச் சியும்எலும்பும் கண்டகல மிதித்தோடி
" இந்தஅரு நெதங்கெட்டேன் யார்செய்தார் " என்றழிவார்

10. " மேவநோ வாஅஞ்சா வேடுவரே இதுசெய்தார்
தேவதே வேசனே திருமுன்பே இதுசெய்து
போவமீத இவ்வண்ணம் புகுதரீர் திருவுள்ளம்
ஆவதே " எனப்பதறி அழுதுவிழுந் தலமந்தார்.

11. "பொருப்பில்எழுஞ் சுடர்க்கொழுந்தின் பூசனையும் தாழ்க்கநான்
இருப்பதினி என்"என்றவ் விறைச்சிளையும் புடன்இலையும்
செருப்படியும் நாயடியும் திருவலகால் மாற்றியபின்
விருப்பினெடும் திருமுகலிப் புனல்முழ்கி விரைந்தணைந்தார்.

12. பழுதுபுகுந் ததுதீரப் பவித்திரமாஞ் செயல்புரிந்து
தொழுதுபெறு வனகொண்டு தூயபூ சனைதொடங்கி
வழுவில்திரு மஞ்சனமே முதலாக வரும்பூசை
முழுதுமுறை மையின்முடித்து முதல்வனுர் கழல்பணிந்தார்.

13. பணிந்தெழுந்து தனிமுதலாம் பரனென்று பன்முறையால்
துணிந்தமறை மொழியாலே துதிசெய்து சுடர்த்திங்கள்
அணிந்தசடை முடிக்கற்றை அங்கணரை விடைகொண்டு
தணிந்தமனத் திருமுனிவர் தபோவனத்தி னிடைச்சார்ந்தார்.

14 இவ்வண்ணம் பெருமுனிவர் ஏகினுர் இனிஇப்பால்
மைவண்ணக் கருங்குஞ்சி வனவேடர் பெருமானுர்
கைவண்ணச் சிலைவலத்துக் கான்வேட்டை தனியாடிச்
செய்வண்ணத் திறம்மொழிவேன் தினையின் திறம்ஒழிவேன்.

15. திருமலையின் புறம்போன திண்ணனுர் செறிதுறுகல்
பெருமலைகள் இடைச்சரிவில் பெரும்பன்றி புனம்மேய்ந்து
வருவனவும் துணிபடுத்து மானினங்கள் கானிடைநின்
றெருவழிச்சென் றேறுதுறை ஒளிநின்று கொன்றருளி

16. பயில்விளியால் கலைஅழைத்துப் பாடுபெற ஊடுருவும்
அயில்முகவெங் கணைபோக்கி அடியொற்றி மரையினங்கள்
துயிலிடையிற் கிடையெய்து தொடர்ந்துகட மைகளெய்து
வெயில்படுவெங் கதிர்முதிரத் தனிவேட்டை வினைமுடித்தார்.

17. பட்டவன விலங்கெல்லாம் படர்வனத்தில் ஒருசூழல்
இட்டருகு நீக்கடைகோல் இருஞ்சுரிகை தினைஉருவி
வெட்டிநறுங் கோற்றேனும் மிகமுறித்துத் தேக்கிலையால்
வட்டமுறு பெருங்கல்லை மருங்குபுடை படஅமைத்தார்.

18. இந்தனத்தை முறித்தடுக்கி எரிகடையும் அரணியினில்
வெந்தழலைப் பிறப்பித்து மிகவளர்த்து மிருகங்கள்

கொந்தியில் அலகம்பால் குட்டமிட்டுக் கொழுப்பரிந்து
வந்தனகொண் டெழுந்தழலில் வக்குவன வக்குவித்து

19. வாயம்பால் அழிப்பதுவும் வகுப்பதுவும் செய்தவற்றின்
ஆயஉறுப் பிறைச்சியெலாம் அரிந்தொருகல் லேயில்இட்டுக்
காயநெடுங் கோல்கோத்துக் கனலின்கண் உறக்காய்ச்சித்
தூயதிரு அமுதமைக்கச் சுவைகாணல் உறுகின்றார்

20. எண்ணிறந்த கடவுளருக் கிடும்உணவு கொண்டுட்டும்
வண்ணஎரி வாயின்கண் வைத்ததெனக் காளத்தி
அண்ணலார்க் காம்பரிசு தாம்சோதித் தமைப்பார்போல்
திண்ணனார் திருவாயில் அமைத்தார்ஊன் திருவமுது.

21. கல்லபத முறவெந்து நாவின்கண் இடும்இறைச்சி
கல்லேயினிற் படைத்துத்தேன் பிழிந்துகலந் ததுகொண்டு
வல்விரைந்து திருப்பள்ளித் தாமமுந்தாய் மஞ்சனமும்
ஒல்லேயினின் முன்புபோல் உடன்கொண்டு வந்தணைந்தார்.

22. வந்துதிருக் காளத்தி மலேயேறி வனசரர்கள்
தந்தலைவ னரிமையோர் தலைவனார் தமையெய்தி
அந்தணனார் பூசையினை முன்புபோல் அகற்றியபின்
முந்தைமுறை தம்முடைய பூசனையின் செயல்முடிப்பார்

23. ஊன்அமுது கல்லேயுடன் வைத் "திதுமுன் னேயினன்றால்
ஏனமொடு மான்கலைகள் மரைகடமை இவையிற்றில்
ஆனஉறுப் பிறைச்சியமு தடியேனும் சுவைகண்டேன்
தேனும்உடன் கலந்ததிது தித்திக்கும்" எனமொழிந்தார்.

24. இப்பரிசு திருவமுது செய்வித்துத் தம்முடைய
ஒப்பரிய பூசனைசெய் தக்நெறியில் ஒழுகுவார்
எப்பொழுதும் மேன்மேல்வந் தெழும்அன்பால் காளத்தி
அப்பர்எதிர் அல்லுறங்கார் பகல்வேட்டை ஆடுவார்.

25. மாமுனிவர் நாள்தோறும் வந்தணைந்து வனவேந்தர்
தாமுயலும் பூசனைக்குச் சாலமிகத் தளர்வெய்தித்
தீமையென அதுதேக்கிச் செப்பியஆ கமவிதியால்
ஆமுறையில் அர்ச்சனைசெய் தக்நெறியில் ஒழுகுவரால்.

26. நாணனொடு காடனும்போய் நாகனுக்குச் சொல்லியபின்
ஊணனும்உறக் கமும்இன்றி அணங்குறைவா ளையுங்கொண்டு

பேணும்மக னுர்தம்பால் வந்தெல்லாம் பேதித்துக்
காணும்நெறி தங்கள்குறி வாராமல் கைவிட்டார்.

27. முன்புதிருக் காளத்தி முதல்வனுர் அருள்நோக்கால்
இன்புறுவே தகத்திருப்பு பொன்னுனுப் போல்யாக்கைத்
தன்பரிசும் வினையிரண்டும் சாருமல மூன்றும்அற
அன்புபிழம் பாய்த்திரிவார் அவர்கருத்தின் அளவினரோ.

28. அங்நிலையில் அன்பனுர் அறிந்தநெறி பூசிப்ப
மன்னியஆ கமப்படியால் மாமுனிவர் அருச்சித் " திங்
கென்னுடைய நாயகனே இதுசெய்தார் தமைக்காணேன்
உன்னுடைய திருவருளால் ஒழித்தருள வேண்டும் "என

29. அன்றிரவு கனவின்கண் அருள்முனிவர் தம்பாலே
மின்திகழும் சடைமவுலி வேதியர்தாம் எழுந்தருளி
" வன்திறல்வே டுவன்என்று மற்றவனே நீநினையேல்
நன்றவன்றன் செயல்தன்னே நாமுரைப்பக் கேள் "என்று

30. " அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமைஅறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம்என்றும்
அவனுடைய நிலைஇவ்வா றறிநீ "என் றருள்செய்தார்.

31. " பொருப்பினில்வந் தவன்செய்யும் பூசனைக்கு முன்பென்மேல்
அருப்புறுமென் மலர்முன்னே அவைநீக்கும் ஆதரவால்
விருப்புறும்அன் பெனும்வெள்ளக் கால்பெருகிற் றெனவீழ்ந்த
செருப்படிஅவ் விளம்பருவச் சேயடியிற் சிறப்புடைத்தால்.

32. " உருகியஅன் பொழிவின்றி நிறைந்தஅவன் உருவென்னும்
பெருகியகொள் கலமுகத்தில் பிறங்கியினி தொழுகுதலால்
ஒருமுனிவன் செவிஉமிழும் உயர்கங்கை முதல்தீர்த்தப்
பொருபுனலின் எனக்கவன்தன் வாயுமிழும் புனல்புனிதம்.

33. " இம்மலைவந் தெனையடைந்த கானவன்றன் இயல்பாலே
மெய்ம்மலரும் அன்புமேல் விரிந்தனபோல் விழுதலால்
செம்மலர்மேல் அயனெடுமால் முதல்தேவர் வந்துபுனை
எம்மலரும் அவன்தலையால் இடுமலர்போல் எனக்கொவ்வா.

34. " வெய்யகனல் பதங்கொள்ள வெந்துளதோ எனும்அன்பால்
கையுமனத் தினிமையினில் கையமிக மென்றிடலால்

செய்யுமறை வேள்வியோர் முன்புதருந் திருத்தவியில்
எய்யும்வரிச் சிலையவன்தான் இட்டஊன் எனக்கினிய.''

35 ''மன்பெருமா மறைமொழிகள் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கும்
இன்பமொழித் தோத்திரங்கள் மந்திரங்கள் யாவையினும்
முன்பிருந்து மற்றவன்தன் முகமலர அகநெகிழ
அன்பில்நிறைந் தெனையல்லால் அறிவுறு மொழிநல்ல.

36. ''உனக்கவன்றன் செயல்காட்ட நானேநீ ஒளித்திருந்தால்
எனக்கவன்றன் பரிவிருக்கும் பரிசெல்லாம் காண்கின்றாய்
மனக்கவலை ஒழி''கென்று மறைமுனிவர்க் கருள்செய்து
புனற்சடிலத் திருமுடியார் எழுந்தருளிப் போயினர்.

37. கனவுநிலை நீங்கியபின் விழித்துணர்ந்து கங்குலிடைப்
புனைதவத்து மாமுனிவர் புலர்வளவும் கண்துயிலார்
மனமுறுமற் புதமாகி வரும்பயமும் உடனுகைத்
தனிபுரவித் தனித்தேர்மேல் தோன்றுவான் கதிர்தோன்ற.

38. முன்னைநாள் போல்வந்து திருமுகலிப் புனல்மூழ்கிப்
பன்முறையும் தம்பிரான் அருள்செய்த படிநினைந்து
மன்னுதிருக் காளத்தி மலையேறி முன்புபோல்
பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக ஒளித்திருந்தார்.

39. கருமுகில் என்ன நின்ற
கண்படா வில்லி யார்தாம்
வருமுறை ஆறும் நாளில்
வரும்இர வொழிந்த காலை
அருமறை முனிவ னுர்வந்
தனைவதன் முன்பு போகித்
தருமுறை முன்பு போலத்
தனிப்பெரு வேட்டை யாடி

40 மாறில்ஊன் அமுதும் நல்ல
மஞ்சனப் புனலும் சென்னி
ஏறுநாள் மலரும் வெவ்வே
றியல்பினில் அமைத்துக் கொண்டு

தேறுவார்க் கமுத மான
செல்வனூர் திருக்கா ளத்தி
ஆறுசேர் சடையார் தம்மை
அணுகவந் தணையா நின்றார்.

41. "இத்தனை பொழுது தாழ்த்தேன்"
எனவிரைந் தேகு வார்முன்
மொய்த்தபல் சகுன மெல்லாம்
முறைமுறை தீங்கு செய்ய
"இத்தகு தீய புட்கள்
ஈண்டமுன் உதிரங் காட்டும
அத்தனுக் கென்கொல் கெட்டேன்
அடுத்ததென்" றணையும் போதில்

42. அண்ணலார் திருக்கா ளத்தி
அடிகளார் முனிவ னுர்க்குத்
திண்ணனூர் பரிவு காட்டத்
திருநய னத்தில் ஒன்று
துண்ணென உதிரம் பாய
இருந்தனர் தூரத் தேஅவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு
வல்விரைந் தோடி வந்தார்.

43. வந்தவர் குருதி கண்டார்
மயங்கினர் வாயில் நன்னீர்
சிந்திடக் கையில் ஊனும்
சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமம்
குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை அலங்கல் மார்பர்
நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார்.

44. வீழ்ந்தவர் எழுந்து சென்று
தடைத்தனர் குருதி வீழ்வ
தொழிந்திடக் காணர் செய்வ
தறிந்திலர் உயிர்த்து மீள
அழிந்துபோய் வீழ்ந்தார் தேறி
"யாரிது செய்தார்" என்ன

எழுந்தனர் திசைகள் எங்கும்
பார்த்தனர் எடுத்தார் வில்லும்.

45. வாளியும் தெரிந்து கொண் "டிடம்
மலையிடை எனக்கு மாறு
மீளிவெம் மறவர் செய்தார்
உளர்கொலோ விலங்கின் சாதி
ஆளிமுன் னுகி யுள்ள
வினைத்தவோ அறியேன் " என்று
நீளிருங் குன்றைச் சாரல்
நெடிதிடை நேடிச் சென்றார்.

46. வேடரைக் காணார் தீய
விலங்குகள் மருங்கும் எங்கும்
நாடியுங் காணார் மீண்டும்
நாயனார் தம்பால் வந்து
வீடிய சோகத் தோடு
நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு
கதறினர் கண்ணீர் வார.

47. " பாவியேன் கண்ட வண்ணம்
பரமனார்க் கடுத்த தென்னே !
ஆவியின் இனிய எங்கள்
அத்தனார்க் கடுத்த தென்னே !
மேவினர் பிரிய மாட்டா
விமலனார்க் கடுத்த தென்னே !
ஆவதொன் றறிகிலேன் யான்
என்செய்கேன் " என்று பின்னும்

48. " என்செய்தால் தீரு மோதான்
எம்பிரான் திறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன்
மொய்கழல் வேடர் என்றம்
மின்செய்வார் பகழிப் புண்கள்
தீர்க்குமெய் மருந்து தேடிப்
பொன்செய்தாழ் வரையிற் கொண்டு
வருவன்நான் " என்று போனார்.

49. நினைத்தனர் வேறு வேறு
நெருங்கிய வனங்கள் எங்கும்
இனத்திடைப் பிரிந்த செங்கண்
ஏறென வெருக்கொண் டெய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு
பூதநா யகன்பால் வைத்த
மனத்தினும் கடிது வந்தம்
மருந்துகள் பிசைந்து வார்த்தார்.

50. மற்றவர் பிசைந்து வார்த்த
மருந்தினில் திருக்கா ளத்திச்
கொற்றவர் கண்ணில் புண்ணீர்
குறைபடா திழியக் கண்டும்
" இற்றையின் நிலைமைக் கென்னே
இனிச்செயல்" என்று பார்ப்பார்
உற்றநோய் தீர்ப்ப தானுக்
கூனெனும் உரைமுன் கண்டார்.

51. " இதற்கினி என்கண் அம்பால்
இடந்தப்பின் எந்தை யார்கண்
ணதற்கிது மருந்தாய்ப் புண்ணீர்
நிற்கவும் அடுக்கும் " என்று
மதர்த்தெழும் உள்ளத் தோடு
மகிழ்ந்துமுன் இருந்து தங்கண்
முதற்சரம் அடுத்து வாங்கி
முதல்வர்தம் கண்ணில் அப்ப

52. நின்றசெங் குருதி கண்டார்
நிலத்தினின் றேறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்த தோள்கள்
கொட்டினர் கூத்தும் ஆடி
' நன்றுநான் செய்த இந்த
மதி'என நகையுந் தோன்ற
ஒன்றிய களிப்பி னூலே
உன்மத்தர் போல மிக்கார்.

53. வலத்திருக் கண்ணில் தங்கண்
அப்பிய வள்ள லார்தம்

நலத்தினைப் பின்னுங் காட்ட
நாயனார் மற்றைக் கண்ணில்
உலப்பில்செங் குருதி பாயக்
கண்டனர் உலகில் வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து
கொள்கையின் உம்பர் மேலார்

54. கண்டபின் "கெட்டேன்! எங்கள்
காளத்தி யார்கண் ஒன்று
புண்தரு குருதி நிற்க
மற்றைக்கண் குருதி பொங்கி
மண்டுமற் றிதனுக் கஞ்சேன்
மருந்துகை கண்டேன் இன்னும்
உண்டொரு கண்அக் கண்ணை
இடந்தப்பி ஒழிப்பேன்" என்று

55. கண்ணுதல் கண்ணில் தங்கண்
இடந்தப்பின் காணும் நேர்பா
டெண்ணுவார் தம்பி ரான்றன்
திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி
உள்நிறை விருப்பி னேடும்
ஒருதனிப் பகழி கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத்
தரித்திலர் தேவ தேவர்.

56. செங்கண்வெள் விடையின் பாகர்
திண்ணனார் தம்மை யாண்ட
அங்கணர் திருக்கா ளத்தி
அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்குங் கையைத்
தடுக்கமூன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக்
'கண்ணப்ப நிற்க' என்ற.

57. கானவர் பெருமா னர்தம்
கண்ணிடந் தப்பும் போதும்
ஊனமு துகந்த ஐயர்
உற்றமுன் பிடிக்கும் போதும்

ஞானமா முனிவர் கண்டார்
நான்முகன் முதலா யுள்ள
வானவர் வளர்பூ மாரி
பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப.

58 பேறினி இதன்மேல் உண்டோ
பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண்
இடந்தப்ப உதவுங் கையை
ஏறுயர்த் தவர்தங் கையால்
பிடித்துக்கொண் "டென்வ லத்தில்
மாறிலாய் நிற்க" என்று
மன்னுபேர் அருள்பு ரிந்தார்.

★

கம்ப ராமாயணம்

இராமாயணத்தைத் தமிழ் மொழியில் பாடியவர் கல்வியிற் பெரியரும், கவிச்சக்கிரவர்த்தியுமாகிய கம்பர். பிற்காலத் தெழுந்த பெருங்காப்பியங்களுள், இதனை ஒப்பதும் மிக்கது மில்லை; இது புனலாலும் கனலாலும் அழியாதது; கல்வி, கற்பனை, சிற்பம், ஓவியம், பெண்மை, ஆண்மை, நட்பு, வீரம், அரசியல் முதலியவற்றின் வற்றாத களஞ்சியம்; ஒன்பான் சுவைகட்கும் கொள்கலன்.

இவர்காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டென்ப.

கம்ப ராமாயணம்

விபீடணன் அடைக்கலப் படலம்

1. மாருதி வினய வார்த்தை
செவிமடுத் தமிழ்தின் மாந்திப்
"பேரறி வாள நன்று
நன்"றெனப் பிறரை நோக்கிச்
"சீரிது மேலிம் மாற்றம்
தெளிவுறத் தோமின்" என்ன
ஆரியன் உரைப்ப தானன்
அனைவரும் அதனைக் கேட்டார்.

2. "கருத்துற நோக்கிப் போந்த
காலமும் நன்று காதல்
அருத்தியும் அரசின் மேற்றே
அறிவினுக் கவதி இல்லை
பெருத்துயர் தவத்தி னனும்
பிழைப்பிலன் என்னும் பெற்றி
திருத்திய தாகு மன்றே
நம்வயிற் சேர்ந்த செய்கை.

3. "மற்றினி உரைப்ப தென்னை ?
மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி அன்ன
தன்றெனிற் பிறிதொன் றுளும்
வெற்றியே பெறுக தோற்க
வீகவீ யாது வாழ்க
பற்றுதல் அன்றி உண்டோ
அடைக்கலம் பகர்கின் றனை.

4. "இன்றுவந் தானென் றுண்டோ
எந்தையை யாயை முன்னம்
கொன்றுவந் தானென் றுண்டோ
அடைக்கலம் கூறு கின்றான்

தொன்றுவந் தன்பு செய்யுந்
துணைவனும் அவனே பின்னைப்
பின்றுமென் றுலும் நம்பால்
புகழன்றிப் பிறிதுண் டாமோ.

5. "பிறந்தநாள் தொடங்கி யாரும்
தலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநாள் உண்டோ என்னைச்
சரணென வாழ்கின் றனைத்
துறந்தநாட் கின்று வந்து
துன்னினன் சூழ்ச்சி யாலே
இறந்தநாள் அன்றே என்றும்
இருந்தநாள் ஆவ தென்றான்.

6. "இடைந்தவர்க் கபயம் யாமென்
றிரந்தவர்க் கெறிநீர் வேலை
கடைந்தவர்க் காகி ஆலம்
உண்டவர்க் கண்டி லீரோ
உடைந்தவர்க் குதவா னுயின்
உள்ளதொன் றீயா னுயின்
அடைந்தவர்க் கருளா னுயின்
அறமென்னும் ஆண்மை என்னும்.

7. "பேடையைப் பிடித்துத் தன்னைப்
பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்வான்
விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித்
தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை
வேதத்தின் விழுமி தன்றே.

8. "போதக மொன்று கன்றி
இடங்கர்மாப் பொருத போரில்
'ஆதியம் பரமே யானுன்
அபய'மென் றழைத்த அந்நாள்
வேதமும் முடிவு காணா
மெய்ப்பொருள் வெளிவந் தெய்தி

மாதுயர் துடைத்த வார்த்தை
மறப்பரோ மறப்பி லாதார்.

9. "மன்னுயிர் எல்லாம் தானே
வருவித்து வளர்க்கும் மாயன்
தன்னன உலகம் எல்லாம்
தருமமும் எவையுந் தானே
என்னினும் அடைந்தோர் தம்மை
எமுற இனிதின் ஓப்பிப்
பின்னும்வீ டளிக்கு மென்றுல்
பிறிதொரு சான்றும் உண்டோ.

10. "நஞ்சினே மிடற்று வைத்த
நகைமழு வாளன் நாளும்
தஞ்சென முன்னம் தானே
தாதைபால் கொடுத்துச் 'சாதல்
அஞ்சினேன் அபயம்' என்ற
அந்தணற் காகி அந்நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்றும்
மேன்மையின் மேன்மை உண்டோ.

11. " 'சரண்எனக் கியார்கொல்' என்று
சானகி அழுது சாம்ப
'அரண்உனக் காவன் வஞ்சி
அஞ்சல்'என் றருளின் எய்தி
முரண்உடைக் கொடியோன் கொல்ல
மொய்யமர் முடித்துத் தெய்வ
மரணம்என் தாதை பெற்ற
தென்வயின் வழக்கன் ருமோ.

12. " உய்ய'நிற் கபயம்' என்ருன்
உயிரைத்தன் உயிரின் ஓம்பாக்
கையனும் ஒருவன் செய்த
உதவியிற் கருத்தி லோனும்
மையற நெறியி லேக்கி
மாமறை நெறியில் நின்ற
மெய்யினைப் பொய்யென் ருனும்
மீள்கிலா நரகில் வீழ்வார்.

13. "சீதையைக் குறித்த தேயோ
தேவரைத் தீமை செய்த
பேதையைக் கொல்வேன் என்று
பேணிய விரதப் பெற்றி
வேதியர் அபயம் என்னூர்க்
கன்றுநான் விரித்துச் சொன்ன
காதையைக் குறித்து நின்ற
அவ்வுரை கடக்க லாமோ.

14. "காரியம் ஆக அன்றே
ஆகுக கருணை யோர்க்குச்
சீரிய தன்மை நோக்கின்
இதனின்மேற் சிறந்த துண்டோ
பூரிய ரேயும் தம்மைப்
புகல்புகுந் தோர்க்குப் பொன்னூ
ஆருயிர் கொடுத்துக் காத்தார்
எண்ணிலா அரசர் அம்மா.

15. "ஆதலான் அபயம் என்ற
பொழுதத்தே அபய தானம்
ஈதலே கடப்பா டென்ப
தியம்பினீர் என்பால் வைத்த
காதலால் இனிவே றெண்ணக்
கடவதென் கதிரோன் மைந்த
கோதிலா தவனே நீயே
என்வயிற் கொணர்தி" என்றான்.

16. ஐயுற வெல்லாம் தீரும்
அளவையாய் அமைந்த தன்றே
தெய்வநா யகன துள்ளம்
தேறிய அடைவே தேறிக்
கைபுகற் கமைவ தானான்
'கடிதினில் கொணர்வல்' என்னு
மெய்யினுக் குறையு ளான
ஒருவன்பால் விரைவிற் சென்றான்.

17. வருகின்ற கவியின் வேந்தை
மயிந்தனுக் கிளைஞன் "வள்ளல்

தருகென்றான் அதனுல் நின்னை
எதிர்கொளற் கருக்கன் தந்த
இருகுன்றம் அனைய தோளான்
எய்தினன்'' என்ன லோடும்
திரிகின்ற உள்ளத் தானும்
அகமலர்ந் தவன்முன் சென்றான்.

18. தொல்பெருங் காலம் எல்லாம்
பழகினும் தூயர் அல்லார்
புல்லலர் உள்ளம் தூயார்
பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே
ஒல்லைவந் துணர்வும் ஒன்ற
இருவரும் ஒருநாள் உற்ற
எல்லியும் பகலும் போலத்
தழுவினர் எழுவின் தோளார்

19. தழுவினர் நின்ற காலைத்
''தாமரைக் கண்ணன் தங்கள்
முழுமுதற் குலத்திற் கேற்ற
முறைமையால் உவகை மூள
வழுவலில் அபயம் உன்பால்
வழங்கினன் அவன்பொற் பாதம்
தொழுதியால் விரைவில்'' என்னக்
கதிரவன் சிறுவன் சொன்னான்.

20. சிங்கவே றனையான் சொன்ன
வாசகம் செவிபு காமுன்
கங்குலின் நிறத்தி னன்றன்
கண்மழைத் தாரை கான்ற
அங்கமும் மனமு தென்னக்
குளிர்ந்ததவ் வகத்தை மிக்குப்
பொங்கிய உவகை என்னப்
பொடித்தன உரோமப் புள்ளி.

21. ''பஞ்சனைச் சிவக்கும் மென்கால்
தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக் கிளைய என்னை
வருகவென் றருள்செய் தானே

தஞ்சனைக் கருதி னேனே
தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்சனைத் தகையேன் அன்றே
நாயகன் அருளி னேயன்.

22. "மருளுறு மனத்தி னுன்னன்
வாய்மொழி மறுத்தான் வானத்
துருளுறு தேரி னானும்
இலங்கைமீ தோடும் அன்றே
தெருளுறு சிந்தை வந்த
தேற்றமீ தாகின் செய்யும்
அருளிது வாயின் கெட்டேன்
பிழைப்பரோ அரக்கர் ஆனோர்.

23. "தீர்வரும் இன்னல் தம்மைச்
செய்யினும் செய்ய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தம்
செய்கையில் பிழைப்ப துண்டோ
கார்வரை நிறுவித் தன்னைக்
கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி அமரர் உய்ய
அமிழ்துபண் டளித்த தன்றே.

24. "துறவியின் உறவு பூண்ட
தூயவர் துணைவன் என்னே
உறவுவந் தருளி மீளா
அடைக்கலம் உதவி னேனே
மறவினை நீக்கல் இல்லா
மாயமும் மாய வாழ்க்கைப்
பிறவியும் பெயர்த்தேன் பின்னும்
நரகினிற் பிழைப்ப தானேன்

25. திருத்திய உணர்வு மிக்க
செங்கதிர்ச் செல்வன் செம்மல்
"ஒருத்தரை நலனும் நீங்கும்
தேரினும் உயிரின் ஓம்புங்
கருத்தினன் அன்றே தன்னைக்
கழலடைந் தாரைக் காணும்

அருத்தியன் அமலன் தாழா
தேகுதி அறிஞ'' என்றான்.

26. மொய்தவழ் கிரிகள் மற்றும்
பலவுடன் முடுகிச் செல்ல
மைதவழ் கிரியும் மேருக்
குன்றமும் வருவ தென்னச்
செய்தவம் பயந்த வீரர்
திரண்மரம் ஏழுந் தீய
எய்தவன் இருந்த சூழல்
இருவரும் எய்தச் சென்றார்.

27. மார்க்கடம் சூழ்ந்த வைப்பின்
இளையவன் மருங்கு காப்ப
நார்கடல் உடுத்த பாரின்
நாயகன் புதல்வன் நாமப்
பார்கடல் சுற்ற விற்கை
வடவரை பாங்கு நிற்பக்
கார்க்கடல் கமலம் பூத்த
தெனப்பொலி வாணைக் கண்டான்.

28. அள்ளிமீ துலகை வீசும்
அரிக்குலச் சேனை நாப்பண்
தெள்ளுதண் திரையிற் றூங்கிப்
பிறிதொரு திறனும் சாரா
வெள்ளிய கடலின் மேலுள்
விண்ணவர் தொழுது வேண்ட
பள்ளிதீர்ந் திருந்தா னென்னப்
பொலிதரு பண்பி னானை

29. கோணுதற் கமைந்த கோலப்
புருவம்போல் திரையும் கூடப்
பூணுதற் கினிய முத்தின்
பொலிமணல் பரந்த வைப்பில்
காணுதற் கினிய நீள
வெண்மையிற் கருமை காட்டி
வாணுதற் கமைந்த கண்ணின்
மணியென வயங்கு வானை

30. படர்மழை சுமந்த காலைப்
பகர்வரும் அமரர் கோமான்
அடர்சிலை துறந்த தென்ன
ஆரந்தீர் மார்பி னூனைக்
கடர்கடை மத்திற் பாம்பு
கழற்றிய தென்னக் காசின்
சுடரொளி வலயம் தீர்ந்த
சுந்தரத் தோளி னூன

31. கற்றைவெண் ணிலவு நீக்கிக்
கருணையாம் அமிழ்தம் காலும்
முற்றுறு கலையிற் ரூய
முழுமதி முகத்தி னூனைப்
பெற்றவன் அளித்த மோலி
இளையவன் பெறத்தான் பெற்ற
சிற்றவை பணித்த மோலி
பொலிகின்ற சென்னி யானை

32. வீரனை நோக்கி அங்கம்
மென்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர்
வாரநெஞ் சுருகிச் "செங்கண்
அஞ்சன மலையன் ரூகில்
கார்முகில் கமலம் பூத்த
தன்றிவன் கண்ணன் கொல்லாம்
ஆரருள் சுரக்கும் நீதி
அறநிறம் கரிதோ" என்ரூன்.

33. "மின்மினி ஒளியின் மாயும்
பிறவியை வேரின் வாங்கச்
செம்மணி மகுடம் நீக்கித்
திருவடி பூனைந்த செல்வன்
தன்முனர் கமலத் தண்ணல்
தாதையார் சரணம் தாழ
என்முனர் எனக்குச் செய்த
உதவி" யென் நேம்ப லுற்ரூன்.

34. "பெருந்தவம் இயற்றி னோர்க்கும்
போர்வரும் பிறவி நோய்க்கும்

மருந்தென நின்றான் தானே
வடிக்கணை தொடுத்துக் கொல்வான்
இருந்தனன் நின்ற தென்னும்
இயம்புவ தில்லை தீர்ந்த
அருந்தவம் உடையர் அம்மா
அரக்கர்'' என் றகத்துட் கொண்டான்.

35. கரங்கள்மீச் சுமந்து செல்லுங்
கதிர்மணி முடியன் கல்லும்
மரங்களும் உருக நோக்குங்
காதலன் கருணை வள்ளல்
இரங்கினன் நோக்குந் தோறும்
இருநிலத் திறைஞ்சுகின் றான்
வரங்களின் வாரி யன்ன
தாளிணை வந்து வீழ்ந்தான்.

36. அழிந்தது பிறவி என்னும்
அகத்தியல் முகத்துக் காட்ட
வழிந்தகண் ணீரின் மண்ணின்
மார்புற வணங்கி னானைப்
பொழிந்ததோர் கருணை தன்னுள்
புல்லினன் என்று தோன்ற
'எழுந்தினி திருத்தி' என்னு
மலர்க்கையால் இருக்கை ஈந்தான்.

37. ஆழியான் அவனை நோக்கி
அருள்சுரந் துவகை தூண்ட
"எழினே டேழாய் நின்ற
உலகும்என் பெயரும் எந்நாள்
வாழுநாள் அன்று காறும்
வாளெயிற் றரக்கர் வைகுந்
தாழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே தந்தேன்'' என்றான்.

38. தீர்த்தனல் அருளே நோக்கிச்
செய்ததோ சிறப்புப் பெற்றான்
கூர்த்தகல் அறத்தை நோக்கிக்
குறித்ததோ யாது கொல்லோ

வார்த்தையஃ துரைத்த லோடும்
தனித்தனி 'வாழ்ந்தேம்' என்ன
ஆர்த்தன உலகில் உள்ள
சராசரம் அனைத்தும் அம்மா.

39. உய்ஞ்சனன் அடிய னேனென்
றாழ்முறை வணங்கி நின்ற
அஞ்சன மேனி யானை
அழகனும் அருளின் நோக்கித்
"தஞ்சநல் துணைவ னான
தவறிலாப் புகழான் றன்னைத்
தஞ்சலில் நயனத் தைய
சூட்டுதி மகுடம்" என்றான்.

40. விளைவினை அறியும் வென்றி
வீடணன் "என்றும் வீயா
அளவறு பெருமைச் செல்வம்
அளித்தனை ஆயின் ஐய
களவியல் அரக்கன் பின்னே
தோன்றிய கடன்மை தீர
இளையவற் கவித்த மோலி
என்னையும் கவித்தி" என்றான்.

41. "முகமெடும் ஐவர் ஆனேம்
முன்புபின் குன்று சூழ்வான்
மகமெடும் அறுவர் ஆனேம்
எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய
நின்மெடும் எழுவர் ஆனேம்
புகலருங் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் தந்தை."

42. "நடுவினிப் பகர்வ தென்னே
நாயக நாயி னேனை
உடனுதித் தவர்களோடும்
ஒருவனென் றுரையா நின்றாய்
அடிமையிற் சிறந்தேன்" என்ன
அயிர்ப்பொடும் அச்சம் நீங்கித்

தொடுகழற் செம்பொன் மோலி
சென்னியிற் சூட்டிக் கொண்டான்.

43. திருவடி முடியிற் சூட்டிச்
செங்கதிர் உச்சி சேர்ந்த
அருவரை என்ன நின்ற
அரக்கர்தம் அரசை நோக்கி
இருவரும் இன்பம் உற்றூர்
யாவரும் இன்பம் உற்றூர்
பொருவரும் அமரர் வாழ்த்திப்
பூமழை பொழிவ தானூர்.

44. ஆர்த்தன பரவை ஏழும்
ஆர்த்தன மேகம் ஆர்த்த
வார்த்தொழில் புணருந் தெய்வ
மங்கல முரசும் சங்கும்
தூர்த்தன கனக மாரி
சொரிந்தன நறுமென் சுண்ணம்
போர்த்தது வானத் தன்றங்
கெழுந்தது திழனிப் பொம்மல்.

45. 'மொழிந்தசொல் அமிழ்தம் அன்னாள்
திறத்தினில் முறைமை நீங்கி
இழிந்தனன் மரபும் இன்றே
உய்ந்த'தென் றிடரிற் றீர்ந்தான்
செழுந்தனி மலரோன் பின்னே
'இராவணன் தீமைச் செல்வம்
அழிந்த'தென் றறனும் தன்வாய்
ஆவலங் கொட்டிற் றன்றே.

46. இன்னதோர் செவ்வித் தாக
இராமனும் "இலங்கை வேந்தன்
தன்னெடுஞ் செல்வம் தானே
பெற்றமை பலரும் கேட்பப்
பன்னெடுந் தானை சூழப்
பகலவன் சேயும் நீயும்
மன்னெடுங் குமர பாடி
வீட்டினை வலஞ்செய்' கென்றான்.

47. அந்தமில் குணத்தி னானே
அடியிணை முடியி னேடும்
சந்தன விமானம் ஏற்றி
வானரத் தலைவர் தாங்க
'இந்திரற் குரிய செல்வம்
எய்தினன் இவ'னென் றேத்தி
மந்தரத் தடந்தோள் வீரர்
வலஞ்செய்தார் தானை வைப்பைப்.

48. தேடுவார் தேட நின்ற
சேவடி தானும் தேடி
நாடுவான் அன்று கண்ட
நான்முகன் கழீஇய நன்னீர்
ஆடுவார் பாவம் ஐந்தும்
நீங்கிமேல் அமரர் ஆவார்
சூடுவார் எய்துந் தன்மை
சொல்லுவார் யாவர் சொல்லீர்.

49. " இற்றைநாள் அளவும் யாரும்
இருடிகள் இமையோர் ஞானம்
முற்றினர் அன்பு பூண்டார்
வேள்விகள் முடித்து நின்றார்
மற்றுமா தவரும் எல்லாம்
வாளெயிற் றிலங்கை வேந்தன்
பெற்றதார் பெற்றார்" என்று
வியந்தனர் பெரியோர் எல்லாம்.

★

அழகர் கலம்பகம்

இந் நூலாசிரியர் யாவரென விளங்கவில்லை; அழகர்பிள்ளைத்தமிழ் இயற்றிய வேம்பத்தூர்ச் சங்கத்தார் எனச் சொல்லுகின்றனர். இவர்தம் திருமால்பத்தியும், இனிய எளிய வாக்கும் எவரும் வியத்தற்குரியன.

அழகர் கலம்பகம்

திருமாலிருஞ்சோலை

இருவிகற்ப நேரிசைவெண்பா

1. அவனிவனென் றெண்ணி அலையா திருத்தி
அவனிவனி தைக்காம் அழகன் - கவடார்
மருதிடந்தா னேகடவுள் மற்றில்லை நெஞ்சே
ஒருதிடந்தான் சொன்னேன் உனக்கு.

கட்டளைக்கலித்துறை

2. உனைக்கண் டகங்குளிர்ந் துன்னுமங்
கூற உனைவணங்க
வினைக்கண் டகரிடஞ் செல்லா
திருக்கநல் வீடுபெற
முனைக்கண்ட கங்கையை நேராக் குங்
காந்தி முகுந்தநந்தன்
மனைக்கண் டகணித லீலாதென்
சோலை மலைக்கொண்டலே.

அறுசீராசிரிய விருத்தம்

3. கொண்டல்வண் ணுனதன் றேஉன்
குரைகழற் கமலம் பெற்றேன்
மண்டலம் அளந்த காலை
மற்றுநான் புறம்போ சொல்லாய்
அண்டர்தெள் ளமுதம் உண்ண
ஆலமுண் டவர்க்கே சோமன்
துண்டமுன் தந்தாய் தந்தாய்!
சுந்தர ராச மாலே!

எழுசீராசிரிய விருத்தம்

4. மாலைக் கரும்புபிறை புரைவாள் எயிற்றுமன்
வன்பாசம் வீச உடலம்
ஆலைக் கரும்புபடு முன்னேகண் முன்னேபுள்
ளரசோடும் வந்து தவுவாய்

வேலைக் கரும்புனித இந்த்ரா தியர்க்குரல்
விருந்திட்டு வந்து விதுரன்
சாலைக் கரும்புதவி ருந்தாம ருந்தேத
டஞ்சோலை மலைய முகனே.

எண்சீராசிரிய விருத்தம்

5. மலைக்குமேல் மலைவிளக்காம் அழகா வேத
வான்குதலை நான்குதலை மகனுர் வாளா
தலைக்குமேல் எழுதுகின்றூர் அரியென் றெங்கள்
தாலத்தின் மேலெழுதச் சமர்த்தி லாரோ
அலைக்குமேல் உடுமலரா மிதக்குங் காலம்
ஆலமொன்று காயாம்பூ அலர்ந்தாற் போற்பச்
சிலைக்குமேற் செங்கண்வளர் அனந்தா னந்தா
இருக்கிலிருக் கும்பொருளே எப்பி ரானே.

கட்டளைக்கலிப்பா

6. பிரானெ னச்சொல் முராரி நீ புராரி நீ
பிரமன் நீகுணப் பேதநீ பூதநீ
தராத லத்திற் சராசரம் யாவுநீ
சச்சி தாநந்த விம்பமு நீயன்றே
மராம ரங்கொல் இராமவி ராகவ
வாசு தேவ வனகிரி வாசமுன்
கராச லஞ்சொல் பராபர நாதசெங்
கஞ்ச லோசன அஞ்சன மேருவே.

இருவிகற்ப நேரிசை வெண்பா

7. அஞ்சார லும்மணி நீ ராறுங் கிடைக்கரிய
மஞ்சீர மாரு வனகிரியே - பஞ்சவர்தம்
பங்கங் களைந்தான் பனிரண்டு கண்ணெருவர்
பங்கங் களைந்தான் பதி.

கட்டளைக் கலித்துறை

8. பதிக்கின்ற கற்பகப் பூஞ்சோலை
யையெட்டிப் பார்த்துமந்தி
குதிக்கின்ற மாலிருஞ் சோலைவெற்
பாநின் குளிர்வதனம்
உதிக்கின்ற திங்கள்மெய் யுற்பலக்
காடங் கொழுகுபைத்தேன்
மதிக்கின்ற கட்டழ கெங்கள்கண்
மூழ்கு மதுகரமே.

★

சீறுப்புராணம்

சீறுப்புராணத்தை இயற்றியவர் எட்டையாபுர ஸம்ஸ்தான வித்து - வானுய் விளங்கிய உமறுப்புலவர்; சிறந்த தமிழறிஞர்.

இந் நூல் மகம்மது நபியைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு, அவர்-தம் பிறப்பு வீரம் முதலியவற்றை எடுத்துரைக்குங் காப்பியம்; முஸ்லிம் களால் பெரிதும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந் நூலாசிரியர்காலம் பதினேழாம் நூற்றாண்டு.

சீறாப்புராணம்

நபி அவதாரப் படலம்

1. கோதறப் பழுத்து மதுரமே கனிந்த
கொவ்வைவாய் அரம்பையர் வாழ்த்தித்
தீதற நெருங்கி ஏவல்செய் திருப்பச்
செழுங்கம லாசனத் திருந்த
மாதருக் கரசி ஆமினை உதர
மணியிடத் திருந்துமா நிலத்தில்
ஆதரம் பெருக நல்வழிப் பொருளாய்
அகுமது தோற்றினர் அன்றே.

2. கிடந்தொளி பரப்பி வாசங்கொப் புளித்துக்
கிளர்கிபு லாவைமுன் நோக்கி
இடங்கொளந் தரநேர் சிரசினே உயர்த்தி
எழில்பெறச் சுருதுசெய் திணைத்தாள்
திடன்பெற மடித்துக் குறியிடக் கையாற்
சேர்த்தொளிர் வலக்கைகால் மேல்வைத்
தடனணி கலிமா விரலினே உயர்த்தி
உதித்தனர் முகம்மது நபியே.

3. சிரசினில் நெய்தோய்த் திருவிழிக் கருமை
சிறந்திடக் கொப்புழுங் கொயலாய்
மருவுசுன் னத்தம் செய்யலாய்த் துடக்கின்
வருங்குறி ஒன்றுமில் லாதாய்ப்
பரவுகஸ் தூரி மணியெலாம் நிறைந்த
பரிமளம் கமகம கமெனப்
பெருகிய ஒளிவு வானமட் டுலவப்
பிறந்தனர் முகம்மது நபியே.

4. செம்மையங் கோட்டுக் கடகரிக் கலகம்
தீர்ந்தபின் ஐம்பதாம் காளில்
அம்மதி மாசத் தொகையினில் நபீவு
லவ்வலில் பனிரண்டாந் தேதி
எம்மனைக் கும்பே றெனவரும் பொருளாய்
இசைத்திடுந் திங்களி ராவின்
மும்மையென் றுரைக்கும் புவனமும் புரக்க
முகம்மது நபிபிறந் தனரே.

5. பூதலத் தரசு பதியென உதித்த
புகழ்பெறு மக்கமா நகரில்
சீதவொண் கதிர்சேர் கஃபத்துல்
லாவின் திசையினில் வடகிழக்காக
ஏதமொன் றணுகா ஜெம்றத்தி லுஸ்ஹா
எனுமொரு தலத்தினின் நடுவே
மாதவ ரபித்தா லிபுதிரு மனையில்
முகம்மது நபிபிறந் தனரே.

6. நெறிநிலை திரியா மருண்மதம் மிகுந்து
நெடுநிலம் எங்கணும் பரந்து
துறவறம் தவறி இல்லறம் மடிந்து
சுடரிலா மனையது போலக்
குறைபடுங் காலம் இருளெனும் குபிரின்
குலமறுத் தறநெறி விளக்க
மறுவிலா தெழுந்த முழுமதி போல
முகம்மது நபிபிறந் தனரே.

7. பானுவின் கதிரால் இடருறுங் காலம்
படர்தரு தருநிழல் எனலாய்
ஈனமும் கொலையும் வினைத்திடும் பவநோய்
இடர்தவிர்த் திடும்அரு மருந்தாய்த்
தீனெனும் பயிர்க்கோர் செழுமழை யெனலாய்க்
குறைவிலா நிதியின் நிலதமே எனலாய்
மானிலக் தனக்கோர் மணிவிளக் கெனலாய்
முகம்மது நபிபிறந் தனரே.

8. செங்கதிர் பரப்பி உலகெலாம் விளக்கித்
திரிதின கரனும்வெள் ளமுதம்
தங்கிய கிரணச் சசியுமந் தரத்தில்
தவழ்தரும் உடுக்குலம் அனைத்தும்
பொங்கொளி எவையும் சுவனநா டனைத்தும்
பூதலம் விசும்புமற் றனவும்
இங்கெழில் முகம்ம தொளியினில் என்றூல்
இவர்க்கெவை உவமைசொல் லுவதே.

9. மகிதலம் புகழீ சாநபி பாரில்
வந்தகாள் தொடுத்திடை விடாது
பகுமதம் இலையென் றுறுதூ றுண்டு
பாரிசுக் காரர்கள் வணங்கும்
புகையுடன் கெழுமிப் பொறிபல தெறிப்பப்
புரிந்தெழும் அக்கினிக் கொழுந்து
திகைதொறும் தெரிய எரிந்தசெந் தெருப்புத்
தேய்ந்துநூக் தழிந்தன வன்றே.

10. படியிடை புடைப்பப் பெருக்கெடுத் ததிரப்
பாயலைச் சுருட்டிவிட் டெறிய
விடுகடல் சாவா வெனும்பதி யிடத்தில்
வெறுந்தரை யாயின வறந்து
குடிலமட் டோங்கி மஞ்சடை கிடக்கும்
கொத்தளம் ஒருபதி னைன்கும்
இடிபட வீழ்ந்து சேருவா னகரம்
எங்கணும் கலங்கிய தன் றே.

11. சிலையெடுத் துருவாய் வைத்தபுத் தனைத்தும்
சிரசுகீழ்ப் படமுகம் நவிழ்த்த
சலமதி லிபுலீ சியற்றிய சிங்கா
சனமுமன் றிடிந்தன வடியித்தான்
குலமுமன் றழுதுங்கி வானகம் புகாமல்
கூண்டுநக் கேத்திரம் எரிந்து
நிலமிசை வீழ்ந்த இனஞ்சில புதுமை
நிகழ்த்துதற் கரியதன் றிரவே.

12. சிறந்தகன் மதலை தனைவிரைந் தெடுப்பத்
தெரிவையார் மனத்தினில் நினைப்ப
மறந்திகழ் விழியார் தொடத்தகா தென்றென்
முகம்மதை விரைவினில் ஏந்தி
நிறந்திகழ் சுவனப் பதியினில் கொடுவம்
என்றனன் நெடியவன் அதனால்
அறந்திகழ் ஆமி னைதிரு மனைபுக்
கடுத்தவர் பிள்ளையை எடுத்தார்.

13. அமரருக் கிறைவன் ஜபுறயீல் வரிசை
அகுமதை எடுத்தினி தேந்தித்
தமருடன் சுவனப் பதியினிற் கொடுபோய்ச்
சலநதி தொறுமுழுக் காட்டி
இமைதிறந் திருகண் மையினை எழுதி
எண்ணெயிட் டமிர்தமும் ஊட்டிச்
சுமைதர வாசம் திகழ்த்தி எண் டிசையும்
சுற்றியே சிலமொழி பகர்வார்.

14. ஆதிநா யகன்றன் திருநபி யிறசூ
லாம்இவர் தங்கலி மாவைப்
பூதலத் துறைந்த படைப்பெவை யெவையும்
போற்றுதல் செய்யவும் வேண்டும்
ஈதலால் அமரர் இவர்கலி மாவுக்
கிசைந்தனர் என்பதும் இசைத்துச்
சூதர மொழியார் ஆமினை விடத்தில்
தோன்றலைக் கொடுத்தகன் றனரே.

15. அந்தரம் அவனி கடல்மலே எழுதீ
வகத்தினும் எண்டிசை முழுதும்
சுந்தர வதன முகம்மதைக் கொடுபோய்ச்
சுற்றியெங் கணும்பெயர் விளக்கிச்
சந்தமென் முகத்தா மரைமலர் குளிரத்
தடஞ்சிறை வானவர் திரண்டு
வந்ததும் ஆமி னுதிரு மனேயில்
வைத்ததும் ஒருநொடிப் பொழுதே.

16. வள்ளலென் றுதவிப் பெயர்நிலே நிறுத்தி
வளந்தரு புகழபுல் காசீம்
உள்ளகம் நிறைந்த செம்மலர்ப் பதந்தொட்
டொளிர்பெறும் இணைவிழிக் கேற்றி
விள்ளரும் பவளம் விரிந்தன னவாய்
விளங்கிட வாழ்த்தெடுத் துவந்து
தெள்ளமு தனைய முகம்மது நபியைச்
சபாதிரு மடிமிசைக் கொண்டார்.

17. மலர்தரு கரத்தால் ஏந்தியே மடியில்
வைத்தினி திருக்குமந் நேரம்
அலர்தரு பவள வாயிதழ் திறந்தே
அழுதனர் முகம்மது நபியும்
உலகமும் விசும்பும் நிறைதரப் பொருந்தும்
உடையவன் சத்தமுண் டான
திலகிய கமல முகமலர் சபாவுக்
கிறகுமத்துண் டாகவென் றிசைந்தே.

18. சத்தமுண் டாகிக் கேட்டவப் பொழுதே
சபாளனும் மடமயில் தனச்குப்
பத்திவிட் டொளிரு றாமிராச் சியத்துப்
பதியின்மா ளிகையெலாந் தெரிந்து
மித்திரன் எழுந்த குணதிசை தொடுத்து
வீழ்தரு குடமிசை தொடுத்துச்
சித்திரம் பெறவே இருவிழிக் கெதிரே
தெரிதரச் சிறந்தன அன்றே.

19. வரியளி குடைந்து தண்ணறு அருந்தும்
மலர்ப்புயன் அப்துல்முத் தலிபு
கருதிய வரங்கேட் டிருந்துகெஞ் சுருகும்
காலையிற் கருபத்துல் லாவின்

நிரைநிரை செறிந்த புத்துக ளனைத்தும்
நெட்டுயிர்ப் பொடுகலைந் தலைந்து
விரைவினில் ஒடிக் காவத வழிக்கு
வேறுவே றுய்க்கிடந் ததுவே.

20. பானலம் கடந்து சேலெனைப் பிறழ்ந்து
பரந்துசெவ் வரிக்கொடி யோடி
மான்மருள் விழியார் ஆமினை இருந்த
வளமனைத் திசையினை நோக்கி
நானிலம் புகலும் கருபத்துல் லாவின்
நாலுமூ லையுமொரு நெறியாய்த்
தானறை கமழ ஒளிதிகழ் தரவே
சுஜூதுசெய் தெழுந்தன அன்றே.

21. இறையவன் ஏவ விண்ணவர் கரத்தால்
இயற்றிய மணிமதிட் கஃபா
மறைபடா தெவர்க்கும் கேட்பன வாக
வாய்திறந் தோதுவ போன்று
'குறைபடா வடிவும் பெருமையும் பெற்ற
கொற்றவன் என்றனை இன்றே
நிறைதரப் புனிதம் ஆக்கினன்' என்ன
நிகழ்த்திய தொருமொழி அன்றே.

22. இரவினில் தனித்தங் கிருந்தகா லையினில்
இயற்றிய புத்துகள் அனைத்தும்
பரவியே சிதறக் கண்டதுங் கருபாப்
பண்புறச் சுஜூதுசெய் நியல்பா
விரைவினில் மொழிந்த வார்த்தையும் கேட்டு
வெருவியே அப்துல்முத் தலிபு
முருகுகொப் புளிக்கும் ஆமினை மனையின்
முழுமணி வாயில்வந் தடுத்தார்.

23. தரையினில் பரந்த குபிரிருட் குலமும்
சாற்றிய கலியிருட் குலமும்
வரைவிலா தொடுங்க முகம்மது நபிஇம்
மாநிலத் துதித்தனர் என்றே
கரையிலா உவகை ஆர்ந்த வெள்ளக்
கடலிடைக் குளித்துறக் களித்து
விரைவினில் திமிரக் கடற்பகை துரந்து
வெய்யவன் கதிர்கள்விட் டெழுந்தான்.

★

குறிப்புரை

1. குறுந்தொகை

1. இது 246-ஆம் பாட்டு.

நெய்தலிற் குறிஞ்சி என்பது, நெய்தல்நிலத்தில் குறிஞ்சியொழுக்கம். குறிஞ்சி – புணர்தலும் புணர்தல்நிமித்தமும்.

தலைவிகூற்று - சிறைப்புறம் என்பது, தலைவன் சிறைப்புறத்தானாக, தலைவி தோழியிடம், காவல்மிகுதியை அறிவுறுத்தி வரைவுகடாவச் செய்வது. இது தோழிகூற்றாகவும் இருக்கும். சிறைப்புறம்-வேலிக்கு வெளிப்புறம்.

முடிபு :—'தேர் வந்து பெயர்ந்தது என்ப; அன்னை அலைக்கும்; மகளிருள் இளையரும் மடவரும் பிறரும் உளர்; (அவர்) நற்பாலோர்' என்று மாற்றிப் பொருள் காண்க.

கடற்கரையது - கடற்கரையின்கண் உள்ளதாகிய. 'சிறுவெண் காக்கை' என்றது, கழுத்தில் வெண்ணிறமுள்ள காக்கையை; 'மறுவில் தூவி' என்றதனாலும் உணர்க. களிற்றுச் செவி ஆண்யானையின் காது.

பாசடை (பசுமை அடை)-பசிய இலையை. மயக்கி-கலக்கி. பாசடைக்குக் களிற்றுச்செவி உவமை. பனிக்கழி - குளிர்ச்சியை உடைய கழிநீரை; இது இட ஆகுபெயர். துழவும் - (இரையின்பொருட்டு அலகால்) துழாவுகின்ற. பால்நாள்-பாதி இரவில், நள்ளிரவில். பெயர்ந்தது-மீண்டு சென்றது. என்ப - என்று (அயலார்) கூறுவர். அதன்கொண்டு - அது முதல், அது தொடங்கி. அலைக்கும் - துன்புறுத்துகின்றாள்; புறம் போகாமல் காவலில் வைத்துள்ளாள். இது பெண்பாலுக்கு வந்த செய்யும் என்னும் வாய்ப்பாட்டு நிகழ்கால வினைமுற்று. ஒரும், அசைநிலை; (வந்த தேர் யாருடையது என்று) ஆராய்வாள் என்றும் கூறலாம். பின்னு விடு கதுப்பின்-பின்னல் தொங்கவிடப்பட்ட கூந்தலையுடைய. மின்-ஒளிவீசும். மின் இழை, வினைத் தொகை. மகளிர், ஏழாம் வேற்றுமைப்பெயர். இளையரும் மடவரும் - இளமைப் பருவத்தோரும், மடப்பமுடையவரும். அலையாத் தாயொடு - (தம்மை) வருத்தாத தாய்மாரோடு. தாயார், உயர்வொருமை; தாயர், தாய்மார் பன்மை; இவ் வேற்றுமை உணர்க. நல்பாலோர்-நல்லினை உடையவர்; அவர்கள் என்னும் எழுவாயை வருவிக்க. 'பிற பெண்டிரைப் பெற்ற தாயர் அவர்களை அலைக்காதிருக்க, ஊரார் பேச்சைக் கேட்டுக்கொண்டு என்

தாய் என்னை அலைக்கின்றாள். அது அவர்கள் நற்பேறு; இது என் தீப்பேறு' என்று தலைவி தன்னையே நொந்துகொள்கின்றாள். இதனால், தலைவி தோழிக்கு இரவுக்குறியினால் ஏற்படும் அச்சத்தை உணர்த்துவாள்போல், வேலிக்கு வெளியில் இருக்குந் தலைவனுக்குத் தன்னை விரைவில் வரைந்து கொள்ளுதலே கலன் என்னுங் கருத்து உண்டாகுமாறு செய்தாள்.

2. இது 251-ஆம் பாட்டு; தோழிகூற்று.

முல்லைத்திணை-இருத்தல்; தலைவி தலைவன்பிரிவை ஆற்றியிருத்தல். துறை-பிரிவிடைத் தோழி, 'பருவமன்று; பட்டது வம்பு' என்று வற்புறுத்தியது. தலைவன் ஏதோ ஒரு காரணம்பற்றித் தலைவியைவிட்டுப் பிரிய நேரிட்டது; அப்பொழுது அவன் கார்காலம் வருதற்குமுன் தான் வந்துவிடுவதாகச் சூளுரைத்துச் சென்றான். கார்காலமும் வந்தது. இன்னும் தலைவன் வராமையினால் தலைவி வருந்தினாள். அருகிலிருந்த தோழி "இது கார்காலமன்று; இம் மழை காலமல்லாத காலத்துப் பெய்தது" என்று வற்புறுத்தித் தலைவியின் பிரிவுத்துன்பத்தை ஆற்றுவித்தது. பருவம், கார்ப் பருவம். பட்டது-பெய்தது. வம்பு-காலமல்லாத காலத்துப் பெய்யும் மழை; 'வம்பு நிலையின்மை' என்பது தொல்காப்பியம்.

முடிபு:—' இகுளை! கழிந்த.....குரல் கேட்டு, மயிலினம் ஆலின; பிடவும் பூத்தன; (அவை) மடவ. (இது) காரன்று. நின்படர் தீர்க.'

இகுளை-தோழி; அண்மை விளி. கழிந்த மாரிக்கு ஒழிந்த பழநீர்-சென்ற கார்காலத்திற் பெய்யாது எஞ்சியிருந்த பழைய நீரை. கொளீஇய-கொள்ளும்பொருட்டு. உகுத்தரும்-சொரிகின்ற. நொதுமல் வானத்து-அயன்மையையுடைய மேகத்தின். தலைவி துன்புறுவாள் என்பதை அறியாது முழங்குதலின், 'நொதுமல்' என்றார். மாமஞ்ஞை இனம்-கரிய மயிற் கூட்டம். காலம் மாரி பெய்தென-கார்ப்பருவத்துக்கு உரிய மழை பெய்தது என்று (தவறாக எண்ணி). பெய்தென, தொகுத்தல் விகாரம் (பெய்தது என). அதன் எதிர்-அம் மழைக்கு எதிரே. ஆலலும் ஆலின-ஆடுதலைச் செய்தன; (அணியலும் அணிந்தன்ற, கல்கலும் கல்குவர் என்பன போன்றது). பிடவு, மர விசேடம். மடவ-(அம் மயிலும் பிடவும்) அறியாமையை உடையன. மயில் ஆடுவதும், பிடவம் பூப்பதும் கார்காலத்தில் நிகழ்வன. பருவம் காரே யாயினும், தோழி உண்மையை மறைத்துக் கூறுவது தலைவியை ஆற்றுவித்தற் பொருட்டே. ஆதலின், அது பொய் ஆகாது. 'பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்கும் எனின்'-என்பதைக் காண்க.

'மா இனம்' என்பது வகர உடம்படுமெய் பெற வேண்டுவது, யகர மெய் பெற்றுள்ளது (மாயினம்).

3. இது 259-ஆம் பாட்டு; தோழிகூற்று.

துறை: காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய தோழி, அறத்தொடு நின்று, அவனே பரிகரிப்பன் என்று கருதியதனைத் தலைமகளும் நயப்பாளாகக் கூறியது. நாற்றம் தோற்றம் முதலியவற்றாலும், அலராலும் ஐயுற்ற தாய், தலைவியை இற்செறித்தாள். அதனால், தலைவி தலைவனைச் சந்திப்பது இயலாதாயிற்று. காவல் மிகுதியைக் கண்ட தோழி, தலைவியின் துன்பத்தைக்கண்டு ஆற்றாளாய், தலைவியின் களவொழுக்கத்தைப் பெற்றோர்க்குச் செவிலித் தாயின்மூலம் அறிவித்து அறத்தொடு நின்றாள்; பின் தலைவியை அடைந்து தான் செய்ததைக் கூறி, தலைவனும் ஆவன செய்து அவளைக் காப்பான் என்று தான் கருதியதை அவளும் விரும்புமாறு கூறியது.

முடிபு :—' மாஅயோயே, நின்புரைமை நீ அறிவை. பொய்ம்மொழி கூறலஃது எவன்? நின்வயினான் நெஞ்சம் நன்று.'

மழை - மேகம். அருவி ஆர்ந்த - அருவிக்கு அருகில் பொருந்திய. முகை அவிழ்ந்து-அரும்பு விரிந்து. ஆனு-அமையாது. நாறும்-மணம் வீசும். பல் இதழ்-பல இதழையுடைய தாமரை மலர்போன்ற;பண்புத்தொகையன்-மொழி. மழை-குளிர்ச்சி. மாஅயோயே - மாமைநிறம் பொருந்தியவளே. ஒல்வையாயினும் - (நீ என் பிழையைப்) பொறுப்பாயாயினும். கொல்வையாயினும் - (அன்றிச் சினந்த என்னைக்) கொல்வாயாயினும். புரைமை - உயர்வை. 'புரை உயர்பாகும்' என்பது தொல்காப்பியம். வாய் - வாய்மை. எவன்-என்ன பயனைத் தரும்? நெஞ்சம் நன்று-நின் தலைவனது நெஞ்சு நலமுடையது. (அவன் வரைந்துகொள்ளுங் கொள்கையுடையவன். அக் கொள்கை யுடையவனாதலின், அறத்தொடு நிற்பின் நலம் விளையும் என்பது தோழியின் கருத்து). அல்லது, என் நெஞ்சம் நன்றே; உன் நன்மையைக் கருதியே யான் இவ்வாறு அறத்தொடு நின்றேன் என்றலும் பொருந்தும்.

வாய்போல் பொய்ம்மொழி கூறுதல் - (தலைவியின் வேறுபாடு கண்டு தமர் ஆராய்ந்த பொழுது) உண்மை கூறாமல் (அவ் வேறுபாட்டுக்குப்) பொய்க் காரணங்களை உரைத்தல். "அங்ஙனம் கூறுதலாற் பயனில்லை. ஆதலின் உண்மையையே கூறினேன்" என்று தான் அறத்தொடுநின்றதைக் குறிப்பாகக் கூறினாள்.

5, 6 அடிகளை "அடுநையாயினும் விடுநையாயினும், நீ அளந்தறிந்த நின் புரைமை" என்னும் புறநானூற்றடிகளோடு ஒப்பு நோக்குக. (புறம். 36).

4. இது 269-ஆம் பாட்டு; தலைவி கூற்று.

முடிபு :—'எந்தையும் கடல்புக்கனன். யாயும் சென்றனள். அதனால் சேர்ப்பற்கு இனிவரின் எளியள்' என்னுந் தூது சென்று உசாவுகர்ப்பெறின், நன்றுமன்.'

வய - வலிமையையுடைய. 'வயவலியாகும்' என்பது தொல்-காப்பியம். எறிந்த - வீசியடித்ததனால் உண்டான. தணிந்து - ஆறி. நீல் - நீலம்; விகாரம். மாறி - விற்று. தரீஇய - வாங்கிவரும்பொருட்டு கழனி - வயல், அளம். பனி - குளிர்ச்சி. இரும் - பெரிய, கரிய. பரப்பு-கடல். சேர்ப்பற்கு - நெய்தல்நிலத்தலைவனிடம் (உருபுமயக்கம்). இனி-இப்பொழுது. எளியள் - தலைவி எளிதிற் கண்டு பெறுவதற்கு உரியள். என்னுந் தூது—என்று (இச் செய்தி) சொல்லுந் தூதாக. சேய்மை ஆறு — நெடுந்தூர வழியை. தூணப் பரி அசாவாது - விரையும் நடையினால் வருந்தாமல். உசாவுநர்ப்பெறின் - கூறி உசாத்துணை யாவாரைப் பெற்றால். நில்ல - இஃது என் விருப்பம். 'விழைவே காலம் ஒழியிசைக் கிளவி.....நில்லைச்சொல்லே.' தலைவன் என்னோடு அளவளாவுதற்கேற்ற காலம் இதுவே என்பது கருத்து.

சேர்ப்பற்குத் தூதுமொழியை(க் கூறி) உசாவுநரைப்பெறின் எனினும், தூதால் உசாவுநரை எனினும் அமையும்.

'தூது...பெறின் நலம்' என்றது, தோழி அவ் வுதவியைச் செய்ய-வேண்டும் என்பது குறிப்பு.

5. இது 309 - ஆம் பாட்டு; தோழிகூற்று.

மருதம் - ஊடல் ஒழுக்கம். கிழவன் - உரிமையுடையவன், தலைவன்.

முடிபு :—'பெரும! (6) நீ எமக்குப் பல இன்னாதன செய்யி-னும் (7) நின் இன்று அமைதல் வல்லாமாறு (8) நின்னூர் நெய்தல் அணியேம்'.

பெரும - தலைவ. பல இன்னாதன - பல தீமைகளை. இன்று - இன்றி. வல்லாம் மாறு - வன்மையில்லை மாதலின். மாறு, ஏதுப்பொருள்தரும் இடைச்சொல். கைவினை மாக்கள் - உழவுத்தொழில் செய்யும் உழவர். முடிமார் - முடித்த.

சுரும்பு - வண்டு. வாசம் - மணம். கிழ்ப்பட - கீழே பட்டு. வரம்பு - வயலின் வரப்பில். வாடிய - வாடுமாறு; செய்யிய எனும் வாய் பாட்டு வினையெச்சம். கொடியர் - (இவ் வுழவர்கள்) மிகக் கொடியவர்! ஓ - அசை; இரங்கலுமாம். நிலம் பெயர்ந்து உறைவேம் - இவ் வயலை விட்டு நீங்கி, வேறு இடத்தில் வசிப்போம். என்னுது - என்று எண்ணு-மல். பெயர்த்தும் - மீட்டும். கடிந்த செறுவில் - (தம்மை) நீக்கிய வயலிலேயே.

1—3 இவ் வடிகள், உழவர் நெய்தற்கழனியைப் பறித்ததைக் கூறும். அக் கிழங்கு சேற்றில் இருக்குமாதலின், அது மீண்டும் பூக்கும்.

"நெய்தல், தனக்குத் தீங்கிழைத்த உழவருடைய வயலில் மீண்டும் பூப்பதுபோல, எமக்குத் தீங்கிழைத்த நின்பால் மீட்டும் அன்புடையேம்' என்ற உவமை உணர்ந்து மகிழத்தக்கது. இன்னதன பல (7) என்றது, பரத்தையரோடு சென்று நீராடியது முதலிய செயல்களை.

6. இது 396 - ஆம் பாட்டு. செவிலித்தாய்கூற்று; நற்றாய்கூற்றும் ஆம். துறை - மகட்போக்கிய தாய் உரைத்தது.

தோழி அறத்தொடுநின்றும், பெற்றோர் தம் மகளை அத்தலைவனுக்கு மணம் செய்விக்க இசையாமையின், தோழி தலைவியைத் தலைவனுடன் அவன்ஊருக்குப் போகுமாறு வற்புறுத்தினள். உடன்போக்கும் நிகழ்ந்தது. அப்பொழுது தன் மகளைக் காணாத செவிலித்தாய் வருந்திக் கூறினள்.

முடிபு :—'உண்ணுள், மேவாள் (1), அயர்வாள், இனி (2), அவளெடு செலவு (7) எளிது என உணர்ந்தனள்கொல்? (3)

பந்துடன்-பந்தையும், உருபுமயக்கம். மேவாள்-விரும்பாது; 'நம்பும் மேவும் நசையாகும்மே' என்பது தொல்காப்பியம். உண்ணுள், மேவாள் என்பன முற்றெச்சம். ஆயம் - மகளிர்கூட்டம். அயர்வாள் - விளையாடிய தலைவி; வினையாலணையும் பெயர். இனி - இப்பொழுது. முளிசினை - உலர்ந்த கிளையையுடைய. ஓமை - ஒருவகை மரம். கோடு - கொம்பு; தந்தம். ஒருத்தல் - களிறு, ஆண்யானை. வெம்மை வரைக்கவான் - வெம்மையாகிய மலைப்பக்கத்தில். (விண் தோய் சிமைய விறல் வரைக் கவாஅன் - புறம்.151)

குன்றத்து என்றிருப்பதனால், வரை என்பதனைத் தனிப் பொருள் இல்லா அடைமொழி என்க; அரைக்கவான் எனவும் பிரிக்கலாம்; அடிவாரத்தில் என்பது பொருள். 'வெவ் வறைக்கவான்' என்பது பாடமாயின், (வெம்மை அறைகவான்) வெம்மையையுடைய பாறைகளையுடைய மலைப்பக்கம் என்க. மழை - மேகம். கடுங்குரல், இடிமுழக்கம். ஓர்க்கும் - கூர்ந்து கேட்கும். கழை திரங்கு அருமை இடை - மூங்கிலும் உலர்ந்த செல்வதற்கரிய வழியிலே. அவளெடு - தலைவனெடு. 1, 2: தலைவியின் இளமைத்தன்மைக்குத் தாய் இரங்குகின்றாள். முளி...ஓர்க்கும்—ஓமையின் பட்டையைக் குத்தி நீரையுண்ண எண்ணிய யானை, அம் மாமும் உலர்ந்திருந்தமையின், வருத்தி இடியொலியைக் கேட்டு 'மழை பெய்யும் போலும்' என்று அலந்தின்றது. யானையின் நிலை, ஓமையின் சினை, கழைதிரங்கினமை இவை பாலையின் வெம்மையைப் புலப்படுத்தும். இது குறிஞ்சி திரிந்த பாலை.

2. புறநானூறு

1. இது இந் நூலின் இருபத்துநான்காஞ் செய்யுள். திணை, பொதுவியல். பொதுவியலாவது, புறத்திணைகட்கெல்லாம் பொதுவாய் உள்ளனவும், அவற்றிற் கூறுதொழிந்தனவும். துறை : பொருண்மொழிக்காஞ்சி. இது, முனிவர் தெளிந்த பொருளைச் சொல்வதென்னும் பொருளது.

முடிபு :—' செழிய (23), நின் நாள்மீன் நின்று நிலைஇயர் (24); நின் பகைவர்மீன் நில்லாது படாஅச் செலியர் (25); தோன்றி (35) செலச் செல்லாது நின்று விளிந்தோர் பலர் (36); (அவர் வாழ்ந்தோர் எனப்படார்); பெருமை, (33), வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த (29), இரவல்மாக்கள் ஈகை துவல (30), தேறல் மடுப்ப மகிழ் சிறந்து (32) ஒழுகுமதி; ஆங்கு அது (33), வல்லுநர் வாழ்த்தோர் என்ப' (34) என்று மாறி முடிக்க.

அரியும் - அறுக்கின்ற. இருந்தொழுவர் - பெரிய உழவர். முனையின் – வெறுத்தால். பாயுந்து - பாயும். உம் உந்தாயிற்று, பெயரெச்ச வினைத்திரிசொல். பின்வரும் தூங்குந்து, தரூஉந்து என்பனவும் இவ் விலக்கணம் பெற்றவை. செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் அடுக்கி வருங்காலத்து, 'உம்' என்னும் ஈறு 'உந்து' ஆகும் என்பது தெய்வச்சிலையார்கருத்து. திமில் - மீன்படகு. வன்பரதவர் – வலிய நுளையர். வெப்பு - விருப்பம்; 'வெம்மை வேண்டல்'. மட்டு - கள். தண் குரவை - மெல்லிய குரவை. சீர் - தாளம். தூங்குந்து - ஆடும். துவல் கலித்த – துவலையாற் செழித்த. இணர் – பூங்கொத்து. கண்ணிமாலை. மிலைந்த - சூடிய. எல் வளை - விளங்கிய வளை. 'எல்லே யிலக்கம்'. தலைக்கை - முதற்கை. தரூஉந்து - தரும். பட - மொய்ப்ப. கானல் - கடற்கரைச்சோலை. முண்டகக்கோதை - கடன்முள்ளிப்பூமாலை. இரும் பௌ - பெரிய பௌ. நீஞ்சாறு - நீங்கின் நீர். பூ - பொலிவு. குவவுத் தாழை - திரண்ட தென்னை. நீர் - இளநீர். உடன் விராய் – கூடக் கலந்து. முந்நீர் - குரும்பை நீர், கரும்பின் நீஞ்சாறு, தாழைத் நீர். முந்நீர் - கடல். தாங்கா - பொறுக்கலாற்றாத. கெழீஇய - பொருந்திய. ஓம்பா – பாதுகாவாத. மா வேள் - பெரிய வேள். எவ்வி, ஒரு சிற்றரசன். புனல் அம் புதவு - நீர் (வழங்கும்) அழகிய வாய்த்தலை மிழலை-மிழலைக்கூற்றம். பாயுந்து, தூங்குந்து, தரூஉந்து என்னும் பெயரெச்சங்கள் மிழலையென்னும் பெயர்கொண்டன. கயல் ஆர் - கயல்மீனை மேய்கின்ற. போர்வில் - போரின்கண். சேக்கும் - உறங்கும். தொன் முதிர் வேளிர் - (அகத்திய முனிவரால் கொண்டுவரப்பட்ட) பழமை முதிர்ந்த வேளிர். குப்பை - திரட்சி. முத்தாறு - முத்தாற்றுக் கூற்றம். நிலைஇயர் - நிலைக்க. செலியர் - படுக. தொன்று மூத்த - பழைதாய் முதிர்ந்த. நின்று மூத்த - நின்றுமுதிர்ந்த. ஆடுகுடி - வெற்றிக்குடி.

விழுத்திணை - சீரிய குடி. வாளின் வாழ்நர் - வாட்போரால் வாழ்பவர். தாள் வலம் - முயற்சிவலி. பொலங்கலம் - பொற்கலம். அது வல்லுநர் - அவ் வொழுக்கம் வல்லவர். செலச் செல்லாது - பரக்க ஒழுகாது. விளிந்தோர் - மாய்ந்தோர்.

'உயிரினும் (சிறந்த) யாக்கை அன்ன வாளின் வாழ்நர்' எனக் கூட்டி, உயிர்க்கு உடம்பும், உடம்புக்கு உயிரும் போல இன்றியமையாது இவ் விரண்டுமாயிருக்கின்ற வாளின் வாழ்நர் என்க.

இது, நிலையாமை கூறி இனிது ஒழுகென்றமையால், முனிவர் தெளிந்த பொருளைக் கூறியதாயிற்று.

வாழ்த்த, நுவல, மடுப்ப இவை முறையே பொருள், அறம், இன்பம் என்பவற்றைக் கூறின.

2. இது இந் நூலின் இருபத்தேழாஞ் செய்யுள். திணை : **பொதுவியல்**. இதன் இலக்கணம் முன்னர்க் கூறப்பட்டது. துறை : **முதுமொழிக்காஞ்சி**. முதுமொழிக்காஞ்சியாவது - அறிவுடையோர் குற்றம் நீக்கி ஆராயும் உலகத்தியலுள் முடிந்த பொருளாகிய அறம்பொருளின்பங்களை அறியச்சொல்லுதல்.

இச் செய்யுள் பாடிய புலவரின் இயற்பெயர் சாத்தன். முதுகண் என்பது அடை. முதுகண் - பற்றுக்கோடு. அடைக்கலமாகத் தந்த உடைமைகளையும், சிறுவர் சிறுமியர் மகளிர் என்றின்னோரையும் புரப்பவர் இப் பெயர் பெறுவர். அதுபற்றிப் போலும், இப் புலவர்க்கு இப் பெயர் எய்தலாயிற்று.

முடிபு:—'எந்தை, சேட்சென்னி நலங்கிள்ளி (10), உலகத்து (14) வந்தோர் மருங்கு நோக்கி (16), அருளவல்லை ஆகுமதி (17); நின்பகை எதிர்ந்தோர் (19), அருளிலர் (17), கொடாமை வல்லர் ஆகுக (17); உரையும் பாட்டும் உடையோர் சிலரே (5); மாய்ந்திசினோர் பலர் (6); புகழுடையோர் (7), தம் செய்வினை முடித்தென (9) வான ஊர்தி (8) எய்துப என்ப.'

பயந்த - பூத்த. ஒண் கேழ் - ஒள்ளிய நிறம். அலரின் நிரை - பூவின் வரிசை. வேற்றுமை இல்லா - ஏற்றத்தாழ்வு இல்லாத. விழுத்திணை. சிறந்த குடி. உரை - புகழ். மரை - தாமரை. வானவூர்தி - வானில் இயங்கும் விமானம். வலவன் - பாகன். எய்துப - பொருந்துவார். செய்வினை - நல்வினை. மாய்தல் - மறைதல். புத்தேள் - தெய்வம். வல்லார் - வல்லமையில்லார்; எதிர்மறைவினையாலணையும் பெயர். துப்பு - வலிமை.

அருளும் ஈகையும் உடையோர் வெல்வர்; அவை இல்லார் தோற்பர் என்பது கருத்து.

புகழ்தான் உரையும் பாட்டும் என இருவகைப்படும். அவற்றுள் உரைப்பார் உரைப்பவை யென எல்லார்க்கு முரிய வழக்கினையே எடுத்தாராயினும், இனம்பற்றிப் புலவர்க்கே யுரிய செய்யுளுங் கொள்ளப்படும். படவே, பாடுவார் பாடுவன வெல்லாம் புகழா மென்பது பெற்றும். (குறள், 232. பரிமேலழகர் உரை).

3. இது முப்பத்தைந்தாம் பாட்டு. **பாடாண்டிணை** - ஒருவனுடைய கீர்த்தியும், வலியும், கொடையும், அளியும் ஆகிய இவற்றைத் தெரிந்து சொல்வது. **துறை: செவியறிவுறூஉ** - மாற்சரியமும் கெடுதலும் இல்லாத பெரிய எண்ணத்தை அரசனுக்குச் சொல்லுதல்.

முடிபு:—பெரும, அரசெனப்படுவது நினதே; (5) நாடெனப்படுவது நினதே.(11)நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே (12), நினை கூறுவல்; எனவ கேண்மதி (13); குடை, வருந்திய குடிமறைப்பதுவே; கூர்வேல் வளவ (21), பதனெளியோர் (15) உறைவேண்டு பொழுதிற் பெயல் பெற்றோரவர் (16).பொருபடை தருஉங் கொற்றமும் உழுபடை ஈன்றதன் பயனே (25-26). பொய்ப்பினும் குன்றினும் (27), தோன்றினும் (28), கண்ணகன் ஞாலம் காவலர்ப் பழிக்கும் (29). நீயும், அது நற்கறிந்தனையாயின் (30), தொதுமலாளர் பொதுமொழிகொள்ளாது (31),பாரம் ஓம்பிக்(32) குடிபுறந்தருகுவையாயின் அடங்காதோர் நின்னடி (33) புறந்தருகுவர் (34).-என்று முடிக்க.

ஞெரி - செறிந்த. ஏணி - எல்லை. வளி - காற்று. இடைவழங்கா - குறுக்கே போகாத. திணி - செறிந்த. கிடக்கை - உலகம். கிழவர் - உரியர். மூவர் - மூவேந்தர். அலங்கு கதிர் - விளங்கிய சுடர். வெள்ளி - சுக்கிரன். கனலி - சூரியன். தென்புலம் - தெற்குத்திக்கு. கவர்பு - பல காலாய் ஓடி. தோடுகொள் - தொகுதிகொண்ட. ஆடு கண் கரும்பு - அசைந்த கணுவினையுடைய கரும்பு. நுடங்கும் - அசையும். கெழு - பொருந்திய. பீடு - பெருமை. நினவ - நின்னுடையன சில காரியம். எனவ - என்னுடையன சில வார்த்தை. அறம் - அறக்கடவுள். புரிந்தன்ன - மேவி ஆராய்ந்தாற்போன்ற. நாட்டம் - ஆராய்ச்சி. முறை வேண்டு பொழுதில் - நீதியைக் கேட்க வேண்டுங்காலத்து. பதன் எளியோர் - காண்டற் கெளியோர். உறை – துளி. பெயல் - மழை. சுமந்தன்மேற்கொண்ட. கோடு - பக்கம். திரள் கொண்மூ - திரண்ட மேகம். கண்பொர - கண்ணெளியோடு மாறுபட. விண்பொரு - வானை முட்டிய. வியன் குடை - பரந்த வெண்கொற்றக்குடை. மறைக்கொண்டன்றே - மறைத்தற்குக் கொண்டதோ. வெளிற்றுப்பனை - இளைய பனை. துணி - துண்டம். வீற்றுவீற்று - வேறுவேறு. கணம் - தொகுதி. கண் - இடம். பறந்தலை - போர்க்களம். வருபடை தாங்கி - வருகின்ற படையைப் பொறுத்து. பெயர்புறத்து - புறக்கொடை கண்டு. பொருபடை - போர்செய்கின்ற படை. உழுபடை - உழுகின்ற கலப்பை. ஊன்றுசால் மருங்கின் - ஊன்றிய படைச்சாலிடத்து. பொய்ப்

பினும் - பெய்யாதொழியினும். வாரி குன்றினும் - வினைவு சுருங்கினும். இயற்கை அல்லன - இயல்பல்லாதன. செயற்கையில் - செயலில். நற்கு-நன்றுக. நொதுமலாளர் - குறளே கூறுவோர். பொதுமொழி - உறுதியில்-லாத வார்த்தை. பகடு புறந்தருநர் - ஏரைப் பாதுகாப்பார். பாரம் ஓம்பி - குடியைப் பாதுகாத்து. குடி - ஏனைக்குடி. அடங்காதோர் - பகைவர். அடிபுறந்தருகுவர் - அடியைப் போற்றுவர். அத்தை, ஆங்க, மதி - இம் மூன்றும் அசைநிலை. நின, என என்னுஞ் சொற்களின் ஈற்றிலுள்ள அகரங்கள் செய்யுள் நோக்கி விரிக்கப்பெற்றன.

4. இது நாற்பத்தேழாவது செய்யுள். **வஞ்சித்திணை** - அரசன் வஞ்சிப்பூவைத் தலையிற் சூடிப் பகைவருடைய பூமியைக் கைக்கொள்ளக் கருதுதல். துறை ; **துணை வஞ்சி** - பிறரை வெல்லவாவது கொல்லவாவது துணிந்து நிற்கின்றொருவனைச் சில கூறிச் சந்து செய்வித்தல்.

முடிபு:—'படர்ந்து, போகி, என்னது, கடந்து, பாடி, மகிழ்ந்து; அருத்தி, உண்டு, வீசி, வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை நும்மோரன்ன செல்வமும் உடைத்து. நாண, ஏகி இனிதொழுகினல்லது பிறர்க்குத் தீதறிந் தன்றே ? இன்றே ' எனக் கூட்டி முடிக்க.

வள்ளியோர் – வண்மையுடையோர். படர்ந்து-நினைத்து;'படரே உள்ளல்'. புள்ளின்-பறவைபோல. என்னது-என்றெண்ணுது. சுரம்-கடத்தற்கரிய வழி. கடந்து-கழிந்து. வடியா-திருந்தாத. வல்லாங்கு-(தாம்)வல்லபடி. பெற்றது - பெற்ற பரிசில். அருத்தி - ஊட்டி. ஓம்பாது-பாதுகாவாது. கூம்பாது வீசி - உள்ளம் மலர்ந்து வழங்கி. வரிசைக்கு - சிறப்பினுக்கு. பிறர்க்குத் தீது - பிறர்க்குச் (செய்யுங்) கொடுமை. திறப்பட - கூறுபட. நண்ணார் - மலைந்தோர். அண்ணாந்து - தலையெடுத்து. மண் ஆள் செல்வம்-நிலத்தை ஆளும் திரு. நும்மோரன்ன - நும்மையொக்கும். செம்மலும்-தலைமையும்.

'சுரம்பல கடந்து புள்ளிற் போகி'.என மாறுக.

' வடியா நாவின் வல்லாங்குப் பாடி '

என்னும் அடியுள், கோவூர்கிழார்தம் பணிவுடைமை இனிது விளங்கும்.

இப் பாட்டு மேற்செலவின்கண் அடங்காமையின் துணைவஞ்சி அன்றென்றும், பாடாண்டிணை யென்றும் கூறுவர். (தொல் - புறத். சூ. 8. நச் - உரை).

---

3. பொருநராற்றுப்படை

ஆற்றுப்படை என்பது கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என்பவருள் ஒருவர், ஒரு வள்ளலிடத்துத் தாம் பெற்ற பெருங்கொடையை வழியில் எதிர்வந்த இரவலர்க்குக் கூறி, அவரும் அவ் வள்ளல்பாற் சென்று தாம் பெற்றவற்றைப் பெறுமாறு வழிப்படுத்துதல். ஆறு - வழி. படை - படுத்துதல்.

'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறுஅர்க் கறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கம்'

(தொல்-பொருள்-புறத்திணை.)

என்பது ஆற்றப்படைக்கு இலக்கணம்.

பரிசில் பெற்ற பொருநன் ஒருவன், அது பெறக் கருதிய பொருநனை ஆற்றுப்படுத்தியமை கூறுதலின், இந் நூல் **பொருநராற்றுப்படை** எனப் பெயர் பெற்றது.

பொருநர் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் எனப் பலவகையினர். அவருள் இவ்வாற்றுப்படையிற் கூறப்படுபவன் போர்க்களம் பாடும் பொருநன். இது, 'இவன் போர்க்களம் பாடும் பொருநனதலாலும்' என நச்சினார்க்கினியர் தம் உரையுள் (பொருந. 56-7) கூறுதலால், தெளிவாகும்.

முழுப்பாட்டுக்கு முடிபு :—பொருந (3), கோடியர் தலைவ, கொண்டது அறிந (57), புகழ் மேம்படுந (60) ஏழின் கிழவ (63), கடவுட்கடன் கழிப்பிய பின்றை (52), நெறி திரிந் தொராஅது (58) ஆற்றெதிர்ப்படுதலும் நோற்றதன் பயனே (59). போற்றிக் கேண்மதி (60).

நின் இரும் பேரொக்கலொடு (61) நீடுபசி ஓராஅல் வேண்டின், நீடின்று (62) எழுமதி (63). யானும் (64) இன்மைதீர வந்தனென் (129).

உருகெழு குருசிலாகிய (131) உருவப்பஃறேர் இளையோன்சிறுவன் (130) கரிகால்வளவன் (148) நாடு கிழவோன் (248).

குருசில் அன்னோன் (231) தாள்நிழல் மருங்கின் குறுகி (149) தொழுது முன் நிற்குவிராயின் (150), நாட்டொடு (170) வேழம் (172) தரவிடைத் தங்கல் ஓவிலன் (173).

[உருகெழு குருசிலும் (131) உருவப்பஃறேர் இளையோன் சிறுவனும் ஆகிய (130) கரிகால் வளவனது (148) தாள் நிழல் மருங்கின் குறு-

இத் (149) தொழுது முன் நிற்குவிராயின் (150), நாட்டொடு (170) வேழம் (172) தரவிடைத் தங்கலோவிலன் (173); விடுக்குவனல்லன் (177). அவன் யார் எனின், நால் நாடு குழீஇ (226) மறு இன்றி இருப்ப (227), ஆண்ட கேண்மை (229), செங்கோல் (230) அன்னோன் (231) வெல்வேற் குரிசில் (231), நாடு கிழவோன் (248). (அவன்) வாழி (231) என்றும் பலபட மாறுமல் முடித்துக் கொள்ளலாம்.]

1-56—ஒரு தொடர்.

முடிபு :—பொருந (3), பாடினி (47) செந்நிலன் ஒதுங்கலின் (43), பரற்பகை உழந்த நோயொடு சிவணி (44) மொக்குளால் (45) எவ்வம் தாங்கி (50) நடை இடை விலங்கலின் (46), கானத்தின் (49) மெல் நிழல் மருங்கில் (51) அல்கிப் (49) பாலை யாழை (22) வாரியும்.....உறழ்தும் (23) (வாசித்துப்) பாடின பாணிக்கு ஏற்ப (48) சீருடை நன்மொழி சிதறிக் (24) காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை (52) பாடல்பற்றிய பயனுடை எழாஅல் கோடியர் தலைவ, கொண்டது அறிந (56).

1. அரூஅ-இடையரூத. யாணர்-புதுச்செல்வவருவாய். தலை - இடம்.

2. சாறு-விழா. வழிநாள்-மறுநாள். நசையுறுது-விரும்பாது.

3. வேறுபுலம் - (விழாக் கொண்டாடும்) வேறு நாட்டை. விரகு-உபாயம்.

4-22. **யாழின் உறுப்புக்கள்.**

முடிபு : பத்தலினையும் (4) பொல்லம் பொத்திய (8) பச்சையாகிய (5) போர்வையினையும் (8) ஆணியினையும் (11) வறுவாயினையும் (12) மருப்பினையும் (13) திவவினையும் (15) நரம்பின் தொடையலினையும் (18) காட்சியினையும் உடைய (20) பாலையாழ்.

4. குளப்பு வழி-மான்குளம்பு அழுத்திய இடத்தை. கவடுபடு-இரண்டருகும் தாழ்ந்த. பத்தல் - குடம்போன்ற யாழுறுப்பு.

5. விளக்கு அழல் உருவின்-விளக்கின் எரிகின்ற நிறத்தையுடைய. விசியுறு-கட்டிப் போர்த்தலுற்ற. பச்சை-தோல்.

6. எய்யா - (மிக) அறியப்படாத. செய்யோள் - சிவந்த நிறத்தை உடையவளது. அவயிறு-அழகினையுடைய வயிற்றின்.

7. ஐது - அழகிதாகிய ; மெல்லியதாகிய. ஒழுகிய-ஒழுங்குபடக் கிடந்த.

8. பொல்லம் பொத்திய - இரண்டு தலையையும் கூட்டித் தைத்த ; தைத்தலினால் மூடிய.

9. அளை-வளை. அலவன் - நண்டு.

10. தூர்ந்த தூரப்பு - மறைதற்குக் காரணமாகிய முடுக்குதல் (Rivetting). அன்ன ஆணி என்று கூட்டுக.

11. அண் நா-உள் நாக்கு.

13. அணந்தன்ன-தலையெடுத்தால் ஒத்த. மருப்பு-தண்டு.

14. மாயோள்-மாமை (கரிய) நிறத்தையுடையவள்; இளம்பருவத்தினள்.

15. கண்கூடு இருக்கை-ஒன்றோடொன்று நெருங்கின இருப்பையுடையதாகிய. திவவு-வார்க்கட்டு.

16. ஆய்-அழகினையுடைய. அவையல்-குத்தலரிசி.

17. வேய்வை - குற்றம். நரம்பின் தொடையல் (18) - நரம்பினையுடைய தொடர்ச்சி.

18. கேள்வி போகிய-இசை முற்றுப்பெற்ற. நரம்பின் (17) தொடையல் என்க.

19. கலியாணம் செய்தமை தோற்றுகின்ற மாதரை அலங்கரித்தாலொத்த. மண்ணுதல்-அலங்கரித்தல்.

20. அணங்கு-(யாழிற்கு உரிய) தெய்வம்; மாதங்கி. மெய்நின்றதன்னிடத்தே நின்ற. அமைவரு-(இலக்கணம்) அமைதல் வரும். காட்சி - அழகு.

21. ஆறு அலை கள்வர் - வழிப்போக்கரை வருத்திப் பொருளைப் பறிக்குங் கொள்ளைக்கூட்டத்தார். ஆறு, ஆகுபெயர். படைவிட - (தம் கையில் உள்ள) படைக்கலங்களைக் கைவிடும்படி.

21-22. அருளின் மாறு தலை பெயர்க்கும் மருவு இன் பாலை - அருளினது மாறுகிய மறத்தினை அவர்களிடத்தினின்று பெயர்க்கும் மருவுதல் இனிய பாலையாழை. பாலை, ஆகுபெயர்.

23. (நரப்புகளைக் கூடத்) தழுவியும், உருவியும், தெறித்தும், ஒன்றைவிட்டுத் தெறித்தும்.

24. நல்மொழி - தேவபாணிகளை; தெய்வங்களைத் துதிக்கும் பாட்டுக்களை. நீரொடு சிதறி - ஈர்மையுடன் பரக்கப் பாடி.

25-47 : பாடினியின் உறுப்புக்கள்.

முடிபு : கூந்தலினையும் நுதலினையும் (25) புருவத்தினையும் கண்ணினையும் (26) வாயினையும் (27) பல்லினையும் (28) காதினையும் (30) எருத்தினையும் (31) தோளினையும் கையினையும் (32) விரலினையும் (33) உகிரினையும் (34) கொப்பூழினையும் (57) நடுவினையும் (38) குறங்கினையும் (40) சிறடியினையும் உருவினையும் உடைய பாடினி (47).

25. அறல் - (ஆற்றின்) கருமணல். நுதல் - நெற்றி.

26. கொழு - அழகிய. மழை-குளிர்ச்சி.

27. துவர் - செந்நிறம்.

28. பல உறு - பலவும் சேர்ந்த ; பலவிலையுற்ற. பழி - குற்றம்.

29. மயிர் குறை கருவி - கத்தரிகை. கடை - குழைச்சு (The holes of the Scissors).

30. பூ - பொலிவு ; அழகு. குழை - காதணி ; மகரக்குழை.

31. அட - வருத்தலான். சாய்ந்த-(பிறரை நோக்காது) கவிழ்ந்த. எருத்து - கழுத்து.

32. ஆடு அமை - அசைகின்ற மூங்கில்போலும்; (வினைத்தொகை.) பணை-பருத்த. அரி - மெல்லிய.

33. வரைமிசை இய - மலையின் உச்சியிடத்தனவாகிய.

34. வாய் ஒப்பின் - வாயோடு ஒப்பினையுடைய. வள் உகிர் - பெருமையை உடையதாகிய நகம்.

37. நிறைந்த - (உத்தம இலக்கணங்கள்) நிறைந்த.

38. உயவும் நடு - வருந்தும் இடை. (பி-ம்) உயவின் நடு-வருந்து-தலை உடைய இடை.

40. குறங்கு - தொடை (துடை என்றுங் கூறுவர்).

41. பொருந்து - (கணைக்காலுக்கு இலக்கணம் என்றற்குப்) பொருந்திய. தாட்கு (தாளுக்கு) - கணைக்காலுக்கு.

41-42 - ஒப்ப பெருந்தகு சீறடி, வருந்தும் நாய் நாவின் சீறடி என்று இயைக்க; பொருந்த பெருமை தக்கிருக்கும், ஓடி இளைத்த நாயின் நாக்கினைப்போன்ற சிறிய அடி. உவமையின் உயர்வை உய்த்து நோக்குக. (சிறுபாண்—17 - 8 : உயங்குநாய் நாவின் கள்ளழில் அசைஇ...உலறிய அடியின்).

43. அரக்கு - சாதிலிங்கம். ஒதுங்கலின்-நடக்கையினாலே.

44. சுக்கான்கல்லாகிய பகையாலே வருந்தின நோயோடே பொருந்தி. பரல் - சுக்கான்கல்.

45. மரல், சிறுசெடிவகை. மறுகு - துளும்பும். மொக்குள் - கொப்புளம்.

46. பகல் அந்தி - உச்சிக்காலமான சந்தியில். விலங்கலின் - தவிர்தலாலே, ஒதுங்குதலால்.

47. உரு - சாயல். பெருமை தகு - கல்விப்பெருமை தக்கிருக்கின்ற. இங்ஙனம், தலைமுதல் அடியீறாகக் கூறியது காண்க.

48. பாணி - தாளம்.

49. அதர்-வழி.

50, 51—நிழல் மருங்கில், எவ்வம் தாங்கி, என்று மாறுக. இலை இல் - இலை இல்லாத. மராத்த - மராமரத்திடத்தனவாகிய. வலந்தன்ன (வலந்தால் அன்ன)—மேலே கட்டினாலொத்த. மருங்கில் - இடத்தே.

எவ்வம் தாங்கி-(கொப்புளத்தால் வந்த) வருத்தத்தைத் தாங்கி; இனி, எவ்வம் தாங்கி இலை இல் மராத்த என்று மாறிக்கூட்டி, (சூரியனின் வெம்மையால் தனக்கு வந்த வருத்தத்தைத் தாங்கி இலை இல்லாத மராமரம், என்றும் பொருள் கூறலாம்.

52. கடவுட்கடன் - தெய்வத்துக்கு (மனமகிழ்ச்சியோடு செய்யும்) முறைமைகள். கடன் கழித்தல் - தடாரியை வாசித்தல்.

53. பீடு - பெருமை. திரு - செல்வம். தோன்தாள் - வலிமையோடு கூடிய முயற்சி.

54. முரசு - வெற்றிமுரசு. மூவர், சேர சோழ பாண்டியர். கூடி - (தம்மிற் பகைமை நீங்கிச்) சேர்ந்து. மூவரும் கூடி அரசவை இருந்த தோற்றம், பாடல் பற்றிய பயனுக்கு உவமை. தோற்றம்போல வந்தனென் (129) என்று முடிப்பர் நச்சினார்க்கினியர்.

56. பாடல் - மிடற்றுப்பாடல்; வாய்ப்பாட்டு. ஏழாஅல்-யாழ்.

57. கோடியர் - கூத்தர். கொண்டது அறிந - (பிறர் மனத்துக்) கொண்டதனைக் (குறிப்பால்) அறிய வல்லாய்; அண்மை விளி.

58. ஓராஅது - (வேறொருவழியில்) போகாமல்.

59. (இவ்) வழியில் (என்னைக்) காண்டலும் (நீ முற்பிறப்பில்) செய்த நல்வினையின் பயனே.

60. போற்றி - விரும்பி. கேள்மதி; மதி முன்னிலை அசைச்சொல். புகழ் பேம்படுத—பிறர்புகழை அரச சபைகளில் மேம்படுத்த வல்லவனே, அண்மை விளி.

61. ஆடு - அடுகின்ற. கொல்லுகின்ற. உழந்த - வருந்தின. இரும்பேர் ஒக்கல் - கரிய, பெரிய சுற்றம்; மிகப்பெரிய சுற்றம் எனினும் அமையும்.

62. நீடு பசி - தொன்றுதொட்டு வந்த பசி; தொடாட்பசி ஓராஅல் - (நின்னைக்) கைவிடுதலை; நீங்குதலை. நீடு இன்று வீட்டித்தல் இன்றி; காலதாமதம் இல்லாமல்.

63. ஏழின் கிழவ - இசைநரம்பு ஏழின்கண்ணும் உரிமையுடையாய்! ஏழ், ஆகுபெயர். இசை நரம்புகள் ஏழு: குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் (ஸ ரி க ம ப த நி என்பன போன்றவை)

64 - 129. ஒருதொடர்: கருத்து: பரிசில்பெற்ற பாணன், தான் கரிகால்வளவனைக் கண்டு, பரிசில் பெற்று வறுமை தீர வந்த முறையை விரிவாகக் கூறுகின்றான்.

முடிபு:—யானும் அவன் (64) வரைப்பின் (65) வயில் 66 புக்கு என் இடும்பை தீர (67) எய்யேனாகி (68) விடியலில் (72)

ஒன்று யான் பெட்டா அளவையின் (73) கொளல்வேண்டிக் (74) கூறி (75) இரீஇ (76), நோக்குமோடு (77) குளிர்கொளீஇ (78), சிதார் நீக்கி (81) அறுவை நல்கி (83), மகளிர் ((85) மகிழை (84) தரத்தர 87), உண்டு போக்கி (88) நின்றகாலை (89),

தங்கி (80) நீக்கி (93) எழுந்து (95) ஏமாப்பச் (98) சொல்லிக் காட்டக் (100) கூஉய் (101) கழிப்பிய பின்றைத் (102),

தண்டி (104) ஒற்றி (106) முனிகுவம் எனின் (107), இரீஇத் (108) தூங்கக் (110) கழிப்பி (111),

ஒருநாள் இரப்ப (112) அயின்ற காலை இருந்து (116) மழுங்கி (118) முனிந்து (119),

சேறுமெனக் (121) கிளந்தனமாக (122) அகறிரோ என (123) தரத்தர யானும் (127) வேண்டுவ முகந்துகொண்டு (128), இன்மை நீர வந்தனென் (129).

65. சும்மை - ஓசை. வரைப்பு - மதில்.

66. நசையுநர்த் தடையா - நச்சி வந்தார்க்குத் தடையில்லாத. 'நசையுநர்க்கு அடையா வாயில்' என்ற பாடமும் உண்டு.

67. இசையேன் - வாயிற்காப்போனுக்குக் கூறுமல். இடும்பை - வறுமைத்துன்பம்.

68. எய்த்த - முன்பு இளைத்த. எய்யேனுகி - இளைப்புத் தீர்ந்து.

69. பைத்த - நச்சுப்பையை விரித்த. துத்தி - படப்புள்ளி.

70. கைக் கசடு - கையின் வடு. தடாரி - உடுக்கை.

71-3. 'ஏற்ப, ஒன்று...அளவையின், விரிகதிர்...விடியல்' என்று மாறுக.

71. இருசீர்ப்பாணி - இரட்டைத் தாளம்.

73. ஒன்று - ஒரு பாட்டினை. பெட்டா அளவையின் - விரும்பிப் பாடுவதற்கு முன்னே ; பாடியவுடனே என்றபடி. ஒன்றிய - (முன்பே தன்னெடு) பொருந்திய.

74. கேள் - உறவு.

75. (தான்) உபகரித்தற்கு வழியாகிய இரப்பினையே (யான் எப்பொழுதும்) விரும்பும்படி (உபசாரங்களைக்) கூறி.

76. நண்ணுவழி - அண்ணிதான இடத்தில்; அருகில்.

77. அருகா - கெடாத, குறைவுபடாத. நோக்குமோடு; ஓடு கருவிப்பொருளில் வந்தது. 'நோக்கத்தால் கொளுத்தி' என்று முடிக்க.

79. இறைகூடி - அரசாண்டு.

80. வேறு இழை - சறடு. 81. தூன்னல் - தைத்தற்றொழிலை உடைய. சிதாஅர் - ஆடையை.

82. நுழைகல்லா - (இஃது இழைபோன வழி என்று) குறித்துப் பார்க்க வாராத. பூ கனிந்து - பூத்தொழில் முற்றுப்பெற்றதனால்.

83. அரவு உரி-பாம்பின் தோல்; பாம்புச்சட்டை. அறுவை- துகில்.

84-87. 'இழை.....மகளிர் மருள்செய்யும் மகிழ், மழை என மாடத்து பல் கால் வாக்கு போக்கு இல்புபொலகலம் நிறையத் தரத்தர' என்று மாற்றுக.

84. மகிழ் - கள் (ஆகுபெயர்). கள்ளே மழை என்னும்படி வார்த்து என்று மூடிப்பர் உரைகாரர். 'மழைஎன மருளும் மாடம், மகிழ்ச்சியைச் செய்யும் மாடம்' என்று கூட்டி, வார்த்து என்பதற்குக் கள் என்பதை வருவித்துப் பொருள் கூறினும் அமையும். (மலே என மழை என மாடம் ஓங்கி' - மலைபடு. 484)

85. இன்நகை - (பாட்டாலும் கூத்தாலும் சொல்லாலும் அரசனுக்கு) இனிய மகிழ்ச்சியை(ச்செய்யும்).

86. போக்கு இல்-ஓட்டம் அற்ற. பொலங்கலம் (பொன் + கலம்)- பொன்னால் செய்த வட்டில்.

88. அளர் - வருத்தம்.

89. செருக்கு - மகிழ்ச்சி. காலை - (அந்திக்)காலத்தில்.

90. சிறை - பக்கம். 92. அளவை மான - தன்மையைப் போல.

94. அனந்தர் - கள்ளின் செருக்கால் உண்டான. நடுக்கம் - உடல் நடுக்கம்.

95. கவல்பு யாவதும் (94) - கவலை சிறிதும். கவல்பு, தொழிற் பெயர்.

96. மாழாந்து - மயங்கி. அன்னது ஓர் புன்மை - என்னிடத்தில் நின்ற சொல்லிற் கெட்டாத வறுமையையும். அன்னது, நெஞ்சறிசுட்டு.

97. கண்டோர் மருளும் - (என்னைக்) கண்டவர் ('நேற்று வந்தவன் இவன் அல்லன்' என்று) மருளுதற்குக் காரணமான.

பல நறு நாற்றங்களும் அவன் உடைமையின், 'வண்டு சூழ்கிலை' என்றான்.

98. எமாப்ப - (நனவே என்று) துணிய.

98- கல்லா இளைஞர் சொல்லிக்காட்ட - (அரசனுக்கு உரிய புகழ்-கூறத் தாங்கள் முழுதும்) கற்று (என்பின் நின்ற) இளையவர் (அவற்றைச்) சொல்லிக் காட்ட. கல்லா, செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இனி, (தத்தம் சிறுதொழிலன்றி வேறு ஒன்றும் (கல்லாத இளைஞர்) நேற்று வந்தவன் இவன்' என்று அரசனுக்குச்) சொல்லிக்காட்ட எனினும் அமை-

யும் என்பர் நச்சினார்க்கினியர். இங்கு, கல்லா, சுறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பிற்பொருளே சிறக்கும். 101. கரைந்து - அழைத்து. வம்-வாரும்.

102. அதன்முறை கழிப்பிய - அக் காட்சியிடத்துச் செய்யும் முறைமைகளை அரசன் செய்து முடித்த. (காட்சி-திருவோலக்கம், அரசவை.)

103. தூஅய் - அறுகம்புல்லால் திரித்த பழுதைக்கயிறு. தூற்றியின்ற. தருவை-செம்மறிக்கிடாய். புழுக்கின்-புழுக்கின இறைச்சியினில்.

104. பராஅரை-பருத்த மேல்தொடைப்பகுதி. வேவை-வெந்ததனை. தண்டி - (பலகால்) அலைத்து; வற்புறுத்தி. 105. காழ் - இரும்புக் கம்பி.

106. வெய்த வாய் ஊழின் ஊழின் ஒற்றி - வெம்மையை வாயிடத்தே இடத்தினும் வலத்தினும் சேர்த்து ஆற்றித்தின்று. ஊழ்-முறை.

107. அவை அவை முனிகுவம் - புழுக்கின இறைச்சியையும் சுட்ட இறைச்சியையும் (யாங்கள் இனி) வேண்டோம்.

108. விரத - பண்ணியாரம். உபாயங்களால் பண்ணுதலின் 'விரகு' என்றார். விரகு, ஆகுபெயர்.

109-110. முழவின்பாணி தூங்க என்க. பாணி தூங்க - தாளத்தக்கு இயைய ஆடும்படி.

111. மகிழ்ப் பதம் - மகிழ்ச்சியை உடைய கள் (உண்டலில்). பதம், காலமும் ஆம்.

112. அவிழ்ப்பதம்-சோறாகிய உணவு; இருபெயரொட்டு. முகிழ்த்தகை - (முல்லை) அரும்பின் தன்மையினை உடைய.

113. முரவை போகிய - (தவிட்டினுல் உண்டாம்) வரி அற்ற.

114. நிரல் அமை - வரிசையாக உள்ள; ஒன்றோடு ஒன்று சேராத. புழுக்கல் - சோறு. பழுத்த அரிசியை ஆக்கினமை தோன்ற 'நிரலமை புழுக்கல்' என்றார்.

115. வறை - வறுத்தது; பொரித்தது. கருனை - பொரிக்கறி. காடியின் மிதப்ப - கழுத்தில் (வந்து) நிரம்பும்படி; காடி, புளிங்கறியும் ஆம்.

118. எல்லை - பகல்.

119. உயிர்ப்ப - இளைப்பாற. உயிர்ப்பிடம் தொகுத்தல் விகாரம்.

120. செயிர்த்து - குற்றத்தைச் செய்து. தெவ்வர்—பகைவரை. நிறை நிறைபோகிய - நிறை கொள்ளுங் கூறுபாடுகளெல்லாம் முடியப் போன.

121. சேறும் - செல்வேம்; தன்மைப்பன்மை எதிர்கால வினைமுற்று. தொல்பதி - பழைய ஊர். தொல்பதி என்றார், இதுவும் தமக்குப் பதி என்பது தோன்ற.

122. 'ஒருநாள் (119) கிளந்தனமாக' என்று முடிக்க.

123. ஆயம்-திரள், கூட்டம். 122-4.' சிறியவன்....நோக்கமோடு எம் ஆயம்விட்டு வல்லே அகறிரோ என' என்று மாறுக. சிறியவன்-கோபித்தவன். செயிர்த்த - (எமக்கு) வருத்தத்தைச் செய்த.

125-7 'பிடிபுணர் வேழம் அடிதுடி அன்ன தூங்கு நடைக் குழவி-யொடு கொள்க என பெட்ட அளவை தன்...தர' என்று மாறுக. துடி-உடுக்கை. தூங்கு - அசைந்த. பெட்டவை - (பின்னும் தான்) விரும்பி-யிருந்த (ஊர்திகள் ஆடைகள் அணிகலங்கள் முதலிய) பொருள்களை.

129. இன்மை தீர - வறுமை (எக்காலமும்) இல்லையாம்படி.

129-148. ஒருதொடர். கரிகாலன்வீரம். முடிபு: முருகற் சிற்றத்து உருகெழு குரிசில் (131) (ஆகிய) உருவப்பல்தேர் இளையோனுடைய (130) வெல்வேல் (129) சிறுவன் (130) தாயம் எய்திப் (132) பிறந்து (137) மிகு வலி செருக்கி (140) எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்பச் (133) செய்யார் தேஎம் தெருமரல் கலிப்ப (134) நாடு.....வளர்ப்ப (138) குருளை (139) களிறு அட்டாங்கு (142) இருபெரு வேந்தரும் அவியத் (146) தாக்கிய (147) கரிகால்வளவன் (148) என மாறி முடிக்க.

130. உருவம் - அழகு. இளையோன் - இளஞ்சேட் சென்னி.

131. உரு கெழு - அச்சம் பொருந்திய. 'உரு உட்காகும்'.

132. கரிகால்வளவன் தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே, நல்ல முகூர்த்தம் வருமளவும் தாய்வயிற்றிலே யிருந்து பிறந்தான் என்பது வரலாறு.

133. எய்யா - (முன்பு தன் வலிமை) அறியாத.

134. செய்யார் - (ஏவல் செய்யாத) பகைவர். தெருமரல் - மனக் கவற்சி; தெருமா, பகுதி. 'அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி'. கலிப்ப - பெருக.

135. பவ்வம் - கடல். வெம்மை வெம்மை செல்வன் - வெம்மையை உடைய (எல்லாராலும்) விரும்பப்படும் இளஞாயிறு. 'வெம்மை வேண்டல்'.

138. செகில் - தோள். 139. அணங்கு - வருத்துதலை உடைய.

140. மீளி - எமன். 141. ஞெரேர் என - கடுக.

142. தலைக்கோள் வேட்டம்-முற்பட (இரையைக்) கொள்ளுதற்குக் காரணமான வேட்டையில்.

143. போந்தை - குருத்து. தோடு - வலப்பக்கத்து ஓலை.

144. குழைத் தெரியல் - தளிராற் செய்த மாலை. கருஞ்சினை வேம்பின் அரம்வாய் அம் குழை - என மாறுக.

147. வெண்ணி, போர்க்களம்; தஞ்சை ஜில்லாவில் உள்ள கோயில் வெண்ணி என்னும் ஊர் என்பர். நோன் தாள் - வலியை உடைய முயற்சி.

148. கண்ணூர் கண்ணி-கண்ணுக்கு (அழகு) நிறைந்த (ஆத்தி)மாலை.

150-177. ஒரு தொடர். கொற்றவன்கொடைத்திறம். முடிபு:- தொழுது முன் நிற்குவிராயின் (150) போற்றுபு நோக்கி (151) நீக்கி (154) பட்டுடை நல்கி (155) பாடினி அணியச் (162) சூட்டி (160) வாக்குபு தரத்தர (157), பருகித் (158) தெற்றெனச் (174) செலவு கடைக்கூட்டுதிராயின் (அதற்குப்)

பல புலந்து (175) தேரில் (163) புரவி பூட்டி (165) ஏற்றி (167) முறையுளிக் கழிப்பி விடுக்குவனல்லன் (177); நில்லா உலகத்து நிலைமை தூக்கி (176) வரவிடைப் (173) பெற்றவை பிறர் பிறர்க்கார்த்தி (174) செல்கென (177) ஈர்வாய்.....நாட்டொடு வேழம் தரவிடைத் தங்க லோவிலன் (168—173).

151. ஈற்று ஆ - ஈன்றணிமையையுடைய பசு.

152. நும் கையது - நும்மிடத்துள்ள கலையை.

155. கொட்டை - திரள முடிந்த முடிகளை; தூம்புகளை.

158. கைகவி தேறல், என மாறுக.(தன் கடுமையால் சிறிது போதும் என்று) கைகவித்தற்குக் காரணமான கள் தெளிவை, என்பது பொருள்.

159. அகைந்தன்ன - தழைத்தால் போன்ற. ஏடு இல் தாமரை - ஒருவன் செய்ததன்றித் தனக்கென இயற்கையான) இதழ் இல்லாத தாமரையை; பொற்றாமரையை.

160. பித்தை - கூந்தலில். 161. வலவா - கட்டாத. அரில் - பிணக்கம் மாலை - பொன்னரிமாலை. 162. வால் - வெண்ணிறம்.

163. கோட்டின் - யானைத்தந்தத்தால். கொடுஞ்சி - தாமரைமொட்டுப் போன்ற தேர்உறுப்பு.

164. ஊட்டு உளை - (சாதிலிங்கம்) ஊட்டின தலையாட்டம். ஒரிகழுத்தின்மயிர், பிடரிமயிர். 165. நால்கு - நான்கு; பெயர்த்திரிசொல்.

166. வீட்டுக்கு வந்த விருந்து மீண்டு தம் ஊருக்குச் சொல்லும்போது, அவ் வீட்டுத்தலைவன் ஏழடியாவது பின்சென்று வழிவிடல் வேண்டும் என்பது மரபு.

167. தாறு களைந்து-இரும்புமுள்ளை நீக்கி. இன்தாறுகோல் களைந்து-(செலுத்துதற்கு) இனிதாகிய செலவு மூடுக்குங்கோலை நீக்கி, என்பர்.

168. யாழ் முறையுளி - யாழ்ப்பாணர்களுக்குக் கொடுக்கும் முறைகளை.

170. ஊர நாட்டொடு - ஊர்களையுடைய நாடுகளுடனே.

171. பறை வெரூஉ நுவலும் - பறை (எல்லோர்க்கும்) அச்சத்தைச் சாற்றுதற்குக் காரணமான. 172. வெருவரு செலவு - அச்சம் தோன்றும் ஓட்டம்.

173. தரவு இடை தங்கல் ஒவிலன் - தருதல்தொழிலிடத்தே நிலைபெறுதலை ஒழிதலிலன்; தரலிடத்துத் தாழ்த்தலிலன் (தங்கலோ இலன்).

174. ஆர்த்தி - கொடுத்து. 176. (செல்வமும் யாக்கையும் இளமையும்) நிலைகில்லாத உலகத்தில் புகழைச் சீர்தூக்கிப்பார்த்து, நிலைபெறுந் தன்மையை உடையதாகலின், புகழை 'நிலைமை' என்றார்; ஆகுபெயர்.

177-226. ஒருதொடர். சோழநாட்டின் சிறப்பு; திணைமயக்கம்: முடிபு:- பார்ப்பு ஓம்பவும் (186) அயரவும் (187) மயில் ஆல (190) மடமஞ்ஞை (212) பல பெயரவும் (213) நாரை (204) சேப்பவும் (207) அகவர்(220) அகன்று

மாறிப் (198) பஃறினை துவலவும் (221) கானவர் (220) நடை முனையின் (202) மருதம் பாடவும் (220) பாக்கத்துப் (210) பரதவர் குறிஞ்சி பாடவும் (218) கிழங்கு மாறியோர் (214) நறவு மறுகவும் (215) குறவர் கண்ணி சூடவும் (219) கோழி கதிர் குத்தவும் (222) மனைக்கோழி தினைக் கவரவும் (223) மந்தி மூழ்கவும் (224) நாரை வரை இறுப்பவும் (225), நால் நாடு குழீஇ (226) மாமாவின் வயின் வயின்நெற் (180) கூடு கெழீஇய (182) நாடு (248.)

178. பிறழிய - மூரிந்த. 180. மாமாவின் (மாவின் மாவின்) - ஒருமா அளவுள்ள நிலத்தில், ஒருமா அளவுள்ள நிலத்தில். வயின்வயின் - திடர்தோறும். 181. தாழை - தென்னை. தண்டலை - மரச்சோலை.

182. குடிவயினுன் - குடிமக்களிடத்தில்.

184. கவவு-தின்றல். 'கவவகத்திடுமே' என்றலால் 'ஈண்டுத்' தின்னுதலாயிற்று.

187. இளையோர் - சிறுமியர். வண்டல் அயரவும் - வண்டல்பாவை இழைத்து விளையாடவும்; சிற்றில் இழைத்து விளையாடவும்.

187-188. பகைமுதியோர் - பகைமை முதிர்ந்தோர். தம் முரண் செலவும்-தம் மாறுபாட்டைப் போக்கும்படியாகவும்.'செலவும் பெரிதாண்ட' (229) எனக் கூட்டுக. வழக்கு மாறுபட்டு வந்தோர்க்கு, அவ் வழக்கினைத் தீர்த்து முறை செய்வன் என்றவாறு. 'உரைமுடிவு காணன்' என்னும் பழமொழிச் செய்யுளைக் காண்க. 189. முடம் - வளைவு. 190. ஆல - ஆரவாரித்து அழைக்கவும். 191. துணரிய - குலைகொண்ட.

193. அறை - அறுத்தல். 194. களமர் - மருதநில மக்கள், உழவர். இசை - ஓசை. 195. வறள் - நீரற்ற இடம். 196. கா - சோலை.

197. நனை - அரும்பு. மரம் - ஏனை மரங்களும். அடும்பு, பகன்றை, புன்கு, ஞாழல் இவை மரவகை.

198. அவண் - அவ்விடத்தை. அகன்று மாறி - நீங்கி (நெஞ்சாலே, கைவிட்டு. 199. தளவு - முல்லையில் ஒருவகை.

200. வீ-மலர். வீஉகுதேறு என மாற்றுக. தேறு - தேற்ரு மரம்.

201. மணி-நீலமணி. 202. புறவு-காடு. 205. சேப்பின் - தங்கின்.

207. பெண்ணை - பனை. 208. கோள் தெங்கின் - குலை கொண்ட தென்னை யினையும்.

209. நாகம் - சுரபுன்னை. 210. துடிக்குடிஞை - துடியோசை போலும் ஓசையினை உடைய பேராந்தை; கோட்டான்.

211. கொள்ளை - பாட்டு. 212. கலவம்-தோகை.

213. நிலவு எக்கர் - நிலவு (போலும்) இடுமணலில் (மணல்மேட்டில்). பலபெயர-பல பகுதிப்பட ஆடவும்.

214. மாறியோர் - விற்றவர்கள். 216. மான்குறை-மானின் தசை.

220. அகவர் - நாட்டில் வாழ்வார்; மருதநில மக்கள்.

221. பல்திணை நுவல - பல(காட்டு)நிலத்தே (சென்று அங்கிலத்தைக் கொண்டாடவும். 222. குத்த - தின்ன. 225. இறுப்ப - கிடக்க; தங்க.

226. நால் நாடு - முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்னும் நான்கு கூறுகிய நிலங்கள். இவ்வாறு கூறினர், பாலையை நீக்கி. குழீஇ - திரண்டு.

228. ஒருகுடையான் ஒன்றுகூற - ஒரு குடையால் தனது ஆணையே உலகம் கூறும்படியாக. 229. பெரிது - நெடுங்காலம்.

232-248 : ஒருதொடர் : காவிரியாற்றின் பெருமை. முடிபு :

பண்பில் காலையும் (237) புனல் (240) ஒழுகிப் (239) புகுதொறும் (240), மகளிர் குடைய (241), அரிந்து (242) பிறக்கிக் (243) குவைஇய குப்பை (244) கிடக்கும் (245) விளையுட்டாகக் (247) காவிரி புரக்கும் நாடு - என்க.

232. பல் மாண் - பல உயிர்களும் மாட்சிமைப்படுதற்குக் காரணமாகிய. 233. எல்லை தருநன் - பகற்பொழுதைத் தருஞ் சூரியன்.

234. குல்லை - கஞ்சங் குல்லை. கோடு - (மரக்) கொம்புகளை.

235. நிழத்தவும் - இல்லையாக்கவும். 'ஒய்தல்...நிற்த்தல்...உள்ளதன் நுணுக்கம்'—தொல்காப்பியம்.

236. கருவி வானம் - தொகுதியை உடைய மேகம். 'கருவி தொகுதி''—தொல். கடல் கோள் - கடலிடத்து முகத்தலை.

237. பெருவறன் - பெரிய வற்கடம்; பெரும் பஞ்சம்.

239. பொறை உயிர்த்து ஒழுகி - சுமையை (இளைப்பாறும் பொருட்டுத்) தள்ளிப் போய். 240. வரைப்பு அகம்-குளத்திலும் கோட்டத்திலும்.

242. கூனி - வளைந்து நின்று. நெல்லு மிகக் காய்த்துத் தரையில் விழுதலின், வளைந்து நிற்கவேண்டும் என்றார். குயம் - அரிவாள். கூனிக் குயம் - வளைந்த அரிவாள் எனினும் அமையும்.

243. சூடு கோடு ஆகப் பிறக்கி - அரிக்கட்டுக்களை மலைபோல அடுக்கி.

244. குவைஇய - குவித்த; நிரட்டின. குப்பை - குவியல்; நெற்பொலி; பட்டறை எனவும் வழங்குவர்.

245. கடுந்தெற்று மூடை - நெருங்கத் தெற்றின குதிர் மூடை, கோட்டையுமாம். 246 நிறை கொள் வேலி - வரம்பு கட்டின வேலி நிலம்.

247. ஆயிரம் சாலி நெல்லின் (2000) விளையுட்டு ஆக - ஆயிரக் கலமாகிய செந்நெல்லின் விளைவை உடைத்தாக. விளையுள் + து - விளைவையுடையது; குறிப்பு வினையாலணையும் பெயர்.

248. காவிரி பாதுகாக்கும் நாடு - எக்கிக உரித்தாகும் தன்மையுடையவன்.

பொருந என்னும் விளித்து, நிற்குவிராயின் (156) என்னும் முடிக்க. முன்னிலை ஒருமைப்பெயர் - நீ - பன்மையொடு முடிந்ததனால் பொருநராற்றுப்படையாதலின். (தொல். எச் - 66)

திருக்குறள்

1. படைச்செருக்கு (78-ஆம் அதிகாரம்)

அஃதாவது, படைகளின் மிக்க வீரத்தனம்.

1. "தெவ்விர், என் ஐமுன் நின்று கல்நின்றவர் பலர்; (ஆதலின்) என் ஐமுன் நில்லன்மின்" என மாறிக் கூட்டுக. தெவ்விர் - பகைவர்களே, விளி. ஐ - தலைவன். கல் - நடுகல். நில்லன்மின், எதிர்மறை ஏவற்பன்மை வினைமுற்று. இப் பாட்டு ஒருவீரன்கூற்று; நெடுமொழி வஞ்சி: வீரன் தன் பகைவர்சேனையைக் கிட்டித் தன் ஆண்மையை உயர்த்திச் சொல்வது. வீரன், 'என் ஐ' எனத் தன்னொடு தொடர்புபடுத்துக் கூறினமையின், அவன்படையால் பகைவர் அழிந்தனர் என்பது குறிப்பு.

2. கானம் - காட்டில் (ஓடும்). எய்த - (பிழையாமல்) எய்த. யானை பிழைத்த - (வெள்ளிடை நின்ற) யானையை (எறிந்து) தவறிய. 'கான முயல்' என்றதனால் 'வெள்ளிடை நின்ற' என்பதும், 'பிழைத்த' என்பதனால் 'பிழையாமல்' என்பதும், அம்பிற்குத் தகுதியாக 'எய்த' என்றதனால் வேலிற்குத் தகுதியாக 'எறிந்து' என்பதும் வருவிக்கப்பட்டன.

வீரன்ஒருவன் பகைச்சேனையோடு போர்செய்துகொண்டிருந்தான்; அது புறங்கொடுத்து ஓடிற்று. அதனைத் மேலும் போர்செய்ய நாணிப் பின்பு அவ் வரசன்மேல் எதிர்த்துச் செல்லத்தொடங்கிய அவ் வீரனது கூற்று இப் பாட்டு.

வலியிலாதாரை எதிர்த்துக் கொல்வதினும், வலியுடையவனை வெல்ல முடியாவிடினும், அவனை எதிர்த்தல்மாத்திரமே சிறப்பு என்பது கருத்து; ஆதலின், பிறிதுமொழிதலணி. நாலடி: "விசையின், நரிமா உளம்கிழித்த அம்பினின் தீதோ, அரிமாப் பிழைப்பெய்த கோல்". இக் குறளும் அடுத்ததும் தழிஞ்சி என்னும் வஞ்சித்திணைத் துறைகளுள் ஒன்று; அழியுநர் புறக்கொடை அயில்வாள் ஒச்சாமையை உரைத்தல்.

3. 'தறுகண் பேராண்மை என்ப' என்றும், 'எஃகு என்ப' என்று வருவித்தும் முடிக்க. தறுகண் - (பகைவரிடத்துக் கண்ணோட்டம் இன்றிச் செய்யும்) வீரத்தை. ஒன்று - ஒரு தாழ்வு. ஊராண்மை - உபகாரியாந் தன்மை. அஃதாவது, இராவணன், தன் படைமுழுதும் போரில் அழிய, தனித்து நிற்க, அவன்நிலைமை நோக்கி இராமன் அவன்மேல் எதிர்த்துச் சென்று அவனை அழித்திடாமல், 'இன்றுபோய்ப் போர்க்கு நாளை வா' என விட்டாற்போல்வது. எஃகு-கூர்மை.

கருத்து: கண்ணோட்டமின்றிப் பகைவரை அழித்தல் தகுதியாயினும், அவர்க்குத் துன்பம் நேர்ந்தவிடத்து, அவரை அழித்திடாமல் அன்போடு விடுதல், வீரனது மிக்க பராக்கிரமத்தை விளக்கும்.

ஊராண்மையைக் கூர்மை என்பதற்கு ஏற்ப, தறுகண்மையைக் கருவி என்னுதது, ஏகதேச உருவகத்தின்பாற்படும்.

4. களிற்றெடு போக்கல் - ஆண்யானையின் உயிரைக் கொண்டு போமாறு விடுதல். வருபவன் - வருகின்ற களிற்றுக்கு வேல் நாடித் திரிபவன். மெய் - (தன்) மார்பின்கண் நின்ற. வேல் பறியா - வேலைக் கண்டு) பறித்து. பறியா, செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். நகும் - மகிழ்வான்; செய்யும் என்னும் வாய்பாட்டுமுற்று ஆண்பாலுக்கு வந்தது. தேடியது எய்தலான், மகிழ்ச்சி பிறந்தது.

இப் பாட்டில், இவ் வீரன் எப்பொழுதும் யானையையே எதிர்த்துப் போர்செய்யுந் திறமுடையான் என்பதும், சினமிகுதியால் பகைவன் எறிந்தவேற்படை தன் மார்பிடையே பிளந்து புதைந்திருத்தலை அறிந்திலன் என்பதும், பின்னும் போர்மேல் விருப்பினன் என்பதும் பெறப்பட்டன.

கருத்து: சிறந்த வீரன், பகைவராற் புண்படுதலை அஞ்சாதலின், கையில் படைக்கருவி இல்லாதபொழுது, பகைவரால் தன் உடம்பில் செலுத்தப்பட்டுத் தைத்துள்ள படையையே பறித்தெடுத்துப் பகைவர்மேல் ஏவுவன். இக்குறள் நூழிலாட்டு; தும்பைத்திணையின் துறைகளுள் ஒன்று. 'களம் கழுமிய படை இரிய, உளம்கழிந்த வேல் பறித்தோச்சின்று.' 4, 5, 6 - இம் மூன்றும், வீரர் பகைவரால் புண்பட அஞ்சார் என்பதைக் கூறும்.

5. அழித்து இமைப்பின் - (அக் கோபப்பார்வையை) மாற்றி இமைகள் குவியுமாயின். வன்கணவர்க்கு - வீரர்க்கு. ஓட்டு - புறங் கொடுத்தல்; முதனிலை திரிந்த தொழிற்பெயர். வீரர், அக் கோபப் பார்வையை மாற்றுதலும் போரின்கண் தோற்று மீளுதல் எனக் கருதி, அதுவும் செய்யார்.

கருத்து: பகைவர் தம்மேல் படைக்கலம் பிரயோகிக்கையில் சிறிது கூசிக் கண் இமைப்பாராயின், அதுவும் வீரர்க்குத் தோல்விக்குறி என்று துணியப்படும். (இத்தன்மை உலகவழக்கில் சிறுவர்விளையாட்டிலும் உள்ளது.)

6. எடுத்து-எடுத்து எண்ணி. விழுப்புண்-சிறந்த புண்; முகத்திலும் மார்பிலும் பட்ட புண். வழுக்கினுள் - பயன்படாது கழிந்த நாளுள்ளே. வீரன், விழுப்புண்படாதபடி போர் நேர்ந்த நாள்களைப் போர் நேர்ந்த நாள்களாகக் கருதாது, வீணே கழிந்த நாள்களாகக் கருதி வருந்துவன்.

7. சுழலும் - (வீரசுவர்க்கம் அடைகின்ற தம்மோடு இவ்வுலகினை விட்டு அவ் வுலகத்துக்கு வந்துவிடாமல் நிலவுலகம் முழுதும்) பரவி நிலைபெறுகின்ற. இசை - புகழ். வேண்டா உயிரார் (வடமொழி நடை) —உயிர்வாழ்தலை வேண்டாத வீரர். யாப்பு - கட்டுதல். காரிகை நீர்த்து - அழகைச் செய்யும் தன்மையது.

கருத்து: புகழையே விரும்பி உயிர்வாழ்க்கையை விரும்பாத வீரர், துறக்கத்தையும் புகழையும் எளிதில் அடைவாதலால், அவர்கள்

காலிற் கட்டுங் கழலே அணிகலம் என்று நன்கு மதிக்கத்தக்கது. புகழைப் பெற்று உயிர்வாழ விரும்பாதவர் (தம் உயிர்வாழ்க்கையின்பொருட்டு போரிற் புறங்கொடுத்து மானம்கெட்டுப் புகழை இழப்பவர்) காலில் வீரக்கழல் அணிதல் வெறும் அலங்காரமாத்திரமாகுந் தன்மை யுடையது. (வீரத்துக்கு அறிகுறியாம் என்று நன்கு மதிக்கத்தக்கதன்று) என்ற வேறுஒருபொருளும் கொள்ளலாம்.

7, 8, 9. 10—இந் நான்கு பாட்டும், வீரர் தம் உயிரை விரும்பிப் பாதுகாக்கக் கருதார், என்பதைக் கூறும்.

8. உறின் - (போர்) பெறின். மறவர்-வீரர். இறைவன் செறினும்-அரசன் (அப் போர் வேண்டா என்று) வெறுப்பினும். சீர்-வீரமிகுதி.

மறவர் தமக்கு விருப்பமான போர் பல நாளாகக் கிடைக்கப் பெறுமையின், அப் போரைப் பெறின், தம் அரசன் தடுப்பினும், நிறுத்துதல் அரிது என்பது கருத்து.

"போர் எனின் புகலும் புனைகழல் மறவர்"-புறம்31; "புண் பகைக்கு, ஏவான் ஆகலின் சாவேம் யாம் என, நீங்கா மறவர் வீங்கு தோள் புடைப்ப"-புறம். 68.

9. இழைத்தது - (தாம்) கூறின வஞ்சினம்; 'இன்னது செய்யேனையின் இத் தன்மைய னாவேன்' எனத் தான் அமைத்துக் கூறுதல். இகவாமை-தப்பாமைப் பொருட்டு. பிழைத்தது - (அச் சபதம், தப்பியவாறு சொல்லி). ஒறுக்கிற்பவர் - எள்ளுதற்கு உரியார். இழைத்தது, வினையாலணையும் பெயர். பிழைத்தது, தொழிற் பெயர்.

கருத்து: வீரன் ஒருவன், தான் கூறிய வஞ்சினத்தை நிறைவேற்றும்பொருட்டுப் போர்க்குச் சென்று, அதனை நிறைவேற்றுதற்குமுன்னமே அப் போரில் பகைவரால் இறந்தானும், அது தோல்வி ஆகாமையால், அவன் சபதத்தை நிறைவேற்றின சிறப்புடையவனைக் கொண்டாடத் தகுவன்.

"சபதம் நிறைவேற்றுமைப் பொருட்டுச் சாகும் வீரரை, அது தவறியவராகச் சொல்லி இகழத் துணிவார் இல்லை" என மற்றோர் உரை கண்டு, சபதம் செய்த வீரர், அச் சபத வகை இரண்டனுள், முதலதாகிய பகைவன்உயிர்போக்குதலை நிறைவேற்றமுடியாதவிடத்து, மற்றொரு வகையாகிய தன்உயிர்போக்குதலைச் செய்திடுவராயின், அப்பொழுது அவரைச் சபதம் தப்பினவர் என்று இகழக் காரண மில்லை என்னுங் கருத்தும் கொள்ளலாம். (தொல் - புறத்திணையியல் சூ. 17. உரை)

10. புரந்தார் - (தமக்குப் படைவீரர் செய்த நன்றிகளை நினைந்து) ஆண்ட அரசர்களுடைய. கண் நீர் மல்க - கண்கள் நீர்மல்கும் வகை; கண்களில் நீர் மல்கும் வகை. சாகிற்பின் - (போரிடைச்) சாவப்பெறின். 'காண்கிற்பின்' (குறள் 190) என்பது போன்ற வினையெச்சம். கில், ஆற்றல் உணர்த்தும் இடைநிலை. இரந்து கோள் தக்கது - இரந்தாயினும் கொள்ளுந் தகுதியை. 'நினைந்து நீர் மல்க' என்னுமல், 'நினைந்து

சாவப் பெறின்' என்று இயைத்தால், (தமக்கு **அரசர்** செய்த நன்றிகளை மறவாமல்) மனத்திற் கொண்டு (வீரர்) இறந்தால் என்க.

உறவினர் புலம்ப வீட்டில் விளிவார், பழவினைப் பயனே எய்தலின், அப்பொழுதைக் கருமத்தின் பயனுக வீரசொர்க்கம் அடையும்படியான மரணத்தை - போரில் புறங்கொடாமல் பகைவரால் இறத்தலை - 'இரந்து கோட்டக்கதுடைத்து' என்றார்.

2. நட்பு (79)

1. வினைக்கு - (பகைவர் செய்யும்) வினைக்கு. அரிய காப்பு - (புகுவதற்கு) அரிய காவலாவன. 'நட்பின் செயற்கு அரிய யா உள? அதுபோல் வினைக்கு அரிய காப்பு யா உள' எனக் கூட்டி முடிக்க.

நட்புச் செய்தற்குத் தக்கவர் கிடைக்கப் பெறுதலும், பெற்றால் அவரை நண்பராக்கிக் கொள்ளுதற்குச் செய்யும் உபாயமும், நட்புக் கொண்டபின்பு மாறுபாடின்றி ஒருநிலையில் நிற்றலும் முதலியவை அரிய வாகலின், "நட்பின் செயற்கு அரியன இல்லை" என்றும், நட்புச் செய்யின் பகைவர் அஞ்சி வினை தொடங்காராகலின் 'அதுபோல வினை வாராமைக்கு அரிய காவல் இல்லை' என்றும் கூறினர்.

நட்பு, இயற்கை செயற்கை என இருவகைப்படும். அவற்றுள் இயற்கை உறவுமுறைமையால் ஆவதும், தேசத்தின் நிலையால் ஆவதும் என இருவகைப்படும். அவற்றுள் முன்னையது சுற்றமாகலின், அது 'சுற்றந்தழாலில்' (அதி. 53) அடங்கிற்று; ஏனையது பகை இடையிட்ட தேசத்ததாகலின், அது 'துணைவலி' (அதி. 48) என வலியறிதலுள் அடங்கிற்று. இங்குச் சொல்லப்படுவது, முன் செய்த உதவிபற்றி வருஞ் செயற்கைநட்பே ஆதலின், இக் குறளால், **செயற்கைநட்பின் சிறப்புக்** கூறப்பட்டது.

2. இக் குறளும் அடுத்த குறளும், **நட்பின் சிறப்புக்குக் காரணம்** கூறுகின்றன. 'நீரவர்கேண்மை பிறை நிறைநீர; பேதையார்நட்பு மதிப்பின் நீர' என மாறுக. நீரவர் கேண்மை - அறிவுடையார்நட்புக்கள். நீரவர் - நீரின் தன்மையை உடையவர்; இனியவர்; அறிஞர். செய்தாரது பன்மையான், நட்பும் பலவாயின. 'மதிப் பின் நீர - நிறைந்த மதி பின் குறையுந் தன்மை போல, நாள்தோறும் குறையுந் தன்மையவாம்.

அறிவுடையாரும் அறிவுடையாரும் செய்த நட்பு முன் சுருங்கிப் பின் பெருகற்குக் காரணம், தம்மில் ஒவ்வொருவரிடத்தும் உள்ள **நற்குணம்** முன்பு அறியப்படாமலிருந்து, நட்பு முதிர முதிர நன்கு அறியப்படுதலே; இங்ஙனமே, அறிவிலாரும் அறிவிலாரும் செய்த நட்பு முன் பெருகிப் பின் சுருங்குதற்குக் காரணம் தம்மில் ஒவ்வொருவரிடத்தும் உள்ள **தீக்குணம்** முன்பு அறியப்படாமலிருந்து, பழக்கம் முதிர முதிர நன்கு அறியப் படுதலே.

3. 'பண்புடையாளர் தொடர்பு பயில்தொறும், நூல் நவில்தொறும் நயம் போலும்' எனக் கூட்டி அமைக்க.

நவில் தொறும் - கற்குந்தோறும். நயம் - இன்பஞ் செய்தலை. நயம் செய்தலை நயம் என்றது காரியத்தைக் காரணமாகக் கூறிய உபசார வழக்கு.

தொறு என்னும் இடைச்சொல், பெயர்ச்சொல் தன்மைப்பட்டதனால், நவில் தொறும், பயில்தொறும் என்பன வினைத்தொகை.

கருத்து: கல்வி கற்கக் கற்க இன்பம் தருதல்போல, நல்லோர் நட்பும் பழகப் பழக இன்பம் தரும்.

4. இதனால், **நட்பின் பயன்** கூறப்பட்டது. மிகுதிக்கண் - அவர்க்கு) வேண்டாத செய்கை உளதாய வழி. மேற்சென்று இடித்தற் பொருட்டு - முற்பட்டுக் கண்டித்துப் புத்திசொல்லும்பொருட்டு. பழியும் பாவமும் தருஞ் செய்கை துன்பமே பயத்தலான், அது வேண்டப்படுவதன்மையின் அதனை 'மிகுதி' என்றும், அது செய்தற்குமுன்னே மீட்டல் வேண்டுதலின் 'மேற்சென்று' என்றும், அவன் இன்சொற்கு மீளாமையின் 'இடித்தற் பொருட்டு' என்றும் கூறினர்.

5. உணர்ச்சிஒத்தல் காரணமாக ஏற்படும் நட்பே சிறப்புடையது என்பது இதனாற் கூறப்பட்டது. புணர்ச்சி-ஒருதேசத்தாராதல். பழகுதல் - பலகால் கண்டும் பேசியும் மருவுதல். புணர்ச்சிபழகுதல், உம்மைத் தொகை.

நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சியொத்தல் என்னும் மூன்றும் காரணம். இவற்றுள் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்போல் உணர்ச்சி ஒப்பின், அதுவே உடன் உயிர்நீக்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும்.

6. இதுமுதல் ஐந்து பாட்டானும், **நட்பின் இலக்கணம்** கூறப்பட்டது. நெஞ்சத்து - அன்பால்; நெஞ்சில் பொருந்தும் அன்பை 'நெஞ்சு' என்றது இடவாகுபெயர். அகம் நக - மனமும் மலர; இறந்தது தழீஇய எச்ச உம்மை, விகாரத்தால் தொக்கது; அவ் வும்மையால் முகமும் அகமுமாகிய இரண்டும் ஒருங்கே மலரவேண்டும் என்பது பெற்றும்.

7. அழிவின் அவை நீக்கி - கேட்டினைத்தரும் தீநெறிகளை (அவற்றில் செல்லுங்கால்) விலக்கி. இன்சாரியை நிற்க இரண்டனுருபு தொக்கது; **நவை** என்று பிரித்து,(போர்) அழிவினும் (செல்வ) அழிவினும் (வந்த) துன்பங்களை விலக்கி, என்றும் பொருள் கூறுவர். அழிவின்கண் - (தெய்வத்தால்) கேடு வந்தவிடத்து; உடம்பு அழிந்தபோது என்பதும் உண்டு. உழப்பது - உடன் அனுபவிப்பதே.

8. ஆங்கே - அப்பொழுதே. அவமானம் நேராதவாறு சமயத்தில் பாதுகாத்தலில் கை மனத்தினும் முற்படுதலின், அவ் விரைவு நண்பன்துன்பத்தைத் துடைக்கும்பொழுதும், அதற்கு ஒத்த தொழிலுவமையினும் வருவிக்க. நட்புடையானது தொழிலை நட்பின்மேல் ஏற்றி 'இடுக்கண் களைவது நட்பு ஆம்' என்றது, உபசார வழக்கு: குணவினை குணவினையாகக் கூறப்பட்டது.

9. வீற்றிருக்கை-அரசிருக்கை; மிக மேம்பட்ட நிலைமை. கொட்புதிரிபு; மாறுபாடு. ஊன்றும் நிலை - (அறம் பொருள்களில்) தளராதபடி நன்றாக உதவும் வலிமை. ஒருபொழுதும் வேறுபடாது, மறுமை இம்மைகட்கு உறுதியான அறம்பொருள்களில் தளர்ந்தவிடத்து, அத் தளர்ச்சி நீக்கி, அவற்றின்கண் நிறுத்துதற்குமேல் ஒரு செயலும் இன்மையின், அதனை 'நட்பிற்கு முடிந்த இல்லை' என்றார்.

10. இனையர் - இத்தனை அன்புடையவர். இன்னம் - இத்தனை அன்புடையேம். புல்லென்னும் - புல்லிதாய்த் தோன்றும்; பொலிவு கெடும். தாம் அவர் என்னும் வேறுபாடில்லாதிருந்து, பழகுதலைப்பினும், வேற்றுமை உண்டாம் ஆகலின், 'நட்புப் புல்லென்னும்' என்றார்.

3. நட்பாராய்தல் (80)

அஃதாவது, மேற் சொல்லிய இலக்கணத்தாரை ஆராய்ந்து அறிந்தே நட்புக் கொள்ள வேண்டுதலின், அவரை ஆராயுந் திறம்.

[1. 2-இரண்டு குறளும், ஆராயாவழிப் படும் இழுக்குக் கூறும்.]

1. நட்பு ஆள்பவர்க்கு-நட்பினை விரும்பி (அந் நட்பிலே) நிற்பார்க்கு. வீடு இல்லை-(அவனை) விடுதல் உண்டாகாது. நாடாது-ஆராயாது. நட்டலின், 5-ஆம் வேற்றுமை ஒப்புப்பொருள். ஆராய்தல் - குணம், செய்கை இவற்றின் நன்மையை ஆராய்தல். கேடு தருவதை, 'கேடு' என்றது காரியவாகுபெயர். நட்புக் கொள்ளின் தாம் அவர் என்னும் வேற்றுமை இன்மையின் 'வீடில்லை' என்றும்; அவ் வேற்றுமையின்மையான் அந் நண்பனிடத்துள்ள பழியும் பாவமும் தம்முடையவையாம் ஆகலின், இம்மையிலும் மறுமையிலும் கெடுவர் என்பது கருதி, 'நாடாது நட்டலின் கேடு இல்லை' என்றுங் கூறினர்.

2. ஆய்ந்து ஆய்ந்து - (குணமும் செய்கையும் நல்லன் என்பதும் அல்லன் என்பதும் பல முறை) ஆராய்ந்தும் (பல வழிகளால்) ஆராய்ந்தும். கடை முறை - முடிவில். சாந் துயரம் - சாதற்கு ஏதுவாய துன்பத்தினை. தரும் - (தன் பகைவர் உண்டாக்கவேண்டாமல் தானே) விளைக்கும். 'கேண்மை கொள்ளாதான்' என மாறுக.

கருத்து: ஒருவன், தீக்குணமும் தீச்செயலும் உடையவனோடு நட்புக் கொள்ளின், அவனுக்கு வரும் பகைமையெல்லாம் தன் மேல் வருவன ஆக, பின் அவற்றால் இறந்துவிடுவான்.

3. [3, 4. 5, 6 - இந் நான்கு குறளால் நட்பு ஆராயும் விதமும், ஆராய்ந்தால் நட்கப்படுவார் இவர் என்பதும் கூறப்பட்டன.]

குன்ற இனனும் - குறைவற்ற சுற்றத்தினையும். யாக்க - செய்க. அறிந்தியாக்க: தி - குற்றியலிகரம். குற்றமில்லாதார் உலகத்து இன்மையின், உள்ள குற்றம் பொறுக்கத் தக்கதாயின், அவர்நட்பு விடுதற்கு உரிய தன்மையை உடையதன்று என்பார் 'குற்றமும்' என்றும், உறவினரோடு மனமொத்து நடப்பவர் அப் பயிற்சியால் நண்பரோடும் மனமொத்து நடக்கக்

கூடுமாதலால் 'குன்று இனனும்' என்றும், நட்புக் கொள்ளத் தக்கவர் கொள்ளாது விடப்படின், அது விட்டவரது குற்றம் என்பார் 'அறிந்து யாக்க' என்றும் கூறினர்.

4. கொடுத்தும் - (அவன் விரும்புஞ் சில பொருள்களைக்) கொடுத்தாயினும். குடிப்பிறப்பால் தான் பிழை செய்யாமையும், பழியை அஞ்சலால் பிழைத்தன பொறுத்தலும் பெற்றும்.

கருத்து: குடிப்பிறப்பும் பழிக்கு அஞ்சுங் குணமும் உடையவனைப் பெறுதல் அரிதாகலின், அவன்நட்பை விலைகொடுத்துங் கொள்க.

5. 'அல்லது அழச் சொல்லி இடித்து வழக்கு அறிய வல்லார் ஆய்ந்த நட்புக் கொளல்' என்று மாற்றி முடிக்க.

அல்லது - (தாம்) உலக நடத்தைக்கு மாறுபட்டதைச் (செய்யக் கருதின்). அழச் சொல்லி - துக்கம் உண்டாம்படி சொல்லி (விலக்கி)யும். இடித்து - (செய்யின் மீளவும் செய்யாதபடி) கண்டித்தும். வழக்கு அறிய- உலக வழக்கத்தோடு ஒத்த தொழிலைச் செய்யாவிடின் செய்விக்கவும். அறிய- செய்விக்க; காரியத்தைக் காரணமாகக் கூறிய உபசார வழக்கு. தம்மொடு நட்டாரும் அறியும்வகை அறிவித்தல் அரிதாகலின், 'அறிய வல்லார்' என்றார். வல்லார் - வல்லாரை.

6. கிளைஞரை - தன் நண்பராகிய நிலங்களை. நீட்டி - மிச்சமில்லாமல். உறுதி - நல்லறிவு. 'கிளைஞர்' என்பது, இங்கே அவரது நட்பெல்லைகளைக் குறித்தலால், பொருளாகுபெயர். கேட்டைக் 'கோல்' என்றதற்கு ஏற்ப, கிளைஞரைப் 'புலம்' என்னுமையால், **ஏகதேச உருவக அணி.**

கருத்து: ஒருவன்நட்பின் தன்மையை, மற்றொருவன், தனக்குத் துன்பம் நேர்ந்த காலத்து அவன் உதவுதலும் உதவாமையும் கொண்டு, தெளிவாக அறியலாம்.

கேடு, நட்பின் அளவை அறிதற்குக் கருவியாகின்றது என்று தீயதனிடத்து நன்மையுண்மையைக் கூறுதலால், **இலேச அணி.**

தத்தம் நட்பின் அளவுகள் சுருங்கியிருக்கவும், ஒருவர் செல்வம் உடையவராய் இருந்த காலத்தில் தாம் உண்மையற்ற நண்பர் என்று அறியமுடியாதபடி நடந்தவர், பின் அவருக்குக் கேடு வந்தவிடத்துச் செயல் வேறுபடுதலின், அக் கேட்டால் அந் நட்பின் அளவுகள் அளவிட்டறியப்படும் என்பதுபற்றிக் கேட்டினைக் 'கோலாக்கியும்', அக் கேடாகிய கோலினால் அவரை அளந்தறிந்தால் தக்கவரையே நட்பாகக் கொள்ளக் கூடுமாதலால், அவ் வறிவை 'உறுதி' என்றுங் கூறினர்.

7. (7, 8, 9-இம்மூன்று பாட்டானும், **ஆராய்ந்தால் நட்கப்படாதவர் இவர்** என்று கூறப்பட்டது.)

ஊதியம் - பேறு. ஓரீஇ - நீங்கி. விடல் - (அவரின்) நீங்குதல். நட்பு ஒழிந்தாலும் அவரைவிட்டுப் பிரியாவிட்டால், வெறிகமழ்சந்தன-

மும் வேங்கையும் மூங்கிலின் சேர்க்கையால் வெந்து அழிவதுபோல, தனக்குத் தீமை உண்டாகுமாதலின் 'விடல்' என்றும், நீங்கியவழித் தீங்கு ஒழிதலேயன்றி இருமையின்பத்துக்கு உரிமை எய்தலும் உடைமையின் அதனை 'ஊதியம்' என்றுங் கூறினர்.

8. உள்ளம் - ஊக்கம். மன எழுச்சி; சிறுகுவ - சுருங்குவதற்குக் காரணமான வினைகளை; தம்மினும் வலியாரோடு செய்யத்தொடங்கிய போர்த்தொழில்களும், பயனில்லாதவைகளும். ஆற்று அறுப்பார் - உதவுதலை ஒழிப்பவர்; கை விடுவார். ஆற்று, முதனிலைத் தொழிற்பெயர். துன்பம் வருதற்கு முன்பெல்லாம் வலிமையுடையராய் உதவுபவர்போலிருந்து, துன்பம் வந்தவிடத்து உதவாமையால் 'ஆற்றறுப்பார்' என்றார். **எடுத்துக்காட்டுவமை.**

கருத்து: ஆபத்துக்காலத்தில் உதவாதவரது நட்பு ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று; கொள்ளின் அழிந்தேவிடுவான்.

9. அடுங்காலை - (தன்னைக்) கூற்றுக் கொன்று வருத்துங் காலத்து. கெடுங்காலைக் கைவிடுவார்தன்மையை **அயலான்** ஒருவன் தான் இறக்குங்காலத்து நினைப்பானாயினும், அது அம் மரணவேதனையினும் அவன் மனத்தை மிக வருத்தும். அயலானே இவ்வாறு வருந்துவானாயின், கைவிடப்பட்டவனை அது இவ்வாறு வருத்தும் என்று கூற வேண்டாதாயிற்று. இனி, ஒருவன் தானே தனக்குச் செய்துகொண்ட தீங்கு, தன்னை அழிக்குங் காலத்து (தற்கொலை செய்துகொள்ளுங்காலத்து) நினைத்தாலும், அத் தீங்கினும் மிக வருத்தும் என்றும் பொருள் கூறுவர்.

10. இதனால், ஆராய்ந்து நட்கப்படுவார் இவர் என்பதும், நட்கப்படாதவர் இவர் என்பதும் தொகுத்துக் கூறப்பட்டன.

மருவுக - பயில்க. ஒப்பு இலார் - உலகோடு ஒத்தலில்லார். ஈத்தும் ஒருவுக - கொடுத்தாயினும் விடுக. உலகோடு ஒத்தார் நட்பு இருமையின்பமும் பயத்தலின் 'மருவுக' என்றும், உலகத்தோடு மாறுபட்டவர் நட்புத் துன்பமே பயத்தலின் 'ஒன்று ஈத்தும் ஒருவுக' என்றும் கூறினர்.

4. பழமை (81)

அஃதாவது, நட்டாரது பழையராந்தன்மைபற்றி அவர்கள் செய்த பிழையைப் பொறுத்தல்; (காரணஆகுபெயர்); **நட்பிற் பிழை பொறுத்தல்.**

1. பழமையாவது காலஞ்சென்றது அன்று; அப் பழக்கத்தால் **நட்பிற் பிழை பொறுத்தலே'** என்பது கூறப்பட்டது. கிழமையை- (பழமையோர்) உரிமையாற் செய்வனவற்றை; (காரணஆகுபெயர்). அவை, காரியங்களைச் செய்யுங்காற் கேளாது செய்தல், கெடும்வகை செய்தல், தமக்கு வேண்டியவற்றைத் தாமே கொள்ளுதல், வணக்கமும் அச்சமும் இல்லாமை முதலாயின. யாதும் - சிறிதும். கிழந்திடா - சிதையாது (அவற்றிற்கு) உடம்படும்.

2. இதுவும் அடுத்த குறளும் பழமையான் வரும் உரிமையின் சிறப்பினைக் கூறும்.

உறுப்பு - அவயவம், உறுப்புப்போல்வதை 'உறுப்பு' என்றது, உவமஆகுபெயர். பொருளுக்குக் கூறும் உறுப்பை இங்கே பண்பிற்குக் கூறியதனால், அது இலக்கணையடியாக வந்த குறிப்புச்சொல் (ஆகுபெயர்). கெழுதகைமை - (நட்டார்) உரிமையாற்செய்வன; காரணஆகுபெயர். அதற்கு - அவ் வுரிமைக்கு, உப்பு - இனியர்; உடம்பட்டு மகிழ்வர். இனிமை, இனியவர்க்கு ஆதலின், பண்பாகுபெயர். வேறன்மை தோன்ற 'உறுப்பு' என்றார். வேறல்லாமை, நட்பிற்கும் நட்டார் உரிமையாற் செய்வனவற்றிற்கும் உள்ள ஒற்றுமை. நண்பர் உரிமையாற் செய்வன நட்பிற்கு அவயவமாதல் அறிந்தே இனியராவர் என்பது தோன்ற, சான்றோர்மேல் வைத்தார்.

3. கெழுதகைமை, நான்காம்வேற்றுமைப்பெயர். செய்தாங்கு (செய்தால் ஆங்கு) - (தாம்) செய்தாற்போல. அமையாக்கடை - உடம்படாராயின். செய்தாற்போல உடம்படுதலாவது - தாமும் அவரிடத்து உரிமையால் உடன்படுதல்.

4. இதனால், கேளாது செய்தவிடத்து அதனை விரும்புக, என்பது கூறப்பட்டது. 'நட்டார், கெழுதகையால் கேளாது செயின், விழைதகையான் வேண்டியிருப்பர்' என்று மாறுக. விழைதகையான் - (அச் செயலது) விரும்பப்படுந்தன்மைபற்றி. வேண்டியிருப்பர் - (அதனை அறிவுடையார்) விரும்புவர். ஒருவர்க்குத் தம் கருமம் தாம் அறிபாமல் முடிந்திருத்தலைக்காட்டிலும் மேலான நன்மை இன்மையின், அச் செயல் விழையத்தக்கதாயிற்று. 'வேண்டியிருப்பர்', 'எழுந்திருப்பர்' என்பதுபோல் ஒருசொல்நீர்மைத்து.

5. இதனால், கெடும்வகை செய்யின், அதற்குக் காரணம் கூறப்பட்டது. நோதக்க - (தாம்) வெறுக்கத் தக்கவற்றை. பேதைமை... உணர்க - அறியாமை என்றுவது மிக்க உரிமை என்றுவது கொள்க. ஒன்றை, எண்ணிடைச்சொல். 'செயின்' எனவே, தம் இயல்பால் செய்யாமை பெற்றும். இழவூழான் வரும் அறியாமை யாவர்க்கும் உள்ள காரணத்தினால் தமக்குத் தீங்குசெய்தார் என்றுவது, 'ஊழ்வகையான் எம்மால் வரக்கடவது ஒற்றுமைமிகுதிபற்றி அந் நண்பரால் வந்தது' என்றுவது கொள்வதல்லது, அன்பின்மை என்று கொள்ளப்படாது என்பதாம்.

6. இதுவும் அடுத்த பாட்டும், கேடுசெய்தக்கண்ணும் நட்புவிடத் தக்கதன்று என்பதைக் கூறும்.

'எல்லைக்கண் நின்றார், தொல்லைக்கண் நின்றார்தொடர்பு, தொலைவிடத்தும், துறவார்' எனக்கூட்டி முடிக்க. எல்லைக்கண் - (நட்பின் வரம்பு கடவாமல் அந் நட்பின்) வரம்பில். தொல்லைக்கண் நின்றார் - (தம்மோடு) பழமையின் திரியாது நின்றவரது. தொடர்பு, 2-ம் வேற்றுமை; நட்பினை. தொலைவிடத்தும் - (அவரால்) தொலைவுவந்தவிடத்தும். தொலைவு-செல்வ அழிவும், போரில் தோல்வியும். பழமையின் திரியாமை-உரிமை ஒழியாமை.

7. அழி வந்த - (தமக்கு) அழிவுவந்தவற்றை. அழி, முதனிலைத் தொழிற்பெயர். வந்த ; அன் சாரியை பெறுத அஃறிணைப்பன்மை வினையாலணையும்பெயர், இரண்டாம் வேற்றுமை. அழிவு - மேற்சொல்லிய பொருட்கேடும், போர்க்கேடும். அன்பின் - அன்புடனே; உருபு மயக்கம். வழிவந்த - பழையதாய் வந்த. வந்த என்னும் இச் சொல் பெயரெச்சம்.

8. இதனால், பிழைபொறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது 'நட்டார் இழுக்கம் செய்யின் நாள்' என மாறுக. கேள் இழுக்கம் கேளா - நண்பர் (செய்த) பிழையை (த்தாமாகவேயன்றிப் பிறர் சொன்னலும்) மனத்திற்கொள்ளாத. நாள் - (பயன்பட்ட) நாளாம். நட்டார் என்றது - சுட்டுப்பெயர்மாத்திரையாய் முதலடியிற் சொன்ன கேளிரையே குறித்தது. பிழையாவன - தம்மிடம்சொல்லி அனுமதி பெற்றுக்கொள்ளாமலே தம் சிறந்த பொருள்களை எடுத்துக்கொள்ளுதல், பணியாமை, அஞ்சாமை முதலாயின. (இக் கருத்துக்கள் இவ் வதிகாரத்தின் முதற்குறளுரையில் கண்டவை). பிழை செய்த இடத்தல்லாமல், அக் கெழுதகைமை அறியும் வல்லமை வெளிப்படாமையின், நண்பர் பிழைசெய்யாத நாட்கள் பயன்படும் நாள் அல்ல ஆயின.

9. இப் பாட்டும் அடுத்ததுவும் **பழமையறிவார் எய்தும் பயனைக்** கூறும். கெடா அ-(உரிமை) அறுது ; கெடாது என்பதன் விகுதி விகாரத்தால் தொகுத்தது; ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். விடாஅர்-(அவர் பிழை நோக்கி) விடுதல் செய்யாதாரை. விழையும்-நட்புக்குறித்து விரும்பும். (பி–ம்)-கெடாஅர் நட்புத்தன்மையிற் கெடாராகி.

கருத்து : நட்பிற் பிழைபொறுப்பின், "நம்மிடத்தும் இவர் இத்தன்மையர் ஆவர்" என்று யாவரும் தாமே வந்து நட்பாவர்.

10. பண்பின்-தம் பண்பின் ; பிழை செய்யாத முன்போல அன்புடையராதலின். தலைப்பிரியாதார்-நீங்காதார். விழையார்-பகைவராணும்; மூன்றனுருபும் சிறப்பும்மையும் விகாரத்தால் தொக்கன. விழையப்படுபவிரும்பப்படுவர்.

கருத்து : நட்பிற் பிழை பொறுத்தாரோடு பகைவரும் நட்புக் கொள்வர்.

5. தீ நட்பு (82)

விடற்பாலதாகிய நட்பு தீநட்பு, கூடாநட்பு என இருவகைப்படும். அவற்றுள் தீநட்பாவது, தீக்குணத்தாரோடு உளதாய நட்பு ; குணத்தின் தீமை ஒற்றுமைபற்றி உடையார்மேலதாய், பின் அவரோடு செய்த நட்பின் மேலது ஆயிற்று. தீமை என்ற அடைமொழியை நட்பிற்குக் கொடுத்தது, உபசார வழக்கு.

1. இதனால் தீநட்பினது ஆகாமை பொதுவகையால் கூறப்பட்டது. பண்பிலார்-நற்குணமில்லார் ; தீக்குணமுடையார் என்பது அருத்தாபத்தியான் வந்தது. பெருகலின்-வளர்தலின். குன்றல் இனிது-தேய்தல்

நன்று. அக்கேண்மை பெருகினால் வருங் கேடு, குன்றினால் வாராமையின்- 'குன்றல் இனிது' என்றார். பருகுவார் போலினும் - (காதல் மிகுதியால்) பருகுவார் போன்றாராயினும். ['பருகு வன்ன அருகா நோக்கமொடு'–பொருநராற்றுப்படை, 77-ஆம் வரி.]

2. இதுவும் அடுத்த பாட்டும், தமக்கு வரும் பயனளவு பார்ப்பவர் நட்பின் தீமையைக் கூறும்.

உறின்-(தமக்குப் பயன்) உளதாம்பொழுது. நட்டு-நட்புச்செய்து. அறின்-(பயன்) இலதாம் பொழுது. ஒரூஉம்-ஒழியும். ஒப்பு இலார்-ஒற்றுமை இல்லாதவரது; பொருத்தம் இல்லாதவரது. பெறினும் என்-பெற்றால் ஆக்கம் (இலாபம்) யாது? இழப்பினும் என்-இழந்தால் கேடு (நட்டம்) யாது? தமக்குவரும் பயன்களையே பார்ப்பவர், பிறரோடு பொருத்தமிலர் ஆகலின், அவரை 'ஒப்பிலார்' என்றார்'.

கருத்து: தமக்கு வரும் பயன்களையே பார்ப்பவரிடத்து நொதுமல் தன்மையே அமையும். நொதுமலாவது, பகையும் நட்பும் இன்மை.

3. உறுவது சீர்தூக்கும்-(நட்பளவு பாராது அந் நட்பால்) வரும் பயனளவு பார்க்கும். நட்பும்-நண்பரும்; (தொழிலாகுபெயர்). பெறுவது கொள்வாரும்-(தம் இன்பத்துக்கு விலையாகப் பொருள் கொடுக்கும் ஆடவரை உள்ளன்புடன் ஏற்றுக்கொள்ளாது) பெறப்படும் விலைப்பொருளையே (முக்கியமாகக்) கொண்டொழுகும் பொதுமகளிரும். கள்வரும்-(தம்மால் பிறர் அடையும் கேட்டைக்குறித்து வருந்தாமல் அவர்சோர்வினையே நோக்கும்) திருடரும். நேர்-தம்முள் நிகராவர்; வினைப்பகுதி வினைமுற்றுப் பொருளில் வந்துள்ளது. தீக்குணமுடையார், பொருளையே குறித்து வஞ்சித் தொழுகலின், கணிகையர் கள்வர் என்றிவரோடு ஒப்பர் என்பதாயிற்று. அத் தகைய வஞ்சகர் வெறுக்கத் தக்கவர் என்பதாம்.

4. அழிவு நேர்ந்தவிடத்துத் துணையாகாத நட்பின் தீமை 4, 5 குறளால் கூறப்பட்டது.

அமர் அகத்து-(போர் வாராத முன்னெல்லாம் தாங்குவது போன்றிருந்து) அப் போர் நேர்ந்தபொழுது; போரில், போர்க்களத்தில் என்றுமாம். ஆற்று அறுக்கும்-(அமர்க்களத்தில்) ஆற்றல் அறச் செய்யும்;வலியறச் செய்யும்; தள்ளிவிட்டுப் போகின்ற. கல்லா மா-(கதி ஐந்தும், சாரி பதினெட்டும், போர் செய்யும் வலிமையும்) அறியாத புரவி. தமரின்-தமர்மையின்; நட்பின் (ஆகு பெயர்). தலை-சிறப்புடைத்து. அவர் தமரானால் வரும் அழிவு, தனியானால் வாராமையின், தனிமையைத் 'தலை' என்றார். எனவே, அதுவும் நீதாதல் பெற்றும். உவமையால், துன்பம் வாராத முன்னெல்லாம் துணையாவார்போன்றிருந்து, வந்தவிடத்து விட்டுநீங்குவர் என்பது பெற்றும்.

5. செய்து-செய்துவைத்தாலும்; (சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது). ஏமம் சாரா-அரண் ஆகாத; அழிவு நேர்ந்தவிடத்து விட்டு நீங்குகின்ற. செய்தும் ஏமம் சாராத சிறியவர்புன்கேண்மை, ஒருவர்க்கு

உண்டானால் வரும் அழிவு, அவர்நட்பினைக் கொள்ளாமல், தனியா யிருந்தால் வாராமையின், 'எய்தாமை நன்'றென்றார். 'செய்து' என்னும் வினையெச்சம் 'சாரா' என்னும் பெயரெச்சத்தையும், அப் பெயரெச்சம் 'கேண்மை' என்னும் பெயரையும் கொண்டு முடியும்.

6. இதனால் **பேதையார்நட்பின் தீமை** கூறப்பட்டது. பேதை-அறிவிலானது; (பண்பாகுபெயர்). பெருங் கெழீஇ நட்பின்-மிக நெருங்கிய நட்பின். கெழீஇய என்னும் பெயரெச்சத்தின் ஈற்றெழுத்து (ய) விகாரத்தால் தொக்கது. பெருங்கழி நட்பு என்பது பாடமாயின், மிக அதிகமான நட்பு என்பது பொருள்: ஒருபொருட் பன்மொழி. 'அறிவுடையார்' என்று பன்மையாற் கூறியது, அறிவுடையவனது உயர்வை விளக்குதற்பொருட்டு என்க. ஏதின்மை- ஒருபற்று மில்லாமை; பகைமை. கோடி-கோடி மடங்கு. உறும்-நன்று. அறிவுடையான்பகைமை ஒரு தீங்கும் பயவாமையானும், பேதைநட்பு எல்லாத் தீங்கும் பயத்தலானும் 'கோடி உறும்' என்றார்.

இனி, 'அறிவுடையார்' என்பதனைப் பன்மையாகவே கொண்டு, 'அறிவில்லாதவ னொருவனது நட்பினும் அறிவுடையார் பலரது பகைமை பல மடங்கு நல்லது' என்று பொருள் கொள்ளலுமாம்.

7. இதனால், **நகுவிப்பார்நட்பின் தீமை** கூறப்பட்டது. நகைவகையார் ஆகிய-(தாம் அறிவுடையாராதற்கு எதுவல்லாமல்) நகுதல் வகையராதற்கு ஏதுவாகிய. நகுதல்-பரிகசித்தல். நட்பின்-நட்பான் வரும் இன்பங்களைக் காட்டிலும்; (காரண ஆகுபெயர்). அந்நட்பாவது, விடமரும் (விஷமர், விடர்) தூர்த்தரும் (காமுகர், வஞ்சகர்) வேழம்பரும் (கழைக் கூத்தாடிகள்) போன்று பலவகையால் நகுவித்துத் தாம் இவனால் பயன்கொண்டு பின்பு கைவிட்டுச் செல்பவரோடு உளதாயது. பகைவரான்-பகைவரான் (வருவன); அது அவாய் நிற்றலின், 'வருவன' என்பது வருவிக்கப்பட்டது. பத்து அடுத்த கோடி-பத்தாகத் தொகுத்த கோடி; பத்துக்கோடி மடங்கு. உறும்-நல்லவை.

கருத்து: நகைவகையராகிய நட்பான் வரும் இன்பங்களின், அறிவுடைப் பகைவரான் வருந் துன்பங்கள் மிகவும் நல்லவை.

8. **இயல்வது செய்யாதார்நட்பின் தீமை** இதனும் கூறப்பட்டது. ஒல்லும்-(தம்மால்) முடியும். உடற்றுபவர் - முடியாதாக நடித்துச் செய்யாதவரோடு கொண்ட. சொல்லாடார் - (அவரறியச்) சொல்லாதே; (மூற்றெச்சம்). சோரவிடல் - சோரவிடுக; விடுகின்றவாறு தோன்றுமல் ஒருகாலைக்கு ஒருகால் ஒய விடுக. விடல், அல் ஈற்று வியங்கோள். அறியச் சொல்லினும், விடுகின்றவாறு தோன்றினும், அச் சமயத்தில் அதற்கு ஏற்ற பரிகாரத்தைச் செய்து, பின்னும் நட்பாய் ஒழுகக் கருதுவராதலின், 'சொல்லாடார்' என்றும், 'சோரவிடல்' என்றும், கூறினர்.

9. **வஞ்சர்நட்பின் தீமை** இதனானும், 10-ஆங் குறளானும் கூறப்பட்டது. வினைவேறு சொல்வேறுபட்டார்-வினையும் சொல்லும் (ஒவ்வாது) வேறு வேறுயிருப்பவர்; வினையிற் பகைவராய்ச் சொல்லின் நட்டாராய்

இருத்தல். வினை சொற்களது ஒவ்வாமை, முதல்மேல் ஏற்றப்பட்டது, சினைவினையை முதலின்மேல் ஏற்றிக் கூறிய உபசாரவழக்கு. கனை நடக்குங் காலத்து உண்மை போலிருத்தலால், 'கனவினு மின்னாது' என்றார். கனவி - னும்; உம்மை - இறந்தது தழுவியது; இழிவுசிறப்பும் ஆம். மன், ஓ-அசை நிலை.

10. மனைக்கெழீஇ - (தனியே) வீட்டில் (இருந்த பொழுது) நட்- பாடி. மன்றில் - (பலரோடு) சபையில் (இருந்தபொழுது). எனைத்தும் - சிறிதாயினும். குறுகுதல் - (தம்மை) நணுகுதல். ஓம்பல் - நீக்குக; அல் சற்று வியங்கோள்.

மனைக்கண் கெழுமலும், மன்றின்கண் பழித்தலும் நீதாகலின், அவர் ஒருகாலும் தம்மை நணுகாவகை குறிக்கொண்டு காக்க என்பார், அவர்- நட்பின்மேல் வைத்துக் கூறினர்.

6. கூடாநட்பு (83)

அஃதாவது - பகைமையான் மனத்தில் நட்பில்லாமலிருந்து- கொண்டே, தீங்கு செய்ய வாய்க்குங் காலம் பெறுமளவும் சொற்செயல்- களால் கூடியொழுகுவார்நட்பு. கூடாமை என்னுந் தொழில், ஒற்றுமை- பற்றி அத் தொழிலுடையார்மேலதாகி, பின்பு அவரோடு செய்த நட்பின்- மேல தாயிற்று.

1. முதலிரண்டு பாட்டானும் **கூடாநட்பினது குற்றம்** கூறப்பட்- டது. நோ - கூடாதிருந்தே; (சுறுசுறுப்பட்ட எதிர்மறை வினையெச்சம்). நிரந்- தவர் - (தமக்கு வாய்க்குமிடம் பெறுமளவும்) கூடி யொழுகுவார். சீர் இடம்-சிறப்பான இடம்; அவ் வாய்க்குஞ் சமயம். 'தீர்விடம்' என்று பாட மோதி, முடிவிடம் (அபாயம் அடைகின்ற சமயம்) என்றுரைப்பது மூண்டு. காணின்- பெற்றால். எறிதற்கு - (பொன்முதலியவற்றை வேறுகருவிகள் நன்றாக) வெட்டுதற்கு. பட்டடை-கொல்லர், பொன் முதலியவற்றை வைத்து அடிப்பதற்கும் வெட்டுவதற்கும் ஆதாரமாய் இருப்பதொரு கருவி.

எறியுமெல்லை வாராமுனெல்லாம் தாங்குவது போன்றிருந்து, அக் காலம் வந்தவிடத்து நன்றாக எறிவிப்பதாகிய பட்டடைக்கும், அத் தன்- மையையுடைய நட்பிற்குந் தொழிலொப்புமை உண்மையான், அதனால் அக் கட்பினைப் பட்டடையாக உபசரித்தார்.

2. இனம் - நண்பர். நட்பு வேறுபடும் - பழைய பகையே யாகும். மகளிர்மனம் வேறுபடுதல், "பெண்மனம் பேதின் றொருப்படுப்பேன் என்னும், எண்ணில் ஒருவன்" என்னும் வினாயாபதிச் செய்யுளாலும், "பெண் எனப்படுவ.....�ராயிர மனத்த வாகும்" என்ற சிந்தாமணிச் செய்யுளாலும் அறிக.

3. குற்றத்திற்கு ஏதுவாய **கூடாநட்பின் கொடுமை** 3,4-ஆங் குறளால் கூறப்பட்டது.

நல்ல பல - நல்லனவாகிய பலநூல்களை. நல்லன - மனக்குற்றம் கெடுப்பன. மனம் நல்லர் ஆதல் - மனம் திருந்திய நண்பர் ஆதல்; செற்றம் விடுதல். 'மனநல்லர்' எனச் சினைவினை முதலின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது.

மாணர் - மாட்சிமை இல்லாதவர்; அன்பரல்லாதவர்; பகைவர். கற்றக்-கடைத்தும் - படித்தாலும். நல்ல, பல - பலவின்பாற் பெயர்கள்.

கருத்து: உள்ளே செற்ற முடையாரைக் கல்வியுடைமைபற்றி நண்பர் என்று கருதற்க.

4. நகாஅ - சிரித்து (செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்). அஞ்சப்படும் - அஞ்சல்வேண்டும். 'எள்ளல் இளமை பேதைமை மடன் என், றுள்ளப் பட்ட நகைநான் கென்ப' என்ற தொல்காப்பியத்தால், நகைப்பின் வகைகளை உணர்க. நகையது வகைபற்றி 'இனிய' என்று பன்மையாற் கூறினர். அகத்துச் செற்றம் நிகழவும் அதற்கு எதிராகிய நகையைப் புறத்துக் காட்டலின் 'வஞ்சர்' என்றும், அச் செற்றம் குறிப்-பதற்குக் கருவியாகிய முகத்தானும் தோன்றுமையின் 'அஞ்சப்படும்' என்றுங் கூறினர்.

5. அவரைச் சொல்லால் தெளியற்க என்பது 5,6,7-ஆம் பாட்-டுக்களால் கூறப்பட்டது. அமையாதவரை - (தம்மோடு) பொருந்தாதவரை. எனைத்து ஒன்றும்-யாதொரு கருமத்திலும். தேறல்பாற்று அன்று - தெளி-தல் முறைமைத்தன்று (நீதி நூல்). 'என்று சொல்லும் நீதி நூல்' என்றும் வருவிக்கலாம். நீதிநூல், தோன்றா எழுவாய். தேறல், எழுவாய்; பாற்றன்று, பயனிலை என்றும் கூறலாம்.

கருத்து: பகைமை மறைத்தற்பொருட்டுச் சொல்லுகின்ற வஞ்-சனைச் சொல்லைச் செவ்விய (வஞ்சனையில்லாத) சொல்லெனக் கருதி, அக் கூடாநட்பினரைக் காரியங்களில் தெளிதல், நீதிநூல்முறைமை யன்று.

6. நல்லவை - நன்மை பயக்குஞ் சொற்களை. ஒட்டார் - மனம் பொருந்தாதவர்; பகைவர். ஒல்லை - விரைவில்; சொல்லிய அப்பொழுதே. 'சொல்லினும்' எனவே, பகைவர் நல்லவைசொல்லாமையே பெற்றும். ஒட்டாராதலால் நீமைபயத்தல் ஒருதலை என்பார், 'ஒல்லை உணரப்படும்' என்றார்.

7. 'வில்வணக்கம் தீங்கு குறித்தமையான் ஒன்னார்கண் (பிறக்கும்) சொல்வணக்கம் கொள்ளற்க' என மாறுக. வில்வணக்கம் - வில்லின் முனை நிமிர்ந்திராமல் தாழ்ந்திருக்கும் தன்மை. சொல்வணக்கம்-சொல்லிற் காட்டும் பணிவு. கொள்ளற்க - (தமக்கு நன்மைசெய்தலைக் குறித்தது என்று) கருதற்க.

வணக்கம் என்பது, புறத்தே சொல்லினிடத்து மாத்திரம் உள்ள தன்றி, அப் பகைவரிடத்தில்லை என்பது தோன்றச் 'சொல்வணக்கம்' என்றார். ஈரிடத்துள்ள வணக்கம் வெவ்வேறு பொருள் கொண்டதாயினும், வணங்-குதல் ஒப்புமைபற்றி இரண்டுவணக்கத்தையும் ஒன்றாகக் கொண்டு, அதன் குறிப்பை (தீங்கு குறித்தலை) ஏதுவாக்கிக் கூறினர். வில்லை ஏந்தியவன் தீங்கு குறித்தலை அவனுலாகிய வில்வணக்கத்தின்மேல் ஏற்றி 'வில்வணக்கம் தீங்கு குறித்தமையான்' என்று கூறியதனால், அதற்கு ஏற்ப ஒன்னார் தீங்கு குறித்ததை அவர்களாலாகிய சொல்வணக்கத்தின்மேல் ஏற்றி 'ஒன்-னார்கட் சொல்வணக்கம் கொள்ளற்க' என்று மறுத்துக் கூறினர்.

கருத்து: பகைவரது சொல்வணக்கமும், தீங்கு குறித்த வணக்கம் என்றே கொண்டு, அஞ்சிக் காக்கக் கடவர் அரசர்.

8. இதனால் கூடாநட்பினரைச் **செயலால் தெளியற்க** என்பது கூறப்பட்டது. படை ஒடுங்கும் - படைக்கலம் மறைந்திருக்கும். அனைத்து - அவ்வாறே அப் படை மறைந்திருத்தற்கு இடனாகும். தாம் நட்பு என்பதனைத் தம் தொழுத கையானும் அழுத கண்ணீரானும் நம்புவித்து, பின் கொல்லுதற்கு எடுக்க இருக்கின்ற படைக்கலம், உய்த்துணருமிடத்து, நம்புவிக்கின்றபொழுதே அக் கையிலும் கண்ணீரிலும் தோன்றும் என்பார் 'ஒடுங்கும்' என்றார். அழுத கண்ணீர் - அழுதலால் ஆகிய கண்ணீர்.

கருத்து: பகைவர் தம் மென்மை காட்டித் தொழினும், அழினும், அவர் குறிப்பையே நோக்கிக் காக்க.

9 இறுதிஇரண்டு பாட்டானும் கூடாநட்பினரிடம் **நடக்க வேண்டிய முறை** கூறப்பட்டது.

மிகச் செய்து - (பகைமை தோன்றாமல் புறத்தில் நட்பினை) மிகச்செய்து. தம் எள்ளுவாரை - (அகத்தில்) தம்மை இகழும் பகைவரை. நட்பினுள் நகச்செய்து சாப் புல்லற்பாற்று, என மாறுக. நட்பினுள்-(தாமும்) அந் நட்பின்கண்ணே (நின்று); நின்று என்பதை வருவிக்க. நகச் செய்து - (புறத்தின்கண் அவர்) மகிழும் வண்ணம் செய்து. சாப் புல்லல்பாற்று - அகத்தின்கண் (அம் மகிழ்ச்சி) அழியும்படி பொருந்தற்பான்மையுடைத்து (அரச நீதி). 'அரசநீதி' அவாய்நிலையான் வந்தது. 'சாவ' என்பதன் ஈற்றெழுத்து விகாரத்தால் தொக்கது. அகன் ஒன்று புறன் ஒன்று ஆதல் ஒருவனுக்குத் தகாதே எனினும், பகைவரிடமாயின் தகும் என்பது நீதி-நூல்துணிபு என்பார், அதன்மேல் வைத்துக் கூறினார்.

கருத்து: எள்ளுவாரைப் புல்லற்க.

10. விடல் - (பின் அம் முகநட்பையும்) தவிர்க; அல் ஈற்று வியங்கோள். பகை நட்பாங் காலமாவது, தம்மானும் பகை என்று வெளிப்பட நீக்கலாகாத அளவு.

கருத்து: பகைவர் நண்பர்போன்று ஒழுகினாலும், அவர்நட்பைத் தம்மால் ஆனவரையிலும் நீக்க வேண்டும்.

7. பேதைமை (84)

அஃதாவது, (செய்வன தவிர்வன யாதும்) அறியாமை.

1. பேதைமையின் **இலக்கணம்** முதல் இரண்டு பாட்டானும் கூறப்பட்டது. ஒன்று - (ஒருவனுக்கு ஏனைக்குற்றங்கள் எல்லாவற்றிலும் மிக்கது) ஒன்று. ஏதம் கொண்டு - (தனக்குக்) கேடுபயப்பனவற்றைக் கைக்கொண்டு. கேடு-இம்மையில் வறுமையும் பழியும், மறுமையில் பாவங்களும். ஊதியம் போகவிடல் - ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுதல். ஆக்கம் - இம்மையில் செல்வமும் புகழும், மறுமையில் அறமும்.

கருத்து: பேதைமையானது, தனக்குத் தீமை தருவனவற்றைக் கைக்கொண்டு, நன்மை தருவனவற்றைக் கைவிட்டு, தானே தன் இருமையும் கெடுத்துக்கொள்ளுதலாகும்.

2. கைஅல்லதன்கண் - (தனக்கு) ஆகாத ஒழுக்கத்தில், காதன்மை செயல் என முடிக்க. காதன்மை - விருப்பம்.

கருத்து: இருமைக்கும் ஆகா என்று நூலோர் விலக்கிய செயல்களை விரும்பிச் செய்தல் பெரும்பேதைமை.

3. மூன்று, நான்காங் குறளால் **பேதைமையின் தொழில்** பொதுவகையால் கூறப்பட்டது. நாணவேண்டுமவை - பழிபாவங்கள். நாட வேண்டுமவை - கருமங்களில் செய்வன தவிர்வன. நார் இன்மை - (எல்லோரிடத்திலும்) கண்ணோட்ட மில்லாத சொற்செயல் உடைமை. பேணவேண்டுமவை - குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம் முதலியன. நாணுமை முதலிய மூன்றும் பேதைக்கு எப்பொழுதும் இயல்பாய் வருதலின், 'தொழில்' என்றார்.

4. ஓதியும் - (மனம் மொழி மெய்கள் அடங்குதற்கு ஏதுவாய நூல்களை) ஓதியும். உம்மை, முன்னும் கூட்டவேண்டும். உணர்ந்தும் - (அவ் வடக்கத்தான் வரும் பயனை) உணர்ந்தும். பேதையின் - பேதைபோல; 5-ம் வேற்றுமை ஒப்புப்பொருள். இப் பேதைமை தனக்கு மருந்தாகிய ஓதுதல் முதலியவற்றால் நீராமையானும், வேற்றுமருந்து (பரிகாரம்) இன்மையானும் 'பேதையிற் பேதையாரில்' என்றார்.

5. இதனால், அப் பேதையின் **மறுமைச் செயல்** கூறப்பட்டது. 'பேதை.....அளறு, ஒருமைச் செயலாற்றும்' என மாறுக. எழுமையும் - வரும் பிறவிகளெல்லாம். அளறு - குழைசேறு மயமாக உள்ள நரகத்தை. எல்லாப் பிறப்பும் ஏழாய் அடங்குதல் அறியப்பட்டமையின், எழுமையும் என முற்றும்மை கொடுத்தார். அழுந்தும் அளறு - அழுந்துதற்கு இடனாய அளறு. இவ் வுலகத்தில் ஒருபிறப்பிலே இருந்து அவ் வுடலை விட்டபின்பு, நரகத்துக்குச் சென்று துன்பமடைவதேயன்றி, அடுத்தபடியாக இவ் வுலகத்திலே எடுக்கும் பிறப்பிலும் நரகவேதனைக்குச் சமமான கொடுந்துன்பங்களையே பாபவசத்தால் அனுபவிப்பன் என்பது "எழுமையும்.....அளறு' என்ற தொடரால் விளங்கிற்று. முடிவில் காலமெல்லாம் தான் நரகத்துன்பம் உழத்தற்கு ஏதுவாகுங் கொடுவினைகளையே அறிந்து சிலகாலத்துள் செய்துகொள்ளுதல் பிறர்க்கரிதாகலின், 'ஆற்றும்' என்றார்.

6. இதனால், அவன் **செல்வம் படைக்கும் விதம்** கூறப்பட்டது. ('வினைசெய்யுந்திறம்' என்பது பாடபேதம்). கை - செய்யும் முறைமை. வினை - ஒருகருமத்தை. பொய்படும் - (அத் தொழிலும்) புரைபடும்; பின்பு ஒருகாலும் முடியாதபடி உள்ளழியும். பட்டு என்று பொருள்கொள்ளின், முற்றெச்சம். பூண பூணும் - (தானும்) தனை பூண்பான்; பந்தப்படுவான்

கருத்து; பேதை, தான் மேற்கொண்ட காரியத்தைக் கெடுப்பதோடு, தன்னையும் கொடுத்துக்கொள்வான்.

7. அவன் செல்வம் எய்திபவழிப் **பயன் கொள்ளுமாறு**, 7,8-ம் பாட்டாற் கூறப்பட்டது. உற்றக்கடை - (விதிவசத்தால்) அடையின்; (வினையெச்சம்). ஏதிலார் - (தன்னோடு) ஓர் இயைபும் இல்லாதார். ஆர - நிறைய; திருப்தி அடைய. தமர் - (எல்லா இயைபும் உடைய) உறவினரும் நண்பரும்.

எல்லாநன்மையும் செய்துகொள்வதற்குக் கருவி என்பது தோன்ற 'பெருஞ் செல்வம்' என்றும், அதனைப் படைக்கும் ஆற்றல் இல்லாமை தோன்ற 'உற்றக்கடை' என்றும், எல்லாம் பெறுதல் தோன்ற 'ஆர' என்றும், உணவும் பெறுமை தோன்ற 'பசிப்பர்' என்றுங் கூறினர்.

கருத்து: அறிவிலிக்குப் பெரும்பொருள் கிடைத்தால், அயலார் அதனைப் பெற்று அனுபவித்து மிக்க சுகம் அடைவர்; அவன்சுற்றத்தார் ஒன்றும் பெறுது மிக வருந்துவர்.

8. ஒன்று உடைமை - ஒன்றனை உடைமையாக. மையலொருவன் - (முன்னே) பித்தனை யுடையானொருவன். களித்தற்று - (அம் மயக்கத்தின் - மேலே) மதுவுண்டு மயங்கினாற் போலும். 'களித்தற்று' என்பதற்கு எழுவாயீக 'அவன் மயங்குதல்' என்பதை வருவிக்க. 'பெறின்' எனவே, ஆகூழான் அன்றித் தன்னாற் பெறுமை பெற்றும். கருத்து: பேதைமையும் செல்வக் களிப்பும் ஒருங்குடைமையால் அவன் செய்யுஞ் செயல்கள், மையலும் மதுக்களிப்பும் ஒருங்குடையான் செய்வனபோல் தலைதடுமாறும்.

9. பேதையார்நட்பின் குற்றம் இதனாற் கூறப்பட்டது. தருவது பீழை ஒன்று-தருவதொரு துன்பம். இல் - இல்லை. பேதையார்கேண்மை - பேதையாயினார் (தம்மூட் கொண்ட) நட்பு. பேதையார்நட்பு நாள்தொறும் தேய்ந்து வருதலின், அவர்பிரிவு துன்பம் தாராதாயிற்று. இது பேதையார்-நட்பினைப் புகழ்வதுபோலப் பழித்தவாறு; இலேச அணி.

10. அப் பேதை அவையிடை இருக்கும் ஆறு இதனால் கூறப்-பட்டது. குழாஅத்து - அவையின்கண். கழாஅக்கால் - (மிதித்த மலம்) கழுவாதகாலை; (இடக்கர் அடக்கு). பள்ளியுள் - (இன்பம்தரும்) படுக்-கையில்.

கருத்து: அசுத்தமானவற்றை மிதித்த காலால் அப் படுக்கையும் இழிக்கப்படுமாறுபோல, இப் பேதையால் அச் சபையும் இழிக்கப்படும்.

சிலப்பதிகாரம்

இந்திரவிழவூரெடுத்த காதை

காவிரிப்பூம்பட்டினத்தார் இந்திரனுக்குத் திருவிழா நடத்தியதும், நகர அமைப்பும், சில கோயில்களின் வகையும், பிறவும் இக் காதையால் விளங்கும்.

இக் காதை புகார்க்காண்டத்தில் ஐந்தாவது காதை.

முடிபு:—(3) மடந்தை (4) படாஅம் போக நீக்கி (6) ஒளி (5) உச்சித்தோன்றிப் (6) பரப்பச் (69) சொரிந்து (70) ஆடிப் (75) பெயர (86) நலங்கொளவைத்து (88) ஊட்ட (110) மண்டபமன்றியும் (140) மன்றத்தும் பலியுறீஇ (142) ஏற்றிச் (144) சாற்றி (146) எடுத்த (160) ஈண்டிக் (162) கொள்கென (168) நீராட்டக் (188) களிசிறந்த வியலுளாங்கண் (203) திரிதரு மறுகில் (223) உண்டென (224) சேண் (225) ஆட்டி விலக்கி (226) உறீஇ (227) புக்க கணவர் (234) நடுங்குநாள் (238) உதுத்தனவாகிய (237) கருங்கண்ணும் செங்கண்ணும் (240) விழுநாளகத்து (239) இடத்தினும் வலத்தினும் துடித்தன.

3. கண் அகன் - இடமகன்ற. மண்ணக மடந்தை - நிலமடந்தை.

4. புதை இருள் படாஅம் - போர்த்த இருளாகிய ஆடையை.

6. ஒளி - சூரியன். மலர்கதிர் - விரிந்த கதிர். பரப்பி - பரப்ப.

7. வேயாமாடம் - நிலாமுற்றம். கல இருக்கை - பண்டசாலை; அணிகலம் பெய்த சரக்கறை.

8. மான்கண் காலதர் - மான்கண்போலக் கோணஞ்செய்த சாளரம்.

9. கயவாய் - புகார், காவிரிப்பூம்பட்டினம்.

10. பயனறவு அறியா - பயன்தொலைதலை அறியாத. யவனர் - சோனகர்; மிலேச்சருமாம்.

11. கலம்தரு திரு - மரக்கலம் தருஞ் செல்வம். புலம்பெயர் மாக்கள் - கடலோடிகள், பரதேசிகள்.

12. இலங்கு நீர்வரைப்பு - (அவர்கள் இருக்கும்) அலைவாய்க்கரையிருப்பு.

13. வண்ணம் - தொய்யிற் குழம்பு முதலியன. சுண்ணம் - பூசுசுண்ணம். தண் நறும் சாந்தம் - குளிர்ந்த நறிய பசுங்கூட்டு.

14. பூவும் - (விடுபூ, தொடைப்பூ, கட்டுப்பூ என்னும்) மூவகைப் பூவும். புகையும் - புகையுறுப்பும். 15. பகர்வனர் - விற்பவராய்.

'படாத்தை நீக்கி, தோன்றி, பரப்ப, மாடமும், இருக்கையும், இடங்களும், இருக்கையும், வரைப்பும் வண்ணமும்...விரையும், பகர்வனர் திரிதரு நகரவீதியும்' என்க.

16. மயிரினும் - எலிமயிராலும்.

17. துண்வினை - நுட்பமான தொழில்கள். காருகர் - பட்டுச்சாலியர். 18. தூசுந் துகிரும் - பட்டும் பவளமும். ஆரம் - சந்தனம்.

20. அளந்து கடை அறியா- (ஓரெண்ணினும்) எண்ணி எல்லை காணமுடியாத. 21. நனந்தலை மறுகு - இடமகன்ற தெரு.

22. பால்வகை தெரிந்த - பகுதி வேறுபடத் தெரிந்த. பகுதிப் பண்டம் - முதிரை முதலிய பண்டம்.

23. கூலம் - தானியம். கூலவீதி - கூலக் கடைத்தெரு.

24. காழியர் - பிட்டுவாணிகர். கூவியர் - அப்பவாணிகர். கள் நொடையாட்டியர் - கள்ளை விற்கும் வலைச்சியர்.

25. பரதவர் - பட்டினவர். வெள்ளுப்புப் பகருநர் - உமணர்.

26. பாசவர் - இலையமுதிடுவோர். வாசவர் - பஞ்சவாசம் விற்பவர். மை நிணம் விலைஞர் - ஆட்டுவாணிகர்; அதன் இறைச்சி விற்பாருமாம்.

27. ஓசுநர் - எண்ணெய் வாணிகர். 28. கஞ்சகாரர் - வெண்கலக் கன்னர். செம்புசெய்குநர் - செம்பு கொட்டிகள்.

28. கொல் - வெட்டும். கருங்கை - வலிய கையையுடைய.

30. கண்ணுள் வினைஞர் - சித்திரக்காரர். மண்ணீட்டாளர் - சிற்பாசாரிகள்.

31. பொன்செய் கொல்லர் - உருக்குத்தட்டார். நன்கலந்தருநர் - இரத்தினப்பணித் தட்டார். 32. தன்னகாரர் - சிப்பியர்; தையற்காரர். தோலின் தன்னர் - உறைகாரர்.

33. கிழி - சீரை. கிடை - கிடேச்சு, நெட்டி.

34. பால் கெழு மாக்கள் - வேறுபட்ட இயல்பினை உடையோர்.

35. குரல் முதல் ஏழும் - குரல் முதலாயுள்ள ஏழு இசையினையும்.

36. வழித்திறம் - பண்வழிப் பிறக்குந் திறத்தையும்.

37. பெரும்பாணிருக்கை - பெரிய இசைக்காரர் இருக்குமிடங்கள்.

38. சிறு குறும் கைவினை - ஒழுக்கத்திற் சிறியரராய்ச் சிறு தொழிலை. பிறர் - பிறர்க்குச் செய்யும்.

40. கோவியல் வீதி - அரசர்பெருந்தெரு. 41. பீடிகைத் தெரு - கடைத்தெரு.

43. வீழ்குடி உழவர் - (உழவின்மேல்) விரும்புங் குடிகளோடும் உழவரோடும். 44. ஆய்புல் வேதர் - மருத்துவர். காலக்கணிதர் - சோதிடனாலோர்.

45. பால்வகை தெரிந்த - வேறு வேறு வகைப்படத் தெரிந்த.

46. திருமணி குயிற்றுநர் - முத்துக் கோப்பவர்.

47. அணி வளை போழுநர் - அழகிய சங்குவளைகளை அறுப்பவர்.

48. சூதர் - நின்றேத்துவார். மாகதர் - இருந்தேத்துவார். வேதாளிகர் - வைதாளி ஆடுவார்.

49. நாழிகைக் கணக்கர் - கடிகையைக் கணக்கிட்டு மொழிவார். கண்ணுளர் - சாந்திக் கூத்தர்.

50. காவற்கணிகையர் - களத்து ஆடுங் கூத்திகள்; இராக்கடை வேசையர். ஆடற் கூத்தியர் - அகக்கூத்தினை ஆடும் பதியிலார்.

51. பூவிலை மடந்தையர் - அற்றைப் பரிசங்கொள்வார். ஏவற் சிலதியர்-மடைப்பள்ளியாரடியார்.

52. குயிலுவர் - தோற்கருவி யிசைப்பார். பன்முறைக் கருவியர் - படைக்கும், உற்சவத்திற்கும் கொட்டுவார்.

53. நகைவேழம்பர் - சிரிக்கும் பரியாசகர். வகைதெரி யிருக்கை - (சூதர் முதல் வேழம்பர் ஈறுகத் தத்தம் இனத்தின்) வகைதெரிந்த இருப்-பிடங்கள். 54. கடவுநர் - ஏறிச் செலுத்துவார்; அச்சுவ வாரியர்.

55. கடுங்கண் - சினக்கண். மறவர் - காலாட்படைத்தலைவர்.

56. புறஞ்சுற்றிய - (கோயிலைச்) சூழ இருக்கும். பெரும்பாய் இருக்கை-பெரிய பரந்த இருப்புக்கள்.

59. முனையிடம்போல - போர்க்களம் ஆனற்போல.

60. இருபால் இரண்டுகூறுபட்ட. இடை - நடுப்பட்ட. வேந்தர் இருவர் போர்குறித்து வந்து தங்கிய பாசறையிருப்பினுக்கிடையே உள்ள நிலப்பகுதி போர்க்கள மாயினற்போல, மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்க மென்னும் இரண்டு ஊர்க்குமிடையே யுள்ள பொதுநில மாகிய.... நாளங்காடி என்க.

61. கால் யாத்த கடை- (மரங்களின்) கால்களே (தூணைக்) கட்டப் பெற்ற கடைகள்.

63. நடுக்கின்றி நிலைஇய-இடையறுது நிலைபெற்ற. நாள்அங்காடி - காலையங்காடி.

16-63. 'காருகர் இருக்கையும், கனந்தலை மறுகும், கூலவீதியும், காழியர் முதலா ஓசுநர் ஈறுச் செறிந்த ஊன்மலியிருக்கையும், கஞ்சகாரர் முதலா தோலின்துன்னர் ஈறுச் செய்வினைப் பால் கெழு மாக்களும் பெரும் பாணிருக்கையும் வினையாளரொடு விளங்கும் மருவூர்ப் பாக்கமும், வீதியும் வீதியும், தெருவும், மறுகும், இருக்கையும், வேதரும் கணிதரும் இருக்கும் இருக்கையும், குயிற்றுநர் போழுநர் பெருவீதியும், சூதர் மாகதர் வேதாளிகர் கணக்கர் கண்ணுளர் கணிகையர்கூத்தியர் மடந்தையர் சிலதியர் குயிலு-வர் கருவியர் வேழம்பர் இவர்தம் இருக்கையும், கடவுநர் பாகர் ஊருநர் மறவர் புறஞ்சுற்றிய இருக்கையும், பெரியோர் மல்கிய சிறப்பிற் பட்டினப் பாக்கமும், முனையிடம்போல இடைநிலமாகிய கால்யாத்த கடைகளை யுடைய சோலையையுடைய ஓதையும் ஓதையும் நிலைஇய நாளங்காடியில்' என முடிக்க.

64. சித்திரைத்திங்கள் - சித்திரைமாதம். சித்திரைத் திங்கள் சேர்ந்தென - சித்திரைநாளின்கண் நிறைமதி சேர்ந்ததாக. இது சித்திரா பூரணை; சித்திரை மாதத்துப் பௌர்ணமி.

65. உற்றதை - இடையூற்றை. 67. பூதத்துக்கடை - பூதவாயில். பீடிகை - பலிபீடிகை, பலியிடுஞ் சிறுமேடை.

68. புழுக்கல் - அவரை துவரையிட்டுப் புழுக்கிய வெந்தை. நோலை-எள்ளுருண்டை. விழுக்கு உடை மடை - மாமிசத்துடனே கலந்த சோறு.

69. புகை - விரைப்புகை. பொங்கல்-பொங்கற்சோறு; கள்ளுமாம்.

70. துணங்கையர் - துணங்கைக் கூத்தாடுவார்; சிங்கிக் கூத்தும் அது. 'பழுப்புடை இருகை முடக்கி யடிக்கத், தொடக்கிய நடையது துணங்கையாகும்'; இருகைகளையும் மடக்கி விலாவின் பழுப்புடைக் கண்ணே இஃக்கி இஃக்கி என வாயாற் சொல்லிச் சடக்குச் சடக்கென அடித்தல். குரவை - கைகோத்தாடல். அணங்கெழுந்தாடி - தெய்வமேறி யாடி. 73. வசி - வசியம்; மழை. 74. மாதர்க் கோலம்-(அனைவரும்) காதலிக்கும் ஒப்பனை. வலையின் - நாணிலிகளைப் போல.

75. மூதிற்பெண்டிர் - மறக்குடி மகளிர். ஓதையில் - கொக்கரிப்-போடே சேர்ந்தென.

புழுக்கல் முதலாயினவற்றைப் பிடிகையில் சொரிந்து, நிலமடங்கலும் பசியும் பிணியும் பகையும் நீங்கி மன்னற்கு வசியும் வளனும் சுரக்க என, மூதிற்பெண்டிர் வாழ்த்திப் பெயர-என்க.

77. முந்தச் சென்று-(ஒருவரின் ஒருவர்) முற்படப் போய்.

80. வலிக்கு வரம்பாகெனல் - வலிக்கு எல்லையாகென வஞ்சினங் கூறல். 81. கழிப் பிணி - ஊன் பிணித்தல். கறைத் தோல் - கறுப்புப்பரிசை.

82. பல் வேல் பரப்பு-பல வேலையுமுடைய பரப்பு. மெய்யுறத் தீண்டி-உடற்கரித்து. 83. களங்கொண்டோர்-வென்றோர். அழுவம்-பரப்பு.

84. சூர்த்து - அச்ச முறுத்து. சுடுநோக்கு - சுடுவது போலும் நோக்கு. கருந்தலை - பசுந்தலை.

86. நலங்கொளவைத்து - மயிரை முடித்து, நிலத்தை நுதலில் அணிந்து வைத்து. 87. உருமு-இடி.

88. மயிர் கண் முரசம் - (புலியைக் கொன்றுநின்று சிலைத்துக் கோட்டுமண் கொண்ட ஏறு இறந்துழி அதன் தோலினை) மயிர் சீவாமற் போர்த்த முரசு. வான்பலி யூட்டி - உயிர்ப்பலி யூட்டி; என்றது

"அடிக்கழுத்தி னுடன்சிரத்தை அரிவ ராலோ
அரிந்தசிரம் அணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்தசிரம் கொற்றவையைத் துதிக்கு மாலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்கு மாலோ' (கலிங்-கோயில். 15)

என்னும் அடிகளால் அறிக. வீரச் சுவை.

வரம்பாகென, சுவணினர், பரப்பினராய்த் தீண்டிக் கொண்டோர் கருந்தலை கொள்கென வைத்து, ஊட்ட என முடிக்க. அவிப்பலி.

89. இருநில மருங்கின் என்றது தமிழ் நாட்டெல்லையுள் இவன் ஆளும் நில எல்லைப்புறத்து என்பதாயிற்று. ஆகவே, மேற்கும் தெற்கும் எனக்கொள்க; என்றது, சேரபாண்டியருடைய நாடுகளை. பொருநரை-தன்னோடு எதிர்த்துப் போர் செய்கின்ற அரசரை. பெறுஅ - (மேற்கிலும் தெற்கிலும்) பெறுத.

90. செரு வெங்காதல்-போரிற் பேராசை. திருமாவளவன், கரிகாலன்.

91. வாளும் குடையும் முரசும் பெயர்த்தல் - வாணுட்கோள், குடைநாட்கோள், முரசு நாட்கோள் என்பன.

92. நாளொடு பெயர்த்து - நல்ல நாளிலே பெயரவிட்டு.

93. மண்ணக மருங்கின் - இந் நிலவெல்லையின்.

94. புண்ணியதிசை - வடதிசை. முகம் - இடம்.

95. அசைவு இல் ஊக்கம் - மடிதலில்லா ஊக்கம். நசை பிறக்கு ஒழிய - ஆசை பின்னிட்டொழிய.

96. பகை விலக்கியது - பகையாகக் குறுக்கிட்டு விலக்கிற்று. பயம் கெழுமலை, இமயமலை.

97. சிமயப்பிடர்த்தலை - (அம்) மலையின் பிடரின்மீது.

98. கொடுவரி ஒற்றி - (தனது) புலியைப் பொறித்து. கொள்கையில் - (தான் விரும்பியது பெறுத) கோட்பாட்டால். பெயர்வோற்கு - திரும்புவோனுக்கு. 99. மாநீர் வேலி - கடலை அரணாகவுடைய.

100. இறை கொடுத்த - நிறையாகக் கொடுத்த.

102. பகை புறத்துக் கொடுத்த - (பகையாற் போர் செய்து தாங்க மாட்டாது அப்) பகையிடத்துக் கொடுக்கப்பெற்ற. இவன் பகைவன். பட்டி மண்டபம் - வித்தியாமண்டபம்; ஓலக்கமண்டபமும் என்ப.

103. உவந்தனன் கொடுத்த - மகிழ்ந்து கொடுத்த. இவன் நண்பன்.

104. நிவந்தோங்குமரபு - உயர்ந்த தொழில்மரபினை உடைய.

106. காணு மரபின - செய்யக்கூடாதன.

திருமாளவன், பெறுஅ, தோள்பெறுக எனப் போகிய அந்நாள், கொடுவரி யொற்றிப் பெயர்வோற்குக் கோன் கொடுத்த கொற்றப்பந்தரும்; வேந்தன் கொடுத்த பட்டிமண்டபமும்; உவந்தனன் கொடுத்த தோரணவாயிலும்; பூணந்தனவாயினும், காணுமரபின, கொடுத்த மரபின, மண்டபமன்றியும்— என முடிக்க.

111. வம்ப மாக்கள் - புதியோர். பொறித்த - எழுதிய.

112. கண் - அவ்விடத்து. எழுத்துப் படுத்த - (இன்னது பொதி என) எழுதி இலச்சினை யிட்ட. 'எண்ணெழுத்துப் படுத்த' என்று பாடமோதி, (அளவும் நிறையும் எண்ணுமாகிய) இலக்கங்கள் தம்மிடத்து இடப்பட்ட என்று பொருள் கூறுவர்.

113. கடைமுகவாயிலும் - பண்டசாலை வாயிலையும்.

114. உடையோர் காவல் - (இவற்றை) உடையோர் (காத்திருக்கும்) காவல். ஓரீஇய ஆகி - நீங்கினவாகி.

115. கட்போர் - களவுசெய்வோர். கடுப்பத் தலையேற்றி - (கழுத்துக்) கடுப்பப் பொதியை ஏற்றி.

116. கொட்பினல்லது - ஊரைச் சூழ்விப்பினல்லாது.

117. உள்ளுநர்ப் பனிக்கும் - (களவென்பதனை மனத்தாற் கனவில் நினைப்பினும்) நினைப்போரை நடுங்குவிக்கும். வெள் இடை மன்றமும் - வெளியான இடத்தையுடைய மன்றமும்.

120. பழுது இல் காட்சி - குற்ற மில்லாத தோற்றம்.

121. வலஞ்செயா-(தன்னை) வலம் செய்து. இலஞ்சி மன்றம் - பொய்கையை யுடைய மன்றம்.

122. வஞ்சமுண்டு - வஞ்சனைப்பட்டு. மயல் - மயக்கம்.

124. அழுந்தினர் - அழுந்தப்பட்டோர்; அழுந்தக் கடியுண்டார்.

125. கழல்கண் - பிதுங்கின கண்; பச்சைக்கழல் போலுங் கண் - னையுடைய கூளி எனினும் அமையும். கூளிக்கடுநவைப்பட்டோர் - பேய் - பிடிக்கப்பட்டார். கூளி, பூதமும் என்ப.

126. சுழல வந்து - சூழ்வந்து. 127. நிழல் கால் - ஒளியை வெளி-விடுகின்ற.

128. தவம் மறைந்து ஒழுகும் - தம்மைப் (பிறர் நம்புவதற்குத்) தவ வேடத்தில் மறைந்து நின்று (இழுக்கானவற்றின் கண்) ஒழுகும். தன்மை-(தவத்தோ டொற்றுமைப்படுந்) தன்மை; அஃதின்மை, கூடாவொழுக்கம்.

129. அவமறைந்து ஒழுகும் - (தம்மைத் தம் கணவர் நம்புவதற்-குப்) பொய்யொழுக்கத்தின் மறைந்து நின்று (வசீகரிப்பின்) ஒழுகும். அலவல்(விகாரம்)-அலவை; வியபிசாரம்.

130. அறைபோகு அமைச்சர் - கீழறுக்கும் அமைச்சர்.

131. பொய்க்கரி - பொய்ச்சாட்சி. 132. பாசத்துக்கை - (இப்) பாசத்திடத்து.

133. காதம் நான்கும் - (ஊர் சூழ்ந்த) நாற்காத எல்லையும் (கேட்கும் படி). கடுங்குரல் எடுப்பி - கடிய குரலால் உணர்த்தி.

134. சதுக்கம் - நாற்சந்தி பூதம் நிற்றலால், பூதசதுக்கம் எனப் பெயர் பெற்றது.

135. கோல் கோடினும் - செங்கோல் (சிறிது) பிழைப்பினும். அறம் கூறு அவயம் - தரும ஆசனத்தார் வழக்கு உரைக்கும் இடம்.

136. உரைநூல் - உரைக்கும் நடுவு நிலைமை. ஒரு திறம்-ஒரு மருங்கு.

137. நாவொடு - நாவால்; ஒடு கருவிப்பொருளில் வந்தது. நவை-குற்றம். குற்றத்திற்காகக் கண்ணீர் உகுத்தலால், 'நவைநீ' ரென்றார். பாவை நிற்றலால், பாவைமன்றம் எனப் பெயர் பெற்றது.

139. மெய்வகை உணர்ந்த - உண்மைத்திறத்தை உணர்ந்த.

1-140. முடிபு :—ஒளி (6), உச்சித்தோன்றி (5), பரப்பி (6), சொரி-ந்து (69), ஆடி (70), பெயர (75), வைத்து (86), ஊட்ட (88), மண்டப மன்றி-யும் (110), பனிக்கும் வெள்ளிடை மன்றத்தும் (117) கழியும் இலஞ்சிமன்-றத்தும் (121) நெடுங்கல் நின்ற மன்றத்தும் (127) புடைத்துணும் பூதசதுக்-கத்தும் (134), நின்றமும் பாவைமன்றத்தும் (138) பலி உறீஇ (140) என்று முடிக்க.

141. வச்சிரக்கோட்டம் - வச்சிரப் படை இருக்கும் கோயில். மண முரசம் - விழா முரசை.

142. கச்சை - (கீழ்வயிற்றிற்) கச்சை. பிடர்த்தலை - பிடரிடத்தே.

143. வால் வெண் - என்றும் இளைய வெள்ளிய. களிற்றரசு வயங்கிய கோட்டம் - (ஐராவதம் என்னும்) யானை நிற்குங் கோயில்.

144. கால் கோள் - தொடக்கம். கடைநிலை - முடிவு. சாற்றி - (களிற்றரசாகிய ஐராவதத்திற்குச்) சொல்லி. அச் சொல்லுதல்தான் இந்திரனைக் கொணர்தற்கு, இந்திர விழவாதலின்.

145. தங்கிய கொள்கை - (பூமியில்) தங்கிய முறைமை. தருநிலைக் கோட்டம் - கற்பகத்தரு நிற்குங் கோயில்.

146. மங்கலம் - அஷ்ட மங்கலத்தோடு. நெடுங்கொடி (ஐராவதம் எழுதிய) நீண்ட கொடியை. வான் உற எடுத்து - துறக்கத்தே செல்லவிடுத்து.

147. குயிற்றி - பதித்து. 148. வேதிகை - திண்ணை. 149. கடைமுகம் - வாயில்.

150. கிம்புரி - யானைக் கொம்பில் அணியும் ஆபரணம். கிளர் முத்து - பருமுத்து; (அதன் வாயினின்றும்) புறப்பட்ட முத்துமாம்.

151. வாசிகைத் தோரணம் - வாசிகை (வடிவாக வளையச் செய்த மகர) தோரணம்; உவமத்தொகை.

141—156. முடிபு. முரசம் (141), ஏற்றி (142), கோட்டத்துச் (143), சாற்றி (144), நெடுங்கொடி எடுத்து (146), கடைமுகத்து (149), தோரணம் நிலைஇய (152), பூரணகும்பம், பாலிகை (153) விளக்கு, படாகை (154), கவரி, சுண்ணம் (155) இவற்றையுடைய விதி (156) என முடிக்க.

156. செறிந்து - நிறைந்து. ஆங்கு - (பலியிட்ட) அப் பொழுதே.

157. ஐம்பெருங்குழு - ஐவர் அடங்கின பெருங் கூட்டம்; அவர் அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர் என்னுமிவர். எண்பேராயம் - காரணத்தியலவர், கருமகாரர், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், இவுளிமறவர் என்னுமிவர். இவரை வேறு வகையாகக் கூறலு முண்டு. 158. பரதர் – வணிகர்.

159. கவர் பரி - பகுத்து (விரையுஞ்) செலவு.

160. இவர்தல் - தேரைக்கொண்டு எழுதல். இயைந்து ஒருங்கு ஈண்டி - (தம்மிற்) பொருந்தி ஒன்றுபடத் திரண்டு.

161. அரைசு மேம்படஇய - அரசியல் மேம்படுவதற்கு. அகலிலை மருங்கில் - ஊரகத்து. அகலிலை - ஊர்.

162. உரை-புகழ். சால்-அமைதி. 165. துறை - சங்கமத் துறை.

167. மண்ணகம் மருள - மண்ணகம் விண்ணகமாய் மாறுட; அன்றி, மண்ணினுள்ளோர் இப்படியோ அவ் விண்ணகம் இருப்பது என ஒப்புக்காண. வானகம் வியப்ப - வானவர் (தம் துறக்கத்தினும் ஈது சிறப்புடையது என) வியக்க.

168. விண்ணவர்தலைவன் என்றது, ஈண்டு இந்திரனது வச்சிரத்தை. ஓட்டி - மஞ்சனமாட்டாநிற்ப; இந்திரனே மானதத்தால் ஓட்டி என்னவுமாம்.

141—168. முடிபு : அகலிலை மருங்கில், அரைசு மேம்படீஇய (161), ஒருங்கீண்டி (160), மன்னன் கொற்றங் கொள்கென (162), அரசுதலைக் கொண்ட (164), பொற்குடநீரை (166), வீதியிற் செறித்து (156), ஏற்றி (142), சாற்றி (144), எடுத்து (146), புரவியர், களிற்றின் தொகுதியர் (159), தேரினராய் (160), அரசகுமாரும் வணிககுமாரும் (158), ஆட்ட (168) - என முடிக்க.

169. பிறவா யாக்கை - (என்றும்) பிறவாத உடம்பு; அரூபி எனினுமமையும். பெரியோன் – இறைவன், மகாதேவன்.

171. வாலியோன் - வெள்ளைமூர்த்தி, பலதேவர், பலராமர்.

172. மேனி – நிறம். 173. மன்னவன், இந்திரன் செவ்வேள், வாலியோன், நீலமேனியோன் என்பனவற்றுள் தொடர்நிலையின்பமும் அலங்காரச்சுவையும் உணர்க.

174. மாமுது முதல்வோன் - மிக்க முதுமையையுடைய முதல்வனாகிய நான்முகன்.

175. நான்மறை மரபில் - நான்கு வேதங்கள் (சொன்ன) நெறியில். தீமுறை ஒருபால் - ஓமங்கள் ஒருபக்கம் (நடந்தன).

176. நால்வகைத்தேவர் - வசுக்கள், ஆதித்தர், உருத்திரர், மருத்துவர். இவர்கள் எண்மர், பன்னிருவர், பன்னொருவர், இருவர் என முறையே மூப்பத்துமூவர் ஆவர்.

மூவறு கணங்கள்—பதினெட்டு வகைப்பட்ட கணங்கள். அவராவார் ஆகாசர், நாகர், சித்தர், காந்தருவர், விஞ்சையர், பசாசர், தாரகைகள், போகபூமியோர், கிம்புருடர், சுரர், அசுரர், பூதம், முனி, தேவர், கருடர், இராக்கதர், இயக்கர், சாரணர் என்போர்.

177. பால்வகை - வேற்றுமைப்பட. 178. சாறு - விழா.

179. அறவோர்பள்ளி- அருகர் தானம், புத்தர்பள்ளி. அறன் ஒம்படை - தருமம் போதிக்கு மிடம்.

180. புறநிலைக் கோட்டம் – புறம்பே யுள்ள ஸ்ரீகோயில், திருக்கோயில். புண்ணியத்தானம் - (மற்றுமுள்ள) புண்ணியத்தானங்கள்.

181. நிறவோர் உரைக்குஞ் செயல், புராணம்; ஈண்டு அதனைப் படித்தல். 179—181. அறவோர்பள்ளி முதலிய எல்லாவற்றிலும் கருமம் போதித்தலும் பிறவுமான செயல்கள் மிக ஒரு பக்கம்.

182. கூடாமன்னர் - பகைவர். அடித்தலை - கால்யாப்பு.

182—183. பகைவரொடு பிறரும் தலைநீக்கற்குக் கொடித்தேர் வேந்தன் அருள் சிறக்க ஒருபக்கம். ஓடு, அசையுமாம்.

184. கண்ணுளாளர் - மதங்கர்; பெரும்பாணர்; குழலரும் என்ப. கருவிக்குயிலுவர்-(தோற்) கருவி வாசிப்பார்.

185. பண்ணியாழ் - கட்டப்பட்ட யாழ் (வாசிக்கவல்ல).

184—186. குழலும், தோலும், நரம்பும், கண்டமும் என்னும் இவற்றை இசைக்கவல்ல இவர்களாலே அளந்தறிதல் அரிய சிறப்பையுடைய இசைகள் ஒருபக்கம் மிக. சிறந்து, சிறக்க எனத் திரிக்க.

187. கண்துயிலாது - ஓசை அடங்குதலின்றி. மூடுக்கர் - குறுந் தெருக்கள். வீதி - நெடுந்தேர் வீதி.

188. விழவுக்களி சிறந்த - விழவாற் களிப்பு மிக்க. வியலுள் - அகன்ற ஊரிடத்து.

சிறக்க, விழுரோட்ட, விழவுக்களி சிறந்த வியலுள் - எனக் கூட்டுக.

189—190. சிலேடை: 1. காதலிக்கப்பட்ட (தன்) கொழுநனைப் பிரிந்து வேறுபாட்டால் அலருறுத அழகிய வளைந்த மகரக்குழையை யுடைய மாதவி. 2. (எல்லாரும்) காதலிக்குங் கொழுவிய நனையாந் தன்மையை விட்டு முதிர்ந்து செவ்வியழியாத வளைந்த அழகிய தளிரை யுடைய குருக்கத்தி.

கொழு நனை - கொழுத்த அரும்பு. கண்ணகி பிரிந்து அலரை எய்துதலால், 'அலர் எய்தாத மாதவி' என்றார். குருக்கத்தியை 'அலர் எய்தா' என்றார், செவ்வி அழியாமைபற்றி. ஈண்டுக் 'காதற் கொழுநனை' (189) என்றது முதல், 'நன்மொழி திளைத்து' (199) என்றது இறுதியாகக் கோவலனெடு மாதவத்துக்கு ஒத்த பண்பு. சிலேடை (பிரிமொழி).

191—195. (முற்கூறிய மாதவியுடனே) முல்லை முதல் கழுநீர் ஈறாக உள்ள பூப் பயின்ற பிணையலாலே பொலிவு பெற்று, காமத்தாற் களித்து மகிழ்ச்சி எய்தி, அழகிய நறிய பூம்பொழிலில் விளையாட்டை விரும்பி. மயிலை - இருவாட்சி. கோதையாகிய பிணையல் என்க. கோதை, ஒழுங்கும் ஆம். நறுவிரை பொதி பூப்பொழில் என மாறுக. ஆட்டு - விளையாட்டு; ஆவது புணர்ச்சி.

196.—7. நாடோறும் மகிழ்ந்திருக்கும் இருப்பையுடைய நாளங்காடி - யிற் பூ விற்கு மிடங்களிற் (பல பூமணமாகிய) புதிய மணத்தின் உள்புக்கு. பூவின் மிகுதிபற்றிக் 'கானம்' என்றார்.

198-9. அகிற்புகை சாந்தென்னும் இவற்றின் செவ்வி வாய்ப்பு மிக்கு நகைத்து விளையாடுந் திருளோடே காமக்குறிப்பாகிய மகிழ்ச்சி-மொழியிலே இடைவிடாது பயின்று. பாணர்க்கு வண்டும், பரத்தர்க்கு வேனிலும், கோவலனுக்கு மாதவமும் உவமம்.

200. சூரல்வாய் - சூரல் (என்னும் இசையைப் பாடும்) வாயை யுடைய. பரத்தரொடு - கழிகாமுகரொடு. 201. திரிதரும் - உலவுகின்ற.

202. இளி வாய் வண்டு - இளி (என்னும் இசைபாடும்) வாயை யுடைய வண்டு.

203. மலயமாருதம் - மலய மலையிலிருந்து வீசும் மந்தமாருதம், தென்றற்காற்று. மலயம் - பொதியம்.

188-203. முடிபு: மாதவிதன்னெடும் (190) பயில்பூம்பிணைய-லால் பொலிந்து, (193), எய்தி (194), அமர்ந்து (195), புக்கு (197), சிறந்து (198), திளைத்து (199), பாணரொடும், பரத்தரொடும், (200) திரி-கின்ற ஒழுக்கத்தையுடைய கோவலனைப்போல் (201), வண்டினெடும் இள-வேனிலொடும், (202) மாருதம் திரிதரு மறுகில் (203) - என முடிக்க.

204. கருமுகில் - பெரிய மேகம். 205. குமிழ் - குமிழமலர்.

206. அம் கண் வானம் - அழகிய இடமகன்ற வானம். அரவுப் பகை - பாம்பாகிய பகை.

208. நீர்வாய் - ஈரம் வாய்ப்புப் பெற்ற. திங்கள் நீள் நிலத்தே - திங்களாகிய பெரிய நிலத்தே.

209. சீர் வாய் துவலை-சீர்மை வாய்ப்புப் பெற்ற துவலையையுடைய. திருநீர் மாந்தி - அமிர்தகலையின் நீரை மாந்தி.

210. மீனேற்றுக் கொடியோன் (மீநகேதநன்) - மன்மதன். 'பெற, மாந்தி, வளர்த்த' என்று மாறுக.

211. வானவல்லி - மின்னற்கொடி. 212. மன்னற்கு, கரிகாலனுக்கு. வளம் - செல்வமும் அழகும்.

213. திருமகள் புகுந்தது-திருமகள் (வந்து) புகுதற்குக் காரணம். செழும்பதி - வளமிக்க (இப்)பதியிடத்தே. என - எனக் கருதி.

214. எரி நிறத்து இலவம் – எரிபோலும் நிறத்தையுடைய இலவ மலர்.

216. உள்வரிக் கோலத்து - பாண்டவர்போல வேற்றுருக்கொண்டு நடிக்குங் கோலத்தொடு. இது செயற்கை (கிரித்திரிம) வேடம். உறுதுணை, திருமகள்.

217. கள்ளக் கமலம் - வஞ்சக்கமலம்; உருமாறித் திரிதலின். (கள் அ கமலம்) கள்ளையுடைய அக் கமலம் எனினுமாம்.

219. பகு வாய்க் கூற்றம் - பிளந்த வாயினையுடைய எமன்.

220. (கூற்றம்) தன் கொலைத்தொழில் கெடாமல் ஆணுருக் கெட.

222. பண்மொழி நரம்பின் - பண்ணைச் சொல்லுகின்ற யாழ்நரம்பு போல. மிழற்றி - பேசி.

223. பெண்மையில் திரியும் - பெண்ணுருவத்தோடு திரிகின்ற. பெற்றியும் - தன்மையும். உண்டு என - உண்டாயிற்றே வென; உண்டு கொல் என வருவிக்க. நாணுடைக்கோலத்து நகைமுகங் கோட்டி- ஒருருவைக் கோட்டுவார்க்கு நாணுடைமை கோட்டல் அரிதாகலின், முதலில் அதனைக் கோட்டிப் பின்பு அதனோடு நகைமுகத்தையும் கோட்டி. கூற்றம் (219), அஞ்சி (218), திரியாமல் (220), கோட்டி (221), மிழற்றி (222), பெண்மையில் திரியும் பெற்றி (223)—என்க.

203-223. முடிபு: மாருதம் திரிதரு மறுகில் (203), திங்களும் திரிதலும் உண்டுகொல் (207)! வானவல்லி வருதலும் உண்டுகொல் (211)! கமலம் திரிதலும் உண்டுகொல் (217)! கூற்றம் (219) திரியும் பெற்றியும் உண்டுகொல் எனக் கூறி (223) — என்று கூட்டுக. இவை தற்குறிப் பேற்றம். இது திங்கள் முதலியவற்றைப் பொதுமகளிர்உறுப்போடும் தொழிலோடும் உறவித்து, காமுகர் புகழ்ந்து கூறுதல் எனக் கொள்க.

224. உரு இலாளன்-உருவம் இல்லாதவன், காமன். ஒரு-ஒப்பில்-லாத. சேணை, பொதுமகளிர்.

225. இகல் அமர் ஆட்டி - (பரத்தையரை) மாறுபட்ட பூசற்-கண்ணே அலைத்து. அன்றியும், புலவியாலே கூடாத மகளிரைப் போகாமல் எதிரே நின்று தடுத்து வென்று இங்ஙனம் புகழ்ந்து புலவியைத் தீர்த்து என்றுமாம்.

226. எழுது வரி கோலம் - எழுதிய தொய்யில் முதலிய பத்திக் கீற்று. முழுமெயும் உரீஇ -(தமது) மார்பமுழுவதும் உறுதலால். உரீஇ-உறுவித்து; புணர்ந்து.

228. உடன் உறைவு மரீஇ-உடன் உறைதலைப் பொருந்தி. ஒழுக்-கொடு புணர்ந்த - வழிபாட்டோடும் பொருந்திக் கூடிய.

229. வடமீன் கற்பின் - அருந்ததி போலுங் கற்பினை யுடைய. மனையுறை மகளிர் - கற்பொடுபட்ட இல்லற மகளிரை.

230. மணித் தோடு - நீலமணிபோலும் இதழ்.

231. புறங்கொடுத்துப் போகிய - தோற்றுப்போகிய. செங்கடை-(கரிய கண்ணின்) கடைச்சிவப்பு.

232. விருந்தின் - (அவ்) விருந்தினல். யாவதும் - சிறிதும்.

233. மாநில வரைப்பு - நிலவெல்லையிலுள்ளார்.

234. கையற்று - செயலற்று. நல்வினை நடுநாள் - விழாவின் நடுநாளில்.

224-234. முடிபு : ஆட்டி, விலக்கி (225), உரீஇ (226), மகளிரை (230), (கணவர்) 'மாதர்.....ஆயின் (230-232), நிலவரைப்பு தருங்கொல்' (233) என நடுங்கும் நடுநாளில் (234)—என்க.

235. உறைப்ப - பிழிற்ற. அழிந்து - அழிய.

238. அகத்தொளித்து - இதயத்தை ஒளித்து. 239. எண்ணு முறை - (முன்) எண்ணிய முறையே.

237-239. 'கருங்கண்' என்றது, கண்ணகிக்குப் புணர்ச்சியில்-லாமையால்; நிறைகரந்து துன்பத்தால் கண்கள் நீருகுத்தன. 'செங்கண்' என்றது, மாதவிக்குப் புணர்ச்சி விதும்பலால்; அகத்து நிறைகரந் தொளித்து இன்பத்தால் கண்கள் நீர் உகுத்தன. கண்ணகிக்கு நிறைகாத்தல், கற்பால் பரிகாரப்பட்டதாதல்; ஆற்றுமை மிகுதி கூறிற்று. மாதவிக்கு நிறுத்தலைக் கரந்து காமத்தாலே நீருகுத்தன. கண்ணகிக்கு அழுகைக் கண்ணீர்; மாதவிக்கு உவகைக் கண்ணீர். பின்பு கண்ணகிக்குக் கூட்ட-முண்டாகையால், இடக்கண் துடித்தன; மாதவிக்குப் பின்பு பிரிவுண்-டாகையால் வலக்கண் துடித்தன. (பெண்களுக்கு இடக்கண் துடித்தல் நன்னிமித்தம்; வலக்கண் துடித்தல் தீநிமித்தம்).

240. இந்திர விழாநாளில் 'என்' என்றது ஈற்றசை.

சீவக சிந்தாமணி

காந்தருவதத்தையார் இலம்பகம்

1. இவர்கள், சீவகனும் சுற்றமும். சங்கு தரு - சங்கம் என்னும் இலக்கத்தை மேன்மேல் தருகின்ற. சால உடை-மிகவும் கெட்ட. நாய்கன், சீதத்தன். உடைநாய்கன், வினைத்தொகை. திரை - கடல்; சினையாகு-பெயர். வங்கம் - கப்பல். வங்கத்திற்குக் களிறு உவமை. சால உடைய நாய்கன் என்று பொருள் கூறுதல் வடநூல்களுக்கு ஒத்தது.

பொருமால் களிறுபோன்று பொங்கு திரைமீதே ஒரு வங்கத்தோடு போய்வந்து நிதிதரலுற்றான்-என முடிக்க.

2. மின் - ஒளி. சாயலினையும் பூணினையும் உடைய பதுமை-கேள்வன் என்க. பதுமை, சீதத்தன்மனைவி. கொன் ஒழுகு - அச்சம் பரக்கின்ற. யவதத்தன், சீதத்தன்மூன்னோன். குளிர்தல் - தங்குதல். ஆவன்றன் போல் காளை - தந்தையை யொக்கின்ற காளை. பொன்னொழுகு-பொன் ஊற்றுக ஒழுகுகின்ற. இடவதத்தன் (ரிஷப தத்தன்) என்று பாட மிருப்பின் கலம்.

3. இம்மி - மத்தங்காய்ப் புல்லரிசி; (இவ்வரிசி மிகவும் சிறியது); குறைந்ததோர் எண்ணுமாம். நிதி - பெரிய பொருட்டிரள். கம்மியர் (கர்மியர்) - பிறர் தொழில் செய்வார். ஓடை - பட்டம். ஊர்வர் - ஏறுவர். 'அம்மி மிதந்த சுரை ஆழ்ந்து வீழ்ந்தது'. ஆழ்தற்குரிய அம்மி மிதந்து மிதத்-தற்குரிய சுரை ஆழ்ந்து வீழ்ந்த தென்றது, உயர்ந்தோர் வாழாதே தாழ்ந்-தோர் வாழ்ந்ததனை. உம்மைவினை - பழவினை. ஊடல் - கலாய்த்திருத்தல்.

4. உள்ளம் - (பொருள் திரட்டுதலில் முயல்கின்ற) மனம். செய்ய-செய்தால். வெள்ளம் நிதி - வெள்ளம் என்னும் பேரெண்ணின் அளவின-தான நிதி. வீழும் - திரளும்; உண்டாகும். அதனின் விளையாதது இல்லை யென மாறுக. தொள்ளை உணர்வு - குற்றம்பட்ட அறிவு. சொல்-லின் - ('வருவது தங்காது' என்னுஞ்) சொல்லினால். மடிகிற்பின் - சோம்-பியிருந்தால். எள்ளுநர் - இகழ்பவர். ஏக்கழுத்தம் - தலையெடுப்பு.

5. செய்க பொருள் - பொருளைத் தேடுக. செறுவார் - செறப்படு-வார்; பகைவர். செறுகிற்கும் - கொல்லும். எஃகு - படை. இருந்தேயும் உயிருண்ணும் - (பொருள் அவரிடத்துச் செலவிடப்படாமல்) இருந்தே-யும் (பகைவரைக) கொல்லும். 'அவையும்' என்றும் பாடம்.

6. வாவல் - வௌவால். தொல்மரம், ஆலமரம். நைய - கெட. தாங்கல் - (மரத்தை விழுது தாங்கினாற் போலத் தம் குலத்தைத்) தாங்கல். தீச்சொல்-(இவன் பிறந்து இக் குடி கெட்ட தென்னுந்) தீயசொல். நீங்கல்-(தாங்காது) போதல். மடவார்கள் – அறிவில்லாதவர்கள்; பேதைகள்.

7. கலம் - மரக்கலம். தாக்கி - தாக்குதலால்; எச்சத்திரிபு. கரைகடல் - ஒலிக்கின்ற கடல். கால - ஈன; சொரிய. கணிபின் ஒழிய -

அம்பு பின்னே கழிய. முக்கீர் வரை கடந்து கீண்டதென - முக்கீரை ஒருமலை நில்லாதே கிடந்து கிழித்த தென்னும்படி கிழித்து. இஃது இல்பொருளுவமை. நிரை - ஒழுங்கு. இடறி - கெடுத்து. கலம், சங்கு தன்னைத் தாக்குதலால், அச் சங்கு கரைகடலுள், முத்தம் சொரிய, முக்கீர் கீறி, தீவின் நிரை இடறி, இரிய ஏகியது - என்று முடிக்க.

8. ஒளியால் மின், நுடக்கத்தால் கொடி, மென்மையால் மலர், நடையால் அன்னம், சாயலால் மயில்; இத்தகைய அமிர்தன்னார். அமிர்தன்னார் என்றது, அமிர்தம் கட்கினிதாகிய மென்மையையும், தன்னை நுகர்ந்தார் பிறிது நுகராமல் தடுக்கும் மென்மையையும் உடைமையின். சாயல் - மென்மை. துன்னி - பொருந்தி. தீவம் - தீவு. அடைந்தஃது - (அக் சலம்) அடைந்தது; ஆய்தம் விரித்தல் விகாரம்.

9. அரைசன் - அரசன்; இடைப்போலி. அவர்களை - பழகியவர்களை. விடுத்து - போக்கி. ஓரை - முகூர்த்தம். சிலை முளைப்ப - தனுர்லக்கினம் தோன்ற. ஏறி - (மரக்கலத்தை) ஏற. கரை - கரைகிற. கரைகடல் அழுவம் - கரை அண்ணிதான கடற்பரப்பு. ஐஞ்ஞூறு உரை உடைக் காதம் - ஐஞ்ஞூறு என்கிற வார்த்தையை யுடைய காதம். சார்ந்து - சார. இனி, மரக்கலத்தின் தொழிலை மக்கள்மேல் ஏற்றியும் கூறுவர்.

10. களித்தலை மயங்கி - களியிடத்து மயங்கியிருந்த அளவிலே. கலந்து - பரந்து. உலைந்து - தொலைந்து. உரறி - முழங்கி. கூற்றும் உலைந் தொழிய, வெம்பி, வெடிபடமுழங்கி, (சிறிதே) உரறி நின்றிடிப்ப என்க. நாய்கன், சீதத்தன்.

11. எண்திசை - எட்டுத்திக்கு. வளி - காற்று. கலாவி - கலந்து. பவ்வம்-கடல். மேல் எழுவது - மேலே எழும் ஊழியிறுதியை. குளிறி-முழங்கி. செற்றம் - கோபம். தெய்வம்.....போலும் - தெய்வங்கொண்ட தொரு சினம்போலேயிருந்தது. குலுங்கன்மின் - அசையாதீர்கள். கூறும்-கூறுவான்.

12. 'இடுக்கண் வருங்கால் நகுக'-குறள் 621. இடுக்கணை - துன்பத்தை. அரியும் - அறுக்கின்ற. எஃகு ஆம் - வாள் ஆகும். இருந்து - (அங்ஙனம் நகாது) இருந்து. அழுது உய்ந்தார் யாவர்-அழுது பிழைத்தவர் ஒருவரும் இல்லை. வடுப்படுத்து - குற்றப்படுத்தி. வருப வந்துறுங்கள் - வருந் தீங்கும் நன்றும் வந்தே சேரும். கள், அசை. என்னை - (பெறுவது) யாது? 'ஆண்மை வடுப்படுத்து என்னை' என்க.

13. ஆடகம் - ஒருவகைப் பொன். அலங்கல் தெண்ணீர்-துளங்குகின்ற தெளிந்தநீர். கூடு அகம் கொண்ட - உடம்பு உள்ளே கொண்ட. முக்கீர் அழுந்தினும் - கடலுள் மூழ்கினாலும். உய்வர் - பிழைப்பர். நல்லார்-மகளிர். பாடகம் - காலில் அணியும் ஒருவகை அணி. பாடகம் ஒரு கம்பியாய்ப் பல முடக்காலே போக்கும் வரவும் உண்டானாற்போலத் தோன்றிக் காலை விடாதே கிடந்தாற் போல, பழவினையென ஒன்றேயாய் அது நல்வினை தீவினை என இரண்டு போல் தோன்றி இவனைச் சூழ்ந்து கிடக்கும்.

பாடகம் போலப் பழவினை ஒருவனைச் சூழ்ந்து கிடக்கும்; நல்வினையால் வாணாள் உலந்திலதேல், முந்நீர் அழுந்தினும் பிழைப்பர்; தீவினையால் வாணாள் உலந்ததாயின், உயிர்க்குக் காவலாகிய சிறிது நீரும் கட்புலனாகாமல் கொல்லும்.

14. பருமித்த - பண்ணின. பண்ணுதல் - (பலதிறப்பட) அலங்கரித்தல். பையென - மெல்லென. கவிழ்ந்து - தலைசாய்த்து. மதலை - கப்பல். குருமித்து - முழங்கி. கூம்பு இற - பாய்மரம் முறிய. நிருமித்த - நினைத்த. உரும் - இடி. உள்ளவர் - (கலத்தில்) உள்ளவர். ஒருங்கு மாய்ந்தார் - சேர மறைந்தார்.

15. ஆளிய: அ, அசை. தாள் - முயற்சி. ஓர் மகன், தரன் என்பவன். எனக்கு உற்ற - எனக்குப் பொருந்திய வருத்தங்களை. உற்ற, வினையாலணையும் பெயர். கேண்மினம்: அம், அசை. தொடர்ந்து - இடைவிடாது. 'கேண்மின்' என்றும் பாடம் உண்டு.

16. மதவலி - மிக்க வலியையுடையவன், சீதத்தன். திளைத்தல் - அறாதொழுகுதல். ஊனம் இல் உரை - குற்றம்படாத மொழி. இவனாற் பெறுதல் கருதுதலின்.

17. விஞ்சைகள் - வித்தைகள். விளிந்த - கெட்ட. எஞ்சிய - (நின்னை) நீங்கிய. வான் - சிறந்த. இமைப்பினுள் - ஒரு மாத்திரையில். மறித்து - (கெடுதியை) நீக்கி; மீட்டு. குழைந்து - கெட்டு, வருந்தி. நினையன்மின் (ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி) - பலகால் நினையா தொழிவீராக.

18. உரை - ('தருகுவன்' என்னும்) வார்த்தை. அகங்கொள்ள - மனங்கொள்ளும்படி. வரையகம் ஏற - இம் மலையிடத்தே ஏறும்படி. வலிமினம் - துணிக. அம், அசை. மேழகம் - ஆட்டுக்கிடாய். மைந்தன், சீதத்தன்

19. மிடைந்து - நெருங்கி. மாகத்து - ஆகாயத்தில். வகுக்கலுற்றால் - வகுத்துக் கூறத்தொடங்கினால். 'கரியதொன்று நாகந்தான்,' என மாறுக. நடுங்க - வருந்தும்படி. பாகமே - ஒரு பகுதியே. இருளுக்கு நாகமும் வெள்ளிக் குன்றுக்கு மதியமும் உவமைகள்.

20. நாகம் - பவணலோகம். மழை தங்கும் இருவர்: தரன் கதியால் தங்குதலும், ஸ்ரீதத்தன் கொடையால் தங்குதலும் கொள்க. மழை தங்கும் மாடம் என்றுமாம். மின் அவிர் - மின்னலைப்போல் ஒளிவிட்டு விளங்குகின்ற. இழிந்து - இறங்கி. புக்கு - (தரன்மனை) புகுந்து.

21. பயந்தஞான்றே - பெற்ற அன்றைக்கே. எண் இடம் இன்றி - எள் இட இடம் இன்றாக. 'எள்ளுப்போட இடம் இல்லை' என்பது ஒரு பழமொழி. இறை - தங்குதல். அண்ணல் - தலைமை. அருங்கல வெறுக்கை - அரிய ஆபரணங்களாகிய செல்வம்.

22. மந்திரத்தரசன் - வித்தியாதர வுலகத்தரசன் கலுழவேகன். வல்லே - விரைய. நிமித்திகன் - சோதிடன்; கணி. அந்தரத்து - ஆகா-

யத்து. கோளின் - கிரகங்களால். இந்திரதிருவில் - வானவில். குலவிய - வளைந்த. பான்மை - நல்வினைப் பயனெல்லாம்.

23. என் வரவு-(சீதத்தனைக் கொண்டுவந்த) என் வரவு. இசைக்க-(மன்னனுக்குச்) சொல்லுக. போழ்ந்து உழுது சேந்த - பிளந்து உழுத லாலே சிவந்த. தானத்தில் - (அரசர் இருத்தற்குரிய) இடத்தே.

24. முதிர் பெயல் - மிக்க பெய்தலையுடைய. மூரிவானம் - வன்மையை யுடைய மேகம். "ஒப்ப, நாண, ஏய்ப்ப, தந்தை சுற்றம் வினவி, இதுவுஞ் சொன்னன்'—என்க. வான் சத்தத்திற்கும், முரசு முழக்கத்திற்கும், மாரி கேட்டற்கு இனிமைக்கும் உவமை.

25. எமர் நுமர் எழுவர் காறும் - எமரெழுவர், நுமரெழுவர் அளவும்; ஏழு தலைமுறையாக. வச்சிர யாப்பு - வச்சிரத்தால் தலையிட்ட எழுத்து. ஊழ் - விதி. அறன் - சமயம்; ஜினதருமம். இரண்டு இல்லை-இரண்டு (சாதி) இல்லை.

26. மந்திர மன்னன் - வித்தியாதர உலகத்தரசன். எந்தைக்குத் தந்தை, சீதத்தன்பாட்டன். கேட்ப - (யான்) கேட்டிருப்ப.

27. 'தடங்களில் உடைந்தனைய வெண்டாமரைமலரும் சங்கும் போலும் நம் குடி' என்று மாறி முடிப்பர் உரைகாரர். இது தாய்மைக்கு உவமை; இனி, சங்கு சுட்டாலும் நிறம் கெடாததுபோல, கெட்டாலும் தன் தன்மை கெடாத குடியும் ஆம். உடைந்தனைய - உடைந்த தன்மையவாகிய. கொங்கு - தேன். இரு வடம் - இரண்டு மாலை; அரசமுல்லையும் காவல்முல்லையுங் கருதி இவ்வாறு கூறினர்.

28. காமவல்லி அரு மணிக்கொடி - காமவல்லியாகிய அரிய மணிக்கொடி. நாய்கன், சீதத்தன். திருமணிக்கொடி, தத்தை. ஓரான்-(மகள் என்று) ஓராளை.

29. நின் பதி – உன் பதியாகிய இராசமாபுரம். போகி - போய்; போக என வியங்கோளும் ஆம். இன் இசை - இனிய இசையால். யாவன் - (மூன்று வருணத்திலும்) யாவன். 'அடிப்பணி செய்வல்'-அடிமைப்பணி செய்வேன்: இஃது சீதத்தன் கூற்று. அமர் தேவி. விரும்பிய தாரணிதேவி. தத்தைக்கே தக்கது என்றாள் - காந்தருவதத்தைக்கே (இவ் விழிவு) தக்கது என்று (வெறுத்தக்) கூறினள்.

30. நூற்படு புலவன் - கணி; சோதிடன். நுழைந்து - கூர்ந்து சென்று. 'கடல் வேல் தானை' என மாறுக. வீழ்ந்து - விரும்பி. நேரேன் - உடன்படேனாயினேன். 'கடையினையும், நோக்கினையும், அரியினையும் உடைய கண்'—எனக் கூட்டுக. மதர்வை நோக்கின் - மயக்கத்தைத் தரும் பார்வையை யுடைய. பாற்படும்-ஒருவன் பாற்படும். பான்மை - (அவ்) விதியை. விலக்குகிற்பார் - தடுக்கும் ஆற்றலுடையவர்.

31. அருங்கலப் பேழை - அரிய ஆபரணங்களை (வைத்தற்குச் சமைத்த) பெட்டி. எரி மணி - ஒளி கால் மணி. ஆர்ந்த - நிறைந்த. யவ-

னப் பேழை - யவனதேசத்திற் பெட்டி. தான் தமர் - தானுடைய சுற்றத்தையும். எரிமணி செம்பொன், உம்மைத்தொகை.

32. அரக்கு - இங்குலிகம். சிவப்பாற் குவளையையும், கூர்மையால் வாளையும் போன்ற கண். பரப்பமை காதல் - பரவுதல் பொருந்திய அன்பு. தாயர் - நற்றாய் முதலான அறுவகைத்தாயர். கொண்டு - கொள்ள. திருப் புறக்கொடுத்த - இலக்குமியைப் போகவிட்ட. கோயில் - (கனுழவேகனது) அரண்மனை. மடந்தை, காந்தருவதத்தை. போக - போதலால்.

33. புரிந்தனைய - வடிவுகொண்டனைய. தேவி, தாரணி. நலை - வருத்தம். அதிபதி, கனுழவேகன். 'வலம்புரி சான்ற முத்தம்ம ண்மிசையவர்கட்குப் பயன்தரும்; தான் எப் பயனையும் எய்தாது. மகளிரும் தாயர்க்கு அத்தகையர்' என முடிக்க.

34. தளிரியல் - தளிரின் தன்மை வாய்ந்த தத்தை. மழலை யிளங்கிளி என மாறுக. ஊகம் - கருங்குரங்கு. வளர்த்தலின் 'பொன் பூண ஊகம்' (பூண் அணிந்த கருங்குரங்கு) என்னப்பட்டது. மஞ்ஞை - மயில். மந்தி - பெண்குரங்கு. பொறிப் புறவம் - புள்ளிகளையுடைய சித்திரப் புரு. தளிரியல், மானினம் முதலாக எண்ணியவெல்லாம் தன் பக்கத்தே சூழ்ந்துசெல்லப் போய் விமானத்தைச் சேர்ந்தாள் என்க.

35. முகில் கீறி - மேகத்தைக் கிழித்து. திங்கள் சிகை வைத்தே - இளம்பிறையைத் தலையிலே வைத்தலால். மாடமது: அது, பகுதிப்பொருள் விகுதி. வார் - நீண்ட. வள்ளல், சிவபெருமான். நாடி - (எங்கும்) - நாடுதலால்; நாசி (வீட்டின் உறுப்பு) என்பாருமுளர். நேடி - (மேலெல்லையைத்) தேடி. நிமிர் தன்மையின் - நிமிர்ந்த தன்மையாலே. நேமியையும் - திருமாலையும்; சக்கரத்தை யுடையவன். 'மாடமது சிகை வைத்தே, வள்ளலையும் ஒக்கும்; முக நான்கதனின் நாடி நான்முகனை ஒக்கும். நிமிர் தன்மையினின் நேமியையும் ஒக்கும்' என முடிக்க. தன்மையினின்: இன், அசை.

36. அண்ணல், கட்டியங்காரன். கடி - காவல். விண்ணக முழக்கு - மேகத்தின் முழக்கம். எருக்கி - தாக்கி. கடிப்பு - குணில், குறந்தடி (Drumstick).

37. வெல்வான் - வெல்ல வேண்டி. துவன்றி - நிறைந்து; நெருங்கி. 'துவன்று நிறைவாகும்'. கோணம் - குறுந்தெரு. மறுகு - நெடுந்தெரு. குச்சென நிரைத்து - பாவாற்றியென இடைவிடாது நிரைத்தலால். மத நசையின் - கள் விருப்பத்தால். மதுகர ஈட்டம் - தேனீக் கூட்டம். இது, வண்டுகள் வருந்தத் தேனை ஒருவன் கொண்டுபோமாறுபோல், இவர் வருந்தச் சீவகன் கொண்டுபோதல் கருதிற்று.

38. மண்டலம் - வட்டம். மாசு இல் - மறுவில்லாத. மதி புடை வியாழம் - மதியின் பக்கத்து (நின்ற) வியாழனை. குண்டலத்திற்கு வியாழனும், முகத்திற்கு மதியும் உவமைகள். கொடி, தத்தை (உவமையாகு-

பெயர்). தோழி, வீணுபதி. விரை குழல்-(இயற்கை) மணத்த கூந்தல். விரைகுழல், தொகுத்தல் விகாரம். நீவி - கோதி. பண்டு இயல் மணம் - பண்டு (உலகில்) இயலும் மணங்கள். அம் மணங்கள், பிரமம் முதலிய எண்வகை மணங்கள். பரிவு அற - (அவளுக்கு நாணல் வருந்தன்பம் நீங்க.

39. மலிர - நிறைய. உரோணி, உரோகிணி. பொன் ஆட்சி - வியாழக்கிழமை. ஆட்சி - கிழமை. வீணை வாட்போர் - வீணையாகிய வாட்போரின். கலாம் - மாறுபாடு. காண்டும் - காண்பேம்.

40. பசுங்கதிர்க் கடவுள், சந்திரன். யோகம், (சந்திராபரணம் என்னும் நூல். இது சைன நூல் மரபு. விசும்பு இவர் கடவுள், வியாமூன். அலங்கல் ஐம்பால் - மாலையை (அணிந்த) கூந்தல். அரிவை, பதுமை. நாய்கன், சீதத்தன். விசும்பு – மேகத்தை. 'விழுநிதியை விசும்பு போல் சிதறினன்' என மாறுக.

41. மண் - மார்ச்சனை. கனை - திரண்ட. (மலைபடு - 117). விம்ம - ஒலிக்க. வளை துவைப்ப - சங்கம் ஏங்க. வள் வார் - சிறிய வார். 'வள்வார் முரசம், கண்களோங்து இடியின் வெம்பி கடலென ஆர்ப்ப' என்க. விண் - தேவர். தோளி, தத்தை. பண் கனிந்து உருகு நல்யாழ்- பண் முற்றுபெறுதலானே (கேட்டோர் நெஞ்சு) உருகுதற்குக் காரணமான சிறந்த யாழ். யாழ்ப்படை பொருது உடைக்கலுற்று - யாழினை உடைய (மூன்று வருணத்துப்) படையையும் கெடுக்கலுற்று. 'தோளி, கெடுக்கலுற்று, முழவம் விம்ம, வளை துவைப்ப, முரசம் வெம்பி ஆர்ப்ப, பேரந்தாள்-என மாறிக் கூட்டி முடிக்க.

42. கண்ணடி - கண்ணாடி. பதாகை - பெருங்கொடி. விரிந்து - ஒளிபரந்து. மேயும் - கெடுக்கும். கும்பம் - நிறைகுடம். சூன்று - தோண்டி. கதிர் கொண்டு - கிரணத்தை வாங்கிக்கொண்டு. பொன் கதிர் பெய் கற்றை - பொற்காம்பாற் கதிரைப் பெய்கின்ற கவரியை. புணர் கயல் - இரட்டைக்கயல். கண்ணாடி, பெருங்கொடி, தோட்டி, விளக்கு, முரசு, பூர்ணகும்பம், வெண்சாமரம், இரட்டைக் கயல் - இவை அட்ட மங்கலம் எனப்படும். கண்ணாடி முதலிய அஷ்டமங்கலங்களாகிய இவை முன்னே போந்தன என்க.

43. சிலைத்தொழில் - ஏறிட்ட வில். சிறுநுதல், காந்தருவதத்தை; பண்புத்தொகையன்மொழி. ஏறிட்ட விற்போலும் நுதலையுடைய தத்தை என இயைக்க. தெய்வப் பாவை - தெய்வத்தாற் செய்த கொல்லிப் பாவை. கலைத்தொழில் - இசைக்கலைத் தொழில். அத் தொழில்தான் பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என எட்டுவகைப்படும். எழீஇ - (யாழை) வாசித்து. பொழில் - சோலைகள். குரங்கின - வளைந்தன. பறவை - (இசையறிவிற் சிறந்த) கின்னரப்பறவை. இப் பறவைகள் இசையறிவிற் சிறந்தனவாய் ஆணும் பெண்ணும் பிரியாது உடனிருக்கும் இரட்டைப் பறவைகள்.

'சிறுதுதல், பாவைபோல் (இருந்து) எழீஇப் பாடினுள். பொழில் குரங்கின ; தூண் தளிர் ஈன்ற; பறவை வீழ்ந்த' என முடிக்க.

44. கொடி - ஒழுங்கு. கடி - விளக்கம். விம்மாது - வீங்காது. மணி எயிறு - முத்துப்போன்ற பற்கள். வீணை நாவின் - (சாரீர) வீணைக் குரிய நாவாலும். அரசர் முதலியோர் 'புருவம் ஏரு ; கண்ணும் ஆடா; மிடறும் விம்மாது; எயிறும் தோன்ரு ; இவள் பவளவாய் திறந்து பாடி-னுளோ, வீணை நாவின் நவின்றதோ' என்று மைந்தார் என்க.

45. நீரினர் - தன்மையினை யுடையார். வசைத் திறம் - பழிப்பின் கூறுபாடு. யாழ் எழீஇ - யாழை வாசித்து. விசைத்து - உச்சத்தில். புள் எலாம் - கின்னரப் பறவைகள் எல்லாம். அசிப்ப போன்று - (அவரைச்) சிரிப்பனபோன்று. அசிப்ப (ஹவிப்ப), வடசொற்றிரிபு.

46. மாதர், காந்தருவதத்தை. கைக்கீதத்தால் - யாழ் வாசினை-யால். கேள்வி - அறிவு. போதர - (மண்டபத்தின் உள்ளே) புகுதும்படி. பாடினுள் - (கண்டத்தால்) பாடினுள். 'மாதர் யாழ்தடவர வந்த கேள்-விக் கின்னரம், மைந்தர் கீதத்தால் மீண்டன. போதரப் பாடினுள்; புகுந்தன. தாரினர் பாடப் போயின' என்று மாறுக.

47. தேன் இனம் - வண்டின் கூட்டம். கோதை, காந்தருவ தத்தை. முரலுதல் - பாடுதல். பாட - (கண்டத்தாற்) பாட. எழால்வகை - யாழின் கூறுபாடு. எரி மலர் - முருக்கிதழ். செவ்வாய், தத்தை. வீரர், அந்தணர். மைந்தர் - (அரச) குமாரர். நரம்பிசை கொள் பாடல் - நரம்-பின் இசையைக் கொண்ட கண்டப்பாடல். பொன்னுட்கு, தத்தைக்கு. உடைந்தனர் - தோற்றனர். 'அந்தணாளர்க்கு அரசு வரைவின்றே' என்றதனால், அவரை 'வீரர்' என்ரூர்.

48. சுரு - மகர மீன். கொடுங்குழை - வளைந்த (மகர வடிவாகப் பண்ணின) குழை. சுழன்று - அசைந்து. எருத்து - கழுத்திலே. அலைத்-தா - விழும்படி. அரு - (செற்றம்) அறுத; சினந்தணியாத. தெரியலான், கட்டியங்காரன். அழன்று - எரிந்து. ஐயென - வியவாகிற்க. 'ஐ வியப் பாகும்.' மத்திகையால் - குதிரைச் சம்மட்டியால். அருவி - அடித்து. அண்ணல், சீவகன். மனம் பொலிவு எனும் - மனத்தை (அண்ணல் தன்) பொலிவு எனுகின்ற. எனவே, சீவகன்பொலிவு கட்டியங்காரன்-மனத்தைக் கெடுசெய்தது என்க. 'மத்திகை' என்றலின், கையி லிருக்கும் (மணிக்கை) என அடைகூறினர்.

49. தடங்கணுள், காந்தருவதத்தை. நெடுங்கணுள், வீணைபதி. நெடுங்கணுள்தான் என்க. எழினியை அவ் வீணை யொன்றினை நீக்கி - உறையை (உடைய உயர்ந்ததாகிய) அவ் வீணையொன்றைமட்டும் 'நீக்கி-வைத்து. உய்த்து - (குற்றமுடைய பல வீணைகளைச்) செலுத்தி. மொய்ம்பு வலிமை. மொய்ம்பினுன், சீவகன். கொண்டு - (அவற்றைக்) கைக்-கொண்டு. கிடந்த - (பரந்து) கிடந்த. இளக்கலுற்று - அறிவிக்கலுற்று.

50. தீமை - குற்றம். சிறிதலாப் பொழுதும் - நெடும்பொழுதெல்-லாம். ஓதி - ஆராய்ந்து. புரி நெகிழ்த்து - முறுக்கை உடைத்து. உரோமம்-

(நரம்பினுள் இருந்த) மயிரை. காட்ட - காட்டுதலின். ஒதி, தத்தை. செல்வனுக்கு, சீவகனுக்கு. என்ன - என்று (அவையத்தார்) கூற. மைந்தன், சீவகன். நபுலன், சீவகன் தம்பி. வாங்குபு - வாங்கி. வாங்குபு கொண்டான் என்க.

51. பணி வரும் - வாசித்தற்றொழிலிலே வரும். பத்தர் - யாழின் ஓர் உறுப்பு. வாள் ஆர் - ஒளி பொருந்திய. மாடகம் - நரம்பை வலித்தல் மெலித்தல் செய்யுங் கருவி. காளை, சீவகன். கடலகம் - உலகம். 'காளை, யாழ் கொண்டு வளைக்கலுற்றான்' என மாறுக.

52. குரலாக-செம்பாலையை. விரல்-விரலால். கீதம் - யாழ்ப்பாடலை. மிடறு என - கண்டப்பாடல் என்றெண்ணி. தெரிதல் தேற்றா (தேறல் தெரியார்) - (கருவி என்று) தெளிதலை அறியாராய். புள்ளும் - (கின்னரப்) பறவையும். மாவும் - (அசுண) மாவும். ஓர்த்து - யாழ் வாசித்த நிலையைக் குறித்து. எழீஇ - ஆலாபனஞ் செய்து.

53. பருந்தும் நிழலும் - பருந்தும் அதன் நிழலும். பருந்து பறக்குமிடத்து முறையே உயர்ந்து, அந் நிலத்தின்கண் நின்று ஆய்ந்து, பின்னும் அம் முறையே மேன்மேல் உயர்கின்றாற் போலப் பாடவேண்டுதலின், அஃது உவமை யாயிற்று. சேர்ந்தன - வாய்த்தன. 'விருந்தாகச் சேர்ந்தன' என்றார், இதற்குமுன்பு பிறரிடத்தில் இல்லாது, இவனிடத்தே காண்டலின். "கிலித்தொழில்" "கருங்கொடி" (43, 44) என்னுங் கவிகளால் தெய்வத்தன்மையான பாட்டுடையள் என்று கூறிவைத்து, ஈண்டுக் கற்றடிப்படுத்தாதாரைக் கூறுமாறு போல, "விருந்தாக யாழ் பண்ணி" என்றதற்கு, யாழ் பண்ணும் முறைமையன்றி என்று கூறுதல் தேவர்கருத்தன்மை உணர்க - என்பர் உரைகாரர். வீணை என்றது, யாழையும் பாட்டையும். இள மயில் : இளமை, குணம். மயில் காரிணைக் கருதியிருந்தாற் போல, இவளும் புணரும் நாளினைக் கருதியிருத்தலின், மயில் போ லென்றார்.

54. பண் ஒன்று பாடல் அது ஒன்று - (அவள் பாடின) பாட்டும் அதற்கேற்ற யாழும் ஒரு திறமாய் இருந்தன; (அவன் பாடின) பாட்டும் யாழும் வேறொரு திறமாய் இருந்தன. 'இத் தொடர்க்கு, யாழும் மிடறும் வேறுபட்டது என்றும், 'விண்ணின் றியங்கி' என்றதற்கு அந்தர ஓசை என்றும் கூறுதல் தேவர்கருத்தன்மை உணர்க - என்பர் உரைகாரர். விண் - உள்ளாளத்திற்குரிய மூலாதாரம் தொடங்கிப் பிரமரந்திரத்தளவு நின்ற வெளி. நடுநடுங்கி - நடுக்கம் சேர்தலால். மிடறும் விண் நின்று இயங்கி நடுநடுங்கி எண் இன்றி மாதர் இசை தோற்று இருந்தனள் - (பின்பு கருவி ஒழிந்த பாட்டும்) விண்ணிலே நின்று இயங்கி (அக்காலத்தே) நடுக்கத்தைச் சேர்தலாலே, வாதிற்கு எடுத்த கீதத்தில் சிறிது குறைந்து தத்தை இசை தோற்றாள். உள்ளாளத்தில் கம்பிதம் கலத்தலின், குறையாயிற்று. காமத்தால் கலங்கி இவள் தோற்றாள் என்னின், சீவகனுக்கு இசைவென்றியின்மையும் உணர்க என்பர். 'தோற்பான் இருந்தாள்'; தோற்றிருந்தனள்' என்பவற்றை நோக்கின், தத்தை வேண்டுமென்றே தோற்றனள்

என அறியலாகும். மண் - (யாழைப்) பண்ணி வாசித்தலே. 'பல்வளைக்கை மெல் விரலும்' என்க. நரம்பின்மேல் நடவா - யாழ்நரம்புடன் நடக்க மாட்டாவாயின.

55. வெள்ளிலே - வெற்றிலே. ஒள்ளியன், திசைச்சொல் (கன்னடச் சொல்). ஒள்ளியன் - நல்லன். உவா - பௌர்ணமி நாள். வேறு காணிய - வேறுபடுதலைக் காண வேண்டி. அரசர்க்குக் கள்ளரும் சீவகர்க்குப் புலியும் உவமை. உள்ளகம் புழுங்கி - மனம் புழுங்கி. மன்னன், கட்டியங்காரன். 'காவல் மன்னன், அகம் புழுங்கி, கள்ளராற் புலியை வேறு காணிய, மன்னர்க்கெல்லாம் (சில தீமொழிகளே) உரைத்தனன்'. மாது, ஓ - அசைநிலை. 'கள்ளா வா, புலியைக் குத்த' என்பது ஒரு பழமொழி. 'புலியை ஏறு காணிய (புலியின் ஏற்றத்தைக் காண) என்ற பாடம் சிறக்கும்.

56. இசையினில் - இசையால். வேறும் என்னின் - வெல்வோம் என்று நீர் கருதினால். வசை - பழியும் பாவமும். வந்த ஆறே - வந்த வழியே. திசை முகம் - திக்கிடங்களிலே. வல்லே படர்க - கடுகப் போவீராக. 'இசையினில் தோற்றும், யாணையால் வேறும்' என்னின் இசைவ தொன்றன்று. அரசர்க்கெல்லாம் வசையுடைத்துக் கண்டீர். தொட்டாற் சுடுவதன்றே தீ. இதனை யான் இரந்து சொன்னேன். வல்லே திசைமுகம் படர்க' என மாறி இயைக்க. 'விலங்கினது அறிவும் நுமக்கின்று' என்றன் பதுமுகன்.

57. வாணிகமொன்றும்-(உனக்கு உரிய)வாணிகம் ஒன்றும். தேற்றாய் - அறியாய். 'ஊண் இகந்து ஈட்டப்பட்ட முதலொடும் கேடு வந்தால்' என மாறுக. ஊண் - உணவை. இகந்து - கைவிட்டு. ஈட்டப்பட்ட - திரட்டப்பட்ட. ஊதிய ஒழுக்கின் - ஊதியமாகிய நடப்பின் மேலே. ஏண் இகந்து - திண்மையைக் கைவிட்டு. இலேசு நோக்கி - (இரண்டையும் இழப்பதில் முதல் பெறுகையும்) ஊதியம் என்று பார்த்து. இரு முதல் கெடாமை - பெரிய முதல் கெடாதபடி. 'ஊண் இகந்து ஈட்டப்பட்ட, முதலொடும், கேடு வந்தால், ஊதிய...கொள்வார் (நின் குலத்தோர்;) (நீயும் அது செய்யாது போர் குறித்து எழுதலின்) வாணிகம் ஒன்றும் தேற்றாய்; (இனி) நின் ஒழிய சேண்...போ'; என்றார் (பகைமன்னர்)' - என்று மாறி முடிக்க. சேண் இகந்து - நெடுந் தூரத்தே நீங்கி. செறிதொடி ஒழிய - காந்தர்வதத்தையைக் கைவிட்டு. எறிதொடி, வினைத்தொகையன்மொழி. உய்யப் போ - (நின் உடலாகிய முதலைக் கொண்டு) பிழைக்கப் போ. சீவகனுக்கு முதலும் காந்தர்வதத்தைக்கு ஊதியமும் உவமை. இச் செய்யுள் பகையரசர் கூற்று.

58. கொடுத்து-(பிறர்க்குக்) கொடுத்து. அவர்உடைமை கோடல் - அவர்களுடைய உடைமைப் பொருளைக்கொள்ளுதல். எம்முடையவர்கள் - எங்குலத்தவர். அம் முடி - அழகிய மோலி. அரசர்க்கெல்லாம் - அரசராகிய உங்கட்கெல்லாம். திரு - வீரமகள். தேசு - புகழ். இச் செய்யுள் சீவகன் கூற்று. கொள்வல் - கொள்வேன். பண்டமாற்றுச் செய்தல் வணிகர்தொழில். இச் செய்யுளின் நயத்தை அறிந்து மகிழ்க.

59. மருப்பு - கொம்புகள். இரும் தடக்கை - பெரிய வலக்க துதிக்கை. தோழர் : சீதத்தன், புத்திசேனன், பதுமுகன், தேவதத்தன் என்போர். மும்மதம் - கன்ன, கபோல, பீச மதங்கள். ஏழுயர் சீவக போதகம் – இசையேழினும் உயர்ந்த சீவகனுகிய யானை. யானைக்கு உத்தம இலக்கணம் ஏழு முழ உயரம். இவன் வீணை வென்றமையின் 'ஏழுயர் போதகம்' என்றார்.

'ஏழுயர் போதகம், தடக்கை நந்தட்டனை, இரு மருப்பு நுவல விபுலராக, நண்பர்நால்வர் நான்கு நற்றூளாக, மும்மதம் தேரும் குதிரையும் காலாளுமாக, அரசராகிய ஆனைத்திரளுடனே போர் தொடங்கிற்று' என முடிக்க. முற்றுருவகம்.

60. '(தோழரும் முருகு...என்னவே, தெய்வதம் வணங்குபு, இட்டு, எங்கணும் படுமழை (போல்) எய்கணை சிதறி, மொய் அமர் மலைந்தனர்' என்று மாறிக் கூட்டுக. செம்பொன் வாயுள் இட்டு - (இறத்தல் குறித்துப்) பொற்றகட்டைத் தம் வாயுள் இட்டு. பொற்றகடுகளைத் தம் வாயுள் இட்டுக்கொண்டு தலைவனை வாழ்த்துதல் முதலியவற்றை 'லோகாபிஸாரம்' என்பர் வடநூலார். 'காஞ்சனத் தளிவம் வாய்க்கிட்டு' (சிந்2303) என்னுமிடத்திலும் இக் கருத்தைக் காண்க. சிதறி- சிதற. அமர் மலைந்தனர்- போரை மேற்கொண்டனர்.

61. 'பௌவம்- கடல்நீரை. மேய்ந்து - குடித்து. சூல் முற்றி - கரு முதிர்தலாலே. விசும்பில் நின்ற - ஆகாயத்தில் (மாறாது) நின்ற. மாரியின் - (பருவ) மழைபோல. மறைவலாளன் - அந்தணனுகிய புத்திசேனன். பொன் நிறம், பொனிறம் என விகாரம். 'போர் நிறம்' பாடமாயின், போரொளியாம். நிற வேலையுடைய மன்னர் என்க.

62. இன் இயம் - இனியவாத்தியங்கள். ஆர்ப்ப - முழங்க. திகழ - வளரும்படி. வேதம் - வேத மந்திரங்களால். துன்னிர் - தனக்குச் செறிந்த அந்தணர். பலாசிற் செய்த -புரசமரத்தாலியன்ற துடுப்பின் -தருவியால் (கரண்டி). வேட்ப-ஓமஞ்செய்ய. சொரிந்தனன்-(சீதத்தன்) வார்த்தனன். வீரன், சீவகன். மூன்னுபு-கருதி. வெள்ளி-சுக்கிரன். 'முருகனன்னன், இயம் ஆர்ப்ப, மூன்னுபு துன்னினர் துடுப்பின் நெய் ஈண்டு எரிதிகழ, வேதம் சொரிந்து வேட்ப, வெள்ளி முளைத்தெழ, நீர் சொரிந்தனன்; வீரன் எற்றன்' என முடிக்க. மின் இயல்-ஒளி விடுகின்ற.

63. மந்திரத்தரசன்-வித்தியாதர அரசன். பாவை, காந்தருவதத்தை. சிறுவன், சீவகன். கடிவினை-மணச்சடங்கு. நொடியின்-சொன்னால். அந்தர விசும்பில்-விசும்பாகிய அந்தரத்தில். என்பது-என்று கூறுகின்ற கூற்று. கலுழவேகன்மகளை கந்துகன்மகன் வேட்ட மணவினையைக் கூறின் இந்திரனுக்கும் இது கூடாதென்று பேசுகின்ற பேச்சு நடந்தது என்க.

64. பொறியின் வகை வண்ணம்-இருவினையின் கூறிய இயல்பு. நீர்க்கடலும் தேம்புனலைச் சென்று தரலின்று-உப்புநீரையுடைய கடலும் இனிய நீரைத் தருதல் ஒருகாலத்தும் இல்லை. மழை யாறு வீங்கு புனல்

வேண்டி அறியாது- மேகந்தானும், ஆற்றிற்கு மிக்க நீரை (இயல்பாகக் கொடுத்தலின்றி உவர்நீரை நன்னீராக்கிக்) கொடுத்தலே விரும்பியறியாது. 'தேம்புனலே.....இன்று என்பதனால், 'கட்டியங்காரன் எக்காலமும் நமக்குத் தீங்கு செய்வான்; இக் குணத்தால் அவனுக்குக் கேடுவிளையும்' என்று கலுழவேகன் கூறினன். 'வீங்கு...அறியாது' என்றதனால், 'நற்குண முடையோர் எக்காலத்தும் பிறர்க்கு இனிமை செய்வாராதலின், தான் (சீவகன்) எக்காலத்தும் பிறர்க்கு இனியவை செய்க' என்றனும். கடல் வேண்டாதிருக்கப் புனல்தானே போனது போம்பொருட்கும், யாறு மேகத்தை வேண்டாதிருக்கப் புனல்தானே நிறைகை ஆம்பொருட்கும் உவமை.

65. மன்பெரிய-மிகப்பெரிய. மாமன், கலுழவேகன். திசைவணங்கி- திசைநோக்கி வணங்கி. அகலாதவனே, தானே. கோதை, காந்தருவதத்தை. இன்பநிலம்-அனுபவிக்குந் துறைகள். 'நனி இயன்ற' எனக் கூட்டுக. இயன்றபொருள்- ததுதியான பொருள். சாமி, சீவகசாமி.

பெரிய புராணம்

கண்ணப்ப நாயனார் புராணம்

1. சார்வு அரும்-சாருதற்கரிய. கார்-மேகம். வரை-மலை. அடவி-காடு. அரியார்தம்மை-அரிய சிவபிரானை. ஆரா அன்பு-தெவிட்டாத அன்பு. நீள் இருள்-நீண்ட மனவிருள்; அஞ்ஞானம்; ஆணவமலம்; இரவு என்றுமாம்.

2. கழை-மூங்கில்கள். தரளம்-முத்து. கதிர் நிலவு-ஒளிமிக்க நிலா. ஒருபால் - ஒருபக்கம். முழை - குகை. செய்ய மணி - சிவந்த இரத்தினம். வெயில்-ஒளி. மொய்ப்ப - நெருங்க. தலைஉவாவில் - அமாவாசியை நாளில். குழை-குண்டலம். வெற்பு, காளத்திமலை.

3. விரவு-கலந்த. கான்ற-வெளிவிட்ட. படலை-தொகுதி. இருசுடருக்கு-பரிதிமதிகட்கு. புடைகள்-பக்கங்கள். இரவிருள்-இராக்காலத்திருள்; இரவும் இருளும் என்பாரும் உளர்.

4. ஒளியின்-ஒளிபோல. தீபமா மரங்களாலும்-சோதி விருட்சங்களாலும். இம் மரம் தெய்வத்தன்மை பொருந்திய மலைகளிலும், தபசியர் தங்கும் காடுகளிலும் காணப்படுமென்றும், பகற்காலத்தே கட்புலன் ஆகாதென்றும், இரவில் சோதிமயமாய்த் தோன்றுமென்றும் கூறுவர். ஐந்தும் ஆறும் அடக்கியுள்ளார் - ஐம்புலக் கள்வரின் தீச்செய்கைகளையும், அறுவகைப் பகைவர்களையும் அடக்கியுள்ளவர்களான முனிவர்களின். இரவு ஒன்றில்லை-இராக்காலமென ஒன்றில்லை.

5. கறைப்பொழுது-மாலைக்காலம். மல்கிய யாமம்-(இருள்) நிறைந்த நடுயாமம். சிலம்பு-ஒலிக்கின்ற. வீரர், திண்ணனார். தம்பிரானார்க்கு-சிவபெருமானுக்கு. அமுதுகொண்டு-உணவு தேடிக்கொண்டு.

6. ஏறு கால்-(செங்குத்தான மலைகளிலும்)ஏறுங் காலினையுடைய. விரகினாலே-தந்திரத்தாலே. ஊறுசெய்காலம்-(அவற்றைக்)கொல்லுங்காலம். உருமிகத் தெரியாப்போதில் - உருவம் நன்குவிளங்காத விடியற்காலத்தில். மாறுஅடு-பகைவரைக் கொல்லுகின்ற. வள்ளலே, குடுமித்தேவரை.

7. மொய்காட்டும்-மொய்த்துக் காட்டும். வாங்கி-போக்கி. எய் காட்டில்-எய்ப்பன்றி நிறைந்த காட்டில். காட்டின்மா - ஏனை வனவிலங்குகள். கதிர் காட்டி-கிரணங்களைத் தோற்றுவித்து.

8. பூசனை-பூசை. மை-கருமை. கண்டம்-கழுத்து. மலைமருந்து-மலைமீதெழுந்தருளியுள்ள சிவபிரானார். மருந்தென்றது, பிறவி நோய்க்கு மருந்தென்பதுபற்றி.

9. திருமுன்பு-சந்நிதியில். அநுசிதம்-தகுதியின்மை. கெட்டேன், இரக்கக் குறிப்புச்சொல். அழிவார்-வருந்துவாராகி; முற்றெச்சம்.

10. மேவ-(சந்நிதிக்கு) வர. நோவா-(மனம்) நோவாத. அஞ்சா-பயப்படாத. மேவ நோவா அஞ்சா - பெரிதும் (மனம்) நொந்து (இந்த அரு

சித்திற்கு) அஞ்சி என்றுரைப்பினும் அமையும். புகுத - நிகழ. ஆவது- இசைவது. அலமந்தார்-மனஞ்சுழன்றார்; அலமா, பகுதி.

11. பொருப்பில்-மலையில். சுடர்க்கொழுந்து, சிவபிரான். திருவல-கால்-திருத்துடைப்பத்தால். மாற்றியபின் - இல்லாமற் செய்தபின். திரு-முகலி-திருப்பொன்முகலியாறு.

12. புகுந்தது பழுது-நிகழ்ந்ததாகிய குற்றம்; தோஷம். பவித்திரம் ஆஞ் செயல்-புனிதம்ஆகுஞ் சாந்திகளே. பெறுவனகொண்டு - (காட்டினிற்) கிடைக்குமவற்றைக்கொண்டு. திருமஞ்சனம் - திருவபிடேகம். கழல்-திரு-வடி-. கழல், தானியாகுபெயர்.

13. மறைமொழியால்-வேதமந்திரங்களால். சுடர் - ஒளி. கற்றை-தொகுதி. அங்கணர், சிவபெருமான்.

14. மைவண்ணக் கருங்குமசி-மை நிறத்த கரிய மயிர்.

15. செறி-நெருங்கிய. தறுகல்- கூரிய கல். புனம்-தினைப்புனம்.

16. பயில் விளியால் - (அவ்வவ் விலங்குகள்போல) அழைக்கும் அழைப்பினுல். கலை-மான். பாடுபெற - வருந்துமாறு. அயில்-கூர்மையான. அடி ஒன்றி-அடிகளின் வழியே சென்று. கிடை எய்து -கூட்டத்தை (அம்-பால்) எய்த.

17. பட்ட - இறந்த. படர் வனம்-அகன்ற காடு. சூழல் - இடம். தீக்கடைகோல்-தீக் கடையப்பெறுகின்ற கோல். சுரிகை-பெரிய வாள். உருவி-உறைகழித்து. கல்லைமருங்கு புடைபட - இலைக்கலத்தின் (தொன்னையின்) பக்கமெல்லாம் புடைக்கும்படி. கோல்தேன் - கொம்புகளில் உள்ள தேன-டைகளே. அமைத்தார்-(தைத்து) அமைத்தார்.

18. இந்தனத்தை-விறகை. எரிகடையும் அரணியினில்-நெருப்புக் கடையப்பெறுகின்ற அரணிக்கட்டையினில். பிறப்பித்து - மூட்டி. குட்ட மிட்டு-ஆழமாகச் சதையை வெட்டியெடுத்து. வக்குவன வக்குவித்து-வதக்க வேண்டியவற்றை (நன்கு) வதக்கி.

19. வாய் - கூர்மை. அழிப்பது - துண்டாக்குவது. வகுப்பது- கூறுவது. அவற்றின் ஆய-இம்முறையால் ஆன.

20. எண் இறந்த-கணக்கில்லாத. உணவு-அவியுணவு. கொண்டு-(தான் முன்னே)கொண்டு. ஊட்டும்-பின்பு உண்பிக்கும். வண்ண எரி- செந் நிறம் பொருந்திய எரிக்கடவுள்.

21. திருப்பள்ளித்தாமம்-மலர். மஞ்சனமும்-திருவபிடேக நீரும்.

23. முன்னையின்-முன்கொடுத்த உணவினும். எனம்-பன்றி.

24. அல் - இரவில்.

25. அது - திண்ணனார் செய்த தீமையை.

26. நாணன், காடன் இவ்விருவரும் திண்ணனார்தம் நண்பர். நாகன், திண்ணனார் தந்தை. அணங்குறைவாள், தேவராட்டி. பேதித்து-மாறுபட்டு. நெறி-செயல். குறி வாராமல்-கருத்தின்படி வாராமையின்.

27. வேதகத்து - இழிந்த உலோகங்களை உயர்ந்த உலோகங்களாக மாற்றும் பண்டத்தால். யாக்கைத்தன்பரிசு - உடம்பின் தன்மை. மலம் மூன்று; ஆணவம், கன்மம், மாயை என்பன. அற-அற்றுபோக. அன்பு பிழம்பாய் - அன்பின் உருவமாய். அவர்-அவ் வேடர். கருத்தின் அளவினரோ-கருதி அளக்கும் அறிவினரோ.

28. அன்பனார், திண்ணனார். (29) மின் ஒளி. மவுலி - முடி-வேதியர், காளத்தியப்பர்.

31. அருப்பு - அரும்பு; வலித்தல் விகாரம். வெள்ளக்கால் - வெள்ளத்தின் கால். சேய் இளம்பருவ அடியின் - முருகனின் இளமைப் பருவத்துக் காலடியினும்.

32. கொள்கலம் - பாத்திரம். ஒரு முனிவன், சந்து முனிவன். செவி உமிழும் - காதினுல் வெளிவிடும்.

33. புனை-சாத்துகின்ற. எம் மலரும்-எத்தகைய உயர்ந்த மலரும். தலையால் இடும் - குஞ்சியிற் செறித்து (என்மேல்) போகட்ட. ஒவ்வா - பிடிக்கமாட்டா.

34. மறை - வேதவிதிப்படி. முன்பு தரும்-முன்னுகத் தருகின்ற. திருந்து அவியில் - திருந்திய அவியுணவினும். எய்யும் - (கணைகளை) எய்-கின்ற. சிலை - வில்.

35. மன் பெரு மா-நிலைத்த பெருஞ் சிறப்பினையுடைய. மந்திரம், இருடிகளாற் காணப்பெற்றவை. அகம் நெகிழ - மனம் இளச. அறிவுறு - (பிறிதொன்றனை) அறியாத. நல்ல - நல்லன.

36. பரிவு - அன்பு. புனல்சடிலம் - கங்கையை (அணிந்த) சடை.

37. கங்குலிடை - இரவில். புலர்வு அளவும் - விடியல் எய்து-மளவும். தனி புரவி - விரைந்துசெல்லும் குதிரை.

38. புனல் - நீரில். பிஞ்ஞகனை - தலைக்கோலமுடைய சிவபெரு-மானை.

40. மாறு இல் - குற்றமில்லாத. சென்னி ஏறு நாள்மலர்-தலையில் ஏற்றிச் செறித்த அன்றலர்ந்த மலர். அணையா - அணைந்து.

41. தாழ்த்தேன் - தாமதித்தேன். மொய்த்த - கூட்டமான. நீய புட்கள் - தீய சகுனங்கள். சுண்ட - கெருங்குதலால். உதிரம்காட்டும் - இரத்தம் காட்டும். இது திண்ணனார் அறுபவம் போலும். அத்தனுக்கு, சிவபெருமானுக்கு. அடுத்தது - வந்து புகுந்தது. கெட்டேன் என்றது, கழிவிரக்கம்.

43. குருதி - இரத்தம். நன்னீர் - திருவபிடேகநீர். கொந்து ஆலர் - கொத்தாக மலர்ந்த. பைந்தழை அலங்கல் - பசியதழையால் (கட்-டிய) மாலை.

44. வீழ்வது - பெருகுவது. ஒழிந்திட - நின்றிட. உயிர்த்து - பெருமூச்செறிந்து. அழிந்து - அறிவழிந்து. தேறி - அறிவுபெற்று.

45. வாளி - அம்பு. மாறு ஆ - பகையாக. மீளி - வலிமை. ஆளி முன்னுக - சிங்கம் முதலாகவுள்ள. நீள் இரும் குன்றை - நீண்ட பெரிய காளத்திமலையை. சாரல் - சாரலை. நேடி - தேடி.

46. நாடியும் - தேடியும். மாடு உற - (திருமேனியின்) பக்கமெல்லாம் பொருந்த. வார - பெருக.

47. அடுத்தது - பொருந்தியது. ஆவது - (தீங்கு தீர்க்குந்) தந்திரத்தை.

48. மின்செய் வார் பகழி - ஒளிமிக்க நீண்ட அம்புகளால் (எற்படும்).

49. இனத்திடை-கூட்டத்தைவிட்டு. வெரு - அச்சம். பூதநாயகன், சிவபெருமான். பிசைந்து - கசக்கி. வார்த்தார் - (கண்ணில்) பிழிந்தார், விட்டார்.

50. புண்ணீர் - குருதிநீர். இற்றையின் - இன்றைய. 'இனிச் செயல் என்னே' என்க. ஊனுக்கு ஊன் எனும் உரை-ஊனுக்கு ஊனிடல் வேண்டும் என்னும் பழமொழி. முன்கண்டார் - தினைவுக்கு வரப்பெற்றார்.

51. இடந்து - தோண்டி. இது-(அப்பின கண்)இது. அடுக்கும்-கூடும். மதர்த்து - மகிழ்ச்சியால் பூரித்து. தம் கண்முதல் - தம் கண்களுள் முதன்மையான வலக்கண்ணை. சரம் மடுத்து வாங்கி - அம்பினுல் சூன்றெடுத்த(க்கையினுல்) வாங்கிக்கொண்டு.

52. கொட்டினர் - (மகிழ்ச்சியால்) புடைத்துக்கொண்டார். மதி-உபாயம். ஒன்றிய - பொருந்திய. உன்மத்தர் - பித்தேறினரைப் போல.

53. உலப்பு இல் - நீங்காத. 'உலகில் உம்பர் மேலார், குருதி பாயக் கண்டனர்' என முடிக்க.

54. மண்டும் - பெருகும். கைகண்டேன் - (யான்) அறிவேன்.

55. கண்ணுதல், சிவபிரான். காணும் நேர்பாடு எண்ணுவார் - (கண்ணிரண்டும் தோண்டிவிட்டால், தோண்டிய கண்ணை அப்புதற்கு இறைவனது கண் இருக்கின்ற இடத்தை) உணருங் குறிப்பினராய். தரித்திலர் - பொறுத்திலர். 'ஊன்ற,தேவதேவர் தரித்திலர்' என்று மாறுக.

56. வெள் விடை - வெள்ளிய இடபம். அடுக்கு - முறை. நாககங்கணர் - பாம்பினைக் கங்கணமாக வுடையவர். என்ற-என்றது; ஒருமை பன்மை மயக்கம்.

57. ஐயர் - தலைவர், சிவபெருமான். ஞானமாமுனிவர், சிவகோசரியார்.

58. பேறு-பாக்கியம். ஊறு - துன்பம். ஏறு உயர்த்தவர் - இடபத்தை எழுதிய கொடியை உயர்த்திப் பிடித்தவர்; சிவபெருமான். வலத்தில் - வலப்பக்கத்தில். மாறு-வேற்றுமை; ஒப்புமாம்.

கம்ப ராமாயணம்

விபீடணன் அடைக்கலப் படலம்

1. மாருதி - வாயுபுத்திரன், அனுமான். விநயம் - வணக்கத்தோடு கூடிய; மிக்க நீதியையுடைய என்றுமாம், செவிமடுத்து - கேட்டு. நன்று நன்று - மிக நன்று; உவகைபற்றிய அடுக்கு. பிறரை, சுக்கிரீவன் முதலானோரை. சீரிது - சிறப்புடையது. மேல் - இனிமேல். மாற்றம் - மொழி. ஆரியன் - மதிப்பிற்குரிய இராமன்.

2. கருத்து உற நோக்கி - மனத்தான் நன்கு ஆராய்ந்து. போந்த - (விபீடணன் இங்கு) வந்த. காதல் அருத்தியும் - மனங்கலந்த விருப்பமும்; ஒருபொருட் பன்மொழி. அரசின் மேற்று - அரசினைப் பெறுதலின் மேலது. அவதி - எல்லை. பெருத்து உயர் தவத்தினன் - சிறந்த பல தவத்தினை உடைய விபீடணன். பிழைப்பு - தவறு. பெற்றி - தன்மை. திருத்தியது - நன்கு விளக்கியது. நம்வயின் சேர்ந்த - நம்மிடம் அடைக்கலம் புகுந்த.

3. இனி - இப்பொழுது. உரைப்பது - (வேறுகக்) கூறுவது. என்னை - எதுபற்றி? வடித்து - ஆராய்ந்து. பெற்றி - (நாம் செய்யத்தக்க) ஆலோசனை. அன்று எனில் - தகுதியற்ற தென்றால். வெற்றி பெறுக - வெற்றியே அடைக. வீயாது வாழ்க - இறவாமல் வாழ்க. தோற்க - (இவனுக்கு அடைக்கலம் கொடுத்தலால்) தோல்வியே வருக. வீக - நம் உயிருக்கு இறுதி வரினும் வருக. பற்றுதலன்றி - ஒப்புக்கொள்வதல்லாமல். உண்டோ - (வேறு செயலும்) உண்டுகொல்? அடைக்கலம் பகர்கின்றனை - தஞ்சமெனச் சொல்லிவந்து புகுந்தானை. 'பிறிதொன்றனும் வெற்றியே பெறுக, வீயாது வாழ்க (இவனைக் கைக்கொள்ளுவதனால்) தோற்க, வீக' என்று மாறுக.

4. யாயை-தாயை. தொன்றுவந்து - பலகாலாகப் பழகி. பின்றும் - (அவன் தன் கடமையில்) மாறுபட்டு நடப்பான். பிறிது - வேறுகிய பழி.

5. பிறந்த - (அறிவு) பிறந்த. தூலை - தராசுத்தட்டில். பெரியோன், சிபிச் சக்கரவர்த்தி. பெற்றி - வரலாறு. வாழ்கின்றனை - வாழவிரும்பும் விபீடணனை; துணிவுபற்றிய கால வழுவமைதி. துறந்த நாட்கு - கைவிடுகின்ற நாளைக்காட்டிலும்; உருபு மயக்கம். துன்னினன் - சேர்ந்தவனுகிய விபீடணன். என்றும் இருந்த நாள் - என்றைக்கும் (நான்) அழியாது நிற்கின்ற நாள்.

6. இடைந்தவர்க்கு - அஞ்சினவரும். 'அபயம் யாம்' - நாம் பயமில்லாமற் பாதுகாக்கப்படவேண்டிய பொருளாவோம். வேலை - (பாற்) கடல். இடைந்தவரும், இரந்தவரும், கடைந்தவருமாகிய தேவாசுரர்களை என்க. ஆகி - காக்கச் சமைந்து. கண்டிலீரோ - கேட்டறியவில்லையோ?

உடைந்தவர்க்கு - வலி ஒடுங்கிப்போனவர்க்கு. ஆண்மை - பராக்கிரமம். என் ஆம் - என்ன பயன்படும்?

7. பேடை - பெண்பறவை. பாடுறு - வருத்துகின்ற. பைம்புள் - சிறிய (ஆண்) புறு. வீடு - நற்கதி. வார்த்தை - செய்தி. வேதத்தின் - வேதத்துக் கூறிய பொருள் போலவே. விழுமிது - சிறந்தது. 'கபோத உபாக்கியானம்' என்பது பாரதத்தில் உளது என்பதனை அறிக.

8. போதகம் - யானை, கஜேந்திராழ்வான். கன்றி - கோபித்து. இடங்கர் மா - முதலையாகிய விலங்கு. பொருத-செய்த. அம் ஆதி பரமே - அழகிய ஆதிமூலமே. முடிவுகாண - வரைந்து காணமுடியாத. துடைத்த வார்த்தை - நீக்கின வரலாறு.

9. வருவித்து - படைத்து. தன்னன - தன்னுடையனவாகிய. எவையும்-எப் பயன்களும். ஏமுற-ஏமம் அடையும்படி. பின்னும் -மேலும்.

10. மிடற்று - கழுத்தில். நகை - ஒளி. மழுவாளன் - மழுப்-படையையுடைய சிவபெருமான். நாளும் தஞ்சு என-வாழ்நாளும் குறைவு-பட்டது என்று சொல்லி. தாதைபாற் கொடுத்து- (மார்க்கண்டேயன் என்-னும் மகனை அவன்) தந்தைக்குக் கொடுத்திட்டு. மாற்றும் - உதைத்துத் தள்ளிய.

11. எனக்குச் சரண் யார் - என்னைப் பாதுகாப்பவர் யாவர்? சாம்ப-ஒடுங்க. உனக்கு அரண் ஆவன்-உனக்கு யான் பாதுகாப் பாவேன். வஞ்சி, உவம ஆகுபெயர்; அண்மைவிளி. மூரண் உடைக் கொடியோன் - மாறான குணத்தையுடைய கொடிய இராவணன். கொல்ல - வருத்த. தெய்வம் - தெய்வத்தன்மை வாய்ந்த; பெருமை மிக்க. என் தாதை-எனக் குத் தந்தைமுறையான சடாயு. வழக்கு அன்றுமோ - முறைமையான செயல் ஆகாது போகுமோ? சடாயு இராமன்தந்தையாகிய தசரதனுக்கு உற்ற நண்பனதலின், 'என் தாதை' என்றார்.

12. உய்ய - (தான்) பிழைக்கும்படி. நிற்கு அபயம் – உனக்கு (யான்) அபயம். என்றான் - என்று கூறிச் சரணடைந்தவனது. கையன்-வஞ்சகன். கருத்திலோன் - எண்ணமில்லாதவன்; செய்நன்றி மறந்தவன். மை அற - குற்றம் நீங்கும்படி. நெறியின் நோக்கி - செவ்வையாக ஆலோ-சித்துப் பார்த்தும். மா மறை நெறியில் நின்ற - சிறந்த வேதமார்க்கத்தில் உள்ள. மெய்யினை - உண்மைப்பொருளை. பொய் என்றானும்-பொய் என்று சாதிக்கும் காத்திகனும்.

13. குறித்ததேயோ - குறித்துச் சொன்னதோ? பேதையை – அறிவிலியாகிய இராவணனை. பேணிய - விரும்பிக் கூறிய. விரதப் பெற்றி - வஞ்சனத்தின் தன்மை. பெற்றி குறித்ததேயோ என்க; அபயம் என்றார் வேதியர்க்கு - அபயம் வேண்டிய முனிவர்க்கு. அன்று - அக் காலத்தில். காதையை-செய்தியை. நின்ற - காட்டுகின்ற. கடத்தல் ஆமோ - (நானே) கடத்தல் தகுமோ?

14. காரியம் ஆக - (கருகிய) தொழில் கைகூடட்டும். அன்றே ஆகுக - நிறைவேறுமற் போகட்டும். சீரிய தன்மை - மேன்மை யுண்டாக்கக் கூடிய குணம். பூரியரேனும் - அற்பர்களாயிருந்தாலும். பொன்ரு - அழியாத.

15. 'என்பால் வைத்த காதலால் (அவனை ஏற்கலாகாது என்று) இயம்பினீர்' என மாறுக. கதிரோன் மைந்த - பரிதியின் மகனை சுக்கிரீவா. கோது இலாதவனை - ஒரு குற்றமும் இல்லாத விபீஷணனை.

16. ஐயுறவு - ஐயப்படுதல். நீரும் அளவையாய் - நீங்கும் நிலைமையை யுடையதாக. தேறிய அடைவே - தெளிந்து துணிந்ததுபோலவே. தேறி - தெளிந்து. கைபுகற்கு - சேர்த்தற்கு. அமைவதானன் - உடன்பட்டவன் சுக்கிரீவன். கடிதினிற் கொணர்வல் - (விபீஷணனை) விரைவில் அழைத்து வருவேன். மெய்யினுக்கு உறையுளான ஒருவன்பால் - வாய்மைக்கு இருப்பிடமான ஒப்பற்ற விபீஷணனிடம்.

17. கவியின் வேந்தை, சுக்கிரீவனை. மயிந்தனுக்கு இளைஞன் - மயிந்தன் தம்பி; அவன் துவிவிதன் என்னும் வானரவீரன். தருக - அழைத்து வருக. எதிர்கொளற்கு - எதிர்கொண்டழைத்தற்கு. நிரிகின்ற உள்ளத்தான் - அலைபாயும் உள்ளமுடைய விபீஷணன். அவன்முன் - அச் சுக்கிரீவன்முன்.

18. தூயர் அல்லார் - தூய்மைப் பண்பில்லாக் கீழோர். புல்லலர் - மனம் பொருந்தார். உள்ளந் தூயார் - மனத்தூய்மையுடையார். எதிர்ந்த ஞான்றே - கண்ணிற்கண்ட அப்பொழுதே. பொருந்துவர் - மனங்கலந்த நண்பினராவர். உணர்வும் ஒன்ற - (இருவர்தம்) உணர்ச்சியும் இரண்டறக் கலக்க. ஒருநாள் உற்ற - ஒரேநாளில் பொருந்திய. எல்லி - இரவு. எழுவின் தோளார் - இரும்புத்தூண்போன்ற தோளினையுடைய சுக்கிரீவ வீடணர்கள். 'தூயரல்லார், பழகினும், புல்லலர்; தூயார், எதிர்ந்த ஞான்றே, பொருந்துவர்' என மாறுக.

19. தழுவினர் - தழுவி. முழு முதற்குலம் - மிகச் சிறந்த சூரிய குலம். மூள - மிக. வழுவல் - தவறுதல்.

20. சிங்க ஏறு அனையான் - ஆண்சிங்கம் போன்ற சுக்கிரீவன். கங்குல் - இருள். தாரை கான்ற - (மகிழ்ச்சி) நீர்ப்பெருக்கைச் சொரிந்தன. அங்கமும் - உடலும். அகத்தை மிக்கு - மனத்தைக்காட்டிலும். பொடித்தன - நிறைந்தன. உரோமப் புள்ளி - மயிர்க்கூச்செறிதலான புள்ளிகள்.

21. பஞ்சு என - (தோழியர்) செம்பஞ்சு என்று சொன்னலும். 'பாவியாகிய வஞ்சனுக்கு' என்க. தஞ்சு என - அடைக்கலப் பொருளாக. தகையேன் - பெருமையை அடைந்தேன். 'நாயேன், நாயகன் அருளின், தகையேன்' என்க.

22. மருள் உறு மனத்தினன் - அறியாமை மிக்க மனத்தினனாகிய இராவணன். என் வாய்மொழி - என் உண்மைமொழி. வானத்து உருளுறு தேரினன், சூரியன். ஓடும் - செல்வான். தெருளுறு சிந்தை - தெளிந்த திருவுள்ளம். தேற்றம் - உறுதியான எண்ணம். ஈதாகில் - (அடைந்தோரை காப்பதாகிய) இதுவானால்.

23. தீர்வரும் - நீக்கமுடியாத. செய்ய சிந்தை - நல்லெண்ணம். பேரருளாளர் - பேரருட் பெரியோர். தத்தம் செய்கையில் - அவரவர்க்கு இயல்பில் அமைந்த அருளுங் குணத்தினின்றும். பிழைப்பது - தவறுவது. கார் வரை - கரிய மலை, மந்தரம். நிறுவி - நாட்டி. ஆர்கலி - கடல்.

முன்னிரண்டடியாற் கூறிய பொதுப்பொருளை, பின்னிரண்டடிகளிற் கூறிய சிறப்புப்பொருள் சாதித்து நிற்றலின், இது **வேற்றுப்பொருள் வைப்பணி**.

24. துறவியின் - துறப்பதில். தூயவர்தூணவன், இராமபிரான். உற உவந்தருளி - மிக்க மகிழ்ச்சியோ டேற்றுக்கொண்டருளி. மீளா - இனி என்றும் கைவிடுதல் இல்லாத. மறவினை - அறத்தின் மாறான செயலை. மாய வாழ்க்கை - மாய(ச் செயலைக்கொண்ட) வாழ்க்கை. பிறவியும் - (அரக்கப்) பிறவியையும். பெயர்த்தேன் - விட்டொழித்தேன். பிழைப்பதானேன் - தப்பி உய்ந்தவனுமானேன்.

25. திருத்திய உணர்வு-சீர்திருத்தப்பெற்ற நல்லறிவு. நலனும் தீங்கும் தேரினும் - (ஒருவர்தம்) குற்ற நற்றங்களை ஆராய்ந்தறிந்தாலும். அருத்தியன்-விருப்பமுள்ளவன். தாழாது-காலந்தாழாமல். அறிஞன், விபீஷணன்.

26. பலவுடன்-வேறு பல மலைகளுடன். முடுகிச் செல்ல-விரைந்து வர. மைதவழ்கிரி-மைம்மலை. மைம்மலை வீடணற்கும், மேருக்குன்றம் சுக்கிரீவற்கும், மற்ற மலைகள் வானரவீரர்க்கும் நிரலே **உவமை**யாகக் கொள்க. செய்தவம் பயந்த - நல்வினைப்பயன் கைகூடப்பெற்ற. மரம் ஏழும் நிய - ஏழு மராமரங்களும் தீர்ந்துபோக. எய்தவன்-எய்த இராமன். சூழல்-இடத்தில். எய்த - நெருங்க.

27. மார்க்கடம் - குரங்குக்கூட்டம். வைப்பு - இடம். மருங்கு காப்ப - பக்கத்தில் நின்று காப்ப. பாரின் நாயகன் - நிலவுலகத்தின் தலைவனுகிய தயரதன். நாமம் - அச்சம். சுற்ற - சூழ்ந்து நிற்க. வடவரை-வடக்கிலுள்ள மேருமலை. கார்க் கடல் - கரிய கடல். கமலம் பூத்ததென - தாமரை மலர்கள் மலர்ந்த வென. பொலிவானை - விளங்குபவனுகிய இராமனை. பாற்கடலுக்குக் குரங்கும், இளையபெருமாளுக்கு விற்கை வடவரையும், இராமபிரானுக்குக் கமலம் பூத்த கார்க்கடலும் **உவமை**. பின்னிரண்டடி **இல்பொருளுவமை**. "மார்க்கடம் சூழ்ந்த வைப்பின் இளையவன் மருங்கு காப்ப, நாமப் பாற்கடல் சுற்ற, நிற்ப, கமலம் பூத்தது கார்க்கடல் எனப் பொலிவானுகிய நாற்கடல்... புதல்வனை (வீடணன்) கண்டான்" என்று முடிக்க.

28. அள்ளி - கையால் எடுத்து. மீது - (விண்ணின்)மீது. வீசும் - எறிய வல்ல. அரிக்குலச் சேனை - குரங்குக் கூட்டமாகிய சேனை. காப்பண் - கடலில். தெள்ளு தண் நிரையிற்று-தெளிந்த குளிர்ந்த அலைகளையுடையது. வெள்ளிய கடல், பாற்கடல். பள்ளிதீர்ந்திருந்தான் .என்ன-பாம்பணைவிட்டு வீற்றிருந்ததுபோல. பொலிதரு - விளங்குகின்ற.

இக் கவிமுதல் நான்கு கவிகளிலுள்ள 'பண்பினனை', 'வயங்குவானை' 'மார்பினனை', 'தோளினனை', 'முகத்தினனை', 'சென்னியானை' என்-

னும் இரண்டாம் வேற்றுமை யுருபேற்ற பெயர்கள் 32-ஆஞ் செய்யுளில் உள்ள 'வீரனே' என்பதற்கு அடைமொழிகளாக நின்றன. 27-ஆங் கவியி லுள்ள 'பொலிவானே' என்பதனோடு இவற்றை இயைப்பாரு முளர்.

29. கோணுதற்கு அமைந்த-வளையுந் தன்மைபொருந்திய. கோலம்-அழகு. பூணுதற்கினிய - அணிதற் கேற்ற. பொலி மணல் - விளங்குகின்ற மணற்கூட்டம். வைப்பு - இடம். நீள வெண்மையில் - நீண்ட வெண்மை நிறத்தில். வாள் நுதற்கு - ஒளிபொருந்திய நெற்றியையுடைய சீதாபிராட்டிக்கு. மணி - கருவிழி.

30. படர்மழை - இயங்குந் தன்மையுள்ள முகில். சுமந்த காலை - (நீரை) மிகுதியாகக் கொண்டகாலை. அடர் சிலை - நெருங்கிய வானவில்லை. ஆரம் தீர் - மாலையை அணியாதிருக்கின்ற. கடர் கடை மத்து-(பாற்கடலைக்) கடைந்த மத்தாகிய மந்தரமலையில். 'கடர்' என்றது, லகர ரகரப் போலி. பாம்பு - (வாசுகி யென்னும்) பாம்பு. காசின் - இரத்தினங்களால். வலயம் - தோள்வளை. தீர்ந்த - நீங்கிய.

31. கற்றை - தொகுதி. காலும் - கக்குகின்ற. முற்றுறு கலை பிற்று - நிறைந்த கலைகளையுடையது. பெற்றவன், தசரதன். மோலி - கிரீடம், முடி. இளையவன், பரதன். சிற்றவை - சிறிய தாயாகிய கைகேயி. பணித்த மோலி - நியமித்த சடாமுடி. 'பெற்ற மோலி' என்று கூட்டுக.

32. வீரனே, இராமபிரானே. அஞ்சன மலை - மைம்மலையோ? கமலம் பூத்தது கார்முகில் - தாமரைகள் மலரப்பெற்ற கரிய மேகமோ; அன்று - இரண்டு மன்று. ஆர் அருள் - நிறைந்த கருணை. அறம் நிறம் - அறக்கடவுளின் நிறம். வினைவை உணர்த்தும் ஓகாரங்கள் அங்கங்கே தொக்கு நின்றனவாக அறிதல் வேண்டும். (வீடணன்) வீரனே நோக்கி, சிலிர்ப்ப, வார, உருகி, 'அஞ்சனமலையோ, அன்றுகில் கார்முகிலோ? அன்று. இவன் கண்ணன்கொல்? அறநிறம் கரிதோ?' என்றான்—என்க.

33. மின்மினி - மின்மினிப் பூச்சி. மாயும் - மறையுந் தன்மை யுள்ள. வேரின் வாங்க - வேரோடு ஒழிக்கும்படி. திருவடி புனைந்த செல்வன், பரதன். செல்வன்றன் - பரதனுடைய. தன்முனோர் - தமையன். கமலத்தண்ணல், நான்முகன். தாதை – தந்தை; திருமாலாகிய இராமன். சரணம் தாழ - திருவடியில் வணங்க. என்முனோர் - என் தமையனான இராவணன். ஏம்பலுற்றான் - களிப்புக்கொண்டான்.

34. பேர்வு அரும் – போக்குதற்கு முடியாத. வடி - கூர்மை. நின்றது என் ஆம் - பேச நிற்பது என்ன இருக்கின்றது? இயம்புவது இல்லை. சொல்வதற்கும் ஒன்றுமில்லை. தீர்ந்த-முற்றிய. அம்மா, வியப்பிடைச்சொல்.

35. மீச் சுமந்து-மேலே தாங்கிக்கொண்டு. உருக-கரைந்துருகும் படி. காதலன் - பக்தியை உடையவன். வாரி - கடல். வந்து வீழ்ந்தான்-பொருந்தி வணங்கினன்.

36. அகத்து இயல் - மனத்தின் எண்ணம். கருணைதன்னுல் - பேரருளால். புல்லினன் - தழுவினன். இருக்கை ஈந்தான் - இருப்பிடத்தைக் கொடுத்தான்.

37. ஆழியான் - சக்கரப்படையானை இராமன். அவனே, விபீஷணனே. எழினெடு ஏழாய் நின்ற - பதினன்காக இருக்கின்ற. எ நாள் - எத்தனை நாள். வாழும் - நிலைநிற்கின்ற. நாள் அன்றுகாறும் - அந் நாள் வரையிலும். வாள் எயிறு - வாளைப்போல் (கூர்மையான) பற்கள். தாழ்ந்த. இலங்கைச் செல்வம் - இலங்கையரசின் செல்வம்.

38. தீர்த்தன் - தூயனுகிய இராமபிரான். செய்ததோ-வியந்ததனுலாகியதோ. சிறப்புப் பெற்றுன் - அருட்சிறப்பைப் பெற்ற விபீஷணன். கூர்த்த நல்லறம்-சிறந்த நல்ல அறப்பண்பு. யாதுகொல்லோ - வேறு என்ன காரணத்தினுல் ஆகியதோ? ஆர்த்தன - ஆரவாரஞ் செய்தன. சரம் அசரம் அனைத்தும் - நிற்பன இயங்குவன எல்லாம். 'அஃது வார்த்தை உரைத்தலோடும், உலகில்.....அனைத்தும், தனித்தனி.....ஆர்த்தன. (அச் செயல்) தீர்த்தன் நல் அருளை....செய்ததோ,...குறித்ததோ, யாதுகொல்லோ'?—என்று மாறி முடிக்க. அம்மா, வியப்பிடைச்சொல்.

39. உய்ஞ்சனன் - உய்ந்தேன். ஊழ்முறை - முறை தவறுது. அஞ்சனம் மேனியானை-மைபோற் கறுத்தமேனியனுனை வீடணனே. அழகன், இராமன். தஞ்சம் நல் துணைவன்-அடைக்கலமாகிச் சிறந்த நண்பன். துஞ்சல் இல் நயனம் - உறங்குதல் இல்லாத கண். மகுடம் - முடி.

40. விளைவினை - (காரியத்தின்) பயனே. வீயா - அழியாத. அளவு அறு-எல்லே யில்லாத. களவு இயல் அரக்கன் - வஞ்சனைத் தன்மையுடைய இராவணன். பின்னே தோன்றிய - தம்பியாகப் பிறந்த. கடன்மை - தொடர்பு. இளையவற் கவித்த - தம்பி பரதற்குச் சூட்டிய. மோலி - முடியை, திருவடிநிலையை. என்னையும் கவித்தி-எனக்குஞ் சூட்டுவாய். என்னையும், உருபுமயக்கம்.

41. குன்று சூழ்வான் மகன்-(மேரு) மலையை வலம்வரும் சூரியன்மகனை சுக்கிரீவன். தந்தை-உன் தந்தையாகிய தயரதன். இந் நயம் அறிக.

42. இனி-இப்போது. என்னே-என்ன இருக்கின்றது? அயிர்ப்புஐயம். தொடு கழல் – பூண்ட வீரக்கழலையுடைய திருவடிநிலைகளாகிற.

43. திருவடி - பாதுகைகளை. செங்கதிர் - சூரியன். இராமபிரானுடைய திருவடிநிலைகளைத் தலைமேற் சூட்டிநின்ற வீடணனுக்கு, தன் உச்சியில் சூரியன் சேரப்பெற்ற மேருமலை உவமை. என்ன, உவமவருபு. இருவர் - இராமவிலக்குவர்கள்.

44. பரவை - கடல். கனக மாரி–பொன் மழை. நறு மென் சுண்ணம் - நறிய மழமழப்பான வாசனைச் சுண்ணம். போர்த்தது - மூடிக் கொண்டது. தழனிப் பொம்மல் - பேரொளியின் மிகுதி.

45. இழிந்த - இழிவுள்ள. உய்ந்தது - கடைத்தேறிற்று; 'உயர்ந்தது' என்றும் பாடம். 'மலரோன், இடரின் நீர்த்தான்' என்று மாறுக.

இடரின் தீர்ந்தான் - துன்பத்தினின்றும் நீங்கினான். மலரோன், நான்முகன். நீமைச் செல்வம் - பொல்லாத் தன்மையையுடைய செல்வம். அறனும் - அறக்கடவுளும். தன்வாய் - தன் வாயினல். ஆவலங்கொட்டிற்று - ஆர வாரஞ்செய்து புடைத்துக்கொண்டது.

46. இன்னது ஓர் செவ்வித்து ஆக - இவ்வாறான ஒருநிலைமை நேர்ந்த தாக. பலரும் கேட்ப - பலரும் கேட்டறியுமாறு. மன் நெடும் குமரன், இலக்குவன். பாடிவீட்டினை - படைவீட்டை.

47. அந்தம் இல் - எல்லையில்லாத. அடியினை முடி - இரண்டு திரு வடிநிலைகளாகிற முடியுடனே. ஏத்தி - சொல்லிக் கொண்டாடி. தானை வைப்பை - படைவீட்டை.

48. தேடுவார் - முயல்கின்ற ஞானிகள். தேடநின்ற - தேடுமா றுள்ள. கழீஇய நன்னீர் - கழுவியதனற் போந்த (கங்கையின்) நன்னீரில். ஆடுவார் - நீராடுவார். பாவம் ஐந்தும் - ஐந்தான பெரிய பாவங்களிலிருந்து. பாவம் ஐந்து: பிறர்மனை நயத்தல், கவர்தல், கள்ளுண்டல், பொய் மொழிதல், ஈதல் மறுத்தல். சூடுவார் - (அத் திருவடிகளையே தலைக்குச்) சூடு வார். எய்தற் தன்மை - அடையும் பெருமையை. சொல்லுவார் - (அறிந்து) சொல்லுபவர்.

49. இருடிகள் யாரும் - எல்லா ரிஷிகளும். முற்றினர் - நிரம்பி யவர். மாதவர் - பெருந்தவத்தர். இலங்கைவேந்தன், விபீஷணன். பெற் றது - அடைந்த சிறப்பை. ஆர் பெற்றார் - (வேறு) யாவர் அடைந்தார்? ஆர், யார் என்பதன் மருஉ. எல்லாம் - எல்லாரும்.

அழகர் கலம்பகம்

1. 'நெஞ்சே, அவன் இவன் என்று எண்ணி அலையாது இருத்தி. கவடு ஆர் மருது இடந்தான், அவனி வனிதைக்கு ஆம் அழகனே கடவுள் மற்றில்லை; உனக்கு ஒரு திடம்தான் சொன்னேன்'-என முடிக்க. எண்ணி-(தோன்றினபடி யெல்லாம்) நினைத்து. இருத்தி - ஒருநிலையாய் நில். அவனி வனிதை - நிலமாது. அழகனே - சௌந்தர ராசப் பெருமானே. மற்று இல்லை - வேறே கடவுள் இல்லை. ஒருதிடம் - ஓர் உறுதியான பொருள்.

2. 'ஐ கண்ட (3), கங்கையை நேர் ஆக்கும் காந்தி முகுந்த, நந்தன் மனைக்கு அண்டு அகணித லீலா, தென் சோலைமலைக் கொண்டலே, உனைக் கண்டு, அகங்குளிர்ந்து, உன் நாமம் கூற, உனை வணங்க, வினைக்கண்டகரிடம் செல்லாதிருக்க, நல்வீடு பெற, முன்' என்று மாறி முடிக்க.

ஐ - அழகு; வியப்பு. கண்ட-கழுத்தையுடையவனே. நேர் ஆக்கும்-நேராக உண்டாக்கின. காந்தி - நீலநிறம். முகுந்த - வீடுபேற்றையும் நிலத்தையுந் தருபவனே. நந்தன், நந்தகோபன். மனைக்கு-மாளிகையில். அண்டு-பொருத்தமான. அகணித லீலா-எண்ணற்ற திருவிளையாடல்களை யுடையவனே. தென் சோலைமலை - திருமாலிருஞ் சோலையில் எழுந்தருளியிருக்கும். கொண்டலே-நீருண்ட மேகம்போன்ற திருமேனியை உடையவனே. கண்டு-(கண்ணுற்)கண்டு. அகம்-மனம். நாமம்-பெயர். வினை - தீத்தொழில். கண்டகர் - முள்ளைப்போல் வருத்துகின்ற துட்டர்கள். வீடு - முத்தி. முன் - நினைத்தருள்க; வியங்கோள்.

3. 'கொண்டல் வண்ணா (3), அண்டர் தெள் அமுதம் உண்ண ஆலம் உண்டவர்க்கே சோமன் தண்டம் முன் தந்தாய். தந்தாய், சுந்தர ராச மாலே, அன்றே உன் குரைகழல் கமலம் பெற்றேன். மண்டலம் அளந்தகாலே, நான் புறம்போ? சொல்லாய்' என்று மாற்றுக.

வண்ணம் - நிறம். அண்டர் - தேவர். ஆலம் - நஞ்சு. சோமன் தண்டம் - மதிக்கீற்று. முன் தந்தாய் - முன்னே கொடுத்தாய். தந்தாய் - தந்தையே. அன்றே - அந் நாளிலே. குரைகழல் - ஒலிக்கின்ற வீரக்கழல். மண்டலம் - உலகங்களை. புறம்போ – (உன் இணையடிக்கு) வெளிப்பட்டவனோ? சொல்லாய் - சொல்லுக. மற்று, அசை.

4. 'வேலை கரும்புனித (3), இந்திர ஆதியர்க்கு கல்விருந்திட்டு வந்து, விதுரன் சாலைக்கு அரும் புது விருந்து ஆம் மருந்தே, தட சோலைமலை அழகனே, மாலைக்கு அரும்பு பிறை புரைவாள் எயிற்று நமன் வல் பாசம் வீச, உடலம் ஆலைக்கரும்புபடும் முன்னே கண்முன்னே புள் அரசோடும் வந்து உதவுவாய்' - என்று முடிக்க.

வேலை - கடல்போன்ற. கரும் புனித - கருநிறம் வாய்ந்த தூயனே. கல்விருந்து – நல்ல விருந்துணவை. இட்டு - கொடுத்து. விதுரன்சாலைக்கு-

விதுரன் மனைக்கு. அரு - (வருதற்கு) அரிய. புது விருந்து - புது விருந்தாளி. மருந்து - அமிர்தம் போன்றவனே. தட - பெரிய. மாலைக்கு-மாலைக் காலத்தில்; உருபு மயக்கம். அரும்பு - தோன்றுகின்ற. பிறை - இளம்பிறை. புரை-போன்ற. வாள் எயிறு-கூரிய வளைந்த பற்கள். பாசம் - காலக்கயிறு. ஆலைக்கரும்பு படும் முன்னே - ஆலையில் (வைத்துப் பிழியப் பெறுகின்ற) கரும்பினைப்போல வருந்துதற்கு முன்னம். புள் அரசோடும் - பறவைக் கரசனுகிய கருடனோடும். வந்து - தோன்றிக் காட்சியளித்து. உதவுவாய் - அருள்வாய். 'விருந்திட்டு, உவந்து...விருந்து ஆம் மருந்தே' என்றும் பிரித்துப் பொருள் கூறலாம்.

5. 'அலைக்குமேல் உடு மலர் ஆ மிதக்குங் காலம், ஆலம் ஒன்று காயாம்பூ அலர்ந்தால்போல் பச்சிலைக்குமேல் செங்கண்வளர் அனந்த ஆனந்தா, இருக்கில் இருக்கும் பொருளே, எம்பிரானே, மலைக்குமேல் மலை விளக்கு ஆம் அழகா, வேதம் வான் குதலை நான்கு தலைமகனுர் வாளா தலைக்குமேல் எழுதுகின்றூர்; எங்கள் தாலத்தின்மேல் அரி என்றெழுத சமர்த்து இலாரோ?' என்று மாற்றி முடிக்க.

உடு - விண்மீன். மலரா - (நீர்ப்) பூக்களைப்போல. ஆலம் - விஷத்தின்மேல். காயாம்பூ-காயா என்னும் மரத்தின் பூ. பசு இலை - பச்சையான ஆலிலை. அநந்த - எல்லையில்லாத. இருக்கு, வேதம். மலைவிளக்கு - மலையிற் பொருந்திய விளக்கு. வான் குதலை-சிறந்த குதலைச் சொற்கள். நான்கு தலை-நான்கு முகம். மகனுர் - (உன்) குமாரராகிய பிரமனுர். வாளா - சும்மா. தலைக்குமேல் - தலையின்மேல். தாலம் - நாக்கு. 'அரி' என்று எழுத - 'அரி' என்று இரண்டெழுத்து எழுத. சமர்த்து - திறமை.

6. 'பிரான் எனச் சொல் முராரி (1); மராமரம் கொல் இராம (3), இராகவ, வாசுதேவ, வனகிரிவாச, முன் கராசலம் சொல் பராபர, நாத, செம் கஞ்சம் லோசன, அஞ்சனம் மேருவே, புராரி நீ (1); பிரமன் நீ; குணப்பேதம் நீ; பூதம் நீ; தராதலத்தில் சர அசரம் யாவும் நீ; சத், சித், ஆநந்த விம்பமும் நீ அன்றே' என்று மாறி முடிக்க.

பிரான் - மேம்பட்டவன். முராரி (முர + அரி) - முரன் என்னும் அவுணனைக் கொன்றவனே. கொல் - அழித்த. இராகவ - இரகு வங்கிசத்தில் வந்தவனே. வனகிரி - சோலைமலை. கராசலம் (கர அசலம்) - கைம் மலை, யானையாகிய கஜேந்திரன். சொல் - ('மூலமே' என்று) அழைக்கப்பெற்ற. பராபர - சிறந்தவற்றுள் எல்லாம்வைத்துச் சிறந்தவனே. செம் கஞ்சம் - செந்தாமரை. லோசனம் - கண். அஞ்சன மேரு - மைம்மலை. புரம் - திரிபுரம். குணபேதம் - (சாத்துவிக, இராசத, தாமத) குண வேற்றுமைகள். பூதம் - ஐம்பெரும் பூதம். தராதலம் - உலகம். சராசரம் - நிற்பனவும் திரிவனவும். சத், சித், ஆநந்தம் - உண்மை, அறிவு, மகிழ்ச்சி. விம்பம் - உருவம்.

7. 'பஞ்சவர்தம் பங்கம் களைந்தான் பனிரண்டு கண் ஒருவர் பங்கு அளைந்தான் பதி, அம் சாரலும், அணி நீர் ஆறும், முறையே கிடைக்கரிய மஞ்சை மாழு வனகிரியே' என்க. சாரல் - மலைப்பக்கம். அணி-அழகு.

மணி என்று பிரித்து, நீலமணி போன்ற எனினுமாம். நீர் ஆறு-நீரையுடைய ஆறு-என்க.

பிரிமொழிச் சிலேடை :—கிடைக்கரிய மஞ்சீர மாரு வனகிரியே: (1) (அம் சாரலில்) கிடை-படிந்து கிடக்கின்ற, கரிய மஞ்சு-கருமேகத்தின், ஈரம் ஆரு - தண்மை நீங்காத, வனகிரியே-சோலைமலையே ஆகும். (2) அணிநீராற்றில்) கிடைக்க அரிய-கிடைத்ததற்கு அருமையான, மஞ்சீரம் - சிலம்பு (என்னும் பெயர்), மாரு - விட்டு நீங்காத, வனகிரியே சோலைமலையே ஆகும். 'அஞ்சாரல் கரிய மஞ்சீரமாரு வனகிரி' என்றது, அம் மலை மேக-மண்டலத்தினும் மேலதாக உயர்ந்திருத்தலால்.

அம் மலைக்கண் பெருகி வருகின்ற யாற்றினை வடமொழியில் நூபுர கங்கை என்றும், மஞ்சீரநதி யென்றுங் கூறுவர். அவ் யாறே தமிழில் சிலம்-பாறு என வழங்கும். பஞ்சவர்தம் - ஐவரின். பங்கம் - அவமானம். கூளந்-தான் - தீர்த்தவனும். பங்கு அங்கு அளந்தான் எனவும் பிரிக்கலாம். பனிரண்டு கண் ஒருவர் - ஈராறு விழிகள் கொண்ட ஒப்பற்ற முருகன். பங்கு - பக்கத்தில். அளந்தான்-பொருந்தப்பெற்றவனுமான திருமாலின். பதி - திருப்பதி. 'பதி, வனகிரியே' என்க.

8. 'மந்தி, பதிக்கின்ற கற்பகப் பூஞ்சோலையை எட்டிப்பார்த்துக் குதிக்கின்ற மாலிருஞ்சோலை வெற்பா, நின் குளிர் வதனம் உதிக்கின்ற திங்கள்; மெய் உற்பலக்காடு; மதிக்கின்ற கட்டழகு அங்கு ஒழுகு பைந்தேன்; எங்கள் கண், மூழ்கும் மதுகரமே'-என்க. பதிக்கின்ற-மேன் மேல் வளர்கின்ற. பூஞ்சோலை-மலர்ச்சோலை. எட்டிப்பார்த்து-தலையெடுத்துப் பார்த்து. மந்தி - பெண் குரங்கு. வெற்பு - மலை. குளிர் வதனம் - குளிர்ந்த திருமுகம். திங்கள் - கலை நிறைமதி. மெய் - திருமேனி. உற்பலம் காடு - குவளைத்தொகுதி. மதிக்கின்ற - (எவராலும்) வியக்கப் பெறுகின்ற, கட்டழகு - குன்று அழகு. ஒழுகு - பெருகுகின்ற. பைந்தேன்-(முற்றிய) புதுத்தேன். மூழ்கும் - (தேனில்) மூழ்கிக் கிடக்கின்ற. மதுகரம் - வண்டுகள். உருவகம். கற்பகச் சோலைக்கும் மலர்ச் சோலைக்கும் எத்தகைய தொடர்பும் இல்லாதிருந்தும், தொடர் பொன்றினைக் கற்பித்தலால், இது தொடர்புயர்வுநவிற்சியணி.

சிறுப் புராணம்

1. கோது அற - குற்றமின்றி. மதுரம் - இனிமை. கொவ்வை வாய் - கொவ்வைக் கனிபோற் சிவந்த வாய். அரம்பையர் - தேவமாதர். கமலாசனம் - தாமரை யிருக்கை. உதர மனை - வயிறுகிய வீடு, கருப்பம். நல்வழி - ஸன்மார்க்கம்.

2. அந்தரம் - ஆகாயம். சிரசு - தலை. 'பரப்பி, கொப்புளித்து, நோக்கி, உயர்த்தி, சுருதி செய்து, தாள்மடித்து, சேர்த்து, கை கால்மேல் வைத்து, உயர்த்தி, முகம்மதுநபி உதித்தனர்' என்க.

கலிமா - 'அல்லாவைத் தவிர வேறு கடவுளில்லை; முகம்மது அவருடைய திருத்தூதர்' என்னும் பொருள்படச் சொல்லும் அரபிவசனம்.

3. நெய் தோய்த்து - எண்ணெய் தோயப்பெற்று. ஒளிவு - பிரகாசம். கமென, தொகுத்தல் விகாரம். உலவ - பரந்து வீச.

4. அம் கோடு - அழகிய கொம்பு. கடகரி - மதயானை. திங்கள் இராவின் - நிலவொளி வீசும் இரவில். மும்மை...புவனமும் - மூன்றுலகமும். புரக்க - காக்க.

5. பூதலம் - பூமி. உதித்த - திருவவதரித்த. மக்க, Mecca. ஏதம் - குற்றம்.

6. நெறிநிலை - நெறிகளும் நிலைகளும். மருள்மதம்-மயக்கொழுப்பும்; உம்மைத்தொகை. சுடர் இலா-விளக்கமில்லாத. மனையது-வீடு; அது பகுதிப்பொருள் விகுதி. குலம் - கூட்டம். மறு - களங்கம்.

7. பானு - சூரியன். கதிர் - கிரணம். படர்தரு - படர்ந்த தரு. நிழல் - மரநிழல். ஈனம் - இழிவு, பழி. பவநோய் - பிறவிநோய். இடர் - துன்பம். தீன் - சீவராசிகள், மதமும் ஆம். நிலதம் - நெற்றிப்பொட்டு முதன்மையானது. மணி விளக்கு - அழகிய விளக்கு, இரத்தின தீபம் மானிலம் (மால் நிலம்) - பெரிய பூமி.

8. செங்கதிர் - சிவந்த கிரணம். திரி - திரிகின்ற. னகன் - செய்வோன், சூரியன். சசி - சந்திரன். அந்தரம் - ஆ லம் - நக்ஷத்திரத் தொகுதி. சுவனம் - பொன். எவை - பினில் (விளங்கும்) என்று வருவிக்க.

9. மகிதலம் - பூமி. தொடுத்து-தொடங்கி. திசை தோறும். நூந்து - அவிந்து.

10. படி - பூமி. குடிலம் மட்டும்-ஆகாசமளவு

12. மதலை – பிள்ளை. தெரிவையர்-மகளிர். கொடுவம்-கொண்டு வாருங்கள்.

13. முழுக்காட்டி –நீராட்டி. மையினை எழுதி-மைதீட்டி. அமிர்தம் - பால். திகழ்த்தி - அழகுறுத்தி.

14. ஈதலால் - இதுவல்லாமல். தோன்றலை - குழந்தையை.

15. சுந்தர வதனம் - அழகிய முகத்தையுடைய. சந்தம் - அழகு.

16. உள்ளகம் – மனம். பதம் - திருவடி.

17. அலர்தரு - விளங்கிய.

18. பத்தி - வரிசை. குணதிசை – கீழ்த்திசை. மித்திரன் - சூரியன். வீழ்தரும் - அத்தமிக்கின்ற. குடம் - மேற்கு.

19. வரி அளி - கோடுகளையுடைய வண்டு. தண் நரு - குளிர்ந்தகள். புயன் - புஜங்களையுடையவன். நெட்டுயிர்ப்போடு - பெருமூச்சோடு.

20. பானல் அம் கடந்து - குவளைமலரின் அழகை வென்று. பாநலம் கடந்து என்றும் கூறலாம். சேல், ஒருவகைமீன். செவ்வரிக் கொடிவந்த கோடுகளின் ஒழுங்கு. வளம்மனை-வளம் நிறைந்த வீடு. நானிலம்-பூமி. புகலும் - புகழ்ந்து கூறுகின்ற.

21. ஏவ - கட்டளையிட. விண்ணவர் - தேவர். ஒதுவ போன்று-[illegible]ல்லுவ போன்று. ஒருமொழி, அசரீரி.

22. வெருவி - அஞ்சி. முருகு கொப்புளிக்கும் - அழகு பெருகி வழுகின்ற. வந்தடுத்தார் - வந்து சேர்ந்தார்.

23. கலி இருட் குலம் - துன்பமாகிய இருளின் கூட்டம். கரை இலா - எல்லையில்லாத. உவகை ஆநந்தவெள்ளக் கடல்-பெரும் பேரின்பக் கடல். கடல் திமிரம் பகை - கடல்போன்ற இருட்பகை. துறந்து-ஓட்டி. வெய்யவன் - சூரியன்.

